




(1) மாதாவின் சித்திரப் பொற்தேரில் நாற்றிசை யும் கைகும்பிட்ட தோற்றத்தில் மீனவர்உருவங்கள்.

(2) The fish god Oanna or Ea Han. உவண்ணு அல்லது ஏயாகான்.





(3) மீனவன் படம்.

(4) பார்த்தியன்.

நமது தலைவர் அவர்களும்,



நமது விருதுகளும்.

பரத குலத்தவரின்
இருபத்தொரு விருதுகள்

விருத்தம்

திங்கள்வம் மிசதிலக பரதகுல பாண்டியர்தம்
 ஜெயவிடால் மூவேழ்வகை
செப்புவாம் விவரமா யானையுங்[1] காளையுஞ்[2]
 சேவலோ[3] டனுமந்தனும்[4]

சிங்கமும்[5] யாளியுங்[6] கருடனொடு[7] பன்றியுஞ்[8]
 சேல்[9] மகரம்[10] வேங்கை[11] யாவும்[13]
திகழ் கனக[13] மதனுடன் சங்கமுங்[14] கப்பலுஞ்[15]
 சிப்பியுங்[16] கிளி[17] யன்னமும்[18]

மங்கலாகாரதொனி முரசு[19] பைம்பொன்னுருவ
 மயிலோடு[20] கொடிய தாலம்[21]
மாமுமா கியவிவைக ளாகுமின்வ களையிவர்கள்
 மகிமையோ டுலகறியவே

தங்களுக்குரிய பல நன்மைதின்மைக் கெலாந்
 தனிவிருதெனு நடாத்தித்
தார்தலத் தேபவனி வருதன்மா பழமையாய்ச்
 சாற்றுவார் போற்றுவாரே

1	யானை	Elephant	12	அரவம்	Snake
2	காளை	Bull	13	கனகம்	Gold
3	சேவல்	Cock	14	சங்கு	Chank
4	வானரம்	Hanuman	15	கப்பல்	Ship
5	சிங்கம்	Lion	16	சிப்பி	Oyster
6	யாளி	Unicorn	17	கிளி	Parrot
7	கருடன்	Garuda	18	அன்னம்	Swan
8	வராகம்	Hog	19	முரசு	Drum
9	சேல்	Fish	20	மயில்	Peacock
10	மகரம்	Makara Fish	21	தாலம்	Talpot
11	வேங்கை	Tiger			

PRIVILEGES ENJOYED BY JATHI.

1. Special seat at the head of the church on the Gospel side immediately below the sanctuary in all the churches.

2. Custody of two out of the three keys of the treasure box containing gems, jewels and artistic treasures belonging to the church of Our Lady of Snows, Tuticorin.

3. Priority among the congregation within the sanctuary in regard to reception of the Holy Eucharist, Kissing of the Holy Relics and Statues, smearing of the ash on Ash Wednesday, the reception of the palms in Palm Sunday and so forth.

4. Special daily prayers during Mass after the Bishop's intention for the spiritual and temporal welfare of the Jathithalaivamore.

5. The recital of one Pater, one Ave and one Gloria for the spiritual and temporal welfare of the Jathithalaivamore on Sundays, Days of obligation, Epiphany and the eleven days dedicated to the feast of Our Lady of Snows.

6. Free celebration of the church ceremony of the installation of the Jathithalaivamore at the church of Our Lady of Snows.


7. Free Baptisms, Marriages and funerals for the Jathithalaivamore, his consort and children.

8. Free education for the Jathithalaivamore's children in the Parochial School and convent.


9. The privilege of giving the lead in pulling the Car of Our Lady of Snows.

10. All religious processions halting in front of the Residence of Jathithalaivamore for the purpose of devotion.

11. The privilege of the exposition of the statue of Our Lady of Snows adorned with crown and jewels on the occasion of the installation ceremony of the Jathithalaivamore and the marriage of himself and of his children.




மாதாவின் ரதோற்சவ ஸித்திக்காக
இலங்கையில் அயராது உழைத்த
உத்தம குலாபிமானி.
ஸ்ரீ ஜே எய்ச். பி. பர்னாந்து.



சென்னையில் கால் நூற்றாண்டுக்
கதிகமாய் ஹானரரி மேஜிஸ்ட்
ரேட்டாயிருந்தும், சென்னை
பரத ஐக்கியசங்கத்தின் பொக்கி
ஷதாராயிருந்தும். தொண்
டாற்றிய
ஸ்ரீ. எஸ். டி. பல்டானே.



மணவை ஸ்ரீ. ஜே.
எம். முருயிஸ்
(முடிவுரை முருயிஸ்)



வற்றிக்கான் பொருட்காட்சிக்கு தூத்துக்குடி
கடலிலிருந்து எடுத்துச் சென்ற
கடல் திரவியங்கள்.



சரித்திராசிரி
ஸ்ரீ. ஜே. வி
ரொட்ரிகோ



சென்னை பரத ஐக்கிய
சங்கத்தின் தலைவர் ஸ்ரீ டி. ஏ. பர்னாந்து.



...ன பரத ஐக்கிய
...தின் காரியதரிசி
... டிவோட்டா
...



சென்னை பரத ஐக்கிய சங்கத்தின் போஷகா
ஸ்ரீ ஆர். ஜி. பெரைரா.



சென்னை பரத ஐக்கிய
சங்கத்தின் காரியதரிசி
ஸ்ரீ பி. வி. டிவோட்டா.



சென்னை பரத ஐக்கிய
சங்கத்தின் உப தலைவர்
ஸ்ரீ ஏ. செல்லையா மிராந்த



...சென்னை
...க்கிய சங்கத்து
... காரியதரிசி
... மிராந்த

முத்திடையே வந்த வைரமவன்—எங்கள்
பரதஜாதியின் செல்வமவன்
சக்தி நிறைந்த நல்வீரனவன்—எங்கள்
ஆர். ஜீ. பெறேராவை வாழ்த்திடுவோம்
ஜாதிவிடுதலைச் சிங்கமவன்—தியாகத்
தீயில்புடம்வைத்த தங்கமவன்
வகுப்புத்துவேஷம் சீறிடினும்—அதை
நகைத்து வென்றிடும் தீரனவன்.

—எஸ். வீ. முறல்

TABLE OF CONTENTS - பொருளடக்கம்

—:o:—



ஸமர்ப்பணம்

அம்மா ! தஸ்நேவிஸ் அன்னையே !

இதோ உன் பாதாரவிந்தங்களில் "மலராத" இம்மலரை மலரச்செய்யும்படியாய் ஸமர்ப்பிக்கின்றேன். அன்னையே! நான் எதை நினைப்பேன் ! எதைச்சொல்வேன் ! எதை எழுதுவேன். நினைக்கவும் சிந்தனைசக்தியில்லை. சொல்லவும் நாவெழவில்லை. எழுதவும் திறமை இல்லை. உன் அற்புதமும், மகத்வமும் கரைகடந்துநிற்கின்றன. தாயே! என் சமூகம் உன்னை அடைக்கலமாகக்கொண்டிருக்கின்றது. அன்று சரித்திர வாயிலாய் என் சமூகத்திற்குப் புரிந்த பேருபகாரங்களை அறிகின்றேன். இன்று நிதரிசனமாய்க் காண்கின்றேன். எதை மறந்தாலும் கடந்த யுத்தத்தின் கோரக்காட்சியையும், அதனால் உலகமுழுவதும்

அடைந்த துயரங்களையும், துக்கங்களையும் வரையறுத்துக் கூறமுடியுமா? இப்பேர்ப்பட்ட பயங்கரமான காலத்தில் உனது அடைக்கலமென்றிருந்த எங்களையும், எங்களைச்சேர்ந்த சகலத்தையும் யாதொரு பொல்லாப்பில்லாமல் கண்ணை இமைகாத்துவருகிறதுபோல் காத்து கடாட்சித்துவந்தாயே தாயே! இத்தகைய பேருதவிக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யமுடியும்! உனது மைந்தர்களாகிய நாங்கள் செய்யக்கூடியது இன்னதென்று எங்களுடைய சிற்றறிவுக்கு எட்டியதாயில்லை; என்ருலும் என் சமூகத்தின் பேரால் இதோ இந்த மலரை உன்பாதங்களில் ஸமர்ப்பிக்கின்றேன். இதில் ஏதும் குற்றங்குறைகளிருந்தால் அவைகளை தாயின்அன்புகொண்டு மன்னித்து, எங்கள் அன்பின் அறிகுறியாக ஏற்று, இன்று எங்களைக் காப்பாற்றிவருவதுபோல் என்றும் எங்களைக் காப்பாற்றிவருமாறு உனது பாதாரவிந்தங்களில் சாஷ்டாங்க மாய்வீழ்ந்து மன்ருடுகின்றேன். நிற்க,

'தங்கம் செய்யாதது சங்கம் செய்யும்'— தனி நிலையில் சாதிக்க இயலாத அரும்பெருங் காரியங்களையும் கூட்டுறவால் மக்கள் எளிதில் சாதித்துவிடலாம் என்பதற்குப் பனிமயமலர் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும். மனிலாநகரம் விட்டு மந்திர நகர் அடைந்து, ஆங்கு எழுகடற்றுறை வாழ் பரதவர் அனைவர்க்கும் ஏக அடைக்கலமாய்த் திருக்கோவில் கொண்டெழுந்தருளத் திருவுள்ளங்கொண்ட பனிமய மாதாவாம் பரதர்மாதாவின் செங்கமல பாதங்களில் மிகு மகிழ்ச்சியுடனும், வெகு வணக்கத்துடனும் இம் மலரைச் சமர்ப்பிக்கின்றேன்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற மாதாவின் அழகிய பொற்றேர் கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய காட்சி வழங்கும் ரீதியில் மலரின் முகப்புப் படமாக அமைந்துள்ளது. கல்வி, கைத்தொழில் துறைகளில் அறிவு வளர்ச்சிக்கு ஏதுவான சில படங்களும் மலரில் இடம் பெற்றிருத்தல் கவனிக்கத்தக்கது. பரதகுல மக்களின் இதயத்தில் சமூக வுணர்ச்சிக் கனல் அமோகமான ஒளியுடன் இன்று பிரகாசிக்கக் காண்கின்றோம். இதற்குக் காரணமாக இருந்தவர்களும், இருக்கின்றவர்களும் ஆகிய தலைவர்களின் படங்களை இச் சமயத்தில் வெளியிட்டிருத்தல் பொருத்தமானதெனக் கருதுகிறேன்.

பரதகுல மக்கள் மத்தியில் ஒற்றுமை உணர்ச்சியை ஓம்புதலும், செந்தமிழும் சீருடன் ஓங்கி நந் தமிழ்நாட்டுக் கலைகள் வளர்ச்சியடையும் வழிகளை நாடுதலுமே பால பரதன் இலட்சியம். அவ்விலட்சியம் நிறைவேறவேண்டும் என்பதே என் நம்பிக்கை.

பனிமய மலர் பால பரதனது புது முயற்சியின் முதல் வெளியீடு. இதில் குறைகள் இல்லாமல் இல்லை. அமைப்பிலும் அடக்கப் பொருளிலும் பற்பல குறைகள் காணப்படுகின்றன. சுருக்கமான காலத்தில் துரிதமாய் வேலையை முடிக்கவேண்டுமென்கிற எண்ணம் மீசுரமாயிருந்தமையால் இக் குறைகள் ஏற்பட்டன என்பது துணிபு. இந்நிலைக்கு உண்மையில் நான் வருந்துகிறேன். வாசக நேயர்களின் மன்னிப்பைக் கோருகிறேன். பரத குல மக்கள் அனைவரின் பூரண ஒத்துழைப்பைப் பெற்று, அடுத்து வரும் வருடங்களில் பால பரதன் வருட மலர் சவிஸ்தாரமானதாகவும் சம்பூரணமானதாகவும் வெளிவரும் என நான் நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறேன்.

கவிதைகள், கட்டுரைகள், விளம்பரங்கள் முதலியன உதவிச் சென்னைப் பரதகுல ஐக்கிய சங்கத்தின் முயற்சிக்கு ஆதரவளித்த அபிமானிகள் அனைவர்க்கும் சங்கத்தின் சார்பாக எனது இதய பூர்வமான நன்றியறிதலை வெகு விநயமுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்; அன்னர் வருங்காலத்தும் எமை அபிமானித்தருளுமாறு மிகு வணக்கமாய் வேண்டுகிறேன்.

சென்னைப் பரதகுல ஐக்கிய சங்கத்தையும், சங்கத்தின் மட்டில் அபிமானமுடையார் அனைவரையும், பரதகுல மக்களையும், சுதந்தரத்தின் தலைவாசலிலே கம்பீரமான தோற்றத்துடன் இனிய காட்சி வழங்கும் எந் தாய்நாடாகிய பரத கண்டத்தையும் பரதர் மாதாவாம் பரிசுத்த பனிமயத் தாய் மனமுவந்து ஆசீர்வதித்தருள அவளது திருவடிகளில் என் முடிபட வணங்கி நிற்கின்றேன்.

தூத்துக்குடி,
5—8—47.

—ஆர். ஜி. பெரைரா.

—:o:—

எனது பாதகாணிக்கை

தாயே! பனிமயமே! இதோ இம்மலரை அச்சடித்துக் கொடுத்தவன் என்கிற நிலைமையில் உன் பொற் கமல பாதங்களில் இம்மலரை நான் பாதகாணிக்கையாக வைக்கின்றேன். அம்மா! இம்மலர் உன் மகிமையைப் பிரபல்யப் படுத்தவும், உனது அருளினால் பரத சமுதாயம் என்றென்றும் காப்பாற்றப்பட்டுவருவதற்கும் நன்றியறிதலை உனக்கு சமர்ப்பிப்பான் வேண்டி இதை நான் அச்சிட முனைந்தேன். மலர் வெளியிடவேண்டுமென எனக்குக் கட்டளை கிடைத்தது 20 தினங்களுக்கு முன்தான். கடுதாசிப் பஞ்சம், தொழிலாளர் நெருக்கடி, முதலியவைகள் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் இச்சிக்கலான காலத்தில் நூற்றுக்கதிகமான பக்கங்களை அதிலும் ஏராளமான பிரதிகளை ஒரு மாதத்திற்குள் அச்சியற்றி புத்தக ரூபமாகக் கொடுக்க முடியுமாவென்கிற சிந்தனையிலாழ்ந்து, உன் மகத்துவத்திற்காகச் செய்யப்படும் காரியம் உன தருளால் எப்படியும் முடியுமென்கிற தைரியங்கொண்டு முழு பாரத்தையும் உன் பொறுப்பில் விட்டு வேலையை ஆரம்பித்தேன்.

தாயே! உன் கிருபை எனக்கிருந்தது. உன் அருளால் உதவிக்கு ஆட்களும் கிடைத்தனர். கட்டுரைகள் எதிர்பாராத வண்ணமாய் வந்தன. நான் எதிர்பார்த்த அளவு போட்டோ படங்கள் வராமற் போயினும், சில படங்கள் சுணங்கி வந்தன. இவைகளைப் பிரசுரிக்க முடியாமற் போனதுபற்றி வருந்துகிறேன். இரவு பகலாய் மலர் வேலையை நடத்தினேன். குறிப்பிட்ட தினத்தில் மலர் வரவேண்டுமென்பது எனது ஆசை. எவ்வளவுதான் நண்பர்களின் ஒத்துழைப்பு இருந்தபோதிலும், அவசரம் அவசரமாய் அச்சடிக்க வேண்டியிருந்தமையால் மன்னிக்கக்கூடியதும், மன்னிக்கக்கூடாததுமான அச்சுப் பிழைகள் நேர்ந்துவிட்டன. இப்பிழைகளுக்கு நானே பொறுப்புதாரி. இதனால் சொல்லப்படும் புகார்களும், கண்டனங்களும் எனக்கே உரியதாகும். தாயே இப்பிழைகளை மன்னித்து என்னை ஆட்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனது சமூகத்தினர்க்கு!

நான் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் மலரை அச்சடிக்க ஆரம்பித்தேன். புதிய முயற்சி—அனுபமில்லாத காரியம்—சுருக்கமான காலம். இரவு பகலாய் ஒரு மாதத்திற்குள் மலரை முடிக்க வேண்டியிருந்தது. தவறுகள் அனந்தம். அத்தவறுகளைக் களைந்து, குணங்களைக் கொள்ளுமாறு எனது சமூக சகோதர சகோதரிகளை பணிவுடன் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

இன்னும், பிளாக்குகள் பொருத்தமான இடங்களில் போடப்படாமலும், சில படங்கள் பெரியதாயும் சில படங்கள் சிறிதாயும் இன்னும் சில படங்கள் ஆகச் சிறியவைகளாகவும் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. இக்குறைகள், முறையே படங்கள் தாமதமாக வந்ததாலும், சிறு படங்களாகவும், குரூப் போட்டோக்களில் எடுக்கவேண்டியிருந்ததாலுமே ஏற்பட நேர்ந்தன. இக்குறைகளையும் பெருமனது வைத்து மன்னிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதுபோன்ற மலர் பிரதி வருடமும் வெளியிட வேண்டுமென்கிற ஆவல் மிக இருக்கின்றது. எனவே இம்மலரில் என்னென்ன குறைகளிருக்கின்றதென்றும், இன்னவிதமாய் சீர்திருத்த வேண்டுமென்றும் நேயர்கள் எனக்கோ அல்லது "பால பரதன்" ஆசிரியர் அவர்களுக்கோ அபிப்பிராயங் கூறுவார்களாயின் அதை அன்புடன் சிரமேற்றாங்கி நடந்து கொள்வேன்.

"இம்மலர்" மாதாவிற்குப் அர்ப்பணமாக ஸமர்ப்பிக்கப்படுகின்றதென்பதை உணர்ந்து கட்டுரைகள், படங்கள், ஆலோசனைகள் இதர உதவிகள் புரிந்த அனைவர்களுக்கும், விளம்பரம் தந்தும், விளம்பரம் தருவதற்கு உதவிபுரிந்த அனைவர்க்கும் எனது இருதய பூர்வமான நன்றியறிதலை ஸமர்ப்பித்துக் கொள்ளுகிறேன். இம்மலர் வெளியிடுவதற்குக் காரணமாயிருந்தவர் ஒரு பெரியார். அவரே பரத சமுதாயத்தின் முடிசூடா மன்னன். அவர் யாரென்பதைப் பரத உலகம் நன்கறியும். அவர் உத்திரவின்றி பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. அன்னார்க்கும் இம்மலர் தங்கள் சங்கத்தின் பேரால் பிரசுரிக்கப்படவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு அதன்படியே பிரசுரித்த சென்னை பரத சங்கத்தினர்க்கும் எனது நன்றி உரித்தாகுக.

—ஜே. பி. ராட்ரிக்ஸ்.

தமிழ் மாகாண மேற்றிராசனங்கள்.

சென்னை அதிமேற்றிராசனம்	மைலாப்பூர்	புதுச்சேரி	கும்பகோணம்	திருச்சினுப்பள்ளி	மதுரை	தூத்துக்குடி	கோட்டார்	கோயமுத்தூர்	சேலம்
32 பங்குகள்	46 பங்குகள்	44 பங்குகள்	34 பங்குகள்	21 பங்குகள்	58 பங்குகள்	39 பங்குகள்	37 பங்குகள்	22 பங்குகள்	21 பங்குகள்
79,976	1,08,304	1,24,684	95,141	96,086	1,65,265	1,00,550	1,42,905	37,403	28,472

354 பங்குகள்—கத்தோலிக்கரின் தொகை—9,78,786.

கீழ்கண்ட 20 இடங்களில் சென்னை மாகாண கத்தோலிக்கு இந்திய சங்கத்தின் ஜில்லா ஸ்தாபனங்கள் நிறுவலாம்.

சத்திய
வேத அனுசாரம்.

இதில்
வேத விசுவாசிகளுக்கான
விவித ஆருதனை பிருத்தனை
முதலான வுத்தம
செபங்களடங்கி
யிருக்குது

●

முதலாம் பதித்தல்

சிரேஷ்ட குருவானவ ரளித்த
உத்தாரப்படி
கொழும்பு மா நகரத்தில்

இரக்ஷணிய வருஷம் ௲அ௱௩ச௵
அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

அற்புதச் சிலுவைச் சம்பிறதாயச் சன்னியாசியா யந்நா ழிவ் விலங்காபுரிக் கெழுந்தருளி யருமறைச் சுட ரென விழங்கிய சாங்கோ பாங்கு ரென்னு மாதவ முனிவரா லருந்தமிழுரையா லாரிய மொழி யலங்காரத்தொடு பிறயோகித்த முதசாகரத்துக் கொப்பாயப் பரப்பிய வனேக செபதியானங்களிற் சிலதையு மற்றுள்ள வேத வேதியர் முதலான வறிஞோர் தந்தருளின வனேக ஆராதனை முதலான வைகளிற் சிலதையுஞ் சேர்த்திசைத்த சத்திய வேத அனுசார மென்னு மிப் பொத்தகத்தில் எங்கள் சாதாருண ரோமானு திருச்சபை படிப்பினைக்கு விரோதமி யாதொன்றுங் காணுததாற் சத்தியவேத அனுசாருக் கிதோ ருத்தம நிபந்தன மெனவே தெரிந்து கையேர்த்துத்தார மளித்தோம்.

இலங்காபுரியிலதி சிரேஷ்ட குருப் பிறசாதி யாசனத்தைப் பரிபாலனம் பண்ணும் அற்புதச் சிலுவைச் சம்யிறதாயச் சன்னியாசனுஞ் சிரேஷ்ட குருவுமாகிய

நாம்

கயித்தானு அந்தோனி.

PE: C. ANTONIO.

கொழும்பில் அற்: லுசியாயியாலயத்தில் ௲அ௱௩ச ஆண்டு. ஆவணி ௴ உஅ ௳ குருவாரம்

தாண்மையான மன்ருட்டம்

அதி நிறமழ பிறகாச சவுந்தரிய லீலியு மலரான அமலோற்பவியுமெங்களீடேற்றத்தி னுரிய தாரகையுமாகிய பரிசுத்தமரிய ஆதநீ வேஸ்என்னும் பனிமய மாதாவின் காருண்ணிய சலுகையைக் கொண்டு மகா சாஸ்திறியு மேற்றிராணியருமாகிய ஆராதிஷ்ட அகுஸ்தீனு முனிந்திரனின் தாசர்களி லொருவகினுய நான். இவ்விலங்காபுரியில் மேலான குருவானவ ருடைய அனுமதி யோடச்சிரேஷடரின் ஆசிர் பாதத்தைப் பொது பெற நம்பியநேகங்கிரீஸ் தியானிகளின் ஞானப் பிறையோசனத்தை விரும்பி யென்ன லியன் றமுளுப்பிறையாசத் தோடேற்படுத்தி நிறை வேற்றினவிந்த நிபந் தனத்தைக் கையேற்றவர்கள் தியானிக்குஞ் செபங்களிலென தாற்றுமசரீரம் நற்பலன் பெறு வதற்காக ஓர் பிறிய தத்தம் வேண்டல் புரிய மிகவே தாண்மையாக மன்ருடுகிறேன்.

சிந்துதேசத்தின் தூத்துக்குடியில் வசிக்கும் பரதர்குல கிரீஸ்தவர்களில் ஒருவனை

அதுஸ்தீனுப்பிரோமோத்த.

Translations of the last page.

A HUMBLE APPEAL

By the benign help of our Lady of the Snow, Sancta Maria a des Nevis, the all beautiful effulgent and fair Lily of the Immaculate Conception and the Star of our Redemption and with the permission of the Ecclesiastical authorities in Ceylon and in the hope to obtain their blessings, I, a humble devotee of Saint Augustine illustrious bishop and Doctor of the Church have to the best of my ability endeavoured to prepare and complete this compilation for the spiritual benefit of numerous Christians and humbly request all those who use this book for their devotions to recite one Hail Mary for my spiritual and temporal intentions.

AUGUSTINE PEREIRA MOTHA

A MEMBER OF THE BHARATHA
COMMUNITY OF TUTICORIN IN INDIA



சத்தியவேத அனுசாரம்

கொழும்பு மேற்றிராசன கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் முதல் தமிழ் ஜெப புஸ்தகம் கொழும்பில் 1834 ம் வருடம் திவான் பஹதூர் ஐ. எக்ஸ். பெரைரா அவர்களின் பெரிய பாட்டனுர் ஆகிய ஸ்ரீ. அகஸ்தின் பெரைரா மோத்தா அவர்கள் பிரசுரித்தார்கள். இதன் அசல் பிரதி திவான் பகதூர் ஐ. எக்ஸ். பெரைரா அவர்களிடம் இருக்கிறது.

First Tamil Prayer Book for the use of the Catholics of the Vicariate of Colombo published in 1834 by Mr. Augustine Pereira

Exhibit lent by Dewan Bahadur I. X. Pereira, great grandson of the Publisher.

LIST OF GOVERNMENT OFFIC RS OF KAMUTI.

LATE.

P. C. Gnanapragasam Poobalarayer, B.A., B.L.
Sub-Magistrate, Conjeevaram.

S. Arulanandam Poobalarayer.
Supervisor of Schools, Ramnad District

1. V. Gnanapragasam Poopalarayer,
Sub-Magistrate, Poonamalai, Madras.

2. B. A. Arulanandam Poobalarayer, B.A.,
Supply Officer, Ramnad.

3. M, I. Mariadass Fernando,
Clerk. Co-operative Registrar Office, Chepauk, Madras.

4. S. Arokiam Fernando.
Revenue Officer, Saithapet, Madras.

5. M. I. Jayaseelam Fernando,
Chief Goods Clerk, Tanjore.

6. A. Jesu Abaraham Britto,
Assistant Head Clerk Auditor Office, S. I. R., Fort. Trichy.

7. M. Viagula Antony Merais,
Manager. Gandamanayahooor, Zamin Gandamanayahanoor.

8. R. Stanislaus Poobalarayer,
Clerk, Lisence Section, H. M. S. Customs, Madras.

Sengolrayan Gomez,
Customs Collector, Adirampatanam, Tanjore District.

MADURA.

Neckolas Antony Fernando,
Assistant Head Clerk, Collector's Office, Madura.

S. Sindu Rayan Fernando,
Sub-Inspector of Police, Kadayane, Tinnevelly District.

Dr. Arulanandam Fernando, L. M. P., Retired Doctor, East Veli Street, Madras.

Late P. S. Muthu Poobalarayar,
Head Master, St. Xavier's High School, Palamkotah.

R. John Rodrigs, B.E.

R. Selvaraj Rodrigo, M.A.,
... Officeer.

சங்கின் மகத்துவம்

"ஜெயசிரி"

நிலத்தின்கீழ் பல்லுலோகங்களாயின
நீரின் கீழெண்ணிலாநிதி வைத்தனை
....
போற்றி போற்றி நினதருள் போற்றியே.—பாரதி

ஆண்டவன் படைத்த இவ்வுலகின் அருமை பெருமைகளை எவ்வாறு எடுத்துக்கூறமுடியும்? பலகோடி ஜீவராசிகளைப் படைத்திருக்கின்றான்; அவைகள் உயிர்வாழ எண்ணிலா தாவர வஸ்துக்களை உண்டாக்கியிருக்கின்றான். போதாதென்று பூமியில் புதைபொருள் ஏற்படுத்தியிருக்கின்றான். பிரகுருதிகள் எல்லாம் காலக்கிரமத்தில் ஒன்று மற்றொன்றாகி வாழ்க்கைச் சக்கரத்தை என்றும் சுழலும்படி வைத்திருக்கும் கோலந்தான் என்ன! மானிடர் அறிந்தது கொஞ்சம், அறியாதது அநேகம். பூமியின் பெரும் பகுதியான சமுத்திரம் என்னென்ன விலைமதியாத பொருள்களைப் பதுக்கி வைத்திருக்கிறது! பாமர மக்களுக்கு அதில் புதைந்துகிடக்கும் அரும்பொருள்களைப்பற்றி அவ்வளவாகத் தெரியாது. முக்கியமாக முத்து, பவளம், சங்கு போன்ற சிறந்த வஸ்துக்களைப்பற்றி எவ்வளவோ கேட்டிருந்தும் அவைகளைப் பற்றிய சரித்திரத்தின் சிறுபகுதியையே மக்கள் அறிந்ததாகத் தெரிகிறது.

முத்துக்குளித்தலைப்போல் சங்கு குளித்தலும் நம் நாட்டில் பண்டைய காலமுதல் ஒரு சிறந்த தொழிலாக இருந்து வருகிறது. மத்திய ஆசியாவிலிருந்து ஹிந்துஸ்தானத்தில் நுழைந்த ஆரியர்களுக்குக் கடல் அனுபவம் கிஞ்சித்தும் கிடையாது என்பது தெரிந்த விஷயம். ஆகையினால் கடலிலிருந்து கிடைக்கும் பொருள்களைப்பற்றி அவர்கள் அறியாமலிருந்தது ஆச்சரியப்படத்தக்க விஷயமல்ல. அவர்கள் குடியேறுவதற்குமுன் ஹிந்துஸ்தானத்துப் பழங்குடி மக்களாகிய திராவிடர்கள் உன்னதமான நிலையில் வாழ்க்கை நடத்திவந்தார்கள். அயல் நாட்டாருடன் கடல் மார்க்கமாக வியாபாரம் செய்து வந்திருக்கிறார்கள். சிறந்த பண்பும், உயர்ந்தகலையும் அவர்களுடைய வாழ்க்கையை உலகத்தாருக்கு எடுத்துக்காட்டியது. அவர்கள் மிகுந்த கடல்அனுபவம் பெற்றிருந்தார்கள். முத்தெடுத்தல், சங்கு குளித்தல் முதலிய தொழில்களில் ஈடுபட்டிருந்தனரென்று சொல்ல வேண்டிய சான்று நம்நாட்டுப் பழம் பெரும் இலக்கியங்களிலிருக்கின்றது. ஆரியர்களும், திராவிடர்களும் பல்லாண்டுகள் சேர்ந்து வாழ்ந்ததின் பயனாக தங்களில் சிறந்த பண்புகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டார்கள். இவ்வகையில்தான் ஆரியர்கள் சங்கைப்பற்றியும் அதன் புனிதத்தன்மையைப்பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டிவந்தது.

தென்னாட்டில் பாண்டிய அரசர்கள் காலத்தில் சங்குத் தொழில் விமரிசையுடன் நடந்து கொண்டிருந்ததாகத் தெரிகிறது. திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லா கடற்கரையோரங்களிலுள்ள ஜனங்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். தொழிலின் நுட்பங்களை நன்கு அறிந்து வேண்டிய அளவு முத்தும் சங்கும் கடலிலிருந்து எடுத்து வேறு இடங்களுக்கு அப்படியே அனுப்பியோ அல்லது அவைகளை வாழ்க்கைக்குகந்த அழகுள்ள பொருள்களாகச் செய்து அனுப்பியோ பெரும் பணம் சம்பாதித்தனர். அக்காலத்தில்தான் கிழக்குக்கரைத் துறைமுகப்பட்டினமாகப் பிரசித்தி பெற்றிருந்தது கொற்கை. தமிழ்நாட்டு ஏற்றுமதி இறக்குமதி பெரும்பாலும் இதன் மூலம் நடைபெற்றது. மிகுந்த வியாபாரமும் அளவற்ற செல்வமுமுடையதாய்த் திகழ்ந்து நின்றது. அயல் தேசத்தினர் இங்கு நடந்த வியாபாரப் பெருக்கத்தைப்பற்றி வானமளாவப் புகழ்ந்திருக்கின்றனர். ஒருவேளை இப் புகழ்ச்சிதானோ—என்னவோ பிற்காலத்தில் வெறுக்கத்தக்க குடியேற்றமேற்பட்டது. பல ஆண்டுகளுக்குப் பின்னால் விஜயநகர சாம்ராஜ்ஜியத்தின் கீழ் மதுரை நாயக் வம்ச ஆட்சியிலும் ராமநாதபுரம் சிற்றரசர்கள் காலத்திலும் இத்தொழில் இடைவிடாமல் செய்யப்பட்டு வந்தது. அக்காலங்களில் திருநெல்வேலி ஜில்லா கடற்கரையோரம் வசித்துவந்த பரதகுல பெருங்குடி மக்கள் அனைவரும் இந்து மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர். சங்கு குளித்தலில் மிகவும் திறமையுடையவர்களாக இருந்தார்கள். கடலை வைத்துத்தான் அவர்கள் ஜீவனமல்லவா? சலனமற்ற தென்னாட்டிலும் முகம்மதிய ஆதிக்கம் பரவத் தொடங்கியது. அந்த ஆதிக்கத்துடன் மதமாற்றமும் ஏற்பட்டதென்பதை இக்காலத்து அரசியல் நிலைமையைத் தெரிந்தவர்கள் எளிதாக அறிந்துகொள்ள முடியும். கரையோரம் வாழ்ந்த இந்துக்களில் அநேகர் நிம்மதியான வாழ்வு நடத்துவதற்கு மதம் மாறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதன் பலனாக இன்றைக்கும் தென்னாட்டின் கரையோரமாகவுள்ள கிராமங்கள் பலவற்றில் முகம்மதியர்கள் பெரும்பகுதியினர்களாக இருக்கின்றார்கள். மதம் மாறினாலும் தங்கள் பரம்பரைத் தொழிலை நடத்தி வந்ததால் கடல் தொழில் செய்யும் முகம்மதியர்கள் அநேகம் பேர் உண்டு. ஆனால் கடல் தொழில் ஆதிக்கம் இன்றைக்கும் பரதகுல மக்களிடம் இருப்பதென்று சொன்னால் மிகையாகாது. தென்னாட்டிற்கும் அரேபியாவிற்கு மிடையில் அநேககாலந் தொட்டு வியாபார சம்பந்தம் இருந்து வந்தது. அரேபியர்கள் முத்து குளிப்பதற்காக நம் தேசம் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் இந் நாட்டிலேயே தங்கி, இந்நாட்டுப் பெண்களை மணந்து சங்குத் தொழிலைச் செய்துகொண்டு வந்தார்கள். இப்பொழுதும் அநேக அரேபிய குடும்பங்கள் கடல் தொழில் செய்து வருகிறார்கள்.

மதம் மாறாத இந்துக்கள் அநேக கஷ்டங்களுக்கிடையில் தங்கள் தொழில்களைச் செய்து ஜீவனம் செய்து வந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் அதாவது இன்றைக்கு 400 அல்லது 500 ஆண்டுகளுக்குமுன் கடல் ஆதிக்கத்தில் தலைசிறந்த போர்ச்சுகீசியர் நம் தென்னாட்டில் விளையும் முத்துக்களையும், சங்குகளையும்பற்றிக் கேள்வியுற்று அதில் வியாபாரம் செய்து லாபம் பெறுவதற்காக இங்கு வந்தார்

கள். இந்நோக்கத்துடன் தென்னாட்டில் அநேக இடங்களில் குடியேறினார்கள். முக்கியமாகக் காயல் என்ற தாம்பிரவருணி முகத்துவாரத்துத் துறைமுகப் பட்டணத்தில் அநேக காலம் தங்கினர். அவர்கள் பலம்பொருந்திய கப்பற் படையின் உதவியினால் துறைமுகங்களையும், கடலோரமுள்ள அநேக கிராமங்களையும் தங்கள் வசமாக்கி அங்கு வாழ்ந்த ஜனங்களைத் தங்களுக்காக முத்தையும், சங்கையும் எடுக்கவைத்து அவைகளை நம்நாட்டில் வங்காளத்திற்கோ அல்லது மற்ற இடங்களுக்கோ அனுப்பிப் பெருத்தஊதியம் பெற்றனர். ஒற்றுமையின்றியும், பிறமதஸ்தரின் ஆட்சிமுறை அட்டூழியங்களிலிருந்தும் கஷ்டப்பட்டு வந்த பரதகுல மக்கள் தங்கள் ஜீவனத்திற்கே கடலாதிக்கம் பெற்ற போர்சுகீசியரையே எதிர்பார்க்க வேண்டியிருந்தது. இந்தப் பரிதாபகரமான நிலைமையைத் தங்கள் சௌகரியத்திற்கு உபயோகப்படுத்திக்கொண்டு போர்சசுகீசியர் வியாபார ஒப்பந்தம் செய்து கொண்டனர். இதன் பலனாக ஏற்பட்ட நெருங்கிய உறவாலும் தொழில் நடத்த வேண்டிய சலுகை பெறுவதற்காகவும் பரதகுல மக்கள் பெருவாரியாகக் கத்தோலிக்க மதத்தில் சேரலாயினர்.

இன்றைக்கும் திருநெல்வேலி கடற்கரை யோரமுள்ள முக்கிய இடங்களில் போர்ச்சுகீசிய உறவினால் ஏற்பட்ட சின்னங்கள் காணப்படுகின்றன• போர்ச்சுகீசிய பெயர்களைத் தென்னாட்டில் இந்தப் பக்கந்தான் மக்கள் வைத்திருக்கிறார்கள். நம் நாட்டு ஆட்சியின் அலங்கோலத்தை உணர்ந்த மேற்கத்திய நாட்டு அரசர்கள் நம் தென்னாட்டில் வியாபாரம் செய்யவும், கடலைக்கட்டி ஆளவும் தங்கள் நாட்டு மக்களில் சிலருக்கு ஏகபோக உரிமை கொடுத்து கப்பற் படையுடன் அனுப்பினார்கள். என்னே நம்விதி! நம் நாட்டில் ஏகபோக உரிமை பெற மேற்கத்திய அரசர்கள் உத்தரவு பிறப்புவித்தார்களாம்! இதை நினைக்கும் பொழுது நெஞ்சம் குமுறுகிறது. அக்காலத்து அரசாட்சியின் சீர் கெட்ட நிலைமையை எண்ணும்போது வெட்கி தலைகுனிய வேண்டியதாயிருக்கிறது. பரதேச ஆதிக்கம்,வர நாம் செய்த குற்றங்கள்தான் என்ன? கப்பலோட்டிய வீரத்தமிழன் முன்பே தோன்றாத குற்றமோ? அல்லது 'ஒன்று பட்டாலுண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே' என்று தெருத் தெருவாகக் கர்ஜனை செய்து தேச பக்தியையும், வீரத்தையும் கிளறிவிட ஒரு பாரதி யில்லாத பாபமோ? எப்படியாருப்பினும் நாம் அடிமைத்தளையில் இக்காலபரியந்தம் அழிந்தியிருக்க வேண்டியிருந்தது.

திருநெல்வேலி ஜில்லாவின் சரித்திரப் போக்கையே இந்தச் சங்குத் தொழில் பாதித்திருக்கிறது. போர்ச்சுகீசியருக்குப்பின் டச்சுக்காரர்கள் வந்தார்கள். போர்ச்சுசீசியரை விட சுரண்டுவதில் கைதேர்ந்தவர்கள். புன்னக்காயல், தூத்துக்குடி போன்ற பல துறைமுகங்களிலிருந்து கொண்டு சங்கு வியாபாரம்செய்து கொழுத்த பணம் சம்பாதித்தனர். பின்னர் கர்னாட்டிக் நவாபிற்கும், டச்சுக்காரர்களுக்கும், முத்து, சங்கு குளித்தல் முதலிய கடற்கரைத் தொழில்களில் உரிமையைப்பற்றி அடிக்கடி சச்சரவு ஏற்பட்டது. இதற்கு மத்தியஸ்தம் செய்வது பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் கைங்கரியமாயிருந்தது. மத்தியஸ்தராக ஆரம்பித்துப் பிறகு வாரிசு உரிமையும் அடைந்தார்கள். இப்படியன்றோ அவர்கள் ஏகாதிபத்யம் வளர்ந்தது!

சங்கு குளித்தலைக் கம்பெனியார் குத்தகைக்கு விட்டு வந்தார்கள்; அப்படி குத்தகைக்கு எடுப்பவர்கள் யார்? ஆங்கி
லேயர்கள்தான். இந்த வியாபாரிகள் பரதகுல மக்களை
கொண்டு சங்கு எடுத்துவிற்றுக் கொள்ளைலாபம் அடித்தன
இம்மாதிரி முறைகள் பல மாறி, கடைசியாக சென்
சர்க்கார் தாங்களாகவே இத்தொழிலை நடத்தி அதில் வ
வரும்படியை அடைய முற்பட்டனர். அந்தக் கொள்
யின் பயனாக தூத்துக்குடியில் சங்கு ஆபீஸ் ஏற்பட்ட
சர்க்கார் இவ்விதம் சங்குத் தொழிலை மேற்பார்த்து நடத்
வருவதால் அநேக அனுகூலங்கள் ஏற்பட்டிருக்கின்றன

இந்தியாவில் சங்கு குளிக்கும் இடங்கள் சொற்ப
அவைகளில் முக்கியமானவைகள் தூத்துக்குடி, ராமே
வரம், கீழக்கரை, தஞ்சாவூர் ஜில்லா கடலோரம், தி
வனந்தபுரம், கத்தியவார் முதலியன. இலங்கைத் தீவு
சங்கு ஏற்றுமதியில் அதிமுக்யத்வம் பெற்றிருக்கிறது.
தேசத்தில் மற்ற இடங்களை விட தூத்துக்குடியில் சங்
அபரிமிதமாகக் கிடைக்கிறதென்று தெரிகிறது. நுட்பமா
வேலைப்பாட்டிற்கும் வெண்மை நிறத்திற்கும் சா
சிறந்தது தூத்துக்குடியில் அகப்படும் கடினமும், அம்சமு
பொருந்திய சங்குகளாகும். சங்குத் துறைகள் கடலி
சிற்சில குறிப்பிட்ட இடங்களில் எட்டிலிருந்து பத்
பாகமுள்ள ஆழத்தில் தான் இருக்கின்றன.

சங்கு குளிக்கும் தொழிலைப்போல் அவ்வளவு கடி
மான தொழில் வேறொன்றும் இல்லையென்றே சொல்லலா
ஆழமான தண்ணீருக்குள் மூழ்கி மூச்சை அடக்கி சங்குகளை
தேடிக் கொண்டு வருவது லேசான காரியமா? அதுவுமி
லாமல் அப்படி மூழ்கியநேரம் பெரியமீன்களால் உயிருக்
ஆபத்து ஏற்பட்டு விடுகிறது. சில மீன்கள் கடினமா
முட்களைக் கொண்டு வீசி, குத்தி, படுகாயப்படுத்திவிடு
சங்கு குளிக்கப்பழகும் தொழிலாளி ஆரம்பத்தில் பட
கஷ்டம் கொஞ்சநஞ்சமன்று. நீரில்மூழ்கி மூச்
அடக்குவதால் மூக்கிலிருந்தும் காதுகளிலிருந்தும் இரத்த
ஓட்டமாக ஓடிவரும். இதனால் சங்கு குளிப்பவர்களி
சிலருக்கு கேட்கும் சக்தியும் பாதிக்கப்படுகிறது. சங்
குளிப்போர் சிறிய படகுகளை உபயோகிக்கின்றனர். ஐந்
அல்லது ஆறுபேர் படகில் செல்லுவார்கள். இவர்களுட
தோடையென்றொருவனும் செல்வான். இவனில்லாம
சங்கு குளிக்கப் போகமாட்டார்கள்; ஏனெனில் குளிப்ப
கள் உயிர் இத்தோடையின் கையில்தான் இருக்கிறத
முன்காலந்தொட்டு நெருங்கிய பந்துவே தோடையாக
செல்வான். மைத்துனன் வைத்து மலையேறிப் பிழை
கலாம் என்று வழங்கும் சொல் மைத்துனன் வைத்துக் கட
மூழ்கிப் பிழைக்கலாம் என்று சொன்னால் மிகவும் பொரு
தும். அதிகாலையில், சூரியோதயத்திற்கு அநேக மணிநேர
களுக்குமுன் சங்கு குளிப்பவர்கள் கரையை விட்டுப் பு
படுவார்கள். நல்லகாற்று இருந்தால் எட்டு அல்லது ஒ
பது மணிக்குச் சங்குத் துறையை அடைவார்கள் கடலி
இந்தச் சங்கு நிலங்களைக் கண்டுபிடிப்பது கஷ்டமான கா
யம். மரமும் மட்டையுமிருந்தாலல்லவா இடத்தைக் குறி
பிடுவதற்கு? இதற்குக் கடலில் நல்ல பயிற்சியுள்ளவ
உதவி வேண்டியிருக்கிறது. படகுகளை தன் அநேக வ
ஷப் பழக்கத்தினால் சரியான இருப்பிடங்களுக்கு இட்
செல்வான். சரியான இடத்திற்கு வந்ததும் படகுக
நிருத்திக் குளிப்பதற்கு ஆயத்தமாவார்கள். கனமான க
லினுதவியால் சங்கு குளிப்போன் தண்ணீருக்கடியில் சு
மாகச்செல்கிறான். மூழ்கித் தரையை அடைந்ததும் தோ
யானவன் அந்தப் பலமான கல்லை அதில்கட்டியிருக்கு
கயிற்றினுதவியால் மேலே இழுத்துவிடுகிறான். கீ

சென்றவன் தடவித்தடவி, கூர்ந்துபார்த்து, சங்குகள் சென்ற இடங்களுக்கு அலைகளாலான தடங்களின்மூலம் அங்குமிங்கும் சென்று கிடைத்ததை யெடுத்துத் தன்னுடன் கொண்டுவந்த பையில் போட்டுக்கொள்கிறான். இவ்விதம் எவ்வளவுநேரம் மூச்சைப் பிடித்துக்கொண்டு உள்ளே இருக்கமுடியுமோ அவ்வளவுநேரம் சங்குகளைத் தேடிப் பிடிப்பான். இப்படிச் சாதுர்யமாகத் தேடிப்பிடிப்பதில் அரபியர்களைவிட பரதகுலத்தவர் மிக்க கைதேர்ந்தவர்கள். சங்குகளுடன் தோடையின் உதவியால் மேலேகிளம்பி வருகிறார்கள். இப்படியாக அநேகதடவை மூழ்கிமூழ்கிச் சங்குகளைப் பொறுக்கி வருகிறார்கள். அநேக படகுகள் பற்பல இடங்களில் நின்று மூன்றுமணிவரை பிரயாசைப்படும். கிடைத்தது போதுமென்று அப்பொழுதே கிளம்பினால் அந்திப் பொழுதில் கரைசேருவார்கள், அல்லது கரை பிடிப்பது இரவுதான். அதற்காகவே அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் வீட்டை நோக்கிப் படகுகள் பாயைத் திருப்பிவிடும். இப்படிக் குளிக்கும் தருணத்தில் பெரிய சுறாமீன் அந்த வட்டாரத்திலிருப்பதாக ஏதாவது அறிகுறி தென்பட்டால் உடனே குளிப்பதை நிறுத்தி, வீடுதிரும்பவேண்டியதுதான். மேலும் 'சொறி'யென்று சொல்லப்படும் ஒருவித கடல் விஷ ஜந்துவினால் அதிக உபத்திரவம் ஏற்படுகிறது. இது மேலேபட்டால் திரேகமுழுவதும் சொரிச்சலெடுத்து அவஸ்தைப்பட வேண்டும். வீடுதிரும்பும்பொழுது நல்லகாற்றிருந்தால் கரையைச் சீக்கிரமெட்டி விடுவார்கள். காற்றில்லாது தவிக்கும் நேரம் சர்க்கார் மோட்டார் லாஞ்சுகளால் வசதிஉள்ள இடத்தில் இழுத்து வரப்படுவார்கள்.

சங்குகளைக்கொண்டு வளையல், மோதிரம், மாலை முதலியவைகளைச் செய்யும் கைத்தொழில் தென்னாட்டில் பாண்டியஅரசர்கள்காலத்தில் இருந்ததாக தெரியவருகிறது. சங்கப்புலவர் நக்கீரர்கூட சங்கு வெட்டும் ஜாதியைச் சேர்ந்தவராம். ஆனால் எக்காரணத்தாலோ இச் சிறந்த கைத்தொழில் தென்னாட்டிலிருந்து அடியோடு மறைந்துவிட்டது. அத்துடன் சங்கினால்செய்த ஆபரணங்களை அணியும் பழக்கமும் போய்விட்டது. தற்காலத்தில் சங்கிலிருந்து பலவகை அழகுள்ள ஆபரணங்கள், முக்கியமாக வளையல்களும், மோதிரங்களும் பெருவாரியாகக் கிழக்கு வங்காளத்தில்தான் செய்யப்படுகின்றன. டாக்கா ஒரு முக்கியமான இடம். நம்பக்கமிருந்து ஏற்றுமதியாகும் சங்குகளெல்லாம் வங்காளத்திற்குத்தான் போகிறது. பொதுவாக எங்கெங்கு இயற்கைப்பொருள்கள் கிடைக்கின்றனவோ ஆங்காங்கு அவைகளை உபயோகப்படுத்தும் கைத்தொழிலை நிறுவுதல் அந்தப் பாகங்களுக்குப்பொருளாதார க்ஷேமம் ஏற்படுத்துகிறது. இதை யொட்டியே நம் கடற்கரையோரம் அகப்படும் சங்குகளை நம் தமிழ்நாட்டிலே உபயோகப்படுத்த கைத்தொழில்களை ஆரம்பிப்பதால் வேலையில்லாத்திண்டாட்டமிருக்கும் இக்காலத்தில் எவ்வளவு நலமாக இருக்கும்!

வங்காளத்தில் பெண்கள் சங்குவளையல்கள் போடும் பழக்கம் இன்னும் இருந்துவருகிறது. சிலகாலத்துக்குமுன் எளியகுடும்பத்தவரே உபயோகித்தனர். சுதேச இயக்கம் வந்தபின் கல்விகற்ற பெண்மணிகளும் இவ்வளையல்களை உபயோகிக்கின்றனர். திபத்திலும், ஆஸாமிலும், அதன் பக்கமுள்ள மலைகளில் வாழும் மலை ஜாதியினரிடமும் சங்கு ஆபரணங்களுக்கு நல்ல கிராக்கியுண்டு. கடலைக் கண்ணால் பார்த்திராத இப்பெண்களுக்குக் கடற் பொருள்களைக் கண்டால் ஆனந்தமும் திருப்தியுமாகும். இவர்கள் சங்கு மாலைகளையும் தடித்த வளையல்களையும் போட்டுக்கொள்கிறார்கள். சிலஜாதிகளில் பெண்களுக்குத் தாலி எவ்வளவு புனிதத்தன்மை வாய்ந்ததோ, அவ்வளவு புனி
தன்மை சங்குவளையல்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. இ
பழக்கத்தின் பலனாய் மணமானபெண்கள் கட்டாயமா
சங்குவளையல்கள் போட்டுக்கொள்கிறார்கள். ஏதா
அசந்தர்ப்பத்தில் வளையல் உடைந்துவிட்டால் மற்றொ
வாங்கிப் போட்டுக்கொள்ளாமல் வெளியில் ஆடவர்க
கெதிரில் வரமாட்டார்கள். இந்தப்பழக்கம் நம்நாட்
சிற்சில சிறுபான்மை ஜாதியினரிடம் இன்னும் இரு
வருகிறதாகத் தெரிகிறது.


அழகுபடுத்துவதற் கல்லாமல் சங்கு இன்னும் எத்த
யோவகையில் பயன்படுகிறது. இந்துக்கள் சங்கைப் புன
மாகக் கொண்டாடுகிறார்கள். ஸ்ரீமன் நாராயணன் சங்
சக்கரத்துடன்தான் திவ்விய காக்ஷி அளிக்கிறார். கிருஷ்
பரமாத்மா பாரதப்போரில் பாஞ்சசன்யத்தை ஊதவில்
பஞ்சபாண்டவர்கள் ஒவ்வொருவரும் ஒரு பெயர்கொண்
சங்கைக்கொண்டேசங்கநாதம் எழுப்பிப் போர்செய்தார்க
பிறப்பிலிருந்து இறப்புவரை ஒவ்வொரு கட்டத்தில
சங்கு ஒவ்வொருவகையில் உபயோகப்படுத்தப் படுகிற
குழந்தைக்குப் பாலூட்டுவதுசங்கு; தற்காலம் வெள்ளி சங்
அதிக உபயோகத்திலிருந்தாலும் முதல் முதலாக ஊட்டு
பால் கடல்சங்கினால்தான் ஊட்டுகிறார்கள். ஏன், பா
மருந்து ஊட்டும் கருவி எந்த லோகத்தினால் செய்யப்பட்
தாயிருந்தாலும் 'சங்கு' என்று தானே நம்தமிழ் மொழியி
சொல்லப்படுகிறது. பழைய நம்பிக்கைக் கொண்டவர்க
குழந்தைகளுக்கு சங்கு கட்டினால் கண்ணெரி விழாதென்
சங்கின் பாகத்தைக் கட்டுகிறார்கள். இப்படி கட்டினால் பே
பிசாசுகள்கூட ஓடிப்போய்விடுமாம்! கல்யாண காலத்தி
சங்குஊதும்பழக்கம் இப்பொழுது அனேகமாக நின்
விட்டது. மார்கழிமாதம் விடிந்தெழுந்திருக்குமுன் முதலி
கேட்பது தாசரியின் சங்கநாதந்தானே. மார்கழிமாதமென்
நிறுத்துவானேன்; தினம் தினம் சங்கைஊதிப் பிழை
பவர்கள் எத்தனைபேர். ஒருவேளை சங்கு கிளப்பும் சப்த
பொறுக்காமல் ஏதாவது போட்டுப்போகச் சொல்வா
களென்ற எண்ணமோ? வாழ்நாள்முழுவதும் கேட்
சங்கநாதம் போதாதென்று கடைசிப்பிரயாணத்திலும் சும்ம
விட்டுவிட்டார்களா? பூம், பூம் என்ற சங்கநாதத்துடன்
பிரயாணத்தைநடத்தி, அந்தச்சப்தம் காதில் விழுந்துகொண்
டிருக்கும்போதே அக்கினிக்கு அர்ப்பணம் செய்யப்ப
கிறார்கள். சங்கின் மகத்துவமே மகத்துவம்! கிறிஸ்தவர்க
ளிடமும் சங்கின் மகத்துவம் குறைந்துஇருப்பதாகத் தெரி
வில்லை. எழுகடல் துறை பரதகுலாதிபனின் 21 கொடி
களில் சங்குக்கொடியுமொன்றே. புதுவீடுகட்ட அஸ்தி
வாரம் போடுமுன் சங்கை லக்கனம் பார்த்துவைத்து அதன்
மேல்தான் அஸ்திவாரச்சுவர் எழுப்புகிறார்கள். அது போதா
தென்று வீடுகட்டி முடிந்தபிறகு கெட்ட தேவதைகள்
தொந்தரவு இல்லாமலிருப்பதற்கும், நல்ல சகுனத்திற்கும்
வீட்டு கூடத்தில்—அதாவது வெளிவாசலுக்கு சிலஅடிகள்
முன்பு—ஒரு சங்கை அதன் மேற்பரப்பு கொஞ்சம் வெளி
யில் தெரியும்படி புதைத்து வைக்கிறார்கள். போகும் போது
அதன்மேல் மிதித்துக்கொண்டு போனால் போனகாரியம்
ஜெயமாகுமாம்! இந்துக் கோயில்களில் தீர்த்தம் வாங்கு
வதற்குப் பெரிய சங்கை பித்தளை அடியுடனும், பிடியுடனும்
உபயோகிக்கின்றனர். சங்கிலிருந்து வார்த்த ஜலமென்றால்
விசேஷமாம். இதை ஒட்டியே அபிஷேகாதிகளுக்கு நூற்
றெட்டு அல்லது ஆயிரத்தெட்டுச் சங்குகளை உபயோகிக்
கின்றனர். கோயில்சங்கு ஊதுவதுதான் எல்லோரும்
கேட்டதாச்சே.

முக்கியமான பெரிய இந்துக்கோயில்களில் வலம்புரிச் சங்கு வைத்திருக்கிறார்கள். எழுதும்பொழுதே வலம்புரி ஓங்காரம் கேட்பதுபோல் தோன்றுகிறது. வலம்புரிச சங்கு மற்ற சங்குகளைப் போலல்லாமல். பிரிகள் வலபுறமாக இருக்கும். இந்த மாதிரி சங்குதான் பரந்தாமன் வைத்திருந்தாராம். ஆயிரம் அல்லது லக்ஷம் சங்குகளில் இது மாதிரி ஒரு சங்கு அகப்பட்டால் மிகவும் அதிர்ஷ்டந்தான். சாதாரணமாக லேசில் கிடைக்கக்கூடாத, அவ்வளவு விலையுயர்ந்த பொருள். ஒரு சங்கு 500 ரூபாயிலிருந்து 5000 ரூபாய் வரையிலிருக்கிறது. இதைக் குளித்தெடுக்கும் தொழிலாளி நல்ல லக்கனத்தில் எடுத்தால் நல்ல பலன் கிட்டுமாம். அப்படிக்கில்லாமல் கெட்ட வேளையில் எடுத்தால் பல துன்பங்கள் ஏற்படுமாம். ஏன், திடீர் மரணமும் ஏற்படுமாம்! கிறிஸ்தவ சங்கு குளிப்பவர்கள் கூட இதை உண்மையென்று உறுதியாகச் சொல்கிறார்கள். வலம்புரிச் சங்கு வீட்டிலிருந்தால் செவ்வாயும் வெள்ளியும் ஒரு ஓங்கார சப்தம் ஏற்படுகிறதாம். சிலர் இதை நம்புவதில்லை. பணம் படைத்தவாகள் வலம்புரிச் சங்கை வாங்கி வீட்டில் வைத்தால் நல்லதென்று அதை வாங்க அதிக பிரயாசைப்படுகின்றனர். சங்கு குளிக்கையில் வலம்புரி அகப்பட்டவுடன் அகப்பட்ட படகில் ஒரு கொடி ஏற்றிவிடுவார்களாம். அதிலிருந்து சுற்றும்புறமுள்ள மற்ற படகுக்காரர்களும் வலம்புரி அகப்பட்டதென்று தெரிந்துகொள்வார்கள். வலம்புரியிலிருந்து வார்த்த தீர்த்தம் மிகவும் விசேஷம். அது பல ரோகங்களுக்கும் நல்லதென்று சொல்லுகிறார்கள். "சங்கில் வார்த்தால் தீர்த்தம்; சட்டியில் வார்த்தால் தண்ணீர்!" என்ற பழமொழி கூட இருக்கிறது.

குணத்திற்காகவும், குறியாக உபயோகப்படுவதற்காகவும் ஆடு மாடுகள் கழுத்திலும், கொம்பிலும் சங்கைக் கட்டி வைக்கிறார்கள். நாட்டு வைத்தியர்கள் சங்கை எத்தனையோ வகைகளில் மருந்தாக உபயோகப்படுத்துகின்றனர். சங்கு மோதிரம் கொண்ட கையால் முகத்தைத் தடவினால் முகப்பரு போய்விடுமாம். அந்தக் கையில் ஜலம் விட்டு முகத்தை அலம்பினாலும் நல்ல பலனும். சங்கைப் பிள்ளைப் பாலில் உரைத்துக் கண் பருவிற்குப் போடுகிறார்கள். கண்ணைப் பற்றிய அநேக வியாதிகளுக்கு இதை உபயோகிக்கின்றனர். மற்ற மருந்துகளுடன் பொடி செய்து உள்ளுக்கும் கொடுக்கிறார்கள். பஸ்பம் வேறு செய்யப்படுகிறது. சுண்ணாம்பாக நீற்றி வெற்றிலையுடன் போட்டுக் கொள்கிறார்கள்.

நம்நாட்டில் வெற்றித்தினம் கொண்டாட ஆதி காலம் முதற்கொண்டு சங்கநாதம் எழுப்பினார்கள். அதுபோல் அடிமை விலங்கைத் தகர்த்தெறிந்து சுதந்தர புருஷர்களாக ஆகப்போகிறோமென்று,

சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே
இதைத் தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே,"




மங்களகிரி கிராம முன்னேற்ற நிலையம்.



டாக்டர் சி. என். கே. பீரிஸ்.




வேம்பார் கோமஸ்
அடப்பனார் மகன்
சூசைவஸ்தியம் கோமஸ்
85 வயதில் 1935
காலமானார்.



வீரபாண்டியன் பட்டணம் காலஞ்செ
ஸ்ரீ. நம்பிக்கைமரிய ரொட்ரிகோ.



மங்களகிரி கோழிப்பண்ணை.



மங்களகிரியில் நெசவு நெய்தல்.

Catholics and Fundamental Rights

BY

Rt. Rev. Dr. P. THOMAS, Bishop of Bangalore.

It may seem somewhat strange that the question of fundamental rights should at all engage the attention of a Catholic Conference. We had similar conferences in Southern India for several decades; to the best of my memory, such a question does not seem to have been of serious concern to us until recently. We lived in peace and concord with our countrymen, whatever their creed and religious practices be. We always felt that the religious beliefs and observances of one community are not and need not be a source of annoyance and irritation to others.

Further, during the last 150 years of British rule we have had equal toleration and protection with the adherents of other religions. There was no policy of discrimination against us or against any other community on grounds of religion. Nor did we enjoy any special favour. We never expected it nor did we ask for it. When the agitation for self-government began we were not opposed to it. On the contrary, the national movement for the economic and political freedom of our country had our sympathy, for we believe, in acccordance with the teaching of Catholic philosophers, that the juridical validity of a government depends on the consent of the governed. Several Catholics took part in the movement. At the elections of November last, four out of the five Catholic candidates for the Madras Assembly were returned on the Congress ticket.

Allegiance to the civil power is a sacred duty for us; it is founded on obedience to God, by whose authority a lawfully constituted government exercises its rule. Whatever be the form of government, whether monarchy, oligarchy or democracy, the Church and Catholics always felt at home with it in every country. As Pope Leo XIII declared in his encyclical "Immortale Dei" of November 1, 1885 "the right to rule is not necessarily bound up with any special mode of government. Various political governments succeeded one another during a century and more in several countries of Europe and as long as they were not opposed to the principles of sound reason and maxims of Christian doctrine and morality, Catholics raised no objection.

Similarly in India, when the cry for freedom and independence w as raised, Christians as a body had nothing to say against it. As Indians they felt that their country had a right like any other for self-determination. We hold fast to that principle even now. We have been content to carry on our work quietly, for our religious interests were not jeopardised. Politicaly a small minority, like ours, scattered over a wide area, did not count. But the sweeping political changes which occurred in recent years and the impending transfer of power to the people of the land have profoundly altered the situation. It was felt necessary that we should be more active and take steps for the defence and promotion of our interests. The new theories of State supremacy and majority rule have awakened in us the need for closer union and organisation and for a greater sense of solidarity.

Recent happenings in the country also roused a feeling of disquiet among all Christians. There has been a great deal of antagonism to missionary activities and Christian schools. In the press and on the platform, Hindu publicists and speakers have attacked in violent terms the Christian faith and its institutions of learning and charity and in particular; our efforts to carry out the commission of the Divine Founder of Christianity to "preach the Gospel to every creature". There is more organised opposition to Christianity now than at any time within the past three or four decades. Christianity is looked upon as an intruder, a foreign and denationalising faith, inimical to the traditions and institutions of the land. Conversion to Christianity is considered an act of disloyalty and a betrayal of India's interests. That is a charge as old as Christianity itself. Already when Our Lord preached the Gospel, His case was discussed in the Jewish Council and the talk was: "What do we, for this man doth many miracles? If we let him alone so, all will believe in him; and the Romans will come, and take away our place and nation." (John (II— 47, 48). When Paul and Silas preached in the Roman colony of Philippi in Macedonia, they were brought before the city magistrate and their accusers said: "These men disturb our city, being Jews, and preach a fashion which is not lawful for us to receive, nor observe, being Romans." (Acts xvl—20,21). At the trial of the Apostles by the Jewish council the high priest said: "Commanding we commanded you, that you should not teach in this (Christ's) name; and behold, you have filled Jerusalem with your doctrine . . ." But Peter and the other apostles answered: "We have to obey God, rather than men" (Acts 5—28-29). The apostles were scourged and ordered "not to speak at all in the name of Jesus." But they "indeed went from the presence of the council, rejoicing that they were accounted worthy to suffer reproach for the name of Jesus. And every day they ceased not in the temple, and from house to house to teach and preach Christ Jesus" (Acts 5—40-42). The authorities of the Roman Empire similarly viewed Christianity with suspicion and distrust and were disturbed by its continual growth. In the year 112, Pliny the younger Governor of Bithynia, writing to Trojan, the Roman Emperor, expressed considerable alarm at the prodigious number of Christians in his province. "The contagion of the Christian superstition", he wrote, "is no longer confined to the towns; it has invaded the villages and the country and has seized upon every people of every age, every rank and sex."

History is repeating itself in India. During the last three years, there has been a fanantical outburst against Christianity. Following a conversion or two of Sophia College students, Bombay, - . . the University of Bombay declared as its "fundamental policy" the prevention of conversions from one religion to another. There has been a virulent campaign against missionaries in Jubbulpore for the good work they have been trying to do for the uplift of

கத்தோலிக்கரும் அடிப்படையான உரிமைகளும்

பெங்களூர் மேற்றிராணி ஆண்டவர் சரி. வந். P. தாமஸ், D.D

(ஆங்கில சொற்பொழிவின் சாராம்சம்)

நம் இந்தியநாட்டில் பல மதங்களும், பல சமூகங்களும் இருந்து வருகின்றன. அவர்கள் எல்லோருடனும் நாம் இதுகாறும் சமாதானமாகவும், ஐக்கியமாகவுமே அளவளாவி வருகிறோம். ஒருவருடைய மதக்கோட்பாடு தனிப்பட்ட நட்புக்கு முட்டுக்கட்டையாக இருக்கவே முடியாதென்பது எமது கொள்கை. ஆனால் கால நிலையைப் பார்க்கும்பொழுது நமமுடைய அடிப்படையான கொள்கை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது.

150 வருட காலமாக நடைபெற்று வரும் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஏனைய மதத்தினருக்குப் பாதுகாப்பும் சம அந்தஸ்தும் அளித்து வருவது போன்று கத்தோலிக்கத் திருச் சபைக்கும் பிரிட்டிஷ் சர்க்கார் பாதுகாப்பும் சம அந்தஸ்தும் அளித்து வந்திருக்கிறது. எங்கள் மட்டில் ஒரு குலத்துக்கொரு நீதி என்ற முறையில் சர்க்கார் நடந்துகொள்ளவில்லை. நாங்களும பிரிட்டிஷ் சர்க்காரிடமிருந்து விசேஷ சலுகையும் பெறவில்லை. இந்திய சுதந்திரத்துக்காக ஆரம்பமான இயக்கங்களின்போதுகூட நாங்கள் நாடு விடுதலை அடையவேண்டுமென்று விரும்பினோம். பொதுமக்களின் சம்மதத்தின் பேரில்தான் சர்க்கார் மக்களை ஆட்சிபுரியவேண்டுமென்ற கொள்கை கத்தோலிக்க மதக்கோட்பாடுகளுக்கு ஒத்தது என்பதை நாங்கள் நன்கு அறிவோம்.

அரசாங்கத்திற்கு அடங்கி நடப்பது பிரஜைகளின் கடமைகளில் ஒன்று என நாங்கள் கருதுகிறோம். கடவுளுக்குப் பணிந்து நடக்கும் எந்த அரசாங்கமும் எங்களுக்கு உகந்ததாகும். அரசாங்கம் எந்த அரசியல் முறையை அடிப்படையாகக் கொண்டதென்றாலும், நீதிக்கும் கிறிஸ்துவ தர்மத்துக்கும் அது எதிராக இல்லாதிருக்குமானால், அதைப் பற்றிக் கத்தோலிக்காகள் எந்த விதமான ஆக்ஷேபனையையும் எழுப்பமாட்டார்கள் என்பது திண்ணம்.

இந்தியர்கள் என்ற முறையில் எமது நாடாகிய இந்திய நாடு ஏனைய நாடுகளைப்போன்று சுயநிர்ணய உரிமைபெறத் தகுதியான நாடுதான் என்பதை நாங்கள் ஆதரிக்கிறோம். கிறிஸ்துவ மக்கள் ஒரு சிறுபான்மைச் சமூகத்தினர். அவர்கள் நாட்டின் நாலா பாகங்களிலும் பரந்துகிடக்கின்றனர். சரித்திர சம்பந்தமான அரசியல் மாற்றங்கள் நம் நாட்டில் தோன்றப்போகும் இதுசமயம் நமது அடிப்படையான உரிமைகள் என்ன என்பதை நாம் இப்பொழுது விளக்கவேண்டியது அவசியமாகின்றது.

ஆனால் இன்று நமது நாட்டில் கவலைக்கிடமான சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. கிறிஸ்துவப் பாடசாலைகளில் ஞானோபதேசம் நடைபெற்று வருவதைத் தாக்க ஆரம்பித்திருக்கின்றனர். கிறிஸ்துவ தர்மத்தையும், ஸ்தாபனங்களையும் இந்துப் பத்திரிகைகளும், பிரசங்கிகளும் தாக்கி வருகின்றனர். கிறிஸ்து மதம் ஒரு அன்னிய மதமாகவும், இந்திய புராதனத்துக்கும் பழமைக்கும், கொள்கைக்கும் விரோதமானதாகவும் கருதப்பட்டு வருகின்றது. கிறிஸ்து மதத்தில் சேருவது இந்தியாவின் நலனைப் பாதிப்பதாகக் கருதப்படுகின்றது. இத்தகைய குற்றச் சாட்டுகளெல்லாம் நமக்குப் புதிதல்ல. கிறிஸ்து மதம் ஆரம்பமான அந்தத் தினத்திலேயே இத்தகைய எதிர்ப்புகளும் ஆரம்பமாயின. அவ்வெதிர்ப்புகளெல்லாம் இன்று நமது நாட்டிலும் தலைகாட்ட ஆரம்பித்திருக்கின்றன.

பம்பாய் சோபியா கல்லூரியின் இரு மாணவிகள் கிறிஸ்து மதத்தைத் தழுவியதின் காரணமாக அந்தக் கல்லூரியையே நிறுத்திவிட வேண்டுமென்று நடைபெற்ற முயற்சிகளை நாம் அறிவோம். மண்டலாவிலுள்ள மலைஜாதியினரைக் கிறிஸ்துமதத்தில் சேர்த்துக் கல்வியையும், நாகரீகத்தையும் கொடுத்த ஜபல்பூர் மிஷனரிமார்களையும் கடுமையாகத் தாக்கி வந்தனர். இன்று திருவிதாங்கூரில் கிறிஸ்தவர்களுக்கு எதிராகப் பல சம்பவங்கள் நடைபெறுகின்றன, பல பிரசங்கங்களும் நடந்து வருகின்றன.

கிறிஸ்துமதத்திற்கும் வெளி அரசாங்கங்களுக்கும் தொடர்பு இருப்பதாக எண்ணுவது பெருந்தவறு. இந்தியாவில் இந்து மன்னர்கள் முகலாய சக்கரவர்த்திகள் இவர்களெல்லாம் கிறிஸ்துமதத்தை மதித்து மரியாதை செய்து வந்தனர் என்பது சரித்திரம் காட்டும் உண்மை. பிரிட்டிஷ் அரசாட்சியிலும் அதுபோலவே மதிக்கப்பட்டு வருகின்றது. நமது நாட்டில் நிறுவப்படப்போகும் சுதந்திர சர்க்காரும் கிறிஸ்துமதத்தை மதித்து நடத்துமென்பதில் எங்களுக்கு ஐயமில்லை.

கிறிஸ்துமதம் மக்களின் ஆத்மீக வாழ்க்கையிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றது. மக்களின் ஒழுக்கத்தைச் செம்மைப்படுத்துவது எமது தலையான நோக்கங்களில் முதன்மையானது எனவே, கிறிஸ்துவப் போதனைகளையும் தர்மத்தையும் தடையின்றி எல்லா மக்களுக்கும் எடுத்துக்கூறத் திருச்சபைக்கு உரிமை வேண்டுமென்று கேட்கிறது. அவைகளைக் கேட்டு, மனத்திருப்தியடைந்து. மெய்யான வேதத்தைத் தழுவவேண்டுமென்று மக்கள் எண்ணினால், கிறிஸ்து மதத்தில் சேரத்தடை இருக்கக் கூடாது. மத உரிமை என்று நாங்கள் கூறும்பொழுது, அதன் ஜீவாதாரம் ஏனையோரை எமது மதத்தில் சேர்க்கும் உரிமை என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. இந்திய பிரஜைகள் என்ற முறையிலும், கிறிஸ்துவர்கள் என்ற முறையிலும் எங்களுக்குச் சில அடிப்படையான உரிமைகள் இருக்கின்றன. அவைகளெல்லாம் வருங்காலப் புதிய அரசியல் அமைப்பில் இடம்பெறவேண்டும்.

அடிப்படையான உரிமைகளெல்லாம் இயற்கையானவை, கடவுளால் மனித சமூகத்திற்கு அளிக்கப்பட்டவை; அவற்றைப் பறிமுதல் செய்ய யாருக்கும் அதிகாரம் கிடையாது. இத்தகைய உரிமைகள் அமெரிக்க அரசியலிலும், பிரான்ஸ் நாட்டின் அரசியலிலும் இடம் பெற்றிருக்கின்றன. இத்தகைய அடிப்படையான கொள்கைகளை மாற்றச் சட்ட சபைகளுக்கு உரிமை கிடையாது. இந்த உரிமைகளைப்பாதுகாக்க நீதிமன்றங்கள்கூட ஏற்பட வேண்டும். இத்தகைய முறை சட்ட சபைகளிலுள்ள பெரும்பான்மைக் கட்சியினரின் ஆட்சியில் ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தும். இந்த முறையை ஆட்சி புரியும் எந்தக் கட்சியும் அனுசரித்து வரவேண்டியது மிக அவசியம். உரிமைகளை இவ்வாருகச் சொல்லி விட்டால் மட்டும் போதாது, சிறுபான்மையோருடைய நலன்களைக் கவனித்துப் பாதுகாக்க அரசாங்கத்தை நிர்வகித்துவரும் தலைவருக்கு அதிகாரம் இருந்துவரவேண்டும். மத சம்பந்தமான ஏதாவது பிரச்னை எழும்பும்பொழுது, அப்பிரச்னையைப் பற்றிக் கத்தோலிக்கர்களுடைய கருத்து என்ன என்பதைச் சர்க்கார் அறியமுயலவேண்டும். மேலும், சட்ட சபைகளில் இருந்து வரும் கிறிஸ்துவ அங்கத்தினர்களில் ⅔ பங்கு பேரின் கருத்தே தீர்ப்பாக அமையவேண்டும்.

அடிப்படையான உரிமைகளில், நமது மதக் கோட்பாடுகளைப் பின்பற்றி அனுசரிக்கவும். அவைகளைப்பரப்பி மக்களைச் சத்தியமறைக்கு அழைக்கவும், இவைகள் தவிர கத்தோலிக்கர்கள் அவர்கள் பள்ளிக்கூடங்களையும். மற்றும் ஸ்தாபனங்களையும் நடத்தவும் உரிமை வேண்டும். ஜனநாயக அரசியல் முறையில் பெரும்பான்மையோரது கருத்தே முடிவு என்ருலும், சிறுபான்மை மக்களின் அடிப்படையான கொள்கைகளான மதம்போன்ற விஷயங்களில்யாருக்கும் தலையிட உரிமை கிடையாதென்ற உண்மையை அறிய வேண்டும். ஜனநாயக முறை இந்த விஷயத்தில் கண்டிப்பாக நீதியையும் தர்மத்தையும் கருதி விட்டுக்கொடுக்க வேண்டும்.

ஆனல், ஒரு அரசாங்கம் இதை மறந்து, எதேச்சாதிகார முறையில் நம்முடைய உரிமைகளில் தலையிடுமானல். நாம் சட்ட ரீதியாகப் போராட வேண்டியது அவசியமாகின்றது. நமது ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துநாதர் இவ்வுலகில் தமது திருச்சபையை ஸ்தாபித்தார். அதை ஸ்தாபித்துவிட்டு தமது அப்போஸ்தலர்களுக்குத் தமது வேதத்தை உலகெங்கும் பரப்பக் கட்டளையிட்டார். கிறிஸ்துவக் கொள்கைகள், கிறிஸ்துவ சமூகத்தின் வாழ்க்கையில் பலவேறுன அம்சங்களிலும் பிரகாசிக்கவேண்டுமென்பது எமது ஆண்டவரின் கருத்து. ஆகவே, மதம் வேறு, அரசியல் வேறு என்று பாகுபாடு செய்யத் துணிவது கிறிஸ்துவக் கோட்பாடுகளுக்கு உகந்ததல்ல.

புராட்டஸ்டாண்ட் இயக்கம் ஆரம்பமானதின் காரணமாக ஏற்பட்ட மாற்றங்களில் தலைமையானது என்னவென்ருல், சில அரசாங்கங்கள் பொதுமக்களுடைய இதர விஷயங்களில் மட்டுமல்ல, ஆத்மீக காரியங்களிலும் தலையிட ஆரம்பித்ததுதான். அந்த விபரீதப்போக்கு கருதிய பலனைக் கொடுக்கவில்[லை]. ஆகவே. மத விஷயத்தில் பெருந்தன்மையாக நட[ந்து] கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

நம் நாட்டில் பெரிய அரசியல் ஸ்தாபனமா[ன] தேசிய காங்கிரசும் மதஉரிமைகளை ஒப்புக்கொ[ண்]டிருக்கிறது. பண்டித ஜவஹர்லால் நேருகூ[ட] சென்ற வருடம் டிஸம்பர் மாதம் 18-ம்தேதி [லக்]லாங்கில் செய்த பிரசங்கமொன்றில் சிறுபான்[மை]யோரின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியதை[ப்] பெரிதும் வற்புறுத்தியிருக்கிருர் கிறிஸ்துமத[ம்] ஆண்டவரின் திருவாக்குகள் நிறைந்தது, அ[வை]களைப் பரப்பவேண்டுமென்ற ஆர்வம் கொண்ட[து]. இந்த ஆர்வம் கிறிஸ்து மதத்தாரோடு தோய்[ந்]து கிடக்கின்றது. விஸ்வ சகோதரத்துவத்தை வ[லி]யுறுத்தும், சர்வலோக மதமாகக் கிறிஸ்து ம[தம்] விளங்குகின்றது. ஒரு சமூகத்தின் புராதீன குண[ங்களை]யும், நல்ல பழக்க வழக்கங்களையும் ஒழிக்க[க்] கிறிஸ்துமதம் பாடுபடவில்லை. ஒருவனைத் தன் தேச[த்]துக்காக உழைக்க வேண்டாமென்று கூறவில்[லை]. கிறிஸ்துவின் போதனைகளின்படி நடந்து கொள்[ளு]வது உலகில் உள்ள எந்த நாட்டு மக்களுக்கும் [பெரு]ம் நன்மையை விளைவிக்கும் என்பதைத் திருச்சபை வ[லியு]றுத்துகின்றது.

ஆகையால்தான் கிறிஸ்துமதம் மக்களை ம[ன]திருப்ப முயற்சிக்கின்றது. வற்புறுத்தி மக்களை எ[ங்]களது மந்தையில சேர்ப்பது இயற்கைக்கு விரோ[த]மான செய்கையாகும். அந்த அடாத செயலை நா[ங்]கள் செய்யத் துணியோம். ஆகவே, மத மா[ற்ற] விஷயத்தில் எங்களுடைய கொள்கைகளைப் பிரசா[ரம்] செய்ய எங்களுக்குப் பரிபூரண உரிமை இரு[க்க] வேண்டுமென்பதை வருங்கால இந்திய அரசியல[மைப்பில்] சேர்த்துக்கொள்ள வேண்டும்.

ஆனல், சமீப காலத்தில் நடைபெற்ற ஒரு ச[ம்ப]வம் நமக்குக் கவலையையும், கலக்கத்தையும் கொ[டுக்]கிறது. வருங்கால இந்திய அரசியல் முறை[யை] ஒருவாறு எடுத்துக்காட்ட நம்நாட்டில் சாப்ருகமி[ட்டி] ஒன்று இருந்துவந்ததை நீங்கள் அறியலாம். ப[ல] அறிஞர்கள் இக்கமிட்டியில் இருந்துவந்தனர். சி[று]பான்மையோரது உரிமைகளைப்பற்றி இக்கமிட்டிய[ார்] ஆராய்ச்சிசெய்யப் புகுந்தனர். சிறுபான்மையோர் ச[ப்]கமிட்டி சிறுபான்மையோருக்குத் தங்களது ம[தத்]தைப் பின்பற்றவும் கோட்பாடுகளைக் கடைப்பிடி[த்]து தொழுகவும், பிரசாரம் செய்யவும் உரிமை இரு[க்க] வேண்டுமென்று சிபாரிசு செய்தது. அதை அ[க்] கமிட்டியிலுள்ள கிறிஸ்தவர் அல்லாதார் எதிர்[த்த]னர். இறுதியில் பொதுக் கமிட்டிக்கு இந்தக் கோ[ட்பா]டுகைகள் சமர்ப்பிக்கப்பட்டபொழுது, 'பிரசா[ரம்] செய்தல்' என்பதை அவர்கள் அகற்றிவிட்டார்க[ள்]. மிதவாதிகள் என்று சொல்லிக்கொள்ளும் சாப்[ரு] கமிட்டி அங்கத்தினர்களே இப்படி செய்யத் துணி[ந்து] விட்டால், நாம் நமது எதிர்காலத்தைப்பற்றி கலக்[கம்] கொள்ளாது வேறு என்ன செய்வது?

நாம் பள்ளிக்கூடங்களை ஆரம்பிப்பது, அப்பா[ட]சாலைகளில் படிக்கும் நமது கிறிஸ்துவப் பிள்[ளை]களுக்கு மதக் கல்வி புகட்டுவது, இப்பாடசாலைக[ளில்]

திருவிதாங்கூர் பரதவர்

திரு. பி. ஜே. பேர்னாந்து, பி.ஏ.

இந்தியாவுக்கு வரும் ஆகஸ்ட்மாதம் 15ம்தேதி விடுதலை கிடைக்கப் போகிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஒரு டொமினியனாக விளங்கப்போகும் இந்தியா ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதிக்குப் பிறகு எந்த நேரத்திலும் பிரிட்டனோடு கொண்டுள்ள சிறிது தொடர்பையும் அறுத்துவிட்டு பரிபூரண சுதந்தரத்தோடு தனியாக நிற்கலாம்.

இந்த அரசியல் மாற்றங்கள் இந்தியாவில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, சமஸ்தானங்கள் தான்தோன்றித்தனச் செயல்களில் ஈடுபட்டுக் கண் மூக்குத் தெரியாது குதிக்கின்றன அந்த இனவரிசை சமஸ்தானங்களில் திருவிதாங்கூரும் ஒன்று. பிரிட்டிஷார் இந்தியருக்குச் சுதந்தரம் கொடுக்கும் நாளில் திருவிதாங்கூர் சமஸ்தானம் இந்தியாவிலிருந்து பாக்கிஸ்தான்மாதிரி துண்டுபட்டு, பரிபூரண அரசியல் சுதந்தரம் பெற்ற நாடாகி விடுமென்று திருவிதாங்கூர் மகாராஜா தீர்மானித்திருப்பதாக அவரது மந்திரி ஸர். ஸி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் பிரகடனம் செய்திருக்கிறார்கள்.

இந்தப் பிரகடனம் உண்மையாகிவிடுமானால், பரதசமுதாயத்தாரில் ஒரு பகுதியினர் இந்த சுதந்தர' திருவிதாங்கூரில் வாழ்ந்து வருவார்கள். அப்பொழுது அந்தச் சமுதாயத்தாரின் பெரும் பகுதியினர் வாழ்ந்து வரும் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து அவர்கள் துண்டிக்கப்பட்டு வாழ்ந்துவர நேரிடும் என்று இன்றைய அரசியல்நிலையிலிருந்து ஒருவாறு ஊகித்துக் கூறலாம்.

இது ஒரு புறமிருக்க, இன்று திருவிதாங்கூரில். வாழும் நமது சமூக மக்களைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்க்கலாம். பல வருடங்களுக்கு முன்னால் பதினாலூர் கூட்டமென்று ஒரு சபை இருந்து வந்தது. அது இப்பொழுது உலக விவகாரங்களை எல்லோரும் ஒன்றாகக் கூடி ஆலோசித்து முடிவுசெய்து, யுத்தங்களைத் தவிர்த்து. சமாதானத்தை நிலை நாட்டப் பாடுபட நிறுவப்பட்டிருக்கும் சர்வதேசசபை போன்றது என்று வைத்துக்கொள்ளுங்கள்.

இந்தப் பதினாலூர்கூட்டத்தில் கடலோர ஊர்கள்எழு, உள்நாட்டு ஊர்கள் எழு. கடலோர எழு ஊர்களுக்குத் தலைமையாக கன்னியாகுமரியும், உள்நாட்டு எழு ஊர்களின் தலைமையாக நாகர்கோயில் பட்டணத்தைச் சேர்ந்த வடசேரியும் இருந்து வந்தன. என்றாலும் எல்லாக் கூட்டங்களிலும் மற்றும் விவகாரங்களிலும் கன்னியாகுமரியே முதன்மையாய் நின்று பணியாற்றிவந்திருக்கிறது.

இன்று திருவிதாங்கூரில் கடலோரத்தை எடுத்துக் கொண்டால், கன்னியாகுமரி, கோவளம், புத்தன்துறை, பொழிக்கரை, பெருங்காடு, ராஜாக்கள்மங்கலம், பிள்ளைத்தோப்பு. முட்டம் ஆகிய இவ்வூர்களில் பெரும்பான்மையோராகவும், பூந்துறை, வலியதுறை, கொல்லம். ஆலப்புழை முதலிய ஊர்களில் சிறுபான்மையோராகவும் பரதவ மக்கள் வாழ்ந்து வருகின்றனர். நம் மக்கள் வலியதுறை, கொல்லம். ஆலப்புழை போன்ற கொடுமலையாள பகுதிகளில் குடியிருக்க நேர்ந்தாலும், அங்கு அவர்கள் தம் தாய் மொழியாகிய தமிழையே' பேசி, 'தமிழ்க் கலைகளையே பயின்று, தமிழர் பழக்க வழக்கங்களையே பின்பற்றி வருவது குறிப்பிடத் தக்கது.

உள்நாட்டில் கோட்டாறு நாகர்கோயில், வடசேரி, கிருஷ்ணன் கோயில், சுசீந்தரம், ஆழூர், திட்டிவிளை முதலிய பல கிராமங்களிலும் நம் மக்கள் வாழ்ந்துவருகின்றனர். கடலோர ஊர்களிலும் உள்பிரதேச ஊர்களிலும் வசித்துவரும் நம் மக்கள் திருவிதாங்கூரில் வாழ்ந்துவரும் பத்து லட்சம் தமிழர்களில் ஒரு பகுதியினர். நாஞ்சி நாட்டை திருநெல்வேலி ஜில்லாவோடு சேர்த்துவிடவேண்டுமென்று கேட்டு இன்று தென் திருவிதாங்கூரில், ஆரம்பமாகியிருக்கும் தமிழர் சுதந்திரப் போராட்டம் வெற்றி பெறுமானால் நம் சமூகத்தில் அனேகமாக முக்கால் பகுதியினர்க்கு மேல் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்தவர்களாய்விடுவர்.

இந்தியாவிலே கல்வித் துறையில் முன்னணியில் நிற்கும் நாடுகளுக்கு திருவிதாங்கூர், கொச்சி சமஸ்தானங்களை உதாரணமாகக் கூறுவதுண்டு. அவ்வளவு முன்னேற்றமடைந்திருக்கும் திருவிதாங்கூரில் வாழும் நம் மக்களுக்கும் பிள்ளைகளைப் படிக்கவைப்பதில் ஆர்வம் இல்லாமலா இருக்கும்! ஆர்வத்துக்குக் குறைவில்லை; ஆனால், அனுப்பிவைப்பதுதான் அருமையாய்ப் போய்விட்டது. பல ஊர்களில் ஆரம்பப் பாடசாலைகள் இருக்கின்றன. அதுவரையிலும் அநேகர் படிக்கின்றனர் அரைகுறையாக. இதற்குமேல் போவது மிகக் குறைவு ஏனைய சமூகங்களோடு ஒத்துப் பார்க்கும்பொழுது.

என்றாலும். எப்படியோ திட்டம்போட்டு எத்தனையோ கஷ்டங்களுக்கூடே சிலர் படித்துப் பட்டம் பெற்று, இன்று ரயில்வேயிலும். திருவிதாங்கூர் சர்க்கார் உத்தியோகங்களிலும் இந்திய சர்க்காரின் அகில இந்திய ரேடியோ நிலையத்திலும் பெரிய பதவிகள் வகித்துவருகின்றனர். வழக்கறிஞராக இருக்கின்றனர் ஒரு சிலர். இந்தச் சேதி சமூக மக்களுக்கு ஊக்கமளிக்கும் என்பதில் ஐயமில்லை. என்றாலும் இன்னும் எத்தனையோ யுவர்களும், யுவதிகளும் படித்துவரவேண்டும்! எந்த ஊரில் சென்றாலும், நம் மக்களுடைய கலையுணர்சசியும், இசையார்வமும்,

---

நடத்திச் சர்க்காரிடமிருந்து நிதி உதவி பெறுவது இவைகளெல்லாம் நாம மேலும் கேட்கும் உரிமைகள். தாய் தந்தையர்களுக்குத் தமது இஷ்டப்படி தம் குழந்தைகளைப் பயிற்றுவிக்க உரிமை வேண்டும். இதெல்லாம் எமது அடிப்படையான உரிமைகளாகும்.

நம் நாட்டிலுள்ள பலர் நமமைக் கண்டிப்பது வழக்கமாக இருந்து வருகிறது. இந்தியாவை ஆள வேண்டிய பொறுப்பு பிரிட்டனுடைய கையிலிருந்து இந்தியாவுக்கு மாற்றப்படும் பொழுது, எமது அடிப்படையான கொள்கைகளுக்கும உரிமைகளுக்கும் பங்கம் ஏற்படும் என்ற எங்களது பயம் நீங்கவேண்டுமானால், வரப்போகும் புதிய அரசியல் அமைப்பில் எமது அடிப்படையான உரிமைகள் இடம் பெற வேண்டியது மிக அவசியம். அதுவே எமது பாதுகாப்பை ஊர்ஜிதம் செய்யும் முறையாகும்.

ஓவியக் கலையறிவும் பிறருடைய புகழுரைகளுக்கும் ஆச்சரியத்துக்கும் இலக்காகி இருக்கின்றன. இயற்கையாகவே நம் மக்களது உள்ளத்தில் ஊறிநிற்கும் இந்தப் பண்பாடு நம் சமூகத்தின் அழியாப் பொக்கிஷமாக இருந்துவருகின்றது. இந்த நிலையில் நம் ஊர்களில் பெரியோர்களும் சிறிது சிரமம் எடுத்தால் இன்னும் எத்தனையோ பேர்கள் உயர்தரக் கல்வி பயின்று பெரும் பதவிகளில் இருக்கக் காணலாம்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக நம் மக்களுக்கு அந்தத் துறையில் போதிய ஆர்வமோ. ஆக்க வேலைகளுக்கு வேண்டிய ஊக்கமோ இல்லை. நம் சமுதாயத்துக்கென்று ஒரு ஆங்கில உயர்தரப்பாடசாலையைச் சுலபமாக அமைக்கலாம். அதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன. இதற்கெனவே ஒரு மத்ய கல்விப் பாடசாலை கன்னியாகுமரியில் இருந்து வருகிறது. அது பெரு வருவாயுள்ள ஊரில் இருநதுவந்தாலும், உயிரற்றதுபோல அனாதையாகவே இருந்துவருகிறது.

இவ்வூருக்கு அதைப்பற்றிய கவலையே இல்லை. பல வருடங்களாகக் கட்சிப் பிரதிகட்சிகளால் கன்னியாகுமரி பிளவுபட்டிருந்தக்கால் இரு கட்சிக்காரர்களுக்கும் பொதுமக்களிடமிருந்து கிடைத்த தொகையோ ஆயிரக்கணக்கான ரூபாய்! அது வழக்குகள் நடத்தவே விரையம் செய்யப்பட்டு வந்ததால். இவ்விதமான ஆக்கவேலைகளுக்குப் பயன்படாதுபோயிற்று.

யார் செய்த புண்ணியத்தாலோ இப்பொழுது இரு கட்சியினரும் சமாதானமாகப் போய்விட்டனர் சமாதானமான பின்பு நாகஸ்வரம் ராஜரத்தினம் பிள்ளையை யழைத்துப் பெரிய மேளதாளங்களோடு திருவிழாககள் நடத்த ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்தனர். சிறிது பணம் மூலதனம் வைத்துக் கன்னியாகுமரிப் பாடசாலையை ஆங்கில உயாதரப் பாடசாலையாகமாற்றி மாணவர்களுக்குத் தங்க இடவசதிகளும் அளித்தால் நாளடைவில் நம் சமூக மாணவர்களுக்கு உதவியாக இருப்பதோடு ஊருக்கு நிரம்ப லாபகரமாகவும் இப்பள்ளிக்கூடம் விளங்குமென்று திடமாக நம்பலாம்.

திருவிதாங்கூரில் நம் சமூக மக்களில் பெரிய செல்வந்தர் என்று குறிப்பாக எடுத்துக்காட்ட யாருமேயில்லை. பல வருடங்களுக்கு முனனால் ஒரு சிலர் இருந்தாலும் அவர்களுடைய அல்லது அந்தக் கால்வழிவந்த குடும்பத்தினரது இன்றைய நிலை பழம் பெருமையைப் பேசிப் போக்கும் அளவிலேதான இருந்துவருகின்றது.

தனிப்பட்ட முறையில் நம் சமுகத்தினர் பணக்காரர் இல்லையென்றாலும். சமுதாயமென்று அல்லது ஒரு ஊரார் என்று எடுத்துக்கொண்டால். அவர்களைப்போல் கத்தோலிக்கரில் வேறு எந்த சமூகத்திற்கும் திருவிதாங்கூரில் பணம் திரட்டத் திறன் இநப்பதாகக் கூறமுடியாது ஊர்க்குத்தகை வாயிலாக ஊருக்குவரும் வருவாயை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளமுயன்றால் இப்பொழுது ஒவ்வொரு ஊரிலும் எத்தனையோ சீர்திருத்தங்களைக்கொண்டு வந்திருக்கலாம்!

ஆனால், எந்த ஊரில் பணம் சற்றுமிகுதிபாகக் கை வந்துவிட்டதோ அங்குக்கட்சிகளும், பிளவுகளும், சண்டைகளும் தோன்றி, பணம் குட்டிச் சுவராகப் போய் கிறது. கட்சிகளாய்ப் பிரிந்து போகும் மனப்பான்மை சமூக மக்களிடை இன்று இருந்துவருவது கவலைக்கி மானதாக இருக்கின்றது. இத்தகைய வாயிலாக ஊரு குக் கிடைக்கும் பணத்தை மக்களுடைய முன்னேற்றத் காகச் செலவு செய்ய நம் மக்கள் கற்றுக்கொள்ள வேண் யது அவசியம்.

திருவிதாங்கூரில் நம் சமூகத்தினர் எல்லோரும் ஒன் பட்டு, ஒரே முன்னணியில் நின்று உழைக்கவேண்டி காலம் வந்துவிட்டது. தற்பொழுது நாம் கண்டுவரு அரசியல் மாற்றங்கள் அக்காலத்தை மிகச் சமீபத்தி கொண்டுவந்துவிட்டன இந்தச் சந்தர்ப்பத்தில் 'நா உயர்ந்த குடும்பத்தைச் சார்ந்தவன் நீ தாழ்ந்த குடும்ப தைச் சார்ந்தவன். எங்கள் ஊர்தான் தலைமை வகிக் வேண்டும், நான் சத்திக்காரன், அவன் சுத்தபைத்யக்காரன் என்ற இது போன்ற வீண் வாதங்களையும், அற்ப கௌ வத்தையும் விட்டொழித்து. பரத சமுதாயத்தைச் சேர்ந் வர்கள் யாவரும் ஒன்றெனக் கருதி நடக்கவேண்டும்.

பரத மகாஜனசங்கத்தின் கிளை ஸ்தாபனமொன்றை உடனடியாகத் திருவிதாங்கூரில் ஸ்தாபித்து அதன் குடை யின்கீழ் திருவிதாங்கூர் பரதவர்களைக் கொண்டுவரவேண் டும். கிளை ஸ்தாபனங்களும் தலை ஸ்தாபனமும் தூங்கு மூஞ்சிகளாக இராமல், சுறுசுறுப்போடு பணியாற்றி வர வேண்டும்.

60 லட்சம் மக்களைக்கொண்ட திருவிதாங்கூரிலே 20 லட்சம் பேர் கிறிஸ்தவர்கள். எனவே. சிறுபான்மையோர் என்றாலும், மொத்த ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு என்ற பெருமை அரசியலில் கிறிஸ்துவர்களுக்கு இருந்துவருகிறது. அந்தப் பகுதியில் சேர்ந்த பரதவர்கள் தம் சமூக மக்களுடைய நலனை இனி வருங்காலத்தில் கவனிக்கவேண்டுமானால், கல்வி-பொருளாதாா வாழ்க்கையை செம்மைப்படுத்த ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். ஏனைய கிறிஸ்தவ சமுதாயங்களோடு சரிநிகர் சமானமாக எல்லாத் துறைகளிலும் பரதவர் விளங்கவில்லையென்றால். அந்த நாட்டிலே நிச்சயமாக அவர்கள் அடிமைப்படுத்தப்படுவார்கள்.

இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த இதர
கிராமங்களிலுள்ள

பரதர் ஜனத்தொகை

முக்கூர்	...	4 00
நரிப்பூர்	...	600
முத்துப்பேட்டை	...	180
ஆத்தங்கரை	...	72
கெங்கைகொண்டான்	...	36
தேவிபட்டணம்	...	120
சாலைக்கிராமம்	...	60
கடலாடி	...	120
பார்த்திபனூர்	...	60
அம்மாபட்டணம்	..	60
	மொத்தம்	5508

Address presented to His Grace the Archbishop of Colombo at the Opening Ceremony of the :: :: New Building :: :i

DON BOSCO ORPHANAGE
FOR BHARATHA CHILDREN
DIYALAGODA, MAGGONA

HIS GRACE

The Most Revd. Peter Marque, O. M. I., D. D.,

ARCHBISHOP OF COLOMBO.

—:o:—

May It Please Your Grace,

THE Bharathars in Ceylon welcome Your Grace this day with filial and loving hearts. We know how deeply and fondly Your Grace cherishes our welfare, and we assure Your Grace of our unreserved trust in you and our grateful appreciation of your solicitude.

In your long missionary career and as Metropolitan Archbishop of Ceylon we have received constant tokens of your lively interest in the Bharatha community. But the most outstanding proof is the foundation of this Bharatha Orphanage at Maggona twenty-two years ago. It is under the inspiration and guidance of your Grace, when you were the Superior of the Vincent's Home that Rev. Brother Joseph Gonsal started, with our modest support, a very small orphanage for our destitute children.

It is hardly possible for us to express our present joy. When we are marking the coming of age of this institution by the erection of these spacious buildings we have its virtual founder, as head of the Catholic Church in Ceylon, to bless and open these buildings.

This orphanage had no doubt progressed but it has had its full share of tribulations. We raise our voice in thanksgiving to God. Next we gratefully remember the selfless services of Rev. Brother Joseph Gonsal and the sympathy and guidance of the successive superiors of the St. Vincent's Home and the Superior and Brothers of the Franciscan order

We have placed this institution under the patronage of St. John Don Bosco the friend of children and the great educator. With his intercession and the Grace of God we look to a future of great usefulness.

Assuring Your Grace of our devoted loyalty and affection to your person and begging your Grace to convey to our Holy Father Pope Pius XI our assurance of loving loyalty to his person and of humble prayers for His intentions in these exacting times.

We remain Your Grace's
Most Obedient Children in Christ
The members of the
Bharatha Association, Colombo.

Speech of Mr. I. X. Pereira,
President, Bharatha Association, Colombo.

Your Grace,

Rev. Fathers, Ladies & Gentlemen,

I do not think it is necessary for me to reiterate what has been said in the address just now presented to your Grace. It is just less than a year since we had the privilege of your Grace participating in our rejoicings on the Fourth Centenary of our Conversion. I think the relation between your Grace and ourselves can be expressed in a very few words. It is that of a father with his children, with mutual love and understanding. You share our joys and our sorrows. Your Grace's presence here this day at very great inconvenience amidst your exacting duties involving a journey from Colombo is an indication of the lively interest your Grace takes in the material and spiritual welfare of the Bharathars and particularly of our orphan children.

No one knows more intimately than your Grace the very small, or shall I say, the insignificant beginning of this orphanage twenty-two years ago. Everyone in Ceylon knows that slum of slums at Kochikadde as it was in Colombo. The Bharatha Association in Colombo felt the need of doing something to alleviate the sad lot of the orphaned Bharatha children. This Association came into existence in 1908 and I can recollect that at several of our meetings from 1911 we were considering the ways and means to tackle this problem. We turned for help to the St. Vincent's Orphanage at Maggona where we had one of our own flesh and blood. Brother Joseph Gonsal had dedicated himself to the service of our Crucified Master under the banner of that great poor Man of Assisi, St. Francis. This zealous brother had already then coaxed the Bharathars to contribute practically the full cost of the beautiful Stations of the Cross and the grotto of our Lady of Lourdes standing in the grounds of the St. Vincent's Home. In 1913, one orphan child was received by Rev. Bro. Gonsal and housed in a small hut on the grounds of the St. Vincent's Home. It was about that time that your Grace was sent to St. Vincent's Home as the Superior. In 1914, the members of the Bharatha Association in Colombo had collected a batch of 11 destitute Bharatha children who

were wandering about the streets of Kochikadde and desired Bro. Gonsal to find a home for them. But that was impossible with the small hut which Bro. Gonsal had at his disposal. It was then that your Grace suggested an immediate expedient and a permanent plan. The expedient was the renting of a small house and the permanent scheme was to erect our own buildings. Your Grace was not satisfied with kindly advice and encouragement. We were fortunate to have your active and essential help in securing from your illustrious predecessor His Grace the late Archbishop Coudert a small house at a nominal rental and the services of Rev. Brother Joseph Gonsal to take care of the orphans.

This orphanage was thus started. The progress of the institution has not been unchequered. It was not long before the present site was acquired and a small building with thatched roof erected to house the little ones. That building was blessed and declared open by the late Very Rev. Fr. A. N. Lefrere O. M. I. on the 18th July 1915. Several times during the past 22 years of its existence the enthusiasm for this institution had ebbed so low that it is only the heroic perseverance of Brother Gonsal that has been able to save it from extinction. There have been days when both pantry and purse were liberally empty, and poor Brother Gonsal had to trudge the distance from this orphanage to Kalutara, beg for his train or bus fare to Colombo, there to beg again to provide for the needs of his children. In spite of such discouragement, with complete trust in Providence and a great optimism, Brother Gonsal went on gradually extending the buildings rather than refuse admission to the forlorn little ones. Great hopes for the future were laid in the rubber seedlings we had planted b... to have our hopes frustrated by the slump in rubbe...

But Providence uses difficulties to spur men on to resolute action. We complain but we are driven to think and act. We realised that the orphans should not be abandoned and that we must make a great effort in their cause. The present building is the result.

The new building is not the only fruit of the depression. The children were taught only Sinhalese up to last year and they are Tamils. This was a strain on the child who had to learn the language and learn also the rudiments of knowledge with children whose mother tongue was Sinhalese. I do not think that I need apologise because we were anxious to have a Tamil School and in May last year we commenced the school. That school was also welcomed by the local Tamil speaking population especially the Muslims who had also all along been suffering from the absence of a well conducted Tamil school.

This orphanage commenced with eleven children in a small hut. To-day it provides a home and training to 41 destitute children. About 115 children have passed through this institution during the last 22 years and I am glad to say that many of them are doing fairly well in the
The school had 62 children on its roll when it was
last year; to-day it has 91 children.


We badly require a section for vocational traini
hope some generous benefactor would come forwa
supply the need.

We are grateful to the Director of Education an
officers of the Department of Education as well
members of the Kalutara District Educational Com
for accepting the school as a "Maintained" school.
are very happy to see that the Director of Educati
been pleased to grace this occasion with his presen
heartily thank Mr. Robinson for his presence here at
personal inconvenience to himself. A little later I
request Mr. Robison to plant a Jak tree in these grou
commemorate the inauguration of these new buildings

On an occasion like this it is but becoming th
remember all those that have helped with materia
moral support in building up this orphanage. T
couragement of our beloved late Archbishop Coudert
your Grace's active help both when you were the Sup
of the St. Vincent's Home and after your Grace ha
sumed your present exalted office have contribute
largest share. Truly your Grace is the founder of th
stitution. I should particularly mention that withou
services of the Franciscan Brothers, whom your Grace
Dr. Coudert placed at the disposal of this orpha
nothing could have been done. We owe also a very
debt of gratitude to the successive Superiors of t
Vincent's Home and to Rev. Bro. Marcelline, Sup
General of the Franciscan Brothers, for the interest
have always shown in this institution. The present Sup
Rev. Fr. Gomes O. M. I. was ever ready to help us to
the new Tamil School, although it meant the remov
the orphans from his own school. Rev. Brother Paul
first headmaster, Rev. Bro. Peter, the present ener
headmaster, Rev. Bro. Simon, his able assistant and
Bro, John who are all on the teaching staff of the
school have been most unsparing in the face of the
culties that are involved in commencing a new sc
Within one year the number of children attending the
school has risen from 62 to 91. The presence to-day
large number of the residents is proof of the need an
popularity of the school. I must not fail to thank als
generous benefactors who have made this new buil
possible and all those who helped in supervising
work,

Last but not least I have to thank all of you,
Fathers, Brothers, Ladies and Gentlemen who
generously responded to our invitation,

I have now great pleasure in requesting your Gra
bless the new buildings of the Don Bosco Orphanage
to declare it open.



டொன்போஸ்கோ பரதகுல அநாதைச் சிறுவர் மடம்

தற்போதைய நிலைமை

பதினொரு பிள்ளைகளைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அனாதை மடத்தில் இப்போது 51 அநாதைச் சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இவர்கள் மிகச் சுத்தமாகவும், ஒழுக்கமாகவும், தெய்வபக்தியுள்ளவர்களாகவும், கீழ்ப்படிதலுள்ளவர்களாகவும், சந்தோஷமாகவும் இருந்து வருகிறார்கள். இம்மடத்திலிருந்து இதுவரை 111 பிள்ளைகள் வெளியேறியிருக்கிறார்கள். இவர்களில் பலர் உலகில் மிக நல்ல நிலைமையில் இருக்கிறார்களென்பது குறிப்பிடத்தக்க விஷயம். தமிழ்த்தாய் உதரத்தில் உதித்துத் தமிழ்ப் பாஷையிலேயே பெற்றோர்களால் வளர்க்கப்பட்டு வந்த நம் குலச் சிறுவர்கள் 1935-ம் வருடம்வரை வின்சென்ற் ஹோமைச் சேர்ந்த சிங்களப் பள்ளிக்கூடத்திற்குச் சென்று, சிங்கள பாஷையிலேயே கல்வி கற்று வரலாயினர். இது மாணவர்களின் அபிவிருத்திக்கு ஓர் தடையாக இருந்தது. இப்பெருந் தடையும் சமீபத்தில் நிவர்த்திக்கப் பட்டுள்ளது. திவான்பகதூர் ஐ. எக்ஸ். பெரைரா அவர்களின் விடா முயற்சியால் தமிழ் மாணவர்களாகிய நம் குல அநாதைச் சிறுவர்கள் இப்போது சர்க்கார் அங்கீகாரம் பெற்று, மடத்தோடு சேர்ந்திருக்கும் தமிழ்ப் பாடசாலையில் கல்வி கற்று வருகிறார்கள். இப்பாடசாலை 1935ம் வருடம் மேய் மாதம் 16-ந் தேதியன்று ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையில் பரதகுல அநாதைச் சிறுவர்கள் உட்பட 90 மாணவர்கள் படித்து வருகிறார்கள். இன்னும் அதிகமான மாணவர்கள் வந்து சேரக்கூடுமென்று எதிர்பார்க்க இடமிருக்கிறது; ஏனெனில் இப்பகுதியில் தமிழ்ப் பாடசாலையாய் இருப்பது இப்பள்ளிக்கூட மொன்றேயாகும். சங். பீற்றர் பிரதரவர்கள் தலைமை ஆசிரியராகவும் சங். சைமன் பிரதரவர்களும். சங். யுவான் பிரதரவர்களும் உதவி ஆசிரியர்களாகவும் மிகத் திறமையுடனும், ஊக்கத்துடனும் உழைத்துவருகிறார்கள்.

புதிய கட்டடம்

இவ்வநாதைச் சாலையின் கட்டடங்கள் மிகப்பழையனவாயும். மிக வசதிக்குறைவான சிறிய இடமாகவும் இருந்தமையால், ஸ்ரீமான் கஸ்பார் கோமஸ், திவான்பகதூர் ஐ. எக்ஸ. பெரைரா ஆகிய இவ்விரு பரதகுலப் பிரபுக்களின் முயற்சியின் காரணமாய்ப் பரதகுலத்தவர்களிடமிருந்து நன்கொடைகள் பெற்று, சுமார் ரூபாய் 16000 பெறுமதியுள்ளதும், தற்கால சுகாதாரத்திற்கேற்றதுமான ஓர் விசாலமான பெரிய கட்டடமொன்று நிறுவப்பட்டு, 1936-ம் வருடம் நவம்பர் மாதம் 22-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு அதிமேற்றிராணியாரும், இம்மடத்தின் சாஸ்வத திட்டத்தை அமைத்துக் கொடுத்தவருமான அதி ஆசாரத்திற்குரிய P. மார்க் ஆண்டவரவர்களால் மடத்தின் வெளிப்புறமும், உட்புறமும் மந்திரிக்கப்பட்டுச் சர்வாடம்பர ஜெய கோஷத்திடையே திறந்துவைக்கப்பட்டது. இவ்விழாவின் ஞாபகமாகக் கல்வி டைரக்டர் (L. Mc. D. Robinson Esq.) ராபின்ஸன் துரையவர்களால் பலாக்கன்றொன்றும் நாட்டப்பட்டது. இப்புதுக் கட்டடத்துக்கு 'டொன் போஸ்கோ பரதகுல அநாதைச்சிறுவர் மடம்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.


கட்டட அமைப்பு

இப்புதிய கட்டடம் ஓர் குன்றின்மேல் கட்டப்பட்டு அழகான தோற்றமளிக்கிறது. காற்றும் வெளிச்சமும் தாராளமாகச்செல்ல பல ஜன்னல்களும் பெரிய நிலைகளும் நாட்டப்பட்டிருக்கின்றன. கட்டடத்தின் இரு புறமும் 12 அடி அகலமுள்ள (Veranda) விராந்தாக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. புதுக்கட்டடத்தின் ஓர் பக்கத்தில் (Chapel) ஜெபக்கூடமும், (Study Hall) படிப்பறையும், நடுவில் 60 பிள்ளைகள் படுத்தெழும்பக்கூடிய விசாலமான

(Dormitary) சயனஅறையும், மற்ருெரு புறத்தில் (Refectory) போஜன சாலையும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மெஸர்ஸ் தாமஸ் ரொட்ரீகோ கம்பெனியாரால் நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட 4 அடி உயரமுள்ள சிறந்த தோற்றமுள்ள யேசுராஜாவின் சுரூபம் "சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள்" என்று தீட்டப்பட்ட சிங்கார சிம்மாசனத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சயன அறையில் கொழும்பு அதிமேற்றிராணியாரும், தூத்துக்குடி மேற்றிராணியாரும் ஆசீர் அளித்து அனுப்பிய (Autograph Blessings) உருவப்படங்கள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. அத்தோடு நீதிவாக்கியங்கள் பொறிக்கப்பட்ட படங்களும் மாட்டப்பட்டிருக்கின்றன. புதிதாக ஓர் சமையல் அறையும், பண்டகசாலையும், வேலையாட்கள் அறையும் கட்டப்பட்டிருக்கின்றன; மேலும், மிக நவீன முறையில் இயங்கக்கூடிய (Drainage) டிரெயினேஜ் கக்கூஸ்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதோடு பிரதர்மார் குளிப்பதற்காக 3 ஸ்நான அறைகளும், பிள்ளைகள் குளிப்பதற்காகப் பெரிய ஸ்நான அறையொன்றும் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்நான அறைகளில் (Shower Bath) ஷவர் பாத் வசதிகள் அமைக்கப்பட்டிருப்பது வெகு விசேஷமானவைகளில் ஒன்ருகும். இதற்கு வேண்டிய தண்ணீர் அருகாமையிலுள்ள கிணற்றிலிருந்து 800 கலன் பிடிக்கக்கூடிய (Concrete tank) தாங்கிக்குப் பம்ப்செய்யப்படுகிறது. (Drainage) டிரெயினேஜ் இயங்குவதற்காக 400 கலன் பிடிக்கக்கூடிய மற்ருேர் தாங்கியும் கட்டப்பட்டிருக்கிறது. பெரிய பட்டணங்களில் அமைக்கப்பட்டிருக்கும் பைப் தண்ணீர் வசதி முறைகளையும் இக்குக்கிராமத்தில், அதிலும் ஓர் அநாதைச் சிறுவர் மடத்தில் காண எவரும் ஆச்சரியப்படாமலிருக்க முடியாது.

இவ்வாருகப் பரதகுல அநாதைச் சிறுவர்களுக்கென ஓர் மடம் ஸ்தாபிக்கப்படக் காரணமாயிருந்தது கொழும்பு பரதகுல சங்கமேயாகும். இவ்விதமான ஓர் சங்கம் இல்லா-
திருக்குமேயாஞல் இம்மடத்திலிருந்து வெளியேறிய[...]
கும் அநாதைச் சிறுவர்களின் கதியென்ன? நம் சமூகத்தி[...]
பிற்கால நிலைதானென்ன? இதனை ஒவ்வொருவ[...]
ஊன்றிக் கவனிக்கவேண்டிய தவசியமாகும். சங்கங்கள்[...]
லாத் தேசம் கடைத்தேறுவது துர்லபம். இன்றைய அ[...]
சியல் அமைப்புகள் சங்கங்களாலேயே இயக்குவிக்கப்[...]
கின்றன. உலகமெங்கும் சங்கங்களின் ஆட்சியே நடை[...]
பெறுகிறது. ஆகவே நமது சமூக முன்னேற்றத்திற்காக ஒ[...]
வொரு ஊரிலும் சங்கங்கள் தோன்றவேண்டியது அவசி[...]
மாகும். அவ்விதம் தோன்றும் சங்கங்களைத் தங்கள் ச[...]
குரோதங்களைத் தீர்த்துக்கொள்ளும் சபைகளாக மாற்[...]
விடாமல், பொது நன்மைக்காக யாவரும் ஒற்றுமையுட[...]
ஆதரிக்க வேண்டியதவசியமாகும். அல்லாமலும் ஒ[...]
வொரு கிராமத்திலுமுள்ள சங்கங்கள் தூத்துக்குடி ப[...]
மகாஜன சங்கத்தைத் தங்கள் தாய்ச்சங்கமாக ஏற்றுப் பிர[...]
வருடமும் உண்டியல்வசூல்செய்து அதற்கு ஆதரவும் உத[...]
யும் அளிக்க முயற்சி செய்வதையும் ஓர் கொள்கையா[...]
அமைத்துக் கொள்ளவேண்டும். இவ்விதமாக ஒவ்வொ[...]
ஊரிலும் சங்கங்கள் ஏற்பட்டு, தூத்துக்குடி பரத மகாஜ[...]
சங்கத்தோடு சங்கிலித்தொடர்போல் இணைக்கப்பட்டிரு[...]
பின், நாம் சுபீக்ஷமுடன் வாழ்வதைக் கண்கூடாகக் கண்[...]
இன்புறுவோமென்பது திண்ணம்.

சிறு வயதில் தந்தையை இழந்து அநாதையான அர்[...]
சியசிஷ்ட டொன்போஸ்கோ அடைக்கலத்தில் ஸ்தாபிக்க[...]
பட்டிருக்கும் மகோணை டொன்போஸ்கோ பரதகு[...]
அநாதை மடம் அவ்வர்ச்சியசிஷ்டவரின் வேண்டுதல் பல[...]
தால் தினேதினே விருத்தியடைந்து, அநாதைச் சிறுவ[...]
களில் இன்னும் பலருக்கு அடைக்கலமளித்து சமய சமூ[...]
கத்திற்கு ஊழியம் செய்யக்கூடிய தொண்டர்களாய் அவ[...]
களுக்குப் பயிற்சி அளித்து, சமூகத்திற்கு நன்மையா[...]
விளங்கத் திரியேகநாதன் திருவருள் புரிவாராக.



அர்ச். சவேரியாரும் பரத சிறுவர்களும்

Fr. J. S. LOBO.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே" என்ற மெட்டு

1

அன்னை சந்தமரிதஸ் நேவிஸ்—எங்கள்
ஆண்டவள் பொற்றேர் சுபதினத்தே
அன்னை சொரூபமே இங்கெழ—வானின்று
அற்புதம் செய்தோனை வாழ்த்துவோமே.

2

தேனினுமினிய சொல்லுணர்ச்சி—யோடு
தேடி அழைப்பானே பாலர்களை
வானகம் வையகம் மாறினுமே—சவ்யோர்
வைதீக சேவை மறவோமே.

3

காலையும் மாலையும் ஆலயம்—சேர்ந்தவர்
கர்த்தனை வாழ்த்தி வணங்கிடவே
ஓலைக்குடிசை கடைத்தெரு வீதியில்
ஒலிக்குமே எந்தை கை மணியே.

4

ஆழி அலைகரை தீரத்திலே—சிறு
ஆறு குளம் குட்டை யோரத்திலே
நாழிகை நாழிகை யோதிவோன்—பல
நங்குல பாலர்க்குபதேசம்.

5

அர்ச்சிய சிலுவை மந்திரமும்—ஆறு
இலக்ஷண மந்திரம் சொல்லுவானே
அர்த்தமுடன் நம் ஆண்டவன் மந்திரம்
ஆண்டவள் மந்திரம் கூறுவானே.

6

புத்திவிபர மறிந்தவர்க்கு—பிர
தான மந்திரமே கற்பிவித்து
பக்தி ரசம் கொண்டமாலே ஜெபமாலே
பயின்று கொடுப்பான் கேட்பீரே.

7

மத்தேயு அகஸ்தீன் அந்தோனி—செல்வ
சீஷராய்க் கொண்ட முனியவனே
பக்தர் இவரும் பரத குலத்தவர்—பாரில்
பணிவு புரிந்தாரே.

8

முத்து சங்கு சிப்பி நற்பவளம் யாவும்
சொத்தெனக் கொண்டாரே நம்மவரே
வித்தகன் அளித்த ஞான வித்ததுவே
சொத்தில் சிறந்த நம் சொத்ததுவே.

●

"ஆடுவோமே பள்ளு பாடுவோமே" என்ற மெட்டு

பல்லவி

அப்பன் சவியர் எங்கள் அப்பன் அவனே
ஆப்தாதி நண்பனென அழைத்திடுவோம்—என்றும்.

சரணம்

1

தப்பாத உதவியே தந்தவன் அவனே
எப்போதும் அவன் பெயர் எம்மிடை நிற்கும்
செப்பரும் முத்து துறை காவலனே—அவன்
ஒப்பேயுடையவரை காணுவோமோ! (அப்)

2

பென்னம் பெரிய திருமந்திரம்மா நிம்பை
புன்னையாதிய காயல் மணவை ஆலே
தென்வீர பாண்டியனூர் பொன்னகரே—செந்தூர்
கன்னிமுனை பஞ்சல் தாழை உபரிகண்டோன். (அப்)

3

பரதகுல சிறுவர் பரிவுடன் சூழ்ந்து
பகர்ந்திடு மொழிகேட்டு மகிழ்ந்திடுவோர்
கரவையை கண்டிட்ட கன்றதும் மாண்பே—
கொண்டேயவன் கரமேவி—ஆனந்திப்பாரே. (அப்)

●

பரிசுத்த பனிமய மாதா தேவாலயம்
தூத்துக்குடி
(1545 - 1947)

Mr. T. J. VAZ, TUTICORIN

"பரதரின் மாதா"

போர்த்துக்கீஸியர் பாரத வர்ஷம் என்னப்பட்ட நம் பரத கண்டத்திற்கு வந்த பின்பு, இவர்களுடைய அரும் பிரயாசையாலும், போர்த்துக்கல் மன்னர் பெருமானின் உதாரமுள்ளகொடையாலும். போர்த்துக்கீஸிய குருக்களின் தளரா ஊக்கத்தாலும் சத்யமறை இந்தியாவில் வளாந்தோங்கியது. இக்காலத்தில் திருமறையைச் சேரும் பாக்கியம் பெற்றவர்களில் முத்துக்குளித்துறைப் பரதர்களும் ஓரினத்தவராவர். 1545-ம் ஆண்டில் தூத்துக்குடியில் ஓர் கோவில் அர்ச். சின்னப்பரின் (சம்பவுல்) நாம மகிமையின் பொருட்டுக் கட்டப்பட்டது. இந்தத் தேவாலயத்தில்தான் சிஷ்ட சவேரியாரின் வேண்டுகோளின்படி மனிலாவிலிருந்து வந்த **பரிசுத்த பனிமய மாதா** வெனும் திவ்ய சந்த மரிய தஸ்நேவிஸ் ஆண்டவள் அற்புதச் சொரூபம் முதன் முறை பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1552-ம் ஆண்டு ஜூன்மீ 9உ இச்சுரூபம் சந்த ஹெலானு கப்பல் மார்க்கமாய்த் தூத்துக்குடித் துறைமுகம் வந்துசேர்ந்தது. **சங். மிக்கேல் வாஸ்** எனும் போர்த்துக்கீஸிய குருவானவர் **பரதரின் மாதா** வெனும் நாமமுடன் இச்சுரூபத்தினை அத்தேவாலயத்தில் எழுந்தருளச் செய்தனர். அன்றுமுதல் பரதகுலத்தவர் சேசுவின் தாயைப் பரதர் மாதாவென அழைத்து வரத் தலைப்பட்டனர். பரதர் மாதா வெனும் நாமம் அவர்கட்குத் தாரக மந்திரம். சிலையிலெழுத்து எவ்வாறு உறுதி, நீடிப்பு உள்ளதோ. அவ்வாறே இச்சந்ததியார் இவ்வினிய நாமத்தைக் கர்ணபாரம்பர்யமாய் இதயத்தில் காப்பாற்றி வருகின்றனர்.

டச்சுப்பதிதர் வருகை

1780ம் ஆண்டில் டச்சுப்பதிதர் தூத்துக்குடிக்கு வந்து சம்பவுல் ஆலயத்தை இடித்து நிர்மூலமாக்கினர். உலாந்தர் பரதகுலத்தவரைப் பதிதராக்க முயன்றனர். நயத்தால் அமுதமழை பொழிந்து அவர்களுடைய விசுவாசத்தைத் தளர்த்த முயற்சித்தனர். துப்பாக்கி காட்டி அச்சுறுத்தி வயப்படுத்தப் பார்த்தனர். பலனில்லை. டச்சு துரைத்தனத்தாரின் ஏராளமான பொருளினை வாரிக்கொடுத்து அன்னாரை வசமாக்க இந்திரஜாலம் செய்தனர். ஆயினுமென்ன? பரதர் தங்கள் குலாதிபனுடைய ஆக்ஞையின்படி, "உயிரிழப்போம். சத்ய திருச்சபையை மறுதலியோம்" எனப் பகர்ந்துவிட்டனர். தலையும் தலையும் பொருந்தினால் மலையும் வந்து பொறுக்குமல்லவா? தங்கம் புடத்திலே வைக்கப்படினும் தன்னொளி குன்றாததுபோல, அவர்களுடைய வேத விசுவாசம் நெருக்கிடை மத்தியில் வளர்ந்து செழித்தோங்கத் தலைப்பட்டது.

சின்ன ரோமாபுரி

சுத்த வீரரான பரதர் உயிரைத் துரும்பென மதித்தனர். பூர்வ உரோமைக் கிறீஸ்தவர்களைப்போல் வேத விரோதிகளை அஞ்சா நெஞ்சமுடன் எதிர்த்துச் சமர் புரிந்தனர். நல்லோராய்த் திகழ்ந்த இவர்கள் நடக்கை பதிதரான தீயோருக்குத் திகிலைக் கொடுத்தது ஆச்சரியமல்ல! பரதகுலத்தவரின் சாங்கோபாங்கமான, திடகாத்திர விசுவாசத்திற்குக் காரண மூலப்பொருள், உறைவிடம் எதென்று பரிசீலனை செய்தனர். மாதாவின் சுரூபந்தான் இவர்களின் குன்றாத பக்திக்குரிய சிறந்த சாதனமெனக் கண்டு, இச்சுரூபத்தைக் களவாடிச் செல்லப் பலவிதங்களில் பன்முறை பிரயத்தனஞ் செய்தனர். பெற்றதாயினும் உற்ற தாயாய் மதித்துப் போற்றிவந்த ஆண்டவளின் அழகிய சுரூபத்தைப் பரதகுல மக்கள் இரத்தஞ் சிந்தியும் வீரத்தியாகங்கள் பல புரிந்தும் அழிவின்றிக் காப்பாற்றினர்.

டச்சுக்காரர் கல்லறை

சம்பவுல் கோவிலையழித்த டச்சுப் பதிதர் அவ்விடத்திலேயே தங்கள் இனத்தவரை அடக்கஞ் செய்யும்படியாக ஓர் கல்லறையை (மையவாடி) நிறுவினர். இக்கல்லறையைக் (Keracope Street) கிரகோப் தெருவில் இன்றும் பார்க்கலாம். டச்சுப்பதிதர் தங்கள் மத வழிபாட்டிற்காக ஓர் கோவிலைத் தூத்துக்குடியில் கட்டினார்கள். பீச் ரோட்டில் ஆஷ்மெமோரியல் பக்கம் இக்கோவிலை இன்றும் காணமுடியும். (புன்னையம்பதியில் பரிசுத்த பரலோ மாதாவின் ஆலயத்தினை இப்பதிதக் கூட்டத்தினர் வியாப ரக் கிடங்காக மாற்றினார்கள். ஆங்கு அக்கோவில் த போது அர்ச். ஜெபமாலை மாதாவின் தேர் நிற்கு இடமாக அமைந்துள்ளது போர்த்துக்கீஸியர் கோவில் கட்டுமிடங்களில் ஓர் குருசடியை (குரூஸ்பாதம்) அமைப்பது பூர்வ வழக்கம். பிரஸ்தாப சம்பவுல் கோவில் கு சடி டச்சுக்கல்லறை யிருக்கும் பகுதியில் "சம்பவுல்" முடுக்கிலுள்ள ஓர் வீட்டிலிருந்து வருகின்றது. இக்கு சடி இன்றைக்கும் அர்ச். சின்னப்பரின் மகிமைக்காகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அர்ச். இராயப்பர் கோவில்

தூத்துக்குடியில் கட்டப்பட்ட பூர்வ கோவில்களி அர்ச். இராயப்பருக்கு என்றும் ஓர் ஆலயமிருந்தது. இ கோவில் சாந்துபேதுரு கோவில் தெருவில் தற்போ திருச்சிலுவைக்கோவில் இருக்குமிடத்திற்கு அருகி இருந்துவந்தது. இக்கோவில் கத்தோலிக்கர் கல்லறையுடன் விளங்கிவந்தது. பிரஸ்தாப கோவில் அழிவுற்று வெ நிலமாகக் காட்சி யளிக்கின்றது. சாந்துபேதுரு கோவி

தெரு, சாந்துபேதுரு கோவில் குருசடி முடுக்கு இப்பெயர் களே இக்கோவில் இங்கிருந்ததென்பதற்கு இப்போது அறி குறிகளா யிருக்கின்றன.

பரிசுத்த பனிமயமாதா கோவில் (பூர்வ சரிதை)

சரித்திரப் பிரசித்தியும் பழமையும் வாய்ந்த தூத்துக் குடியில் விளங்கும் ஆலயங்களில் பரிசுத்த பனிமயமாதா கோவில் விசேஷம் பெற்றது. மாதாவின் பெரிய கோவி லென்று இன்னும் இக்கோவில் வழங்கப்பெற்று வருகின் றது. 1708-ம் ஆண்டில் இக்கோவிலுக்கு அஸ்திவாரமிடப் பட்டது. 1711-ம் ஆண்டில் கட்டட வேலைகள் பூர்த்தி யாயின. அவ்வருடம் ஆகஸ்ட்மீ 5ம் நாளில் பரிசுத்த பனி மய மாதா திருவிழாவன்று இக்கோவிலில் முதற் பூசைப் பலி நிறைவேற்றப்பட்டது. டச்சுக்காரர்களுக்குப் பயந்து பல இடங்களுக்குத் தூக்கிச் செல்லப்பட்டும் ஒளித்துவைக் கப்பட்டும் பூஜிதமாகக் காப்பற்றப்பட்ட புதுமையுள்ள பரி சுத்த பனிமயமாதா சுரூபம் இத்தேவாலயத்தில் கெம்பீர முடன் ஸ்தாபிக்கப்பட்டது. இம்மாதாவின் பக்கலில் அர்ச். இராயப்பர்—சின்னப்பர் சுரூபங்களும் அர்ச். இஞ் ஞாசியார்—சவேரியார் சுரூபங்களும் வைக்கப்பட்டன. அக் காலம் மாதா சுரூபம் சுற்றுப்பிரகாரமாக எடுத்துச் செல் லப்படும் சமயங்களில் மாதா சுரூபத்திற்கு முன்னால் அர்ச். இராயப்பர், சின்னப்பர் சுரூபங்களைக்கொண்டு செல்வது வழக்கமாம்.

பரிசுத்த பனிமயமாதாவும் உரோமரும்

மாதாவின் தோத்திரத்திற்காக உரோமாபுரியில் கட்டப் பட்ட முதல் தேவாலயம் பரிசுத்தபனிமய நாயகிக்கென்று கட்டப்பட்டதாகும். இம்முதல் ஆலயம் உரோமை மாநகரி லுள்ள (Mount Esquiline) எஸ்குலின் மலையில் கட் டப்பட்டது. உரோமையில் இன்று (Mary Major) மேரி மேஜர்'—மாதாவின் பெரிய கோவில் என்று அழைக் கப்படுகிறது இவ்வாலயந்தான். இந்தத் தேவாலத்தை நிர் மாணிப்பதற்குரிய அளவை plan மாதிரியை மாதா தூய பனிக்கட்டிகொண்டு அம்மலையில் போட்டுக் காட்டியபடி யால்இதற்குப் பனிமயமாதாவெனும் பெயர்சூட்டப்பட்டது உஷ்ணகாலத்தில் இப்பனி அதிசயமாகப் பெய்திருந்தபடி யால் அதிசய பனிமாதா என்று உரோமையர்கள் அழைக்கி றார்கள். இத்தேவாலயத்திற்கு கி. பி 435-ம் ஆண்டு ஆகஸ்ட்மீ 5ம்வ யன்று அபிஷேகம் நடந்தேறியபடியால், பிரதி வருடமும் ஆகஸ்ட்மீ 5ம் நாளில் பரிசுத்த பனிமய மாதா திருவிழா கொண்டாடப்படுகின்றது.

ரோமை மாநகரிப் பனிமயமாதா கோவில்

ஐந்தாம் நூற்றாண்டில் பரிசுத்த லிபேரியுஸ் பாப்பாண் டவர் திருச்சபையை ஆண்டு வருகையில், ரோமைமாநகரில் பிரபுத்வ குடும்பத்தில் பிறந்த ஜான் என்பவரும், அவரது பத்தினியாரும் தங்களுக்குப் புத்திரசந்தானமில்லாதிருந்த படியாலும், தங்களுக்குப்பிறகு தங்கள் திரண்ட ஆஸ்தியைப் பெறுவதற்கு ஒருவரு மில்லாதபடியாலும் மாதாவின் தோத்திரத்தின் பொருட்டுத் தங்களின் ஆஸ்தியைச் செல விடநினைத்தார்கள். தேவதாய் காட்சியில் இவர்களுக்குத் தோன்றி, எஸ்குலின் மலையில் பனிபெய்துள்ள விடத்தில் தன் நாமத்தின் பேரால் ஓர் தேவாலாயத்தைக் கட்ட வேண்டுமென ஆக்ஞாபித்தாள். அன்று இரவிலேயே பரிசுத்த பிதா லிபேரியுஸ் போப்பாண்டவரவர்களுக்கும் தனது மனோரதத்தைத் தெரிவித்தாள் தேவதாய். ஆகவே, தேவதாயின் அபிலாஷையைப் பூர்த்தி செய்தற்பொருட்டுத் தங்கள் ஐசுவரியத்தைச் செலவிட்டனர் ஜான் தம்பதிகள். இத்தேவாலயத்தில் நமது திவ்ய ரட்சகர் கிறீஸ்து பிறந்த கொட்டிலும் பிறவும் பூஜிதமாய்க் காப்பாற்றப் பட்டு வருகின்றன. அநேக புதுமைகள் இவ்வாலயத்தில் நடைபெற்றுவருகின்றன.

"உரோமர் இராக்கினி"

உரோமையர்கள் எவ்வித சகாயங்களைப் பெறவும் இக் கோவிலைத்தான் நாடிச்செல்வர். நம் இரட்சகரின் பதி லாளியாக இப்பொழுது நம்மை ஆண்டுவருகிற பரிசுத்த பிதா 12-ம் பத்திநாதர் பாப்பரசராக அபிஷேகம் செய்யப் பெற்ற பிறகு முதற் பூசை செய்தது இத்தேவாலயத்தில் தான். உலகயுத்தம் ஒழிந்து சமாதானம் நிலவவேண்டு மென்று பிரார்த்தனை செய்வதற்காகப் பரிசுத்த பிதா அடிக் கடி இக்கோவிலுக்கு வருவதுண்டு. யுத்தமொழிந்து சமா தானம் வந்துற்றகாலை நன்றியறிதலாகப் பரிசுத்த தந்தை யவர்கள் இவ்விடத்தில் திவ்ய பலிப்பூசை நிறைவேற்றி னார்கள். பாப்பரசர்களைத்தவிர வேறுயாரும் இவ்வாலயத் தில் பாட்டுப்பூசை நிறைவேற்ற முடியாதாம். இத்தேவா லயம் "ரோமர் ராக்கினி கோவில்" என்றும், "ரோமர் அடைக்கலக்கோவில்" என்றும் உரோமர்களால் வாஞ்சை யுடன் அழைக்கப்பட்டுவருகின்றது.

பரிசுத்த பனிமய மாதாவும் பரதரும்

உரோமர்களைப் போலவே முத்துக்குளித்துறைவாழ் பரதர் சமஸ்தரும் பனிமய மாதாவைப் பரத குலத்திற்கு அடைக்கலத்தாயென்றும் பரதர் மாதாவென்றும் பண்டை நாள் முதல் இதயத்தில் வைத்துப் பூஜித்துக் கொண்டாடி வருகின்றனர். நல்ல காரியங்களைத் துவக்குங்காலை இவ ளின் அரவிந்தக் கழலினை நாடி இவளின் ஆசீர் இரந்து செல்வது தொன்று தொட்டு வழக்கம். புது மணத்தம்பதி கள் தங்கள் இல்வாழ்க்கையின் ஆரம்ப நாளில் இவள் பாதம் நாடி ஆசீர்பெறத் தவறுவதில்லை. கார்மனல் பிராந் தியத்திலுள்ள பரத ஜாதியாரின் தாயகமாக விளங்குகிறது இக்கோவில். இம்மாதாவை நினைக்குந்தோறும் நெஞ்சில் பெருமிதங்கொள்வான் பரதன். பரதனாய்ப் பிறந்த ஒவ் வொருவனுடைய உள்ளக்கோவிலிலும் இம்மாதா கொலு வீற்று அருள் புரிந்து வருவது கண்கூடு. கடலிலோ கரையிலோ இவ்வரப்ரசாதியின் உதவியைப் பெற்றோர் சமாளிக்கமுடியாத எத்தனைய நெருக்கிடைகளையும் அனு யாசமாகச் சமாளித்துத் துறையெய்துவது பிரத்யக்ஷம். பரதன் தேவமாதாவை மறுதலிப்பதைத் தன் பெருமைக்கு மாசு. களங்கம் என்று கருதுகிறான். "பரதனும் பதிதனு வானே?"—இப்பழமொழியைமெய்ப்பித்து நிருபித்து வரு கிறாள் திவ்ய பனிமயத்தாய். இவற்றிற்கெல்லாம் காரணம் யாது? எங்கு உறைகிறது இவ்வேத வைராக்ய திடசங் கல்பம்?

முத்துக்குளித்துறையில் சிஷ்டசவேரியார்

சிஷ்ட பிரான்சிஸ்கு சவேரியார் 1542ம் ஆண்டு மேமீ 6ட இந்தியாவிற்கு வந்துசேர்ந்தார். கோவையம்பதியில் தங்கிய இப்பெரிய அப்போஸ்தலர் இந்தியாவின் கீழ்க்கரை யோரங்களில் வேதம் போதித்து வந்தார். கன்னியாகுமரி துடங்கி கடற்கரை யோரமாய் மன்னார்வரையுள்ள பிர தேசம் முத்துக்குளித்துறை யெனப்படுகின்றது. இப்பிர தேசத்திலுள்ள பரதகுல மக்களை மெய்ம்மறையில்

சேர்த்து உறுதிப்படுத்தும் ஞான அலுவலைச் செய்துவந்த சிஷ்டசவேரியார் அம்மக்கள் மட்டில் தந்தைக்குரிய வாத்ஸல்யமும் கரிசனையுங் கொண்டிருந்தார். அவர்களுக்கு வைதீக நன்மைகளை மட்டுமல்ல. லௌகீக நன்மைகளையும் செய்துவந்தாரென்பது தேற்றம். பாதசாரியாகக் கிராமங்களையும். குக்கிராமங்களையும் நேரில் தரிசிப்பார். அநேக நவங்களையும் ஆச்சரியங்களையும் செய்துவந்தார். இரவில் சிறிதுபோது தவிர மற்றெல்லா நேரங்களிலும் கடினமாய் உழைத்துவந்தார். தகிக்கும் வெயிலையோ, அடை மழையையோ, மிகுந்த குளிரையோ பொருட்படுத்தாது தெய்வீகப் பணியாற்றிவந்தார்.

பாதர்களின் குலதெய்வங்கள்

அக்காலத்தில் இந்துக்களாயிருந்து வந்த பரத குலத்தவரின் குலதெய்வங்களாகிய **மதுரை மீனாக்ஷி அம்மன்** மட்டிலும், கன்னியாகுமரிக் **குமரியம்மன்** மட்டிலும் பரதர்கள் கொண்டிருந்த அளவிடற்கரிய பற்றுதலைத் தெள்ளிதில் தெரிந்துகொண்டார் அர்ச்சியசிஷ்டவர். கொந்தளிக்கும் வாழ்க்கைப்புயல் மத்தியில் மனோசாந்தியை அளிப்பதற்குரிய சஞ்சீவி பெண்மைக் கோலத்திலிருக்கின்ற தென்பதையும் பெண்மையில் தெய்வத்தன்மை இசைந்து இயங்கிநிற்கின்றதென்பதையும் தெரிந்துகொண்ட இப்புனித சீலர் பரதர்களின் விசுவாசம் நிரந்தரம் குன்றாதிருக்கவேண்டுமென்று ஓர் உபாயத்தைத் தெரிந்துகொண்டார். அதற்கு அநுகுணமான காலமும் கிட்டிவந்தது

மனிலா கன்னியர் ஆஸ்ரமம்

ஓர் சமயம் பிலிப்பைன் தீவுகளைச்சார்ந்த மனிலா பட்டினத்திற்கு அர்ச்சியசிஷ்டவர் செல்ல நேரிட்டது. ஆங்குள்ள ஓர் கன்னியர் ஆஸ்ரமத்தில் ரூபலாவண்ய சௌந்தர்யமுள்ள ஓர் மாதா சுரூபத்தைக் கண்ணுற்ற தவசிரேஷ்டர் அந்தத் திவ்ய ரூபலாவண்யத்திலே விம்மிதம் அடைந்தார். திவ்ய சேசுவின் செல்வத்தாயைப் பரத குலமக்களின் ஆத்தாள் எனக்கொடுத்த அர்ச் சவேரியார் பரத குலத்தவரின் வேதவிசுவாசம் என்றென்றும் குன்றாது குன்றின் மேலேற்றிய குருமணித் தீபம்போல் பிரகாசித்து ஓங்குவதற்கு இச்சுந்தர வடிவுள்ள சுரூபத்தினை அவர்களுக்குக் கொடுத்தால் மிக்க நலந்தருமெனத் தூரதிருஷ்டியால் அறிந்தார். மாதாவின் அன்புத்தலையினால் பரத மரபினரின் மனத்தை வேத விசுவாசத்தில் பிணைக்க எண்ணினார் ஞானதிருஷ்டியுடைய தேசிகர். தேஜோமய காக்ஷியளிக்கும் அம்மாதாவின் ஸ்வரூபத்தை கண்ணைமலர்த்தி நன்றாகப் பார்த்தார். தமது எண்ணத்தை மடத்துக்கன்னியர் தலைவிக்குஅறிவித்துச் சுரூபத்தைக்கேட்டு இரந்தனர். தாங்கள் வெகு பூஜிதமாய்க் காப்பாற்றி வருகிற இச்சுரூபத்தைச் சிஷ்டசவேரியாருக்குவழங்கக் கன்னியர்கள் இசையவில்லை.

பூதஉடம்பழியாத சந்நியாசி

சைனா தேசத்தைச் சேசுராஜன் பாதத்தின்கீழ்க் கொண்டுவர ஆசித்தார் சிஷ்ட சவேரியார். தெய்வசங்கல்பம் ஒத்திருக்கவில்லை. சீனா தேசத்தினுள் செல்லமுடியாது அர்ச்சிய சிஷ்டவர் சான்ஷியான் தீவில் தங்கினார். ராஜபோகத்தில் பிறந்து வளர்ந்து. கல்வி கேள்விகளில் தேர்ச்சிபெற்ற பட்டதாரியாகவும் மேதையாகவும்விளங்கித் தேவசிநேக அக்கினியால் எரிந்து ஆத்துமங்களை இரட்சிக்கும் அலுவலில் இணைத்த இப்பெரிய தபோதனர் ஒரு சிஷ்யன் பக்கத்திருக்க, தனியராய் இத்தீவில் உயி[ர்த்]தனர். 1555-ம் ஆண்டு டிசம்பர்மீ 3உ வெள்[ளிக்]கிழமை சிஷ்ட சவேரியாரின் புனித ஆன்மா பரமே[...] சம்பாவனை பெற சேசுவின் திருவடிநிழல் விழைந்தேகிய[...] இப்புனித சந்நியாசி இறந்த பின்னர், இவரின் வே[...]தலால் நடந்தேறிவருகிற நவங்களைச் செவியுற்ற மனி[லா] மடத்துக் கன்னியர்கள் முனிவரின் வேண்டுகோ[ளை] நினைவுகூர்ந்து, அவரின் ஆவலைப் பூர்த்திசெய்வ[தின்] பொருட்டு. பனிமய மாதா சுரூபத்தினைச் சாந்த ஹெலே[னா] கப்பல் வழியாகத் தூத்துக்குடிக்கு அனுப்பிவைத்தார்க[ள்]. இச்சுரூபம் 1555ம் ஆண்டு ஜூன்மீ 9உயில் தூத்[துக்]குடிக்கு வந்து சேர்ந்தது.

அற்புதச் சுரூபத்தின் சாயல்

இம்மாதாசுரூபத்தின் அலங்காரம். தேஜஸ் வர்ணனை[க]குள்ளடங்காததாகும். ஆயிரங் கதிரோனை சூரிய[...] ஆடையாய்த் தரித்ததன் அடையாளமாகப் பிரகாசமுள்[ள] தங்க ஆடையை முற்றும் தரித்து பாத தாமரையில் வெ[ண்] பிறையைமிதித்துக்காணப்படுகிறாள் மாதா. அகிலலோகர[ட்ச]கனும் தானீன்ற கனியுமாகிய சேசுவைப் பாலகன் ரூப[த்]தில் ஓர் கரத்தில் ஏந்தியிருக்கிறாள். ஆதித்தாய் தந்தைய[ர்] பாவங்கட்டிக்கொள்ளக் காரணமான கனியை ஓர் கர[த்]தில் வைத்துக் காண்பிக்கிறாள். ஆதி ஆதம் ஏவை உண்[ட] கனியினால் மனுஷ சந்ததி சர்வேசுவரனுடைய சாபத்[தை] ஏற்றது. இரண்டாவது ஏவாளாகிய பரிசுத்த மரியா[ள்] உலகத்திற்குப் பயின்றளித்த சேசுவெனும் கனியால் மனு[ஷ] சந்ததிக்குச் சாபவிமோசனம் ஏற்பட்டது. இவ் வி[சே]ஷத்தை விளக்குகிறது இம்மாதாவின் சுரூபம்.

பரதர் ஜாதிய விழா

கர்ண பாரம்பர்யமாக இம்மாதாவின் பெருநாளினை முத்துக் குளித்துறையைச் சார்ந்த பரத குலமக்கள் தங்கள் ஜாதிய விழாவாகக் கொண்டாடி வருகின்றனர். இம்மாதாவின் வருடோற்சவம் பிரதி வருடமும் ஆகஸ்ட்மீ 5[உ] நாளில் சிறப்பலங்காரமுடன் தூத்துக்குடியில் நடந்தேறி வருகின்றது. சிஷ்டசவேரியார் தங்கள் ஜாதியாருக்கு அடைக்கலமாகவும், பொக்கிஷமாகவும், தம் ஞாபகச்சின்னமாகவும் அளித்த மாதா இம்மாதாவெனப் பூர்வந்தொட்டு நம்பிவருகின்றபடியால். இச்சுரூபத்தின் மட்டில் பரதகுலமக்கள் ஈடு இணையற்ற பற்றுதல், வணக்கம். கௌரவம் செலுத்திவருகின்றனர். இம்மாதாவின்பேரில் இச்சமுகத்தவர் கொண்டுள்ள பக்தியாசாரம் அக்காலமுதல் இக்காலம் வரை மக்கள் சத்யமறையில் வழுவாதிருப்பதற்கு ஓர் சக்தியென இயங்கிவருவதை எவர் மறுக்கத்துணிவர்? டச்சுத் துரைத்தனமே இச்சுரூபத்தை நிர்மூலமாக்க நினைத்த காலத்தில் உலாந்தரிடமிருந்து சுரூபத்தைக் காப்பாற்றப் பரதகுலமக்கள் செய்த வீரத் தியாகங்கள் எண்ணற்றன வென்பது சரித்திரவாயிலாய் நாம் அறியும் உண்மை. இம்மாதாவிற்குப் பொன். வைரம். முத்து முதலிய விலையேறப்பெற்ற பொருட்களைக்கொண்டு அணியலங்காரங்கள் செய்வித்து மகிழுகின்றது பரத உலகம். பரதரின் பொக்கிஷம், பொற்குவியல், சம்பத்து யாவும் இம்மாதாவின் சுரூபமே ஆகும்.

திருமந்திர நகர்த் திருமந்திரம்

தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் மாதாவின் மகிமைக்காகக் கட்டப்பட்டுப் பக்தகோஷ்டிகளால் பிராபல்யமாகக் கொண்டாடப்படும் திருக்ஷேத்திரங்கள் மூன்று.

தேசிய முன்னேற்றமும் தேக பலமும்

டாக்டர் எல். ஆர். பர்னாந்து

ஒரு தேசம் முன்னேற்ற மடையவேண்டுமானால் அதில் வதியும் மக்கள் அனைவரும் நல்ல தேகபலமுள்ளவர்களாயும் சுகமுள்ளவர்களாயு மிருத்தலவசியம். நம்மிந்தியாவிலுள்ள எழு லட்சம் கிராமங்களில் உள்ளவர்களின் சுகநிலைமை தானென்ன? நம் தேசத்தில் நோயும் அறியாமையும் அதிகமாய்த் தாண்டவமாடுகின்றன. மற்ற தேசங்களைவிட அற்ப ஆயுளில் இந்தியாவுக்குத்தான் முதல் ஸ்தானம். ஒரு இந்தியரின் சராசரி ஆயுள் 22. இங்கிலாந்தில் 54, அஸ்திரேலியாவில் 75. என்னே வித்தியாசம்!

நம் தேசத்தாரை இளம்பிராயத்திலிருந்தே காப்பாற்றும்பொருட்டு ஒவ்வொருவரும் தக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். போதுமான தேகப் பயிற்சியில்லாமல் கல்வி பூர்த்தியாக மாட்டாது. நமது மக்களுக்கு விளையாட்டு ஸ்தலங்களும் அழகிய சிங்காரத் தோட்டங்களும் மிகவும் அவசியம். ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு கிராமத்திலும் இவைகள் அமைக்கப்படவேண்டும். முறையான. கிரமமுள்ள விளையாட்டுகளினால் நாம் வலுவான தேசத்தவர்களாகலாம். இவை தேக ஸ்திதியை அபிவிருத்தி செய்வதுமன்றி நல்ல ஜன சமூக வாழ்விற்கு [illegible]யக்காகவும் செய்கின்றன. அத்துடன் ஒழுங்கு, நியாயம், சிநேகம் முதலியவற்றை அவர்களுக்கு ஊட்டுகின்றன. ஆங்கிலேயருடைய ஜெயத்தின் இரகசியம் இதுவே. எந்தத் தேசத்தில் நல்ல பழக்கங்கள் இருக்கின்றனவோ அந்தத் தேசத்தில் விளையாடுமிடங்களில் பிள்ளைகளுக்குள் ஏற்படும் சமத்துவமும் சிநேகிதமும் அவர்கள் ஆயுள் பரியந்தம் நீடித்திருக்கும். ஜனநாயக ஆட்சியில் அவர்கள் உபயோகமான அங்கத்தினராவதற்கு அது உதவியாயிருக்கும். விளையாட்டுகளில் ஜாதி மத வர்ணபேதங்கள் கிடையா. தேசத்தார் ஒத்துவாழ அது அநுகூலமாயிருக்கும்.

மற்றொரு விஷயம். அநுதின தேகப் பயிற்சியினால் இருதயம் பலப்படுகிறது. இருதயமே தேகத்தின் உயிர் என்று சொல்லலாம். ஏனெனில். இது சரீரத்திற்கு வலுவையும வெப்பத்தையும் ஆகாரத்தையும் கொடுக்கின்றது. ஒரு நிமிஷம் இருதயம் நின்றுவிடுமானால் தேகததின் தொழில் ஒன்றும் நடக்காது. இருதயம் அடியோடே நின்றுபோனால், பிராணன் உடலைவிட்டுப் பிரிந்துவிடும். இருதயத்தின் ஒரு பாகந்தான் மார்புச் சுவருக்கு நேர் கீழாக இருக்கிறது. மார்பு சதையின்றி மெல்லியதாயிருந்தால் இருதயம் அந்த இடத்தில் அசைவதைப் பார்க்கலாம். இருதயமானது ஆழ்ந்த சதையுள்ள ஒரு உறுப்பு. இதில் நான்கு அறைகள் உண்டு. இவை ஒரு சதையால் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பாதியிலும் இரண்டு அறைகள் உண்டு. மேலறையும் கீழறையும். ஒவ்வொரு பாதிக்கும் இருதயத்தின் வலப்பக்கம் என்றும் இடப்பக்கம் என்றும் பெயர் உண்டு. வலப்பக்கத்திலுள்ளமேல் அறையில் தேகத்திலிருந்துவரும் அசுத்தமான ரத்தம் எல்லாம் வந்து சேருகிறது. அங்கிருந்து அது கீழறைக்குப்போய், சுத்தஞ் செய்யப்படுகிறதற்காக நுரையீரல்களுக்குப் பாய்கிறது. சுத்தமான பிறகு அந்த ரத்தமானது இருதயத்தின் இடது பாகத்திலுள்ள மேலறைக்கு வந்து. கீழ் அறைக்கு இறங்கி அங்கிருந்து தேக முழுதும் பரவுகிறது. தேகத்தில் ரத்தக் குழாய்கள் மூலமாய் ரத்தம் பரவுகின்றது. இவை ஆழ்ந்த குழாய்கள். ரப்பர் குழாய்களைப்போல் மிருதுவாயும் நெகிழ்ச்சி யுடையதாயு மிருக்கின்றன. இவைகள் இருதயத்துடனும் நுரையீரல்களுடனும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இரத்தம் சரீர முழுதும் பரவுவதற்கு அநேக கிளைகள் உண்டு. இரத்தக் குழாய்கள் இரண்டு விதம். ஒன்று அசுத்தமான ரத்தத்தைக் கொண்டுபோவதற்கும், மற்றொன்று சுத்தமான ரத்தத்தைக் கொண்டுபோவதற்கும் உபயோகப்படுகின்றன. அசுத்த ரத்தத்தைக் கொண்டுபோகும் குழாய்களுக்கு நாளக் குழாயென்றும் சுத்தமான ரத்தத்தைக் கொண்டுபோகும் குழாய்களுக்கு நாடிக் குழாயென்றும் பெயர். நாளக் குழாய்கள் மெல்லியனவாயும் நீல நிறமுள்ளனவாயு மிருக்கும். ரத்தமானது நாளக் குழாய்களில் சப்தமில்லாமல் போகிறது. ஆனால் நாடிக் குழாய்களிலோ கொஞ்சம் விசையோடு பீறிட்டுக்கொண்டுவரும். இருதயத்தின் நிலைமையை அறியவேண்டுமானால் இந்த நாடித் துடிப்பைப் பார்த்தால் தெரியும். இந்த ரத்தக குழாய்கள் எல்லாம் தேகத்தின் அநேக பாகங்களில் சர்மத்தின் கீழே புலப்படும். நாடிக் குழாய்களைவிட நாளக் குழாய்களை அதிகச் சுலுவாய்ப் பார்க்கலாம். அழகான ஒரு மனிதனின் சருமத்தில் சிறிய நாளக் குழாய்கள் நீலநிறமாகத் தெரியும்.

சரீரத்தில் 'ஓடும் ரத்தமானது பார்வைக்குக் கனத்த திரவ பதார்த்தமாகத் தெரிகிறது. ஆனால் இதில் இரண்டு பதார்த்தங்கள் உண்டு. ஒன்று திரவ பதார்த்தம். அது லேசானதாகவும் ஜலமாகவுமிருக்கும். இதற்குச்சீரம் என்று பெயர். மற்றொன்று கனபதார்த்தம். இதில் இரண்டுவிதமான நுண்ணிய தகடுகள் மாதிரி இருக்கும். ஒன்று வெள்ளை மற்றொன்று சிகப்பு. ரத்தத்தின சிகப்பு நிறத்துக்குக் காரணம் இந்த சிகப்புத் தகடுகளே. இந்தத் தகடுகள்தான் ரத்தச் செல்கள். இவை சாதாரணமாய் நமது கண்களுக்குத் தெரியாது. பூதக் கண்ணாடி மூலமாய்க் காணலாம். சிகப்பு ரத்தச்செல்லில் ஹெமோக்ளோபின் இருக்கின்றது இரத்தத்தில் ஹெமகுளோபின் எவ்வளவு நிரம்ப இருக்கிறதோ அவ்வளவு தேகத்திற்குப் பலம் உண்டு. வெள்ளைச் செல்கள் நோய்க்கிருமிகளைச் சரீரத்தில் நுழையவொட்டாமல் தடுத்து அவைகளைக் கொன்று விழுங்கிவிடுகின்றன. ஆகையால் இரத்தமானது திரேகத்திற்குப் பிராணாகாரமான திரவபதார்த்தம். இரத்தம் எவ்வளவு கொழுப்பாயிருக்கிறதோ அவ்வளவு தேகத்திற்குச்சுகமுண்டு. இரத்தம் குறைவாயிருந்தால் பலவீனம், சோகை முதலிய அநேக வியாதிகள் உண்டாகும். இப்படிப்பட்டவர்கள் இரும்பு நிறைந்துள்ள ஆகாரத்தை உட்கொள்ளுவதனால் நன்மையுண்டு.

தேக சுகத்தையும் பலத்தையும் மாசேஜ் பண்ணுவதனாலும் விருத்தி செய்யலாம். அதாவது தேகத்தைப் பிடித்து விட்டுக்கொள்ளுதல். இப்படி செய்வதனால் வெள்ளை இரத்தக் கார்பசெல்கள் அதிகமாகின்றன. சதைகளும் விருத்தியாகின்றன. வலுவிலும் அளவிலும் சுருங்கும் சக்தியிலும் அவைகள் விருத்தி யடைகின்றன. இதற்குக் காரணம் தேகத்தை பிடித்துவிட்டுக் கொள்ளும்போது இந்தப்பாகங்களுக்குப் போஷணையுள்ள நல்ல இரத்தம் நிரம்ப பரவுகின்றது. மிக நுட்பமானதும் வெகு தூரத்திலுள்ளதுமான தசைநார்களுக்கும் சிறந்த போஷணை கிடைக்கிறது. கழிவிடைகளும் களைப்பின் விஷங்களும் அதே சமயத்தில் வெளியே தள்ளப்படுகின்றன. இளைத்து மெலிந்த தேகமுள்ளவர்களுக்கு நல்ல கட்டிச் சதை உண்டாகும். மசேஜ் பண்ணுவது சர்மத்திற்கு ஒரு நல்ல டானிக் ஆகும். தோலின்கீழ் இருக்கின்ற கோடிக்கணக்கான நுட்பமான வியர்வைக் கோளங்கள் அதனால் புத்துயிர்பெற்றுத் தம் தொழிலை நன்றாய்ச் செய்யும். இரத்தமானது இருதயம், நுரையீரல்கள், சர்மம் இவற்றிற்கு வெகு வேகமாய் ஓடும்போது, தேகத்திலுள்ள கழியும் பொருட்கள் யாவும் விரைவில் வெளியே தள்ளப்படுகின்றன. இரத்தத்துடன் லிம்ப் (Lymph) அதிக துரிதமாக ஓடுகிறது. இந்த லிம்ப் குழாய்கள் மிகவும் நுட்பமானவை. இவை தேகத்தின் ஒவ்வொரு பாகத்திலும் அதிகமாக ஆரம்பமாகின்றன. ஆகையால் இவைகளைப் பிடித்துவிடுவது மிகவும் சுலபம். லிம்பை அடிக்கடி தூண்டிவிடுவது அதிமுக்கியமானது. ஏனெனில் மூட்டுகளிலும் பூட்டுகளிலும் வயிற்றிலும் திரவ பதார்த்தங்கள் உறிஞ்சப்பட்டு, அங்குள்ள சாகுந்தறுவாயிலிருக்கும் செல்களைக் கொண்டு போகின்றன. இவைகள் மறுபடியும் போஷணைக்கு லாயக்காகும். மசேஜினால் சிகப்பு இரத்தக் கார்ப்பஸங்களின் தொகையும் இரண்டு வழிகளில் அதிகமாகிறதென்பதை மறந்து போகக்கூடாது. நுரையீரல்களைத் தாங்கிக்கொண்டிருக்தம் டயபிரம் என்னும் பெரிய சவ்வும் மசேஜ் செய்யும்போது உத்தீபனம் அடைகிறது. அதன் வளையுங் குணமும் நெகிழ்ச்சியும் அதிகப்படுவதால் நுரையீரலின் விஸ்தீரணம் அதிகமாகி, ஆழ்ந்த சுவாசத்திற்கு இடம் கொடுக்கிறது. நுரையீரலின் ஒவ்வொரு சிற்றறையும் காற்றினால் நிரப்பப்படுகிறது. ஏற்கனவே அதிகரிக்கப்பட்ட இரத்தமானது அபரிமிதமான பிராண வாயுவைக் கண்டதும், அதை எடுத்துக்கொண்டு, அதிலுள்ள கழிவுகளைத் தள்ளிவிட்டு, தேக முழுவதும் சுத்தமான இரத்தத்தைப் பரவச் செய்கிறது. இதனால் நுரையீரல்களின் தசைநார்கள் வலுவடைகின்றன.

நரம்பு சம்பந்தமான வியாதிகளிலும் மசேஜ் ஒரு டானிக்காகவும் உத்தீபன வஸ்துவாகவும் ஆகும். நேர்த்தியான. நுட்பமான நரம்புகள் தேக முழுவதும் அமைக்கப்பட்டிருப்பதால் மசேஜ் தூரத்திலுள்ள நரம்புகளுக்கு உணர்ச்சிக் கரண்டைக் கொண்டு போகும். ஆகையால் இதன் இத்தீபன சக்தி சிகிச்சை செய்யும் பாகத்திற்கு மட்டும் அமைந்ததல்ல. தேகம் பூராவுக்கும் நற்பலன் உண்டாகிறது.

அடிவயிற்றை மசேஜ் செய்தால் இரைப்பை, குடல்கள், கோளங்கள் முதலியவற்றிற்கு உத்தீபனம் உண்டாகி இவைகளின் தொழில்கள் விருத்தியாகும். அதனால் நல்ல சீரணம் உண்டாகும். ஆகார சத்து உடனே உறிஞ்சப்பட்டு இரத்தத்தில் சேருகிறது. மலச்சிக்கலும் நிவர்த்தியாகிறது. அடிவயிற்றைப் பிடித்துக் கொள்வதற்குச் சில முக்கியமான விஷயங்களைக் கவனிக்கவேண்டு சாப்பிட்டபின் குறைந்தது இரண்டு மணி நேரமாவ கழியவேண்டும். ஜலப்பை எப்போதும் காலியா இருக்கவேண்டும். மலச்சிக்கலிருந்தால் ஒரு லோட்ட வெந்நீர் குடிக்கவேண்டும். அடிவயிற்றின் சதைகள் பூ ணமாய் விரிந்திருக்கவேண்டும். மசேஜ் பண்ணும்போ சுவாசம் ஒழுங்காயும் ஆழமாயும் விடவேண்டும்.

சீனர்கள். ஜப்பானியர்கள், பாரசீகர் இந்தியர்கள் கிரீக்கர், ரோமர் மசேஜ் செய்யும் பழக்கத்தை ஏறக்குறை மூவாயிரம் வருஷங்களுக்குமேல் அப்பியசித்து வந்திரு கிறார்கள். ஹிப்போக்கிரிட்டிஸ் இந்த வித்தையை சிபாரிசு செய்த பிரமுகர்களில் ஒருவர். வாதரோகம் லம்பகோ. பாரிசவாய்வு சுவாசக்காசக் கோளாறுகள் மு லியவற்றால் வருந்துகிறவர்களுக்கும் மசேஜ் அனந் நன்மை செய்திருக்கிறது.

●

மீனவரும் - தமிழகமும்

தொன்றுதொட்டு மிகமிக நாகரீகமுடையவர்களாயும், பராக்கிரமம் வாய்ந்தவர்களாயும், சரித்திரச் சான்றுகளால் எண்பிக்கப்படுகின்ற பரதர்களுக்கு 'மீனவர்' என்ற நாமமும் இருந்துவருகின்றது என்பதைச் சிந்து நதிச் சம வெளிப் பிரதேசங்களின் பூர்வீக பட்டினங்களான மொகெஞ்சதாரோ, அறப்பா என்ற இரு விடங்களையும் தோண்டிப் பரிசோதித்த சேசு சபை சங்: ஹெராஸ் சுவாமிகள் நிலைநிறுத்தி யுள்ளார்கள். மீன், தமிழர்களாகிய பரதரின் சொந்தத் தெய்வங்களில் ஒன்றாக இருந்து வழிபடப்பட்டபடியாலேயே இவர்களுக்கு மீனவர் எனும் நாமம் பொருந்துவதாயிற்று என்று யூகிக்க இடமருக்கின்றது.

புராணக் கூற்றுகளின்படி விஷ்ணுவின் தசாவதாரங்களில் முதலாவது மச்சாவதாரமே கூறப்படுவதால் மீன் வணககமே இந்தியாவின் ஆதி வணக்கமெனத் துணியலாம். உலகில் ஏற்பட்ட ஜல பிரளயத்தைப்பற்றியும் மனுச் சக்ரவர்த்திக்கு ஓர் மீனே அதிவிர்ப்புச் செய்து அவரை அவ்வாபத்தினின்று காப்பாற்றிய சரிதையுமுண்டு. மீனாட்சி எனும் தெய்வ வணக்கம் பரதரின் பழம் பதியான மதுரையில் இன்றளவும் நிலைநின்றுவருவது உலகறிந்ததே. பரதர் கிறீஸ்து சமயிகள் ஆனபின்பே கரைதுறைப் பட்டினங்களில் உள்ள மீனாக்ஷி அம்பிகைகளின் கோவில்கள் அழிந்து ஒழிந்தனவாய்ப் புலனாகின்றது. பாண்டிய அரசர்கள் மீன் கொடியைத் தமது இலாஞ்சனையாகப் போற்றியதும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டியதாகும். பரதகுல மாதர்களின் காதணிகளில் ஒன்று மகர குண்டலமெனவும் பேர் பெறுவதாயிற்று. சுருங்கக்கூறுமிடத்து, மேலே கண்ட காரணங்களைச் சீர்தூக்கி ஆராய்ந்தால் பழங்குடிகளான பரதவர்களுக்கு மீன் தொடர்பு வியக்கக்கூடியதாகப் புலப்படுகின்றது.

—நீம்பை தூ. இ. தூ.

-: தோத்திரப் பாமாலை :-

(பண்டிட் எம். பி. மஸ்கரனுஸ்)

[illegible] பனிமயமே. தரித்திரர்க்கிங் காதரவே,
[illegible] சுடர்விளக்கே. துன்புறுவார்க்கின்பமிர்தே,
[illegible] அருந்தியதால் காசினியில் வந்தபவ
[illegible] தவிர்க்க வரும் நுவலரிய நுண்பொருளே.

[illegible]ரைப் அமரர்களும் வடிவறியா வான்பொருளை,
[illegible]ரைப் நரர் உணர ஒரு மகவாத் தந்தனை நீ;
[illegible]விரல்களினல் மூவுலகும் தாங்கிறையைக்
[illegible]ரைப் நறுங்கமலக் கைத்தலத்துள் ஏந்தினை நீ.

[illegible] வகைகளென எண்ணரிதாம் பல்லுயிர்கள்
[illegible]னையும் உய்யுணவு அன்போடளித்தருளும்
[illegible]னையும் பாலூட்டிக் காத்துவந்த நாயகி, நின்
[illegible]னையும் சற்றுமுகம் பாராய், பனிமயமே.

[illegible]யன்றி ஆழமுடைப் புணரி கடப்பனரோ?
[illegible]யன்றி மானினமும் கவின்பறவைவீழ்த்துவரோ?
[illegible]யன்றி வெள்ளமதை அடைப்பாரோ? அம்மணியுன்
[illegible]யன்றி வான்வீட்டுச் சுகம்பெறுவர் ஆவாரோ?

[illegible]மேவும் சம்மனசோர் மென்குரலைக் கேட்பவட்கு
[illegible]மேவும் யான் உளறும் மழலைச்சொல் நன்றுமே,
[illegible]மேவும் வீணையினும் பாலன் குதலைமொழி
[illegible]மேவும் என்றினிய தாய்கேட்கும் அவ்வியல்பே.

[illegible]களுக்காய் மன்ருட மனுக்குலத்தில் ஒருயிர்தான்
[illegible]தெனத் தற்பரனுர் தயவாக எண்ணிடலும்,
[illegible]மே அவர்மன துள்ளமர்ந்தபொருள் நீயலவோ?
[illegible]வருள் மிக்கவளே. விரத்தீ பனிமயமே.

[illegible]யுற்ற சிறுபறவை வாடுவநேர், வன்னெருப்பாம்
[illegible]யுற்ற மென்மெழுகு உருகுவநேர். ஓசையெழும்
[illegible]யுற்ற சிசுபதறி அலமாறல் போலும், உனைத்
[illegible]யுற்ற பின்னும் இவன் தள்ளாடல் சால்புகொலோ?

[illegible] கினியஇனம் மாதா ஒருத்தியலால்
[illegible]த் தெவருமிலர்; பந்துகளும் மித்திரரும்
[illegible]ப் பணமிருந்தால் மேவுவர். அலால் உனது
[illegible]த் திருவடிபோல் துணைசெய்ய மாட்டாரே.

[illegible]னுதவி இல்லாத வயலுண்டோ? வார்தருசெங்
[illegible]னுதவி இல்லாத சிறையுண்டோ? சீர்கருணைக்
[illegible]னுதவி இல்லாத குடியுண்டோ? கோக்கொடியை
[illegible]னுதவி கொள்ளாமல் நயனுண்டோ, நாயகியே?

[illegible]ற்ற போதே வாயா முரசோதை;
[illegible]ற்ற போதே வீழும் மரந்தழைகள்;
[illegible]ற்ற போதே கனதருமங் குன்றிடும்; நின்
[illegible]ற்ற போதே திருவெல்லாம் பொன்றுமரோ.

கோடாத செங்கோலே, குறையா உயர் வளமே,
வாடாத மென்மலரே. வானழகே, மக்களுனைத்
தேடாத நாளுமில்லை; தெரிந்தளவு நின்றனையான்
பாடாத நாளுமில்லை, பரஞ்சுடரே, பாக்கியமே.

நீதித்தலைவர்களின் நேர்வசனம் கேளாமல்
சாதித் து) அலைபவனுய்த் தற்பெருமை கொண்டலைந்தேன்;
வாதிக்கும் நெஞ்சிற்கோர் வகைசொல்ல யானறியேன்,
பாதிக் குளிர்மதியைப் பதுமமெனக் கொண்டவளே.

நகைகொள்வார், நாடிடுவார், நான்கொள் திரவியத்தின்
தொகை கொள்வார், யாபொருளும் தொலைந்தவெனக் [கண்டவர் பின்
பகைகொள்வார்; என்வாழ்க்கைப் பயனிதுவே; பாரியசீர்
மிகைகொள்வாள் நீயலவோ வீடுவரை என்துணையாம்?

பொறி யார்அடக்குவரோ, அவர்பால் புலமையுறும்;
நெறி யார்விழைகுவரோ, நிதமும் சுகம் பெறுவர்;
வறியார் அது தெரியார், வான் வான் என்றே அழுவார்;
அறியார்க் கருள் புரியும் அம்மா பனிமயமே.

பயனில்லா வீண்மொழியைப் பகரும் பதடிகளால்
நயனில்லை என்றுபல ஞானிகள் வாய்ச் சொல்லிருக்க
வியனில்வெறுங்கதைகள், வெகுளுரையும், தூஷணையும்
மயனில்லா தோலமிட்டு வாளா வழங்கினனே.

பசித்தார்க் கமுதுதவேன், பாரபட்சம் மிக்கவுளேன்,
நசித்தார்க் களித்திடுவேன், நல்லுதவி யென்றடுத்து
வசித்தாரையுங் கெடுப்பேன், வாழ்நாள் இவண் கழித்தேன்,
புசித்தாரளி மிழற்றும் பொற்றருள் மரைக்கொடியே.

வண்டரிசை தேம்பொழிற்கண் வாவிவிளையாடுழைகாள்,
கண்டதுண்டேல் சொல்மின் இன்ன காவுங் குளிர்நிழலும்;
பண்டைப் பவமிலதாள் பதியிங்குக் கொண்டதினல்
கொண்டற் சிறந்த அருள் குடிகொண்ட சோலையிதே.

யானென்றல் என்னும்? எனதென்றல் என்னும்?
ஊனென்றல் என்னும்? ஒன்றும் அறிந்திலனே;
ஏனென்றல் யானெனதென் றியம்பினரெலா மறைந்தார்
வானென்றே என்றும் மறையா நிலைப் பொருளாம்.

சேராயோ பொற்கழலில்? சிறியேற் குனது தயை
கூராயோ? மெய்ஞ்ஞானம் கொடுத்துதவும் நூல் [முறையைத்
தாராயோ எஞ்ஞான்றும்? தமியேற் கிறுதியில் நீ
வாராயோ வான் தருக? மரியே, பனிமயமே. (1905)

மாலைப் பாக்கள் (கவிதைத் தொகுதி)

[இயற்றியவர் : திரு. யம். பி. மஸ்கரனுஸ். கிடைக்குமிடம் : ரம்போலா மஸ்கரனுஸ், அர்ச் பேதுரு கோவில் தெரு, தூத்துக்குடி. விலை : அணு பத்து.]

சாதாரணமாக வசனப் புத்தகங்களுக்கு மதிப்புரை எழுதுவது என்பது சுலபமான காரியம்; ஆனல், ஒரு கவிஞனின் கவிதைகளை உள்ளபடி மதிப்பிட்டறிவது சாமான்ய காரியமல்ல. கவிதைகளைப் பொறுத்த வரையில் பல்வித அபிப்பிராய பேதங்கள் இருப்பது இயல்பே. இவற்றை யெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து நடு நிலையிலிருந்து உண்மைக் கவிதா சக்தியை உள்ளபடி அறிந்தே ஒரு கவிஞனின் ஸ்தானத்தை நிர்ணயிக்கவேண்டி யிருக்கிறது.

திரு. யம். பி. மஸ்கரனுஸ் பெருந் தமிழ்ப் புலவர், பழுத்த தமிழபிமானி. அவர் தமிழன்னைக்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன அவைகளைத் தமிழ்நாடு மறத்தல் என்பது முடியாத காரியம். அவரது தமிழ்த் தொண்டின் பிரதிபலிப்பே "மாலைப்பாக்கள்" என்ற கவிதைத் தொகுதியாக உருவாகி யிருக்கின்றது. தமிழைப் பேணி வளர்த்த பெருந்தகையாருள் ஒருவராக அவரைப் போற்றுதல் தமிழரின்—முக்கியமாக தமிழ் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின்—தவிர்க்க முடியாத கடமையாகும்.

இப்புத்தகத்தைக் கையில் எடுக்கும் போதே என்னுள்ளத்தில் ஓர் எண்ணம் பலமாய் எழுந்தது. அதைக் கூறுமல் இருக்க முடியவில்லை.

புலவர் மஸ்கரனுஸ் அவர்கள் மத சம்மந்தமாகப் பாடியிராமல் தேசியமாகவோ அன்றி சமரஸமாகவோ பாடியிருந்திருப்பாரேயானல் இன்று தமிழுலகம் அவரைத் தலைமேல் வைத்துக் கொண்டாடி நிற்கும். ஆம், இது உண்மை தான்.

முதன் முதல் தமிழ் உரை நடைக்கு ஆக்கமளித்தவரும், சதுரகராதியை வகுத்தவரும், தமிழ் எழுத்துக்களில் பெருஞ் சீர்திருத்தத்தை உண்டாக்கியவரும், தம் வாழ்நாளையே தமிழுக்கென்று அர்ப்பணம் செய்து உழைத்தவருமான வீரமாமுனிவரின் சிறந்த தமிழ்க் காவியங்களைத் தமிழுலகம் நன்கு மதித்துப் போற்றுமைக்கு முக்கிய காரணம் இந்த மதவிஷயமே.

"கிறிஸ்தவ கம்பன்" எனக் கொண்டாடப்படும் மிகச் சிறந்த கவிஞர் கிருஷ்ண பிள்ளையவர்களின் நிலைமையும் இதுவே. அவர் பிறவிக்கவிஞர், ஒப்பற்ற பக்தசிரோன்மணி. உள்ளம் உருகிட இசைப்பவர். அவரது துதிப்பாக்கள் பக்திக் கனலை மூட்டுபவை. பேரின்பத்துள் ஆழ்த்துபவை, உள்ளத்தை நெகிழ்த்தும் தன்மை வாய்ந்தவை. சொல் நயமும் பொருள்நயமும் விரவிக் கருத்தைக் கவர்பவை. "இரக்ஷண்ய யாத்திரிகம்" "இரக்ஷண்ய மனோகரம்" போன்ற அவரது காவியங்கள் நன்கு பாராட்டப் பெறுமைக்குக் காரணம் மேற்கூறிய மதவிஷயமே. இக் குறுகிய நோக்கத்தால் அவைகளைப் பெரும்பாலோர் தொடுவதில்லை. தொட்டாலல்லவோ படித்தல் இயலும்? படித்தால் தானே பாராட்டமுடியும்! இதனுல் அவைகளில் காணப் பெறும் கொள்கைகளை அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது எனது எண்ணமல்ல. பரந்த நோக்கத்துடன் அனைவரும் அவைகளை எடுத்துப் படிக்க வேண்டும். அவைகளிலுள்ள சொல்லழகு, பொருள் அழகு ஆகியவைகளை அனுபவிக்கவேண்டும். தமிழ் இலக்கியம் எவ்வகையிலெல்லாம் ஆக்க மடைந்துள்ளது என்பதை அறிய வேண்டும், பாராட்ட வேண்டும். ஆனல் நடை முறையில் இங்ஙனம் நடப்பதில்லை.

இப்புலவரின் நூல்களும் இனி வரும் புலவர்களின் நூல்களும் இவ்வண்ணம் உதாசீனப் படுத்தப்படாமல் உபயோகிக்கப் பெற வேண்டும் என்ற அபிமானமே நான் இவ்வாறு வற்புறுத்திக் கூறுதற்கு காரணமாகும். புலவர் மஸ்கரனுஸ் பாடத்தொடங்கிய காலம் இந்நூற்றுண்டின் ஆரம்பமாகும். எனவே அவரது நடையைச் சிறிது கவனிக்க வேண்டியிருக்கிறது. ஆராய்ந்து பார்க்குமிடத்து இவரைப் பண்டைத் தமிழ்ப் புலவர் குழாத்துடனேதான் சேர்க்க வேண்டியிருக்கிறது. பண்டைத் தமிழ் வழக்கை யொட்டி பொருளிலும், நடையிலும் பழமையைத் தழுவியே இவர் பாடியிருக்கிறுர். என்ருலும் இவரை ஒரு சிறிது பழமையிலிருந்து பிரித்துணரவே வேண்டியிருக்கிறது. ஓர் சில மாற்றங்களை இவரிடத்துக் காண்கின்ருேம்.

இவர் எளிய இனிய பதங்களையே உபயோகிக்கின்ருர். யாவரும் பொருள் விளங்கும் பதப்பிரயோகமே இவரது நூலின் சில பகுதிகளின் தனிச் சிறப்பெனலாம். பண்டை மரபைச் சார்ந்த ஒருவர் இந்த நிலைக்கு இறங்கி வந்து எழுதுவது என்பது பாராட்டத்தக்கதே! தமக்கென ஒரு தனிப் பட்ட பாணியை அமைத்துக் கொண்டு இவர் பழமைக்கும் புதுமைக்கும் இடைநின்று தமது புலமையை வெளிப் படுத்துகின்ருர்.

இந்நூலில் 'அஞ்சலி' என்னும் பகுதியில் காணப் பெறும் பாக்கள் இவரது பக்தியின் கனிவைப் புலப்படுத்து கின்றன. இறைவன் துணையிருக்கப் பயமென்ன என்று தமது நெஞ்சை நோக்கி விளித்து,

"தினகரன் சுடுமோ? கனல் எரித்திடுமோ? ...
...நெஞ்சமே நவில்வாய்"...

என்ற பாடல் தேவாரப் பதிகங்களை நினைவூட்டுகின்;

"எதிரொலிகள்" என்ற பகுதியிலிருந்து ட... பட்ட கருத்துக்களை கொண்ட பாடல்கள் நமது கவ... தைக் கவர்கின்றன.

சிலப்பதிகாரத்தின் கானல் வரியின் நயத்தை "... இதுவே" அணிந்து நிற்கின்றது.

"ஊஞ்சல் பாட்"டில் எனது உள்ளத்தைக் கொடுத்து விட்டேன். அதன் எளிமையும் இனிமையும் படிக்கப் படிக்க அதிகரிக்கிறதே தவிர குறைவதாய்க் காணேம். அந்தச் சுவையைக் கொஞ்சம் பருகுங்கள்.

"முற்றமதில் நிலவெரிப்ப
முத்தாடும் மாமி,
கற்றை மதி அவள் கணவன்
கலைபுனுக்கே நேமி.
வாழை பலா மா மரத்தின்
வளம் செறி நம் நாடு

நாழிகொண்டு முத்தளக்கும்
நல் மாமன் வீடு.
வேட்டை சென்ற நின் மாமன்
வீடுவரும் நேரம்
வாட்டமொடு நீ யழுதால்
வருந்துவார் விசாரம்.''

[illegible]ான்தோறும்'' என்ற பாடலில் இளைஞனுக்கு நீதி [illegible]றியை வகுக்கின்றார்.

"வேண்டுதலில்'' தமிழை "இன்பமாம் தமிழ்'' என்று [illegible]டாடுகின்றார். நாட்டில் ஒற்றுமை நிலவவும், கல்வி [illegible]வும், கலைகள் செழிக்கவும், பல்வகை வளப்பம் ஓங் [illegible] உள்ளங்கனிந்து 'வேண்டுதல்' செய்கின்றார்.

இவர் சீர்திருத்தவாதி. மதுவிலக்கை வற்புறுத்திப் [illegible]பதிலிருந்து இது தெளிவாகும். மதுபானத்தினால் [illegible] நாசமடைந்து குன்றுவதைக் கண்டு இவர் மனங் [illegible]த் தவிக்கின்றார். இக் கொடுமையிருந்து காக்க [illegible]வை மனங்கசிந்து வேண்டுகின்றார்.

சுமார் 35வருடங்களுக்கு முன்பே மதுவிலக்கை [illegible]த்துப் பாட ஆரம்பித்துவிட்டார். பிரசாரப் பாடல் [illegible] எழுதிக் குவித்தார்.

இவர் கனவு இன்று தமிழ் நாட்டில் நனவாக மாறி [illegible]கின்றது. இத்துணை வருடங்களுக்குப் பிறகாவது வழி [illegible]ந்ததே என்று மனம் மகிழ்கின்றேன். அதை ஒழித்த [illegible]மையில் இவருக்கும் ஒரு பங்குண்டு.

முதலாளி—தொழிலாளி இருவரின் ஒற்றுமை எவ் [illegible] முக்கியமானது என்பதை உணர்ந்து பாடுவதைப் [illegible]வரும் அடிகளில் காண்க.

"மோசடி தடித்த விவ் வுலகத்தில் வதிகின்ற
முதலாளி தொழிலாளர்கள்
முரணின்றி ஐக்கியமாய் ஒன்றித்து வேலை செய்
முறைமைத் தெரிவித்திடாயோ ?''

"தோத்திரப் பாமாலை'' இன்னிசைப் பொழிவுடன் பொருள் செறிந்து தவழ்ந்து செல்லுகின்றது. பக்திப் பெருக்கு சிற்சில இடங்களில் அலைபுரண்டு மோதுகிறது.

இரங்கற் பாக்களும், பிற சரிதைப் பாடல்களும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பிரமுகர்களுக்காகவே பாடப் பெற்றிருக்கின்றன. அவர்களின் வரலாற்றினை அறிந்து கொள்ள அவை பேருதவி புரியலாம்.

நலமுறப் பாக்கள் செய்தும், நடுப் பகல் கனவின் வாய்த்தும். அலைகரை தனித்து நின்றும், அருவனம் மலையில் வாழ்ந்தும், உலகினை வெறுத்தும், பித்தரெனப் பெயர் பெற்ற போதினில் தலைமையைத்தையும் ஆட்டி வைக்கும் தகைமை பெற்ற அவர்கள் தொழிலைப் ('எங்கள் தோழில்') பாராட்டுகின்றேன்.

முடிவாக. தமிழன்பர் ஒவ்வொருவரும் படித்து இன் புறுவதற்குரிய விஷயங்கள் பல இந்நூலில் விரவிக் காணப்படுகின்றன.

பரந்த நோக்குடன் யாவரும் படித்து விஷயங்களை அறிந்து கொள்ளுதற்கு இந்நூல் பெரிதும் பயன்படும் என்பது எனது துணிபு.

கத்தோலிக்க தமிழ் கிறிஸ்தவர்கள் புலவர் மஸ்கரனஸ் அவர்களுக்குப் பெரிதும் கடமைப் பட்டவர்கள். தங்கள் இல்லந்தோறும் அவரது நூலை வாங்கி வைத்துப் படித்துப் பயனடைவதே அவருக்கும், தங்கள் சமுகத்திற்கும் அவர்கள் செய்ய வேண்டிய இன்றியமையாத கடமையாகும்.

சுதந்தரவீரன் ஆசிரியர், ஸ்ரீ ஜே. பி. ராட்ரிக்ஸ் திரட்டியது

தூத்துக்குடி பரிசுத்த பனிமயமாதா திருக் கோவிலைப்பற்றிய சில சரித்திரக்குறிப்புகள்

பரவர் மாதா

தூத்துக்குடியில் திருக்கோவில் கொண்டிலங்கும் பரிசுத்த பனிமயமாதா தென்கீழ்க் கடலோரக் கிறிஸ்துவர்கள் சகலருக்கும் பாதுகாவலென்றும், அவ்வாண்டவளின் திருவிழா அக்கடலோரத்தில் முக்கிய திருநாள் என்றும் பனிமயமாதா கோவிலைக் கட்டிய அக்காலத்து வேதபோதகர்கள் ரோமாபுரிக்கு எழுதியனுப்பிய கடிதங்களில் காணப்படுகின்றது. இதனுலதான் நம்மவர்கள் பனிமயமாதாவைப் 'பரவர் மாதா' என்று கொண்டாடுகிருர்கள். அர்ச் இராயப்பர் சின்னப்பர் ரோமாபுரிக்கு விசேஷ பாதுகாவலரென்றுலும், உலகத்திலுள்ள சகலகிறிஸ்துவர்களும் அவர்கள் திருவிழாவைக் கொண்டாடி அவர்களுக்குத் தோத்திரமாகக் கட்டப்பட்டிருக்கும் பிரமாண்டமான அழகிய தேவாலயத்தைத் தங்கள் பொதுக் கோவிலாக மதிப்பதுபோல 16-ம் நூற்ருண்டு முதல் பரவக் கிறிஸ்துவர்கள் சந்தமரிய தஸ்நேவிஸ் மாதாவை வாழ்த்திப் புகழ்ந்து அநேகர் அவளது திருக்கோவிலுக்குத் திருயாத்திரிகளாய்ப் போய் வணக்கம் செலுத்தியிருக்கிருர்கள். 1709-ம் வருஷம் எழுதப்பட்ட கடிதம் ஒன்றில் "தூத்துக்குடிப் பட்டணத்துக்கும் கரைதுறைகள் முழுமைக்கும் பாதுகாவலான பனிமய மாதா, பரவருக்கு முத்துக் குளிப்பதில் ஆச்சரியமான அநுகூலமளித்தாள்" என்று சொல்லியிருக்கிறது.

காலேஜுக் கோவில்

உண்மையில் பனிமயமாதா கோவில் தூத்துக்குடிப் பங்குக் கோயிலாகக் கட்டப் படவில்லை. நமது கரைதுறைகளின் இதர இடங்களில் அநேகமாய்ப் பங்குக் கோவில்கள் அப்போஸ்தலர்கள் பேரால் கட்டப்பட்டிருப்பதறிவோம். உபரியில் அர்ச். அந்திரையாஸ், பெரிய தாழையில் அர்ச். அருளப்பர், வீரபாண்டியன் பட்டணத்தில் அர்ச். தோமையார், மணப்பாட்டில் அர்ச் யாகப்பர்கோவில் என்றிருப்பது போல் தூத்துக்குடியிலும் பங்குக் கோவில் அர்ச். இராயப்பர் கோவில்—பீற்றர் கோவில். அர்ச். சவேரியார் காலத்தில் இது தற்போது டச்சுக்காரரின் பழைய கல்லறைகளடங்கிய "இறக்கோப்பு"க்குள்ளிருந்ததாகச் சொல்லுகிருர்கள். இதற்குக் கீழ்ப்பக்கத்தில் இப்போதும் இருக்கும் குருசடி பங்குக் கோவிலைச் சேர்ந்ததென்கிருர்கள். அர்ச். இராயப்பர் கோவிலே பங்குக் கோவிலாயிருந்த தென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. இதற்கு அத்தாட்சி பழைய சேசு சபையார் தங்கள் அதி சிரேஷ்டருக்கு எழுதிய பல கடிதங்களில் காணக்கிடக்கிறது. உதாரணமாக, 1709-ம் வருஷம் "பங்குப் பாதுகாவலராகிய அர்ச். இராயப்பர் திருநாள் வெகுகெம்பீர சிறப்பாய்க் கொண்டாடப் பட்டது" என்று வாசிக்கிருேம். அச்சமயம் முத்துக் குளிப்பதற்காக வந்து கூடியிருந்த பெருங் கூட்டமான கிறிஸ்துவர்கள் ஜூபிலிப் பலனடைந்தார்களென்றும் சொல்லியிருக்கிறது.

பனிமயமாதா கோவில் பங்குக் கோவிலாகக் கட்டப் படவில்லையென்றுல், அது எதற்காக, எப்போது கட்டப்பட்டது?

சேசு சபையார், வேதம் போதித்து மனந்திருப்பிய கிறிஸ்துவர்கள் மத்தியில் தாங்கள் உழைப்போடு தங்களோடும் தங்களுக்குப் பின்னும் உழைக்கத் தகுந்த உபதேசிமார், உபாத்திமார், சந்நியாசிகள் குருக்கள் முதலியவர்களைப் பயிற்றுவிப்பது வழக்கம். இப்படியே நமது கரைதுறைகளில் உழைக்கத் தகுந்த சிறுவர்களைத் தெரிந்து அவர்களுக்குத் தாய்ப்பாஷையும் போர்த்துக்கீசியர் பாஷையும் கற்றுக்கொடுப்பதற்காக அக்காலத்தில் தூத்துக்குடியில் சிறு பாடசாலையொன்று துவக்கினுர்கள். நாளாவட்டத்தில் வேத சாஸ்திரத்துக்கு அடிப்படையான நூலதாரப் பாடங்களும் கற்பிக்கத் துவக்கியதால் அப் பாடசாலையைக் காலேஜ் (Collegium) என்று அழைத்தார்கள். இந்தக் காலேஜுக் கோவிலாக பங்குக் கோவிலிலிருந்து தனிப்பட்டதாய், பரிசுத்த பனிமயமாதா கோவில் கட்டப்பட்டது. பங்கு விசாரணை சேசு சபையார் செய்யாத காலங்களிலும் இக்கோவில் இவர்கள் ஆதீனத்திலேயே யிருந்து வந்தது. உதாரணமாக, 1601-ம் வருஷத்தில் தூத்துக்குடிப் பங்கை விசாரித்துவந்தவர்கள் கொச்சிமேற்றிராசனத்தைச் சேர்ந்த மூன்று சுவாதீனக்குருக்கள். அவர்களுடைய கோவில் அர்ச், இராயப்பர் கோவில். ஆனல் பனிமயமாதா கோவிலையடுத்த காலேஜில் மூன்று சேசுசபைக் குருக்களும் பட்டம் பெ[illegible]த ஒரு சின்னச்சுவாமியாரும், இரண்டு துணைச்சகோதரரும் வசித்து வந்தார்கள்.

இந்தக் காலேஜானது கரை துறைகள் சகலத்துக்கும் பொதுவானதால் பரிசுத்த பனிமயமாதா கோவிலும் பொதுவானதாக மதிக்கப்பட்டு வந்தது. இது பரவக் கிறிஸ்துவர்கள் வசூலித்துக் கொடுத்த பணத் தொகையைக்கொண்டு சேசு சபைக் குருக்களால் 1582-ம் வருஷம்—அதாவது, அர்ச். சவேரியார் தூத்துக்குடிக்கு வந்து 40 வருஷங்களுக்குப் பின் அவர் சாஞ்சியான் தீவில் மரணித்து 3 வருஷங்களுக்குப் பின், கட்டப்பட்டது. இங்கு முதல் பூசை ஆகஸ்டுமீ 5-ம் தேதி வெகு ஆடம்பரச் சிறப்போடு கொண்டாடப்பட்டது. 600 பேர் திவ்ய நன்மை உட்கொண்டார்கள்.

[illegible] 1997 [illegible]

காலேஜித் திருநாள

வருஷந்தோறும் அதே தினத்தில் காலேஜித் திருவிழா கொண்டாடப்பட்டு வந்தது. அப்போது கரைதுறைகளிலுள்ள முக்கியஸ்தர்களுக்கு காலேஜில் விருந்து செய்வது வழக்கமாயிருந்தது அவர்களோடு காலேஜி ரெக்டரும இன்னொரு குருவானவரும் பந்தியிலமர்ந்து சாப்பிடுவார்கள். 1600-ம்வருஷம் சேசு சபை மலையாள மாகாணச் சிரேஷ்டர் தூத்துக்குடிக்கு வந்திருந்ததால் திருநாள் விசேஷ சிறப்பாய் நடந்தது. அதேசமயத்தில் கடற்கரைப் பகுதிகளில் உழைத்து வந்த சகல குருக்களும் கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். அக்காலத்தில் மாதா தேர் இல்லாவிடினும் ஏறக்குறைய ஒரு டஜன் சப்பரங்கள் சுற்றுப்பிரகாரம் வந்தனவாம். தேவமாதா, குழந்தை சேசு அர்ச். இராயப்பர், அர்ச். சின்னப்பர், அர்ச். ஞானாபகஅருளப்பர் அர்ச் செபஸ்தியார், அர்ச். எரோனிமுஸ், ஆச். மிக்கேல் சமமன சானவர், அர்ச். லவுரேஞ்சியார் அர்ச் முடியப்பர், அர்ச் கிறிஸ்தோபர் முதலிய அர்ச்சியசிஷ்டவர்கள் பவனி வந்தனர். திவ்ய நற்கருணைச் சுற்றுப் பிரகாரமும் அன்றே நடைபெற்றது. விசித்திரமான பாலிக்குள் சங். புரோவின்சல் சுவாமியார் கதிர்ப் பாத்திரம் ஏந்திவர, குருக்கள் காப்பாமுகலிய ஆயத்தங்களணிந்துசெல்ல, குரு மடத்துப் பிள்ளைகள் போர்த்துக்கீஸர் உடைதரித்து நடந்தனர். தீவட்டிகளுக்கும் வாண வேடிக்கைக்கும் வாத்திய கோஷங்களுக்கும் குறைவில்லை சற்பிரசாத ஆண்டவருக்கு மரியாதையாகப் பூக்களும் பன்னீருமாத்திரமல்ல. சிறு சிறு முத்துக்களும் தெளித்தார்கள் தூத்துக்குடிப் பங்குக் கோவில் குருக்களும் சில பிராஞ்சீஸ்கு சபைக் குருக்களும் கொணடாட்டத்தில் கலந்து கொண்டனர் சுற்றுப் பிரகாரத்துக்குப்பின் இன்னும் இரு தினங்கள் கொண்டாட்டம் நடைபெற்றது.

இவ்வருஷ விருந்தில் பரத மக்கள் நூறு பேர்களுக்கதிகம் பங்கெடுத்தனர். சங் புரோவின்சியல் சுவாமியாரும ரெக்டர் சுவாமியாரும் அவர்களோடு பந்தியிலிருந்தார்கள் சேசு சபைச் சுவாமிகள் ஜனங்களை விரட்டியடிக்கிற சுவாமிமார்களாகத் தோன்றவில்லை ஜனங்களும் குருக்களோடு அந்நியோந்நியமாய் ஒத்துழைத்ததாகத் தெரிகிறது

பரிசுத்த பனிய மாதா கோவில் தோவாராதனைக்கான வெள்ளிப் பாத்திரங்கள் முதலிய பொக்கிஷங்களும், அர்ச்சியசிஷ்டவர்களின் அருளிரக்கங்களும் ஏராளமாயிருந்தன அத்தோடு இத்தேசங்களில் நூதனமாயிருந்த ஒரு ஆர்கன் முதலாய் தேவாராதனை சடங்குச் சிறப்புக்கு உபயோகிக்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறது

கோவிலுக்குள் அடக்கம் பண்ணப்பட்ட சுவாமிகள்

அக்காலத்து வழக்கப்படி இக்கோவிலுக்குள் அடக்கம் பண்ணப்பட்ட முதல் சுவாமியார் சங். ஹென்ரிக்கஸ் என்பவர். இவர் அர்ச். சவேரியார் காலத்திலேயே நமது பகுதிகளுக்கு வந்தார். அர்ச் சவேரியார் நமக்குச் சிரேஷ்டராக நியமித்த ஆயக்கத்துக்குரிய அந்தோனி கிரிமினலிசுவாமியார் வேதாலையில் வேதசாட்சியாக மரித்த பிற்பாடு, அடுத்த சிரேஷ்டராக 1549-ம வருஷம முதல் நம்மை விசாரித்தவர். தமிழ்ப் பாஷை நன்றாய்க் கற்றவர். தமிழில் ஞானோபதேசம் முதலிய சில சிறு நூல்கள் எழுதி முதலில் அச்சேற்றியவர் இவரே. இவர் 59 வருஷங்களாய் நமது மத்தியில் உழைத்து 80 வது வயதில் (1600-ம் வருஷம்) புன்னைக் காயலில் தேகவியோகமானார். அவரது திருச்சடலத்தை பரிசுத்த பனிமய மாதாகோவிலில் அடக்கம் பண்ணுவதற்காக ஏழுதோணிகளில் ஜனங்கள் புடைசூழ்ந்து வர, தூத்துக்குடிக்குக் கொண்டு வந்தார்கள். இவரது பரிசுத்தத் தனத்தைக் கிறிஸ்துவர்களல்லாதவர்கள் முதலாய் மதித்து எவ்வாறு சங்கித்தார்களென்றால் அவர் மரணித்த செய்தி யறிந்தவுடனே, காயல்பட்டணத்துத் துலுக்கர் ஒரு நாளும் இந்துக்கள் இரண்டு நாட்களும் நோன்பு பிடித்தார்களென அறிகிறோம்.

இவரால் சேசு சபையில் சேர்க்கப்பட்டு இவரோடு 40 வருஷங்களாய் நமது கடல் துறைகளில் ஆத்தும இரட்சண்ய வேலை செய்த கொன்சால்வ் பெர்னண்டஸ் என்னும் சுவாமியார் தமது 86-வது பிராயத்தில் திரும்பவும் நமது பகுதிகளுக்கு எழுந்தருளி தமது சிநேகிதரின் கல்லறையைச் சந்திப்பதற்காகத் தூத்துக்குடி சென்று அங்கு நான்கு நாட்கள் செபத்தியானத்திலமர்ந்து வியாதிப்பட்டு 1621-ம் வருஷம் ஏப்ரல் மீ 6-ம் தேதி மரணமானார். அவருடைய ஆசைப்படியே அவரது சடலம் சுனம் ஹென்ரிக்கஸ் சுவாமியார் பக்கத்தில் பனிமய மாதாகோவிலில் நல்லடக்கம் பண்ணப்பட்டது. இன்னும் சில சேசுசபைக் குருக்கள் அக்கோவிலிலேயே சமாதானத்தில் இளைப்பாறுகிறார்கள்.

சேசு சபையார் கடற்கரையை விட்டு அகலுதல்

ஆனால் தங்கள் ஜீவிய காலத்தில் சேசு சபைச் சுவாமியார் தூத்துக்குடியில் சமாதானமாகவும், சந்தோஷமாகவும் வாழவிடவில்லை அநேகசத்துராதிகள். போர்த்துக்கீசியரும் இந்திய மன்னர்களும் கிறிஸ்துவரல்லாதவரும் சமயத்துக்குச் சமயம் சேசு சபையாருக்கு விரோதமாய் எழும்பியிருக்கிறார்கள். இது அவர்கள் சரித்திரத்தில் ஒரு நூதனமில்லை எதார்த்தவாதி எப்போதும் வெகுஜன விரோதியன்றோ?

1604-ம் வருஷம் சுவாமிமார் பல கிறிஸ்தவர்களோடு தூத்துக்குடிக்கு வெளியே அடுத்த தீவில் குடியிருக்க நேர்ந்தது. 16 -ம் வருஷம் சுவாமிமார் கடற்கரையை முழுதுமே விட்டு விலக வேண்டியதாயிற்று. இதன் காரணங்களை யெல்லாம் எடுத்துக் கூறினால் விரியும். பல சேசு சபைச் சுவாமிமார் அறுபது வருஷ காலம் உழுது பண்படுத்தித் தங்கள் வியர்வையாலும் இரத்தத்தாலும் செழிப்புறச் செய்த திராட்சைத் தோட்டத்தை விட்டு விலகும்படி அவர்களைப் பற்பல சம்பவங்கள் கட்டாயப்படுத்தின. சிலர் இலங்கைக்கும். சிலர் கொல்லம் முதலிய இடங்களுக்கும் சபைச் சிரேஷ்டர்களால் அனுப்பப்பட்டார்கள். அவர்களுக்குப் பதிலாகக் கொச்சி மேற்றிராசனக் குருக்கள் வந்தார்கள். மாற்றம் ஜனங்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. அது வேத விர்த்திக்கும் முட்டுக்கட்டை போட்டது. ஆனால், தேவ சித்தப்படி நடந்தேறியது. இன்னும் 15 வருஷம் கழித்து — அதாவது 1621-ம் வருஷந்தான் சேசு

சபையார் நமது கடற்கரைக்குத் திரும்பிவந்து சேர்ந்
தார்கள்.

பனிமய மாதா கோவிலில் அற்புதங்கள்

அதற்கிடையில் திருச்சபையின் நிலையைப் பற்றி
வாசிப்பது துக்ககரமா யிருக்கும். ஆகிலும், பரி
சுத்த பனிய மாதா கோவிலைப் பற்றி இரண்டொரு
விஷயம் இவ்விடத்தில் குறிக்கத்தகும்.

1612-ம் வருஷம், அதாவது, சேசு சபையார் கடற்
கரையை விட்டு விலகி நான்கு வருஷங்களுக்குப் பின்
எழுதப்பட்ட கடித மொன்றில் கீழ்க்கண்ட விபரங்
கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

"தூத்துக்குடியில் நாம் நடத்திவந்த காலேஜில்
கோவில் (அதாவது பனிமய மாதா கோவில்) மாத்தி
ரந்தான் இன்னும் பாழாகி விழாமல் நிற்கிறது;
ஆனால் அதைப் பார்ப்பது மனதுக்கு வருத்தத்தை
யுண்டுபண்ணுகிறது. அதில் பீடமாவது, சுரூபங்க
ளாவது, வாசல்களாவது கிடையா. கிறிஸ்துவர்க
ளும் அஞ்ஞானிகளும் கண்டபடி அதற்குள் நுழைந்து
அது கர்த்தருடைய ஆலயமல்ல, ஒரு கிட்டங்கி அல்
லது குதிரை லாயமென்றாற்போல் படுத்துறங்குகிறார்
கள், சாப்பிடுகிறார்கள், அங்கேதான் மழை காலத்தில்
கப்பல் வியாபாரப் பொருள்களைச் சேமிக்கிறார்கள்.
இவ்வருஷம் மன்னார்க்கரையில் வீணே முத்துக் குளிக்
கும்படி கட்டாயப்படுத்தப்பட்ட பரவர்கள் திரும்பி
வருமுன், இக் கோவிலில் தூங்கிக்கொண்டிருந்த ஒரு
அஞ்ஞானி—பிரம்பும் கையுமாய் ஒரு குருவானவர்
உள்ளே பிரவேசிப்பதைக் கண்டான். அவர் சொல்
வார்: "எழுந்து வெளியே போ." இதைக்கேட்டு
அவன் எழும்பி வெளியே போய்க்கொண்டே திரும்
பியபோது, நடுப் பீடம் இருந்த இடத்தில் ஜோதி மய
மான மூன்று வெளிச்சங்கள் பிரகாசிப்பதைப் பார்த்
தான்.

"அதைப்பற்றி அவன் மணியக்காரனென்னும்
அஞ்ஞானத்தண்டலிடம் சொல்கிறான்—இவன் ஜாதி
தலைவரைக் கண்டு சொல்கிறான்—கிறிஸ்துவர்க
ளுடைய கடவுள் சேசு சபைச் சுவாமி மாரின் கோவி
லில் இத்தகைய அற்புதங்களைச் செய்வதால் அதை
அப்படியே விட்டுவிடுவது சரியல்ல வென்றும் அதைச்
சுத்தம் செய்து தகுந்த விதமாய்க் காப்பாற்றும் கட
மையை இவர் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும்
வற்புறுத்துகிறான்.

முத்துச் குளித்துவிட்டுக் கிறிஸ்தவர்கள் திரும்பி
வந்தபோது ஒரு மனிதன் இவ்விடத்தில் தகுந்த மரி
யாதை யின்றி நடந்துகொண்டதைப் பார்த்து, நடுக்
கோவிலில் ஒரு சிலுவை நாட்டினால் அதன் காட்சி
திரு ஸ்தலத்தின்மட்டில் சங்கை பிறப்பிக்குமென்று
எண்ணினார்கள். ஒரு வாலிபன் தனது தோணியில்
வைத்திருந்த சிலுவை யொன்றை இதற்காகக் கொடுத்
தான். அடுத்த இராத்திரி அது கோவிலில் ஸ்தாபிக்
கப்பட்டது. காலையில அநேக ஜனங்கள் அதைப்
பார்க்க ஓடி வந்தார்கள். வெகு சீக்கிரமாய்க் கோவில்
சுத்தம் செய்யப்பட்டு அதில் குவிந்திருந்த அசுத்த
மெல்லாம் வெளியாக்கப்பட்டது. இந்தச்சிலுவை
அதிகச் சிறியதாயிருந்ததால் இன்னொரு கிறிஸ்துவன்
கொடுத்த பெரிய சிலுவையொன்று அடுத்த நாளிரவு
கோவிலில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தச் சிலுவை
தான் நமது சுவாமிமார் தூத்துக்குடியை விட்டுப்
போகுமுன் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தம் பண்ணு
பவர்கள் சாலையில் வைத்திருந்ததென்று பிற்பாடு
தெரியவந்தது.

'சுவாமிமார் கோவிலில் இரண்டு சிலுவைகள்
இருக்கிறதென்று கேள்விப்பட்ட ஜனங்கள் அவைக
ளுக்கு வணக்கம் செய்ய கூட்டம் கூட்டமாய் திரண்டு
வந்தார்கள். எவ்வளவு பக்தியோடு ஜனங்கள் சிலு
வைகளை வணங்கி முத்தி செய்தார்களென்று பார்க்க
மனமுருகிற்று. ஆனால் இரு சிலுவைகளும் ஒரே சம
யத்தில் இடது பக்கமாய் வியர்வை வேர்க்கத் துவக்
கினபோது ஆச்சரியம் பெருகிற்று. இச் செய்தி பர
வவே, இரவும் பகலும் ஜனக் கூட்டம் ஓயவில்லை.
ஒரு கிறிஸ்துவன் வேர்வையைத் துடைக் எத்தனித்த
போது, அது இரத்த வேர்வையாயிருக்கக் கண்டான்.'

மூன்று நாட்கழித்து பெரிய சிலுவையின் மேல்
போர்த்துக்கல் தேசத்தில் "சாந்தரம்" என்னும் பட்ட
ணத்தில் நடந்த புதுமைபோல் அநேக சுரூபங்கள்
காணப்பட்டன. அதே தினத்தில் சிலுவை திரும்ப
வும் வேர்க்கத் துவக்கினது. அப்போது கொச்சியி
லிருந்து தூத்துக்குடிக்கு வந்திருந்த சில தொமினிக்
சபைச் சந்நியாசிகளும் சில போர்த்துக்கீஸியரும்
நாம் முன் சொன்ன திருச் சுரூபங்களைப் பார்த்தார்
கள். ஒரு சந்நியாசியார் ஒரு போர்த்துக்கீஸிய
னுடைய உடைவாளை வாங்கிச் சுரூபங்கள் காணப்
பட்ட இடங்களைச் சுரண்டினார். தூரத்தில் நின்ற
ஒரு போர்த்துக்கீஸியன் இப்போது சுரூபங்கள் அதி
கத் தெளிவாய்த் தோன்றுகின்றன என்றான். மற்ற
வர்களுக்கும் அது அப்படியே தோன்றிற்று. ஆனால்
எல்லாருக்கும் ஒரே மாதிரியல்ல, "சாந்தரம்', பட்ட
ணத்தில் சம்பவித்ததுபோல் வெவ்வேறு சுரூபங்கள்
தோன்றினவாம். நறுக்கப்பட்ட சிலுவைத் துண்
களைப் போர்த்துக்கீஸியர் அருளிக்கங்களாகச் சங்கை
யோடும் பக்தியோடும் பெற்றுக்கொண்டனர். ஐ
தாறு தினங்களுக்குப் பின் மத்தியானத்தில் கால்க
ளின்றும் வேர்வை வடியத் துவக்கினது. கடைசியாய்
பட்டங்கட்டியார் வேர்வையை ஒரு துணியா
துடைத்துவிட்டாராம்.

"மேற்கூறிய விஷயங்களைக் கடிதமூலமாய்
பிரான்சிஸ்கன் சபைக் குருவானவர் கொச்சி மேற்
ராணியாண்டவருக்கு அறிவிக்கவே அவர் அச் சி
வைக்குச் சகலரும் வணக்கம் செலுத்தும்படியு
அதைப் பங்குக் கோவிலில் தகுந்த இடத்தில் ஸ்தாபி
கும்படியும் கட்டளையனுப்பினார். அப்படியே ஸ்தாபி
கப்பட்டது. ஆனால், நமது கிறிஸ்துவர்கள் அதை
திரும்பவும் பனிமயமாதா கோவிலுக்குக் கொண்
வந்தார்கள்; அங்கிருந்து அது திரும்பவும் பங்கு
கோவிலுக்குக் கொண்டுபோகப்பட்டது. அது மாத
கோவிலிலிருந்த நாளெல்லாம் பெருந்திரளான ஜன
கள் அதை வணங்க வந்தார்கள். அங்குக் கொண்
வரப்பட்ட காணிக்கைகள், செய்யப்பட்ட நேர்ச்சி
கடன்கள், எரித்த மெழுகிதிரிகள் முதலிய பக்
அடையாளங்களைப்பற்றி ஒன்றும் சொல்லாம
முடிக்கிறேன்.

"ஆனால், இந்தக் கோவிலில் எப்போதும் ஒருவித சுகந்தவாசம் முகரலாம் என்றும், இந்தத் திரு வேர்வையில் துவைக்கப்பட்ட துணியின் ஸ்பரிசத்ததினாலேயே அநேக அற்புதங்கள் நடந்தனவென்றும் சொல்லாமலிருக்க முடியவில்லை. இன்னும் சொல்கிறார்கள்: இக் கோவிலில் குடியிருந்த ஒரு மனிதன் யோக்கியமாய் நடந்துகொள்ளவில்லை. ஒரு நாள் நல்ல சவுக்கியமாய்ப் படுத்த அவன் மறு நாள் யாதொரு காரணமுமின்றிச் செத்த பிணமாய்க் கிடந்தானும். மேலும் இங்குச் சேமித்து வைக்கப் பட்டிருந்த வர்த்தகப் பொருள்களெல்லாம் கடலில் சேதமாய்ப்போனதாகவும் கவனித்திருக்கிறார்கள்."

சேசுசபைச் சுவாமிமார் திரும்பிவந்தது

கடைசியாய், 1621-ம் ஆு சேசுசபைச்சுவாமிமார் திரும்பிவந்து பரிசுத்த பனிமய மாதா கோவிலை ஒப்புக்கொண்டார்கள்; திரும்பி வந்த இரண்டொரு வருஷங்களுக்குள் தூத்துக்குடியிலிருந்து திரும்பவும் துரத்தப்பட்டார்கள். அவர்களை இதர இடங்களிலிருந்தும் துரத்தும்படி சத்துராதிகள் எத்தனித்தார்கள். ஆனால் சகல சம்பவங்களையும் மேல்பார்த்து நடத்தும் கடவுள் விடவில்லை. நான்கு வருஷமளவாய் சத்துராதிகளின் சதிகள் மத்தியில் பொறுமையோடு சீவித்து அவர்கள் செபத்தினால் வெற்றியடைந்தார்கள். 1625-ம் வருஷம் நமது துறைகளில் சச்சரவும் குழப்பமும் ஒழிந்து சமாதானம் நிறுவப்பட்டதென்று சங். அந்தோனி ரூபினோ என்னும் குருவானவர் சேசு சபை அதிசிரேஷ்டருக்கு வெகு சந்தோஷத்தோடு எழுதியிருக்கிறார்.

1926 ஆு நமது கடற்கரையெங்கும் கடும்பஞ்சம். ஜனங்கள் பசியால் வாடி மடிந்து, அடக்கம் பண்ணப்படாமல் தெருக்களில் கிடந்தார்கள். தூத்துக்குடியில் மாத்திரம் 1500 பேர் பஞ்சத்துக்கு இரையானார்கள். இந்த அவதியில் சேசு சபையார் தங்களுக்கு தின்மை செய்தவர்களுக்கு நன்மை செய்து ஜனங்களின் இதயங்களை இழுத்துக்கொண்டனர். மேற்சொன்ன அந்தோணி ரூபினோ என்னும் குருவானவர் மதுரைக்குப்போய் நாயக்கரிடம் பரிந்துபேசி, பரவர்கள் மூன்று வருஷம் ஒரு வரியும் செலுத்தவேண்டியதில்லை யென்றும், அதற்குப்பின், முன்னைவிடக் குறைந்த வரியே செலுத்தலாம் என்றும் உத்தரவு வாங்கிவந்தார். இனி இக் கடற்கரைகளில் சாத்தான் இல்லையென்று சுவாமியார் 1627-ம் வருஷக் கடைசியில் எழுதினார்.

சேசுசபையார் திரும்பவும் விலகுதலும், திரும்பி வருதலும்

ஆனால், அந்தோ! 1629-ம் வருஷம் ஒரு புது வைசிராய் கோவைக்கு வந்தார்; இவர் போர்த்துக்கல் தேசத்திலேயே சேசுசபைக்கு சாதகமானவரல்ல. இந்தியாவுக்கு வந்து செய்த முதல் நியமனங்களுக்குள் ஒன்று அவ்வளவு நல்லபேர்வாங்காதிருந்த சுவாரேஸ் என்ற ஒருவரைத் தூத்துக்குடிக்கு கப்பித்தானாகப் புதிதாய் நியமித்ததாகும். பரவர்கள் மதுரை நாயக்கரின்பிரஜைகளேயன்றிப் போர்த்துக்கீஸியர் அரசாட்சிக்குக் கீழ்ப்பட்டவர்களல்ல வென்பதைக் கவனியாமல், அவர்களுக்கு ஒரு புது வரிபோட்டு அதைச் சேகரிக்கும்படி புதுவைசிராய் புது கப்பித்தானுக்குக் கட்டளையனுப்பினார். பரவரோ அச்சமயத்தில் தரித்திரதசையிலிருந்தாலும் வரி செலுத்தக் கடமைபட்டவர்களல்லவென்றதாலும் செலுத்த மறுத்தார்கள். இதுவிஷயத்தில் சுவாமிமார் ஜனங்கள் பக்கத்திலிருப்பார்களென்றறிந்த கப்பித்தான் ஒருவரும் சுவாமியார் வீட்டுக்குப் போகக்கூடாதென்று கற்பித்துச் சுவாமிமாருக்கு விரோதமாய் வைசிராய்க்கும் எழுதினான். கிறுஸ்தவப்போர்த்துக்கீஸியரோடு இந்துச் சிற்றரசர்களும் கலாபனைத் துவக்கினார்கள். சில பொல்லாத கிறிஸ்துவர்கள் சேசுசபைக் குருக்களைக் கடற்றுறைகளிலிருந்து துரத்தச் சதியாலோசனை செய்தனர். சேசுசபையார் முதலில் தூத்துக்குடி பரிசுத்த பனிமயமாதா காலேஜிலிருந்து வெளியேற்றப் பட்டனர். கலகம் இன்னும் தொடர்ந்துநடக்க திரும்பவும் சேசுசபையார் கரையோரங்களினின்று துரத்தியடிக்கப்பட்டனர்: இதற்கிடையில் கிறுஸ்துவர்களில் பலர் தங்கள் பழைய துர்க்குணங்களில் விழுந்தார்கள்; சிலர் வேதத்தையே மறுதலித்து அஞ்ஞானிகளானார்கள். இதெல்லாம் அர்ச். பாப்பானவருக்கும், போர்த்துக்கல் இஸ்பாஞிய மன்னருக்கும் அறிவிக்கப்பட, 1362-ம் வருடம் துரத்தப்பட்ட சுவாமிமார் திரும்பவும் தங்கள் கோவில்களைக் கைக்கொள்ளும்படி கட்டளைபிறந்தது. பனிமயமாதா கோவிலுக்குச் சேசுசபையார் திரும்பவும் வந்துசேர்ந்தார்கள். பழையபடி தூத்துக்குடிக் காலேஜும் வேலை செய்யத் துவக்கியது. பரிசுத்த பனிமயமாதாவின் பிரக்கியாதியும் அதிகரித்தது.

டச்சுக்காரர் ஆளுகை

ஆனால், 1649-ம் வருடம் டச்சுக்காரர் நமது கடலோரங்களில் தோன்றினார்கள். 1659-ம் ஆு அவர்கள் தூத்துக்குடியைப் பிடித்தார்கள்; நமது கரைதுறைகளும் திருவிதாங்கூரின் ஒரு பாகமும் அவர்கள் கைக்குள்விழுந்தன. அவர்கள் 1663-ம் ஆு ஜனவரி 9-ம் உ கொச்சியைப்பிடித்து, இந்தியாவில் போர்த்துக்கீஸியர் அரசாட்சிக்கு முடிவுகட்டினார்கள்.

இவ்விதம் டச்சுக்காரர் நமது பகுதிகளில் ஆளுகை செலுத்தத் துவக்கியவுடனே பழைய சேசுசபை மலையாள மாகாணத்துக்கு கஷ்டம் வந்தது. கொழும்பு, யாழ்ப்பாணம், மன்னார், கொச்சி, கொல்லம் முதலிய இடங்களில் சேசுசபைக்கூட்டங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. ஆனால் தேவாதீனமாய்த் தூத்துக்குடிப் பனியமாதா கோவில் தப்பினது. ஆகிலும், கடற்கரையோரத்தில் மற்ற இடங்களில் செய்தது போல் கோவிலைக் கிட்டங்கியாகவும், காலேஜைத் தாங்கள் குடியிருக்கும் விடுதியாகவும் மாற்றிவிட்டார்கள்.

1766-ம் ஆண்டு கடலோர சிரேஷ்டர் ரோமையிலுள்ள தமது அதிசிரேஷ்டருக்கு எழுதுகிறார்: "நாங்கள் ஒன்பது அல்லது பத்து சுவாமியார் இருக்கிறோம். நமது கோவில்களில் தாங்கள் குடியிருக்கும்படியாக டச்சுக்காரர் நம்மைத் துரத்தியடிக்கிறார்கள். நாங்கள் உள் நாட்டுக்குள் அவர்களிடமிருந்து தூரமாய்ச் சிலசிறு கோவில்களிலும், வைக்கோல் கொண்டு மேயப்பட்ட குடிசைகளிலும் பூசைவைத்

துக் கொண்டு. அங்குவருகிற கிறிஸ்துவர்களின் ஆத்துமங்களுககு உதவி புரிகிறேம் நான் தூத்துக்குடியிலில்லே. அங்கிருந்து ஒன்பது மைல் தூரத்தில் உள் நாட்டில் சில கிராமத் தலைவர்களோடு குடியிருக்கிறேன். இவர்கள் டச்சுக்காரரோடு குடியிருக்க மறுக்கிறார்கள். தூத்துக்குடி காலேஜ் வரும்படியெல்லாம் இழந்து விட்டது; பரவருடைய உதவியாலேதான் நடக்கிறது."

சீக்கிரம் காலேஜ் வேறேரிடத்துக்கு மாற்றப்பட்டது. கடைசியாய் அது 1697-ம் வருடம் மணப்பாட்டுக்கு வந்து சேர்ந்தது. இதன்பின் பனிமய மாதா கோவிலின் பிரக்யாதி குறையத் தொடங்கியது.

1702-ம் ஞு திரும்பவும் கடலோரத்தில் கொந்தளிப்பு. அக்காலத்துக் கடிதங்கள் இந்தக் கொந்தளிப்பு கொச்சி மேற்றிராணியார் கடற்கரை விஷயங்களில் கலந்து கொண்டதிலிருந்து எழும்பி, கடைசியாய் 1710-ம் வருடந்தான் அமர்ந்தது. அதற்கு முந்தின வருஷம் (1709) எழுதப்பட்ட ஓர் கடிதம் "தூத்துக்குடிக்கும்கரைதுறைகளுக்கும் பாதுகாவலான பனிமயமாதா விஜில்மாஞ்சி சுவாமியாரை இடியிலிருந்து காப்பாற்றினள்; ஏழைப்பரவர்களுக்கு இவ்வருடம் நல்ல முத்துச்சிலாபம் கொடுத்தருளினர்" என்று சொல்லுகிறது. மாஞ்சி சுவாமியார் தேவமாதா பக்தியில் சிறந்தவர். பங்குக் கோவில் பதுகாவலராகிய அர்ச். இராயப்பர் திருநாள் இவ்வருஷம் வெகு ஆடம்பரத்தோடு கொண்டாடப் பட்டது முத்துக்குளிக்க வந்திருந்த ஜனங்களெல்லாரும் ஜூபிலிப்பலன் அடையும்படி ஆறு குருக்கள் பாவசங்கீர்த்தனம் கொடுத்தார்களாம்.

கனம் மாஞ்சி சுவாமியார் டச்சுப் பாஷை தெரிந்தவராகையால், தூத்துக்குடியில் வசித்த டச்சு வர்த்தகர்களுக்குச் சிநேகிதரானர். இது டச்சுக்காரர் ஆத்தும நன்மைக்கு ஏதுவாயிருந்தது. சிலர் சாகுந் தருணத்தில் கத்தோலிக்கத் திருச்சபையில் உட்பட்டு மரித்தார்கள். சுவாமியார் ஆஸ்பத்திரிக்கு இஷ்டம்போல் போய்வர அநுமதிக்கப்பட்டது. அநேக ஆத்மங்களுக்குப் பிரயோசனமாயிருந்தது டச்சுக் கவர்னர் உத்தரவோடு அர்ச். இராயப்பர் கோவில் புதுப்பிக்கப்பட்டது மல்லாமல் தேவதாய்க்குத் தோத்திரமாக ஒரு புதுக் கோவிலும் மட்டப்பட்டது. இதுதான் தற்போதிருக்கும் பனிகயமாதா கோவில் என்று நம்பவேண்டியிருக்கிறது. கனம் மாஞ்சி சுவாமியார் இடியிலிருந்து தப்பின வருடத் தினமாகிய ஏப்பிரல் மாதம் 4-ம் தேதி (1712-ம் ஞு அஸ்திவாரக்கல் மந்திரிக்கப் பட்டது. அச்சமயம் தூத்துக்குடிக் கோட்டை அதிபதியும வேறு டச்சுக்காரரும் பதிதராலுைம் திருச்சடங்கு பார்க்க வந்திருந்தார்கள் கோவிற்சுவர் எழும்பாமலிருந்தும் நடுப்பீடம் சிலதினங்களில் முடிக்கப்பட்டுக் கர்த்தர் உயிர்த்த திருநாளுக்குமுன் திருச்சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டது. பரிசுத்த வாரச்சடங்குகளெல்லாம் நிறைவேறின செபமாலே செபிக்கப்பட்டது; 'மாக்னிபிக்காத' பாடப்பட்டது; ஒரு ஞானஸ்நானமும் கொடுக்கப் பட்டது; குழைந்தையின் பேர் மரியம்மாள். பாஸ்குத் திருநாளுக்குப் பின் வேலைதொடர்ந்து செய்யப்பட்டுக் கோவில் கட்டிமுடிக்கப் பட்டது அங்கே திருச்செபமாலையின் தேவ இரகசியங்களை விளக்கும் 15 நேர்த்தியான படங்கள் கனம் மாஞ்சி சுவாமியாரால் ஸ்தாபிக்கப்பட்டன. 1714-ம் ஞு பனிமயமாதா 'கொம்பிரேரி' (சபைக்குப் புது அங்கீகாரம் கொடுக்குமாறு சங். புரோவின்சியல் சுவாமியார் ரோமபுரிக்கு எழுதினர். பழைய கோவிலின் சுதந்தரங்களெல்லாம் இப்புதுக் கோவிலுக்கும கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார்.

தியானப் பிரசங்கங்களும் ஞானவேலைகளும்

1719-ம் வருஷம் சங். மிக்கேல் பெர்த்தோல்டி சுவாமியார் ஆலூரிலிருந்து நமது பகுதிகளுக்கு எழுந்தருளி. மணப்பாட்டிலும் புன்னைக்காயலிலும் தூத்துக்குடியிலும் தியானப் பிரசங்கங்கள் செய்து, கிறிஸ்துவர்களின் சீவியத்தைப் புதுப்பித்தார். 1733-ம் வருஷம் தூத்துக்குடியில் 655 குழந்தைகளுக்கும். 9 பெரியவர்களுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. தூத்துக்குடிக்காலேஜு 1697-ம் வருஷமே மணப்பாட்டுக்கு மாற்றப்பட்டு விட்டதால், தூத்துக்குடிப் பனிமயமாதா கோவிலில் சேசு சபைக் குருக்கள் 1759 ம் வருஷம் வரை பங்குவேலையே பார்த்து வந்தார்கள்.

கடைசி கலாபனே

அவ்வருஷம் போர்த்துக்கல் தேசத்து மந்திரி போம்பால் என்பவன் அததேசத்து ஆதீனத்துக்குட்பட்ட நாடுகளில் சேசு சபையார் இருக்கக்கூடாதென்று கட்டளை பிறப்பித்தான். நமது கடற்றுறைகள் போர்த்துக்கீசியர் ஆதீனத்துக் குட்பட்டதாயிராதது பற்றி, மற்ற இடங்களில் செய்ததுபோல், சேசு சபையாரைக்கட்டாயமாய்க் கோவைக்கு வருத்திக் கஷ்டப்படுத்தி லிஸ்பன் பட்டணத்துக்குக் கப்பலேற்றி யனுப்பமுடியவில்லை. ஆகிலும் அவர்களைப் பலவந்தமாய்க் கிறிஸ்துவர்களிடமிருந்து பிரிக்காதபடி இந்து அரசர்கள் தடுத்தார்கள் போர்த்துக்கீஸ் அரசாங்கம் சேசு சபையாருடைய சவரட்சனைக்கு முன்போல் உதவிசெய்ய மறுத்தபோது பதித டச்சுக்கார வர்த்தகர்கள் தங்களுக்குள் வரிப்போட்டு அவர்களுக்குத் தருமம் செய்ய முன் வந்தார்கள்.

இச்சமயம் கொச்சி மேற்றிராணியாரும் கிராங்கனூர் அதிமேற்றிராணியாரும் சேசு சபையைச் சேர்ந்தவர்கள். அவர்களை மாற்றும்படி பொம்பால் கட்சியார் எத்தனித்தும் முடியவில்லை. அவர்களும பிச்சைக்காரர் போல் தருமத்தைக்கொண்டே சீவிக்க வேண்டிய தாயிற்று. கொச்சி மேற்றிராணியார் 1771-ம் ஆண்டிலும், கிராங்கனூர் அதிமேற்றிராணியார் 1777-ம் ஆண்டிலும மரணமடைந்தார்கள்

சேசுசபையே எடுபட்டது.

1775-ம் வருஷம் பரிசுத்தபாப்பரசரே சேசு சபையை எடுத்துவிட்டது தெரிந்த விஷயம் துக்ககரமான இவ்விஷயத்தை நமது பகுதிகளில் வேலை செய்து வந்த சேசு சபையாருக்கு அறிவிக்கும் கடமை மிகவும் வங். கிராங்கனூர் ஆண்டவருடையதா

...அதன்பின் பழைய சேசு சபையார் சுவா...குருக்கள் போல் நமது துறைகளில் உழைத்து ...தார்கள்.

சேசு சபை மேற்றிராணிமார் இருவரும் இறந்த ...ன் கிராங்கனூர் அதிமேற்றிராசனத்தை மேற் ...பார்க்கவும் கொச்சி மேற்றிராணியாராகவும் ஒரு ...ர்மேல் சபைக்குருவானவர் நியமனம் பெற்ருர். ...இவர் கோவையிலிருந்து தெற்கே வரமுடியாததால் ...இரண்டு மேற்றிராசனங்களையும் மேற்பார்ப்பதற்கு ...இன்னெரு கார்மேல் சபைச்சுவாமியாரை நியமித் ...தார். இவர் நமது கடலோரத்துக்கு விக்கர் ஜெனர ...ராக சங். துவார்த்து என்னும் பழைய சேசு சபைக் ...குருவானவரை நியமித்தார். சங். துவார்த்து சுவாமி ...யார் மணப்பாட்டில் 1788-ம் வருடம் மே மீ 3 தேதி ...மரணமானூர். சேசு சபை மறுபிறப்பு பிறக்குமென் ...றும் சேசு சபையார் திரும்பவும் நமது பகுதிகளுக்கு ...வருவாரென்றும் அவர் இறக்குமுன் தீர்க்க தரிசனம் ...சொல்லி மரித்தார். அப்படியே 1814 ம் வருடம் ...ஏழாம் பத்திநாதர் சேசு சபைக்குப் புத்துயிர் கொ ...டுத்தார். 1832-ம் வருஷம் பதினறும் கிரகோரி ...பாப்பிறைவர் மதுரை விக்காரியேற்றை ஏற்படுத்தி ...அதைச்சேசு சபையார் நடத்தும்படி ஒப்படைத்தார்

புதுச்சேசு சபையார்

சங். துவார்த்து சுவாமியார் மரணமானபின் ...மது பகுதிகள் கோவை அதிமேற்றிராசனத் தோ ...டல்ல. புதுச்சேரியோடு சேர்க்கப்பட்டது. இதற் ...குச் சான்று ஆரும்பத்திநாதர் என்னும் பாப்பான ...வர் 1788-ம் ஞூ விடுத்த நிருபமும், அதேவருடத்தில் ...பிரசுரிக்கப்பட்டுப் பிற்பாடு உறுதிப்படுத்தப்பட்ட ...'ப்ரோப்பக்கந்தா'வின் தீர்மான அறிக்கையுமாகும். ...இதன்படி நமது பகுதிகளில் உழைக்கும் வேத போத ...கர்கள் புதுச்சேரி மேற்றிராணியாராயிருந்த வந். ...பிதார் பிரிகோ ஆண்டவரின் அநுமதி பெற வேண்டு ...மென்று உத்தரவும் போடப்பட்டது

ஆகவே புதுச்சேசு சபையார் 1838 ம் வருடம் ...வந்தபோது, புதுச்சேரி அதிமேற்றிராணியார் அநு ...மதியின்றி நமது கடலோரங்களிலிருந்த குருக்களுக்கு ...ஞான அதிகாரம் கிடையாது. புதுச்சேரி மேற்றி ...ராணியாருக்குக் கீழ்ப்பட்ட குருக்கள் இல்லாம ...ல் ஞான அதிகாரம் நமது பகுதிகளினின்று ...எடுப்பட்டுப் போகவில்லை. அவ்வதிகாரத்தை இனி ...வகிக்கப் பரிசுத்த பாப்பரசர் புத்துயிர்பெற்ற சேசு ...சபையாரை அனுமதித்தனர்.

அதன்பிரகாரம் தூத்துக்குடிப் பரிசுத்த பனி ...மயமாதா கோவிலை விசாரித்து வந்த கோவைக் குரு ...வானவர் 1838-ம் ஞூ சங். அலெக்சாண்டர் மார்ட் ...டின் சுவாமியாரை ஏற்றுக்கொண்டு கோவிலை அவ ...ரிடம் ஒப்படைத்தார். ஆனல் சங். மார்ட்டின் சுவா ...மியார் ஒரு அலுவலினிமித்தம் வெளியூருக்குப் ...போய்த்திரும்பி வந்தபோது, கோவில் பூட்டப்பட் ...டிருப்பதையும் பழையபடி ஒரு கோவைச்சுவாமியார் ...இருப்பதையும் பார்த்தார். அதுமுதல் பனிமய ...மாதா கோவில் கோவாமிஷன் கோவில் என்று ...அழைக்கப் பெற்றது. ஆனல் கோவை அதிமேற்றிரா ...சனத்தைச் சேர்ந்த கோவிலன்று.

கடைசியாய் 1857-ம் ஞூ அர்ச் பாப்பானவர் போர்த்துக்கல் தேசத்தோடு செய்த ஒப்பந்தபடி பனிமயமாதா கோவில கோவை அதிமேற்றிராணியார் அதிகாரத்துக்குள் வந்தது; அதன்பின், 1886-ம் ஞூ புதிதாய் எல்லை வரையறுக்கப்பட்ட மைலாப்பூர் மேற்றிராசனத்தோடு சேர்க்கப்பட்டது. கடைசியாய் 1830-ம் ஞூ ஏப்பிரல்மீ 7 தேதி தூத்துக்குடி மேற்றிராசனத்துக்குக் கொடுக்கப்பட்டது.

அக்கோவில் 153 -ம் வருடம் சேசு சபையாரால் கட்டப்பட்டபோது பரதமக்களுக்குப் போதுக்கோவிலாயிருந்தது. இன்னும் பனிமயமாதா பரவர் மாதாவாகக் கொண்டாடப்படுவது நம்மவர்களின் நல்ல மனதைப் பொறுத்தது.

—Fr. G.

(Fr. Gaspar Gomez S.J)




S. S. "ஜலகோபால்" கப்பல் மூன்ருவது ஆபிசர்
ஸ்ரீ X. L. கோமஸ், B.A.



ஸ்ரீ எட்வர்ட் பி. ராயன். S. S. "ஜாதல்" கப்பலில் சீப் ஆபீசராக யிருக்கிருர். இவர் தந்தை கீழக்கரை காலஞ்சென்ற கேப்டன் A. S. பூபால்ராயர்.




திவ்ய சந்தமரியதஸ்நேவிஸ்மாதா திருக்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருமந்திர நகரமென்னும் தூத்துக்குடி



பல ஆண்டுகளாக தூத்துக்குடியில் முனிசிபல் சேர்மனாயிருந்து நல்ல குடிதண்ணீர் கொண்டுவந்த பேருபகாரியும் சென்னை சட்டசபையில் கிறிஸ்துவ பிரதிநிதியாயும் நம் சமூகத்திற்கு ஓர் மகுடமாயும் திகழ்ந்த ராவ்பஹதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்கள்.



லூர்து கெபிக்கு முன்னாளில் திருயாத்திரைசென்ற ஸ்ரீ மான்களான ஜோசப் முரூல், ரெமிஜியஸ்மெல், எம். ஜி. கோ[illegible] எம். பி. கோமஸ், வண. கல்யான்ஸ் (இராஜேந்திர நாதர்) சுவாமிகள்.



நமது மேற்றிராணியாண்டவர்
அவர்களின் தந்தை ஸ்ரீ ஜி. வி.
ரோச்விக்டோரியா




கிழக்கு இந்தியா டெலிக்கேட்
அப்போஸ்தலிக் மகா
வந், ஜெலஸ்கி ஆண்டவர்



ரோமாபுரியில் பட்டம்பெற்று அங்கு
பலதேசகுருப்பிரசாதிகளுக்கு
வேதசாஸ்திர ஆசிரியராயிருந்து
இப்பொழுது தூத்துக்குடி மேற்றி
ராசனகுரு மடத்திற்கு அதிபராயாரு
க்கும் சங். தாமஸ் பர்ணாந்துசுவாமி.




'சரித்திராசிரியர்
ஸ்ரீ சுவர்னம் எட்டஸ்வர்ட்



இலங்கையில் பிரக்யாதி பெற்ற வள்ளலா
யிருந்து ஊைப் கவர்னரென்கிற பட்டம்
பெற்ற குருஸ் கங்காணியார் என்ற
ஸ்ரீ சி. பி. குருஸ் பர்ணாந்து.



இலங்கை இந்தியர்களின் உரிமை
களுக்காகலண்டனில் வாதாட இலங்கை
இந்தியர்களின் பிரதிநிதியாக லண்ட
னுக்குச் சென்றுபுகழுடன் திரும்பிய
ஸ்ரீ ஜார்ஜ். ஆர். மோத்தா சுப்ரீம்
கோர்ட் பிரக்டர், கொழும்பு



உற்சவ தினஙகள் தவிர, வருடம முழுவதும மாதாவின சிரசின்மீது மிளிர்ந்து கொண்டிருக்கும் விலையுயர்ந்த கிரீடம்

யாத கஷ்டம்! அறியமுடியாத சம்பவம். என்னை? ஸ்வர்ண கசித ரத்னசிம்மாதனத்தின் மீது திருக்கோவில் கொண்டிருந்தாளாகிய எமதாத்தாளது ஈராறு தாரகை பூத்த, எழின்மிக்க சிரோபாரத்தை அழகுசெய்து கொண்டிருந்ததாகிய வெண் பொற் கிரீடத்தைக் காணவில்லை.

ஐயோ! அம்மட்டுமோ? எமதன்னையின் திவ்விய கரத்தில் செவ்விய அன்னம்போல் அமர்ந்து குறுநகை புரிந்து கொண்டிருந்த திருக்குழந்தையாகிய எம்பெருமான் திவ்ய ஜேசுவினது சென்னியில் மின்னிக்கொண்டிருந்ததாகிய வெண்பொற் கிரீடத்தையும் காணவில்லை.

திரியுக ராஜேஸ்வரியாகிய எமதன்னைக்கும். எவ்வுயிர்க்குமிறைவனுகிய எமதப்பனுக்கும் ஏக காலத்தில் இவ்வித நிந்தை ஏற்படுமெனில் அதை யாரே சகிக்க வல்லார்? உணர்விழந்தார் பலர்; உரையிழந்தார் பலர், மதியிழந்தார் பலர். மனசிழந்தார் பலர். உடல் மறந்தார் பலர் உடனயர்ந்தார் பலர். ஆலயமுழுவதுங் கண்ணீருங் கம்பலையுமேயன்றி வேறில்லை. மாதர்கள் ஒருபுறமாய் நின்று ஊற்றுப் பெருக்கோ ஆற்றுப்பெருக்கோ எனக் கண்ணீரைப் பெய்து **மாதாவே! மாதாவே! மன்னித்தருளும்! மன்னித்தருளும்!** என்றிரங்கி விம்மி விம்மி யழுமொலி எவ்விதத்தானும் அடக்க முடியாததாயிற்று. குருப்பிரசாதிகளும். திருப்பணியாளரும் ஏனையோரும் ஆலயத்தில் தளம் முதல் முகடுவரை ஒவ்வோரிடத்தையும் தேடிப்பார்த்தனர். காணப்படவில்லை. சஞ்சலம் விர்த்யாகின்றது. சாந்திக்கிடமில்லை. அனற்பட்ட மெழுகாய் அகங்கரைகின்றனர். ஆலைவாய்க்கரும்புபோல் அங்கலாய்க்கின்றனர். ஆலயத்தின் உட்புறத்தில் பாடகர் ஸ்தலமாகிய மேடையின் கிராதிகளில் கனத்ததும், மெல்லியதுமாகிய இருகயிறுகள் கட்டிக்கீழே தொங்கவிடப்பட்டிருந்தன. கனத்தகயிறு ஆலயமணியில் கட்டியிருந்ததாகும். அக்கயிற்றின் வழியாக மேலேறிப்பார்க்கும் வெளிப்புறத்திலிருந்து வரக்கூடிய மேடை வாசல்கள் திறக்கப்பட்டிருந்தன. கள்வர். திருடர் என்ற பேரிரைச்சல் கிளம்பிற்று. மூலைமுடங்குகளெல்லாம் தேடினர். கள்வரையும் காணோம் கனகசோபித முடிகளையும் காணோம்.

ஹா! துரோகம்! சர்வ நலன்களுக்கும் ஊற்றாகவும் உறைவிடமாகவும் இருக்கக்கூடிய எம்பெருமாட்டியின் திருசசிரசைத்தீண்டுவோர் யார்? திருடுவோர் யார்? பேய்க்கும் அரிதன்றோ? அங்ஙனமிருக்கக் களவாடினோர் மானிடராகக் கொள்ளுதல் எங்ஙனம்? ஐயோ. முன்னம் எம்பெருமானுகிய திவ்விய ரக்ஷகனைக் கன்னத்தில் முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்த பன்னிரு சீடர்களிலொருவனுகிய யூதாஸ் ஸ்காரியோத் என்னுங் கொடிய பாவியின் செய்கையை யொப்ப நயவஞ்சகமாகச் சென்று எமது தாயின் முடியைக் கவர்ந்தார்போலும். சேயனுக்குள்ளது தாய்க்கிராதா? யூதாஸ் ஸ்காரியோத் தன்னைக் காட்டிக்கொடுக்க இசைந்திருந்த பெருங்குணம் அவனை ஈன்றவளாகிய எமதன்னைக்கில்லாதொழிதல் எங்ஙனம்? ஆனதுபற்றியே. சண்டாளர்கள் எமதன்னையின் திருச்சிரசைச் தீண்டவும், திருமுடியைத் திருடவும் இசைந்தாளன்றிவேறில்லையென்பதே எமது துணிபு.

ஹா! அம்ம! நினது கருணையை எவ்வாறுரைப்பது! உரைக்வும், நினைக்கவும் முடியாத கருணாகரச் சமுத்திரமே! நினது தாசர்களாகிய எங்களுக்குத் துன்பிழைத்ததாகிய அலகை இன்றும் என்றும் நினது திருவடித்தாமரைக் கீழ் ஓய்வொழிவின்றி நசுங்கி அல்லற்பட்டுக் கொண்டிருக்க நினது திருமுடி கவர்ந்து செல்லத்துணிந்த அலகையினு கொடியஅவ்வலகையை அக்கணமே நீறுக்கநினையாது அதன் கொடிய எண்ணம் நிறைவேறச் சிரந்தாழ்த்தியதோர் புதுமையன்றோ?

அமலோற்பவீ! மன்னுயிர்காக்கத் தன்னுயிர் துறத்தல் என்ற மஹா வாக்கியத்தின் பெருமையை நின்னிடத்தே கண்டோம். நிகரற்ற நினதுகருணை நீடுவாழ்க.

எவ்வித பிரயத்தனங்களும் பலிக்கவில்லை. அழுமொலி தவிர விமோசனத்திற்கிடமில்லை. தாயும், மகனும் காணப்படும் முடியிழந்த தோற்றமானது கன்னெஞ்சரையும் விடாது கதற வைத்துவிட்டது. எல்லாரும் அழுதுகொண்டிருக்கும்போது எவர் அமர்த்துவார் அழுகையை! பரமதேவதாயைத் தவிர யாருமில்லை. அவளே. அத்தேவதாயே, அம்மாதர்க்கரசியே மக்களின் அழுகையையமர்த்தினள். அற்புதம்! அற்புதம். சில வினடிகளுக்குள் எங்கும் நிர்சப்தமாகி விட்டது. எல்லாரும் முழந்தாளிட்டனர். தேவதாய்க்கும், அவளது திருக்குமாரனுக்கும் நேர்ந்த

போன நிந்தைக்குப் பரிகாரமாக ஐம்பத்துமூன்று மணிச் செபமும், மிகவும் இரக்கமுள்ள தாயே என்ற ஜெபமும் ஜெபிக்கப்பட்டது.

ஊருங்காலும் ஒடுங்கிய நேரம், மானிட வியாபக மொதுங்கிய வேளை. வியாகூலமானது இருதயத்தை ஊடறுத்துக் கொண்டிருக்கும் சமயம், கண்ணீர் பிரவாகம் சுனையினின்று மெழுந்தாற்போல் பொங்கித் தாரை தாரையாய் வடிந்துகொண்டிருக்கின்ற சந்தர்ப்பம். இத்தருணத்தில் ஜெபிக்கப்படும் ஜெபமானது எத்தகைய உருக்கமும் பக்தியுமுடைத்தானதாயிருக்கு மென்பதை யெடுத்துரைத்தல் இயலாத விஷயம்.

ஹா! பெருமூச்சும், விம்முதலும், அழுகையுங் கலந்த மந்திர ஒலியானது திவ்ய தாயின் திருச்செவிகள் வழி யூடுருவி அவளது திருஹிருதயத்தை வதைத்ததாகிய வாதனையை எமதுதாய் சகிக்கமுடியாதவளாய் அவள் புரிந்தருளிய அற்புத நலத்தை எந்த நாவைக்கொண்டு புகல்வது?

ஐம்பத்துமூன்று மணிச்செபமும், "மிகவும் இரக்கமுள்ளதாயே" என்றஜெபமும் ஜெபிக்கப்பட்டு முடிந்தன. அப்பால், அர்ச்செயசிஷ்ட கன்னிமரியாயி தஸ்நேவிஸ் மாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்ற இறுதி ஜெபத்தை மும்முறை யுச்சரித்து முடியுந்தருணம், ஹா! என்ன அற்புதம்! மேககர்ச்சனையை நேர ஓர் பேரொலி ஆலயமெல்லாம் அதிரும்படி கேட்கப்பட்டது இவ்வளவே.

எல்லோரும் வெளி வந்தனர். "அகப்பட்டன, அகப்பட்டன" என்ற பேரிரைச்சல் அண்டமதிர்ந்தன. "அற்புதம்! அற்புதம்!" என்ற ஓசையானது நாலுதிக்குகளிலிருந்தும் சப்திக்கின்றது. திருமுடிகளைக் கண்குளிரக் கண்டு தெரிசிக்க வேண்டுமென்ற அவாவினால் இழுக்கப்பட்டு ஜனங்களனைவரும் ஒருவர் மேலொருவர் மோதிக்கொண்டு கூட்டத்தினிடைப் புகுவாராயினர். இஃது பெருந்துயரத்தைத்தருவதாயிருந்தது. உடனே, எவ்விடத்திலிருந்தபோதிலும் ஏககாலத்தில் எல்லாருங் கண்குளிரக்கண்டு தெரிசிக்கும்படி உயர்ந்த ஓரிடத்தில் எமது தாயினதும் அவளது திருக்குமாரனதும் திருமுடிகள் ஸ்தாபிக்கப்பட்டன. ஹா! பயங்கரம்! அழகிய முடிகள் நசுங்கப்பட்டு அழகிழந்திருந்தன. சில தாரகைகளும், அத்தாரகைகளை யேந்தி நிற்கும் வில் வளைவுகளில் சிலவற்றையும் காணமுடியவில்லை. எனினும் எல்லாரும் இனிது தெரிசித்துத் தாயினது அதியற்புத விசேஷத்தைக் கண்ணாரக்கண்டு, வாயாரப்புகழ்ந்து அவரவர் இல்லம் புகுவாராயினர்.

மேற்கூறிய திருமுடிகள் இரண்டும் தேவாலயத்துக்கெதிராகக் கடற்கரையருகில் செப்பனிட்டு வைக்கப்பட்டிருந்த இருப்புப் படகுகள் ஒன்றினுக்கடியில் கண்டெடுக்கப்பட்டன. சதியர் யாரோ தென்படவில்லை. தேவதாயும் சகித்துவிட்டனள்; அவளது அன்பும் பாதுகாவலும் விசேஷமாய்ப் பரதகுலத்தவர் மத்தியில் பிரகாசிக்குமாக, இஃதிவ்வனமாகத்;

தீயர்களால் தீண்டப்பட்ட அத்திருமுடிகளை நன்கு செப்பனிட்டுக் கிரீடதாரணஞ்செய்யத் தினங்குறிப்பிடப்பட்டது. 1920ஆம் செப்டம்பர் மாதம் 9 தேதி வியாழக்கிழமை முதல் 12உ ஞாயிற்றுகிழமை வரை கிரீடதாரண உற்சவம் வெகு சிறப்பாகவும், வெகு கம்பீரமாகவும் நடைபெற்றது. எமது நகர்ப் பங்கு விசாரணை, மிகவும் சங்கைக்குரிய A. மோனீஸ் சுவாமியவர்கள் மிகுந்த சிரத்தையெடுத்து இவ்வுத்ஸவத்தை மிகு விமரிசையாகக் கொண்டாடினர். திருவிழாவின் கடைசித் தினத்திற்கு முந்தின தினமாகிய சனிக்கிழமையன்று காலை முதல் மாலை வரை நிந்தைப்பரிகார ஆராதனை செய்யும் பொருட்டாய் திவ்ய சற்பிரசாத எழுந்தேற்ற ஸ்தாபகம் செய்து வைக்கப்பட்டிருந்தது. கடைசித் தினமாகிய ஞாற்றுக்கிழமை பாடற் பூசை தேவாராதனை முதலிய சடங்குகள் நிறைவேறிய பின் மிகவும் சங்கைக்குரிய A. மோனீஸ் சுவாமியவர்கள் பிரசங்கத் தொட்டியிலேறி சுமார் ஒரு மணி நேரம் வரை, கேட்போர் மனது பரவசமாகும்வண்ணம் திவ்ய தாயினது பிரபாவங்களை வாசாமகோசரமாய், பாலுந் தேனும், பாகும் பழமுங் கலந்து ஊட்டியது போல் பிரசங்கமாரி பொழிந்தனர்.

அப்பால், கனம் சுவாமியவர்களால் பரலோக பூலோக ராஜேஸ்வரியும், பாவிகளுக் கடைக்கலமும், எழு கடல் துறைக்கும் நாமுண்டென்று பிசகாத அரணாயிருப்பவளும், பரதர் பாதுகாவலும் மாதாவுமாகிய திவ்ய சந்தமரிய தஸ்நேவிஸ் ஆண்டவளுக்கும் அவளது திருக்குமாரனுக்கும் கிரீடதாரணம் செய்யப்பட்டது. சந்தோஷ ஆரவாரகீதங்கள் கோஷித்தன. பரம தேவதாயை யாவரும் தெரிசித்து அவளது திருப்பாத முத்திசெய்து, இஷ்ட சித்திகளைப் பெற்றுச்செல்லுமாறு திவ்ய சொரூபத்தைப்பீடத்தின் மத்தியில் ஸ்தாபகம் செய்து வைக்கப்பட்டது.

அவ்வாறே காலை முதல் மாலை வரை பரதகுலத்தினர் யாவரும், ஏனைய கிறிஸ்தவர்களும் இடைவிடாது தெரிசித்துப் பாதமுத்திசெய்து செல்வாராயினர். இரவில் பஜனை கோஷ்டியார் மேளதாளங்களுடனும் தேவதாயின் சித்திரப் படத்துடனும் தேவதாயின் பிரபாவங்களையும் பிரஸ்தாப சம்பவங்களையுங் குறிப்பிடக்கூடிய பாட்டுக்களைப்பாடி ஊர்வலம் வந்தனர்.

●



இணையற்ற நாவன்மையும் எழுத்துவன்மையும் படைத்த வித்துவான் எம். ஏ. பீரிஸ்

திவ்ய சந்த மரிய தஸ்நேவிஸ் ஆண்டவளது கிரீடாதாரணத்தின் போது பாடிய

பதினைந்து சீரிரட்டை

ஆசிரிய விருத்தம்

வானாடு செல்வமே, வரையாடு தீபமே
வான்மக ராஜேஸ்வரியே.
வற்றாத கேணியே பரலோக ஏணியே
வாடாத நறிய பூவே.
மறையவர் இன்பம் நீ மறைக்கொரு பிம்பம் நீ
மாசிலா வடிவம் நீயே.
மன்னவா மகுடம் நீ மகிதல சிகரம் நீ
மகத்துவ சொரூபம் நீயே,

தேனாடு மலரடி திருமந்த்ர நகரினைத்
திருக்கோவில் கொண்ட நாளாய்
செய்தமா நன்மையை எழுதவோ நினைக்கவோ
செப்பவோ முடியாதம்மா.
செய்ந்நன்றி கொன்றவர் சிறுதொழில் வஞ்சகர்
தீயவர் நினக் கிழைத்த
செயலரும் நிந்தையை நினைக்கவுந் துடிக்குதே
திருவுளம் சகித்த தென்னோ.

மானாடு நின்விழா நிறைவுற்ற தினமாறு
மதிக்குமா வணி நாள் பத்து
வளரிருட் போதுநிற் பதமுறை யலகையின்
வலைப்படு கயவ ரந்தோ.
வல்லபீ நினதுடுச் சிரமிசை துலங்குமா
மணிமுடி கவர்ந்து செல்ல
மைந்தரும் மாதரும் மனமொடிந் திருகணீர்
வடித்தவர் தொழுதல் கண்டு

மீனாடு நின் முடி அலையோரங் காணவே
மிகு புதுமை செய்த தாயே
மிளிர்வடி விழந்ததை யியல்வரை திருத்தியுன்
வியன்சிர ஸமைக்க வேண்டி
விதித்தமா மகுடமிது விருப்பமுட னேற்றருள்
விரிமழை பொழிவா யம்மா
மிகுமந்த்ர நகர்தந்த திருமந்த்ர முறைசந்த
மரியுதஸ் நேவிஸனையே

இராகம் செஞ்சுருட்டி (லாவணி) தாளம்-ஆதி

அகிலமனைத்து மொரு மொழியிலமைத்த திரு
அமலன் திருக்கரத்தி லிருக்க
இளம்பிறையுடு சுடர்கதி ரெறிக்க
மணி-மகுடமதனை யபகரிக்க
வந்த-அதிசயமிதை விரித்துரைக்க
முடி-யாதுநிச்சய மாகு மற்பவி
வேகி யெப்படி யோதமுற்படல்
ஐயோ-கொடியர் நெஞ்சமுருக்கு
இந்த அவமதிக்கெவர் மனச் செருக்கு

திருட்டுத் தொழில் நடத்தப் (2)
பொருத்த முறு கனத்த
இருட்டுப் பொழுதிலையோ பாவியே
திரி-புவனமாள் திவ்ய பிரதாபியே
வளர்-திருப்பதிமிசை வந்துலாவியே
அவள்-இருக்கும் இருப்பிடத்தைத் தாவியே
துணி-வேதுபெற்றதோர் தாயிலுத்தம
தாய் சிரத்தினிலே ஜொலித்திடு
மகுடமெடுத்த பச்சை நாவியே
உன்னை-மன்னித்தாள் எங்கள் மஹாதேவியே

தட்டுமணிக் கயிற்றை (3)
வெட்டித் தட்டினுட்
புறத்திற் கட்டியது தொங்கவிட்ட சூது
மெல்லப்-பற்றிப்பற்றிக் கீழிறங்க ஏது
கடை-கெட்ட துட்டச் செய்கையன்றோ ஈது
மதி தட்டுக்கெட்டுப் போனவகையாது
மட-மாதருக்குள தீதபொற்புயர்
தாய்மலர்ப்பத சேவை நிற்பவ
ராரோ அவர்க்கு நிறைபாது
தந்-தாதரிப்பாள் குறை யாது

இரக்கமெனும் புனலைச் (4)
சுரக்குந் தடாக மவள்
எவர்க்கும் நல்லுப காரியல்லவா
இதை-ஏனோமறந்தாய் மஹா வல்லவா
அன-லெரிவாய் நரகக்குழி செல்லவா
இடர் எண்ணினாய் உனக்கிது நல்லவா
அவ-ளற்புதச்சொரு பத்தினித்தெரி
சித்த வர்க்கதி சித்திவிர்த்திக
ளெய்துமெனல் பழைமை யல்லவா
இதை-எடுத்து விரித்துனக்குச் சொல்லவா

பால்சுரக்கும் பான்மடுவைத் (5)
தானறுத்துப் பால் குடிக்க
வே நினைத்த பான்மையது நோ
சதி-காரரிருள் சூழுமந்தகார
வேளை-யாருமறியாது வந்தபார
உபகாரி யெமதன்னை சிரோபார
முடி-பற்றியோடிய வெற்றி தானென
உற்றதோர் மனம் பற்றுதே நனி
பசிப்பிணி வறுமை நோய் தீரத்
தகு-வழியவளிணையடி சார

அண்டினவர்க் கபய (6)
மென்றும் அளிப்பாளென
அன்று பெர்நர் துரைத்தவாக்கு
அது-குன்றுமெனும் பயமோ தாய்க்கு
மிக-நன்றுநன்றுனது செல்வாக்கு
ஆஹா கண்டோ முனது மனப்போக்கு
பர-மண்டலத்தினி லண்டரெத்தனை
தொண்டிசைத்தடி தெண்டனிட்டிடும்
அரசீ நினது கிர்பாநோக்கு—என்றும்
அகலாதிருக்குமடி யோர்க்கு

ஆழக்கடல் குளித்து (7)
மாமுத்தது படுத்துச்
சீர்மிக்குலவு மதிகுலமே
திருமந்திரமா நகர்த் தலமே
வளர்-சிம்மாசனத் தெழுந்த நலமே
பர-தவர் தமக்குய ரடைக்கலமே
வினை-நீங்க வற்புத மோங்கு பொற்கர
மேந்து தற்பர னேர்ந்துபெட்புற
வேண்டுவாய் அமிர்த பொற்கலமே
எம்-விண்ணப்ப மிது நற்கோகிலமே.

—M. A. P.

GENERAL REPORT

OF

THE RURAL CENTRE AND INDUSTRIAL INSTITUTE, MANGALAGIRI 1945.

:o:

Ever faithful to its motto " Service-our Watch Word" the Rural Centre has been functioning uninterruptedly in the face of so many draw-backs caused by the second World War.

As a direct result of the general evacuation in the middle of 1942, the usual Summer school could not be held during that year. To compensate for this, however, in June 1943, the Centre organised a co-operators' training course lasting for a week, *i.e.*, from 30th May to 5th June. Representatives from several co-operative Stores and Societies from the District attended the course and profited by the practical instructions, given by a number of co-operative experts and officials. These instructions on the different aspects of co-operation were further augmented by theoretical and practical lessons and demonstrations on subjects of rural uplift, agriculture, animal husbandry, poultry farming, bee-keeping, scouting and adult education by our own staff and well-wishers. Sri P. Rajagopalan B. A., the Deputy Registrar of Co-operative Societies, who inaugurated this Seventh Summer School at Mangalagiri on 30th May 1943 exhorted the students to follow the instructions attentively and further to closely observe the various activities of the model farm attached to the Rural Centre and the industrial sections so that they might make use, afterwards, of the knowledge and experience gained during this course, to the benefit of their own villages or localities. Thanks to the co-operation of the several departmental experts on co-operation, agriculture, veterinary and as well as other non-official specialists who willingly volunteered their services, this Summer school proved to be an effective and splendid success. On the 6th June 1943, Dewan Bahadur V. N. Viswanatha Rao M.A., B.L., District Collector, Tinnevelly, who has been taking a keen and active interest in the welfare of the Rural Centre, wound up the Summer School, wishing that some more of such training courses might be organised during the course of the year, giving wide and timely publicity, so that a larger number of students may be enabled to benefit by these courses to the ultimate improvement of the villages. Rev. Fr. T. N. [illegible] S. J. Rector & Principal, St. Xavier's College, Palayamkottah, who had accompanied the Collector on that occasion, addressed the students saying that they should learn a lesson from Mangalagiri and carry it far and wide to their own villages, so that a mass movement, instead of individual striving here and there, may be organised for the uplift of our villages. He wished that Mangalagiri ought to be given wider publicity, so that its example might be followed throughout the length and breadth of our dear land.

Adult Education :—Besides propagating the idea of adult education, the Centre has been carrying on steadily its own night school for the adult illiterates in and around Mangalagiri. It is a noteworthy factor that the W. A. R P. C. of Tuticorin, realising the immense importance of mass enlightenment in its own sphere of work, namely of civil defence, co-operated heartily in our 'Wipe-out-illiteracy-Campaign'. by organising several propaganda meetings in the surrounding rural areas with the help of their own volunteers and enlisting the services of other non-official personages. Mrs. Barijatha Naidu, the head of the W. A. R. P. C. organisation for the Madras Province also visited Mangalagiri, during one of these adult education campaigns and encouraged these activities.

Mangalagiri Dispensary :—At the commencement of the year 1943, a sad event took place; Dr. G. Manuel L. M. P., who has been rendering much useful service in our Mangalagiri Dispensary passed away of sudden heart failure. The Centre was much indebted to Mr. Manual for his earnest toils in the cause of the sick in the vicinity of the Mangalagiri Rural Centre.

Inspite of several odds and handicaps following in the wake of the sudden demise of our Dispensary Doctor, the Centre is still carrying on medical aid to the sick and the afflicted. In December 1944, the Collector of Tinnevelly has been good enough to sanction a Discretionary Grant of Rs. 350 to the Dispensary, which has gone a long way to extend the catering of medical aid to the poor villages.

Mangalagiri Weekly Market—The Sandhai was functioning satisfactorily for some months since its inception in January 1942. But later on, due to trade restrictions and various other local causes, there has been a decreasing tendency in the attendance and as a result the Market had to be closed completely in the middle of 1944. However, we have an intention of converting the Market premises into a Cart Stand since we find the latter will serve a very urgent necessity of providing shelter to the carts passing to and fro Tuticorin, Tinnevelly and beyond.

Mangalagiri Co-operarative Stores :—The villagers have come to realise the vital importance and usefulness of co-operative stores, but for which they would have been deprived of all facilities to get their daily necessities in the international crisis that has been in existence for the last three years. The status of the stores is improving month after month and it has been much helpful in making equitable distribution of controlled foodstuffs and articles to the village folk.

Agriculture :—Agricultural experiments continue to be one of the chief activities.

Animal Husbandry :—The Kangayam Stud Bull No. 373 which has satisfactorily covered the maximum number of cows in the area has recently been removed

193 வருஷங்களுக்கு முன்

எழுகடற்றுறைக்கும் ஏக அடைக்கலமும் பாதுகாவலும்
பரதர் மாதாவாகிய திவ்ய சந்தமரிய தஸ்நேவிஸ் ஆண்டவளு
பரதகுல மக்கள் சமர்ப்பித்த வார்த்தைப்பாடு

(அசலையே பிரசுரித்திருப்பதால் பிழைகளைத் திருத்தி வாசித்துக்கோள்க.)

இசேசு முன்னிற்க.

சவாது

அர்சியசிஷ்திரீத்துவத்தின் திருநாளான்று சாந்தமரிய தசுநேவிஸ் ஆண்டவளுக்குத்
தூத்துக்குடி ஊராராகிற நாங்கள் கோடுக்கிற வார்த்தைப்பாடு.

சினேகத்துக்குப் பாத்திரமாகவும் எங்களுடைய ஒரே பாது காவலுமாயிருக்கிற தசுநேவிஸ் மாதாவாகிய ஆண்டவளே. உமது மேலான திருப்பாதத்திலே மிகுந்ததாட்சியுடனே சாஷாங்கமாகவிழுந்து உமது அடிமைகளாயிருக்கிற எங்கள் பேரிலேயும் தூத்துக்குடியாகிற இந்த ஊரின் பேரிலேயும். யித்தைவரைக்கும் நீர்பாதுகாத்துக் கொண்ட கனமான அடைக்கலத்துக்காக மிகுதியும்நன்றியறிகிறோம். யின்னமும் பாதுகாவலினாலே பஞ்சம் படைவியாதி முதலான துரிதங்களில் நின்று எங்களை ரெட்சித்துக் கொண்டதினாலும் நன்றி அறிந்த மனதுடனே நமஸ்காரம்பண்ணுகிறோம். நாங்கள் பாவம் நிரம்பினவர்களானாலும் உமது திருக்கரத்திலிருக்கிற திவ்ய கொமாரன் எங்களுடைய குடும்பத்தின் பேரிலேயும் சமுத்திரத்தின் பேரிலேயும் காண்பிச்சுக்கொண்டு வருகிற தேவ யிரக்கத்தை யெப்போதும் கண்டுவந்தோமே. அப்படியிருந்தாலுமித்தை வரைக்கும் எங்களுக்குச் செய்திருக்கிற அத்தனை உபகாரங்களுக்கும் நன்மைகளுக்கும் கூடின மட்டும் பிரத்தியுபகாரஞ்செய்ய வகையறியாதவர்களாயிருந்தோம். ஆனால் நீர் பாவிகளுடைய அடைக்கலமானதினாலே எங்கள் பேரிலே யிரக்கமாயிருந்து எங்களுடைய அறியாத்தனத்தை மனசிரங்கவேணும். அதேனென்றால் யின்று முதல் நன்றியறிந்த மனதுடனே பிரதியுபகாரமாக வார்த்தைப்பாடு சொல்லுகிறோம். யித்தைவரைக்கும் உமது யிஸ்தோத்திரமாகத் தேரிசு செபம் பண்ணுகிறதுக்கும் கோவில் சடங்கு முதலான தேவஆராதனைகளிலேயும் சுறுசுறுப்பன்றியே, சோம்பலுள்ளவர்களாயிருந்தோமே. யினிமேல்வரை கூடினமட்டும் எங்களுடைய ஆற்றுமசரீரத்தை உமதுபணிவிடைகளிலே காணிக்கையாகக்கொடுக்கிறோம். இதுவல்லாமல் உமது தேவாலயத்தின் திருப்பணிக்கு எப்போதுஞ் சங்குகுழிக்கிறகாலத்திலே குழியாள்க்கள் நாள் ஒன்றுக்குச்சனம் ஒன்றுக்கு ஒரு காசும், பிரஊர்த்தோணி முதலானஉருக்களிலேவருகிற யாபாரத்தில் ஊர்ஆதாயம் வாங்குகிறதில்பத்துக்குமுன்றும், மீன்பிடிதோணிமஞ்சிகளெல்லாம் தோணி ஒன்றுக்கு ஒருஆள்ப்பங்கும்பிலால் வலைகாரர், களங்கட்டிகளும் ஒவ்வொருஆள்ப்பங்கும், கொம்பஞ்ஞியப்பணிவிடைமுதல் மற்றுமிந்தத்துறைமுகத்தில் யேற்றுமதி இறக்குமதிக்கும், ஒவ்வொருஆள்ப்பங்கும், சல்லியேத்துகிற மஞ்சி ஒன்றுக்குப்பத்துக்காசும், கச்சைப்பிடவை யாபாரிகள் அவர்களுக்குற்காணுகிற பிரயோசனத்தில் ஒரு ஆள்ப்பங்கும், உள்ளூர்க்குடியானவர்கள் முதல்ப்பிறவூரிலிருந்து தவசதானிய முதல்மற்றும் யாபாரம் ஏற்றிவருகிற உருக்கள்முதலான தோணிமஞ்சிகளுக்கு அணுவுக்கு ஒரு பணமும் கொடுப்போமென்று யெப்போதைக்குமாக வார்த்தைப்பாடுகொடுக்கிறோம்.

எங்களுடைய கனமானகடனுக்குப் பரமே
தினுடைய ராக்கினியே யிதுகொஞ்சக்காணிக்கையா
திருச்சமூகத்துக்குச்சந்தோஷம் வருத்துவிக்கிற
மிகுந்த ஆசையாயிருக்கிறோம். யிரக்ககருணையுள்ள ஆ
வளாகிற தசுநேவிஸ்மாதாவே கையேத்துக்கொள்
அதேனென்றால் யித்தோடேகூட எங்களுடைய விச
மும் நம்பிக்கையும் பத்தியும் அடிமைத்தனத்தையும் இ
பட்டணத்தையும் முழுதும் பாதகாணிக்கையாக ஒ
கொடுக்கிறோம்

உமது திருக்கோமாரன்பேரிலுண்டான மெய்
பக்கிஷத்தையும் உம்முடைய பேரிலுண்டான நேமத்தை
யிழந்துபோரதைப்பாற்க ஆயிரமுறை எங்களுடைய
தஞ்சிந்துகிறதுக்கு விருப்பமாயிருக்கிறோம். கிறுபை
பத்துக்குக் மாதாவே யிந்தஉம்முடைய பட்டணத்தை உ
யிரக்கமுள்ளதிருக கண்களினாலேபாத்தருளி சகல பெ
லாப்புகளில் நின்றுரெட்சித்துக்கொள்ளும். விசேஷ
எங்கள் பாவத்தினாலே வரத்தக்க சறுவேசுரனுடை
கோபத்தில்நின்று ரெட்சித்துக் கொள்ளும்.

சாதுகுணமுள்ள கன்னியாஸ்திரியே எங்களுடை
நம்பிக்கையானவளே உமதுமக்களாயிருக்கிற எங்களுக்
எங்களுடைய பட்டணங்களுக்கும் சமுத்திரத்துக்கும் ஆ
பதித்தருளும் யிந்த உமதுமகாபெரிய ஆசீர்பாதத்தோ
உம்முடைய திவ்விய பாலனுடைய வல்லமையுள்ள ஆ
பாதத்தையும் கொடுத்தருளும் யிப்படியே யிந்தலோ
திலே உமக்கியன்ற நல்லஊளியஞ்செய்து மோக்ஷிஷரா
யத்திலே உம்மைச் சந்தோஷத்துடனே கண்டுகளிகூரு
மென்கிற நம்பிக்கையாயிருக்கிறோம். ஆனால் நாங்
கொடுத்த வார்த்தைப் பாட்டின் நினைவு அழியாதபடிக்
சறுவேசுரனுடைய மாதாவாகிய தசுநேவிஸ்நாயகியே அ
யேன்களுடைய பாத்திரமில்லாதபேர் உம்முடைய தி
பாதத்திலே எழுதிவைக்கிறதுக்கு உத்தரவு தந்தருளும்.

தூத்துக்குடியில் துளாருயசு ளு ஆனிமு கூவ

யோசேமரீய தெவலாசி யேசுசபைச் சன்னியாசிய
நாளையில் அவர்கள் கையொப்பமும் பதிவிச்சு அதி
கீழே அவ்வேளைத்தலைமையாயிருந்த

கவரியேல் கோமசு. சாதித்தலைவமோர்.
பேதுரு கோமசு பர்னாந்து உள்ளூர்த்ததலைவமோர்.
சூசையின்னாசிக்குருசுக்கோறேய, கோம்பஞ்ஞிய அடப்பனு
சவியேரின்னாசிக் குருசு மேசீயகணக்கப்பிள்ளை மோர்.
சல்வதோரோன்றீக்தற்குருசு துப்பாசிமோர்.

இவர்கள் கைஒப்பம்வைத்துக்கொடுத்திருக்கிற வார்
தைப்பாடு.

இதின்அசல் துப்பாசிபட்டி சர்வேஸ்பான் கோயி
அக்தார் அவர்களிடமிருக்கிறது.

FROM MOHENJO-DARO IN SINDH TO PEARL-FISHERY COAST VIA PANDIYAN DYNASTIES.

BY

J. V. RODRIGO, VIRAPANDIYANPATNAM.

—:o:—

...ealing beam of light has been thrown on the ...y of the Solar and Lunar races of India by the ... archaeological and historical research pursued by ... H. Heras in his study of the people of ancient ...Daro. The following lines from his pen appearing ... of 'The Journal of Oriental Research, Madras, ... Part IV of Oct—Dec. 1936 trace perhaps the earliest ... of the two races:—

"...d the Indus Valley inscriptions show that there ... historical connection between the Paravas and the ... When the tribe of the Paravas grew, two sub-sec... of this tribe were eventually formed. Each section ... device by which they were distinguished from ... other. One of the sub-sections was called Pagal ... "Sun Paravas"[3]; the other Nila Paravir, "Moon ..."[4]. The latter seem to have been more important ... more numerous, for they are often mentioned ... inscriptions. The meaning of the inscription there... that the two Fishes of the Minavan belonged to the ... one of the sub-sections of the Paravas. All this ... the verbal interpretation of the inscription. But ... the formal meaning of it?"

Whilst we are on the subject of the Moon Paravas, it ... observed that the Pandyas themselves were Paravas ... Moon Paravar. King Virapandiya (a contemporary ...varman Sundara Pandya I) is believed to have ... the throne in A. D. 1253. In the following ...tion, Virapandiya is said to be of the Lunar race. ... inscription * was quoted by Mr. T. N. Subramanian ... 'Swadhesa Mitran', Madras, dated 26th May 1932:—

"ஸ்வஸ்தி ஸ்ரீ
பூமடந்தையும் ஜயமடந்தையும்
பொலிந்து திருப்புயத்திருப்பப்
பார்முழுதும் குடைநிழற்ற
பராக்கிரமத்தால் முடிசூடி
தென்மதுரா புரித்
திருவிளை யாட்டத்திற்கண்டு
மன்னரெல்லாம் வந்திறைஞ்ச

1. Photo, M. D., 1928-29, No. 6266. Pagal does not mean "..." in Tamil, it means "day" only; but it has the mean... sun in Kannada. Cf. Kittel, Kannada Dictionary, ... pagal. The other section being the Moon Parava, we ... fittingly translate pagal as "sun".

2. According to Tamil the meaning of 'pagalavan' (...வன்) and pagal is sun.

4 Marshall, M. D., No. 36.

3 Govt. Epig.

Comparative Customs and Habits Of The Lunar Race.

மலை நாடு கொண்டருளி
மாபாரதம் பொருதருளி
மன்னவர்க்குத் தூதுசென்றருளி
தேவாசுரமது கைதரித்தி
தேனுரு மறையுங் கொண்டருளி
வடவரையிற் கயல்* பொறித்து
வானவர் கோனாரம் பூண்டு
திடவாசக்குறு முனிபால்
செந்தமிணூல் தெரிந்தருளிச்
தளிரிருங்கைத் தமதுரிமைச்
செங்கோலெங் குந்திசை நடாத்தி
மன்னிய வீர ஸிம்ஹாசனத்தில் த்ரைலோக்ய
முழுதுடையாரோடும் வீற்றிருந்தருளிய
மாமதிமக்குலம் விளக்கிய
கோமுதல் கொற்றவன்மரான
திரிபுவனச் சக்கரவர்த்திகள்
ஸ்ரீ வீரபாண்டிய தேவர்"

This Virapandiya was a great monarch and in connection with his name and fame, Mr. H. R. Pate enumerates the following in page 54 of the 'Gazetteer of the Tinnevelly District', Vol. I, (1917):—

"Virapandiya, his contemporary, (contemporary of Jatavarman Sundara-Pandya I) was a still mightier conqueror. His victories extended as far as the Ganges and China; he encountered the kings of the Chola, Chera and Karnata countries and defeated them; he killed "one of the two kings of Ceylon," captured his throne and all his royal treasures, and planted the Pandya flag "with the double fish" * on the Kandy hills. 3".

(3 Govt. Epig. Ann. Report for 1911-12, para. 39).

Jatavarman Sundara-Pandya also is said to have invaded the island of Ceylon. Mr. H. R. Pate expresses in the same page of the 'Gazetteer of the Tinnevelly District' to this effect. He writes:—

"Jatavarman Sundara-Pandya I (1251 to at least 1261) who succeeded, adopted a policy of bold aggression. He invaded the island of Ceylon, defeated and killed the Hoysala king Somesvara, the friend of his predecessor, came into conflict with the rapidly growing power of the Kakatiya kings of Warrangal in Haidarabad, defeated the king of Karnata, and extended his conquests as far as Nellore, where he was "anointed as a hero".

* "The kings of Madura (the Pandya princes) adopted a fish, or a pair of fishes, as the family crest." (page 336, 'Early History of India', By Vincent A. Smith.)

Virapandiya who boasts that he "took Ilam (Ceylon), Kongu and Solamandalam, conquered the powerful chiefs and was pleased to perform the anointment of heroes and victors at Perumbarappuliyur (Chidambaram)," has left six inscriptions here (p. 366 Gaz. of Tinnevelly).

Apparently Vira Pandya his co-regent, who claims the conquest of Ceylon, sent from the king the tribute, and he following inscription ✠ confirms this fact:—

"கொங்கருடல் கிழியக்குத்தி யிருகோட்டெடுத்து
வெங்கணவில் வெதுப்புமே—மங்கையர்கண்
சூழத்தாமம் புனையுஞ் சுந்தரத்தோள் மீனவனுக்
கீழத்தாளிட்ட இறை."

As stated above in the first inscription regarding Virapandiya, the Pandiya kings are said to belong to the Lunar race, and Virapandiya is said to have planted the Pandya flag "with the double fish" on the Kandy hills. In this connection, we must observe the inscription on seal No. 8 of Sir John Marshall's Plates on Mohenjo Daro and the Indus Civilization viz:

✠

Parava nila ir min Minavan mun kan.

Fr. Heras explains that the meaning of the inscription therefore is that the Fishes of the Minavan belonged to the Moon of one of the sub-sections of the Paravas. In the inscription at Chidambaram Jatavarman Sundara-Pandya I is said to be a 'Minavan'. Here we must observe carefully the purport of another inscription of Mohenjo Daro Photo, M. D., 1930-31, Nos. 12688 and 12877 which Fr. Heras explains in pages 284-287 of 'The Journal of Oriental Research', Vol. X, Part IV, Oct.-Dec. 1936. The second inscription which Fr. Heras refers to is:—

✠

It reads thus:

Uril kal Minanir nila parava

Fr. Heras explains that the King is said to be of the Moon of the Paravas, i.e. hailing from the Moon of the Moon Paravas which is easily understood after ascertaining that all the Paravas were Minas.

Concerning the two fishes there are few points to be noted. Fr. Heras S. J., explained, before the Royal Asiatic Society (Ceylon Branch) at the Museum Lecture Hall, Colombo, that the proto-Indian zodiac had not 12 constellations as the Sumerian zodiac, and that the zodiac of Mohenjo Daro had eight constellations only, a fact which was confirmed by the lists of constellations of the zodiac of both the Tamils and the Tuluvas, where 8 constellations were mentioned in Dravidian and the other four in Sanskrita. He observes that this number may be further substantiated by the eight forms which Siva is supposed to have according to his name "Enmai;" and by the "Sivapurana," which says of the same god when dancing the "Tandava," that his eight hands support the eight sections of the universe. (Ceylon Daily News, October 13, 1936). Among the signs of these eight constellations of the Dravidians, are the signs of "Crab", "Double Fish [or] Pisces" and "Makara". Ear-ornaments in the shape [of] "Makara" were worn by the females of the Indu (Luna[r]) race; and these ear jewels are also worn by the femal[es] of the Paravas only. These ear-ornaments are known [as] "Makara-kundalam" or Urukumani. The crab was one [of] the eight forms of God and this was specially men[tioned] when speaking of the Kings of Mohenjo Daro, f[or] this city was called Nandur, the city of the Crab.

Turning to our point the sign of the "Double Fis[h]" or "Pisces" we have noted that it was one of the eight sig[ns] of the Dravidian zobiac. This sign represents the symbol [of] the Minavans and as explained, as all the Paravas we[re] Minas, they were known also as Min-Paravas. As t[he] Pandiya kings were themselves Paravas or Minas, Vir[a]pandiya planted the Pandya flag "with the double fish" o[n] the Kandy hills. Further Bhuvanekavira Vikrama Pandy[a] one of the co-regents of Jatavarman Sundara-Pandya [I] states that he did not go upon his campaign further nor[th] as he ceased to be angry because of the two fishes, t[he] eyes of Ganapati, and since he heard that the ruler the[re] was a woman. There are inscriptions also at Chidam[]baram * to this effect.

The inscriptions are as follows:—

"புயலுந்தருவும் பொருகைப்பு [வ] நேகவீரபுனல்
வயலுந்தரளந்தரு கொற்கைகாவல வாரணப்போர்
முயலுங்கணபதி மொய்த்த செஞ்சோதிமுகத்திரண்
கயலுண் டெனுமதுவோ முனிவாறிய காரணமே"

"வெங்கண் மதயானை விக்கிரம பாண்டியனே
பொங்கி வடதிசையிற் போகாதே—யங்கிருப்பாள்
பெண்ணென்று மீண்டபெருமாளே பேரிசையாழ்ப்
பண்ணென்றும் வேய்வாய் பகை."

Finally Fr. Heras concludes in pages 287-288 of 'T[he] Journal of Oriental Research,' Madras:—

"If we study this problem independently without a[ny] prejudice, and specially if we admit that many people fr[om] Northern India in course of time came down to the So[uth] in search for fertile lands and for peace, particularly af[ter] the Aryan invasion—a fact which is in accordance with [the] very old Pandya and Parava tradition 6., we shall [be] inclined to admit that the Minavan of the two fishes [of] Mohenjo Daro and his Moon Parava subjects very lik[ely] were the ancestors of the Pandya kings of Madura and [of] their Parava subjects of the Fishery Coast."

The Minas were clearly a great and powerful peo[ple]. Professor A Berridale Keith (D. C. L., D. Litt.) menti[ons] in page 84, Chapter IV of 'The Cambridge History of In[dia'] Vol. I:—

"One interpretation adds to the enemies of Sudas [the] tribe of the Matsyas ('fishes'), who in later times occu[pied] the lands now known as Alwar, Jaipur and Bharatpur."

---

* Chidambaram East Gate, South Side - Sen Tamil IV 493 - Page 48' (South India and Her Muhammadan Invaders' By S. Krishnaswami Aiyangar, M.A.,)

✠ Chidambaram ix. Sen Tamil. IV. 513. (South India and Her Muhammadan Invaders).

* அம்புலி, இந்து, திங்கள், மதி are pure Tamil te[rms] denoting the Sanskrit term சந்திரன்.

MINAKSI

The Minas constituted the tribe designated by the name of the "Fishes". Their name was Sanskritized into Matsyas by the Brahman writers. It is of great interest to note that, at Rairh in the Jaipur State, the Mother Goddess is shown to hold a fish in her right hand, and ... in her left hand. The Mother Goddess is also shown with a young god, her son Murugan or Kumara, 'the child', not different from Subramania or Kartikeya, in which case he is shown holding the two fishes, which the Mother Goddess held, in some of the proceeding figures. These fishes placed in the hand of the goddess or the young god may be a symbol of the Minas, one of the most famous Dravidian tribes of the Proto-Indian period *

It strengthens the view that the two fishes symbolize the Minas as the worshippers of these images. It may nevertheless have some relation with the denomination Minaksi—the goddess of fish-eyes, by which name the goddess of Madura is known—which is found in the Mohenjo-Daro inscription in its original Dravidian form Minkani. The poet Tiruvaḷḷuvar in Gnanavettiyan Malai addresses Minakshi or Parvati the consort of Siva as Parathi

மாபரத்தி சிறு பெண்ணுத்தாள்

(Parathi being the feminine gender of Paravan). Similarly Prof L. A Wadell says that the Mother Goddess of the Phoenician tutelary is called Perathi. This is of purely local significance of their symbol and would explain why it has not suvived in general Hindu iconography. It was, also, a custom among the ancient Tamils to place a similar crown of the king on the head of their god. So, the crown of the Indu (Lunar) race was placed on the head of the god Siva. (Cr. Arunasala Purana, Vacchrangadha Pandiya Charka, ... stanza). ✠

SYMBOLS APPEARING ON THE CAR OF OUR LADY OF SNOWS

Now we find at Tuticorin and at Virapandianpatnam at the base of the car of Our Blessed Virgin Mary - Our Lady of Snows and Our Lady of Mount Carmel respectively—the standing symbols or figures of the 'Meenas' i.e. half man and half fish with folded hands in a pose of adoration and prayer on the four sides of the car. This shows that the Paravars are Meenas and the folded hands indicate an attitude of prayer to the Blessed Virgin Mary imploring protection from all dangers and perils.

At this juncture I desire to point out what is recorded in Chapter XI of Genesis: "And when they removed from the East, they found a plain in the Land of Sennar and dwelt in it." Historians identify Sennar with Sumer. Berosus a learned priest of Babylon, who lived about 260 B. C. inferred on the authority of Genesis and other documents that Oannes or Ea Han came with some people from the East through the Persian Gulf. Those early inhabitants of Sumer had never dared to go to the sea and marvelled when they saw people coming across by sea. One of the leaders who went from the East with Oannes was called 'Odakon' (leader of the ship) while it was found chronicled that another settler in Mesopotamia, named Anduvar, taught Astronomy to the people of Mesopotamia, and also wrote the history of the country. (The Hindu Monday October 23, 1944). Berosus narrated that those men who came with Oanna were half man and half fish. They were actual men but looked in outward appearance half man and half fish similar to the figures at the base of the cars mentioned above. Prior to the appearance of Oanna with his people, Chaldea had been colonised by a mixed multitude of men of foreign race, who lived without order like animals. The new settlers taught mankind letters, sciences, laws, and all the arts of civilisation. (Human origins p. 22). Considering that the only civilised people in the immediate East were the Proto-Dravidians of the Indus Valley, and that the new settlers were half man and half fish, it could be concluded that the new comers were really the 'Meenas' of the Indus Valley.

MARITIME COMMERCE

In those early days Eridhu, the sanctuary of Ea, where Gud-Ea ruled was a sea port and it had commercial intercourse with India. In this connection I cite the following from Human Origins - page 67:

"There are traces also of the maritime commerce of Eridhu having extended as far as India. Teak wood, which could have come only from the Malabar coast, has been found in the ruins of Ur; and 'Sindhu', which is Indian cloth or muslin, was known from the earliest times".

We observe that 'Sindhu' was a muslin manufactured at Sindhu in the Indus Valley and Zenoid A. Regozin mentions in 'Vedic India, that the muslin was known by the name of the country which exported it. Samuel Laing is of opinion that the ruins of the city of Eridhu (Eruthur) ✠ now stand far inland, and that Sayce computes that about 6,000 years must have elapsed since the sea reached up to them (Human Origins p. 29). This calculation brings us to a period of 4,000 B.C. ana shows that the Proto-Dravidian people of the Indus Valley had maritime intercourse with Babylonia at that early period. The date of Gud-Ea who is said to have ruled at Eridhu is computed at 4,000 to 4,500 B. C.

Now, let us turn to another point. According to Mr. K. N. Puri's excavations at Rairh in Jaipur State, one of the types of the Rairh Mother Goddess has her left hand 'to the level of the breast'. She, as a matter of fact, seems to point to the breasts, perhaps to emphasize her fecundity. In numerous representations of the Mother Goddess, proceeding from Sumer, Phaenicia, Cyprus and Crete, she is shown holding her breasts, another perhaps bolder way of suggesting the same idea. The following quotation of Fr Heras from page 457 of The New Review (December 1942) will show the connection between the Minoans and Minavans:—

✠ The New Review No. 96, Vol. XVI December 1943. pp. 457-459.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]"

✠ Eruthu or An means a bull or cow & Ur means a town எருதூர். These are pure Tamil terms and therefore Eridhu is a corrupted form of Erudhur.

" A few images of the Mother Goddess wear a flounced skirt. This is a very suggestive feature indeed for Sumerianwomen, and the goddess among them always wears these flounced skirts. Even some images of the Minoan Mother Goddess of Crete and carvings representing her on seals show her wearing the same attire. It has been suggested that this flounced skirt or kanake worn by the sumerian women being apparently a woollen fabric might indicate that the country of their origin was cold, at least in one of the seasons of the year. So is Northern India. In point of fact, the Parvatas, a Dravidian tribe inhabiting the banks of the Parushni (modern Ravi) are mentioned in the Rig Veda as being clothed in woollen garments. The skirt of these statues of the Rairh Mother Goddess is a valuable link and strengthens the thesis of the Indian origin of the Sumerians."

The importance of the tribe of Minas (Matsyas) is reflected in the fact that all Arabia up to the frontiers of Syria and Egypt was under the rule of the Minavans. From the most ancient times there has always been a stream of traffic between the East and West. Doubtless the protection of trade-routes was a main cause of this extension of fortified posts and wealthy cities over such a wide extent of territory.

Foot Note: x. i. "தங்கணாய கனைத்தலை சூடிய
வெங்கணாத ரடித்தலை யேற்றினான்
பொங்கு நன்றியறிந்தது போற்றுவா
ரிங்கிவர்க்கிணை யாவருமில்லையே."

ii. Ottakuter one of the poets who flourished in the twelfth century i.e. 1127 A. D. or so at the court of Rajendra Chola and that of his son Kulotunga Chola II went to Madura to propose Kulatunga Chola I in marriage to the daughter of Varaguna Pandiya who ruled at that time at Madura. Varaguna Pandiya enquired the poet Ottakuter if the Chola king was fit to wed his daughter. Thereupon, Ottakuter improvised the following poem:

ஆதித்தனுக்கு நிகரம்புலியோ வம்மானே
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ வம்மானே
வெற்றிப்புலிக் கொடிக்குமீன் கொடியோவம் [மானே
யூருக்குறந்தை நிகர்கொற்கையோ வம்மானே
யொக்குமோ சோணாட்டைப் பாண்டிநாடம் [மானே.

the meaning being: Can the moon (i.e. the Lunar race) be compared to the sun (i.e. the Solar race) ?

Can the Meenavan (king) boast to be a hero among the heroes?

Can the fish banner be compared to the tiger banner?

Can Korkai (the metropolis of the Pandian) be compared to Urantai (the metropolis of the Cholan) ?

Forthwith Pugazhendi the court-poet of Varaguna Pandian expressed the following impromptu:

திருநெடுமாலவதாரஞ் சிறுபுலியோ வம்மானே
சிவன் முடியிலேறுவதுஞ் செங்கதிரோ வம்மானே
....
பரவை பணிந்ததுஞ்சோழன் பதந்தனையோ வம்மானே
பாண்டியனார் பராக்கிரமம் புகர்வரிதே யம்மானே.

the meaning being: Was the incarnation of the god Vishnu a tiger (the device of the Chola) ?

Is it the sun which Siva wears over the tuft of hair upon the crown of his head ?

Was it at the feet of the Chola king that the sea submitted ? The Pandia King's mightiness is marvellous"

In this connection the following passage from page 36 of the Tamil Plutarch by Simon Casie Chitty will be useful:

"The Rev. Mr. Taylor in the 2nd volume of his Oriental Historical Manuscripts, Appendix D, quotes the following stanza in praise of Prakrama Pandiyan, as the production of the two brothers (Iretteiyer) and the reader will find that we have adopted his translation with a few alterations in order to make it approximate to the original:—

குறுமுனிவன் கொல்லியிலோ தமிழ்ப்பிறந்த தம்மானே
ஒப்பரிய திருவிளையாட் டுறையூரோ வம்மானே
திருநெடுமாலவதாரஞ் சிறுபுலியோ வம்மானே
சிவன் முடிமேலணிவதுஞ் செங்கதிரோ வம்மானே
கரையழிந்த காவிரியோ வுரைதெரிந்த தம்மானே
கடிப்பகைக்கு வேம்போ கடுக்கையோ வம்மானே
பரவைபடிந்ததுஞ் சோழன் பதந்தனிலோ வம்மானே
பராக்கிரம பாண்டியன் புகழைப் பகரெளிதோ வம்மானே.

O Lady ! Was it from the mount Kolli the dwarfish sage (Agastiyar) produced the Tamil language ? (No, from the Pothiya in the Pandiya country).

O Lady ! Did the incomparable sports (of Siva) take place at Ureiur ? (No, at Madura, the metropolis of the Pandiya country).

O Lady ! Was Vishnu ever metamorphosed into a tiger ? (No, into a fish, the device on the banner of the Pandiya kings).

O Lady ! Is it the sun which Siva wears over the tuft of hair upon the crown of his head ? (No, it is moon the progenitor of the Pandiya race).

O Lady ! Was it the bank destroying Kaveri which saw the writing (of Sampanter) ascend up against its stream ? (No, it was Vaigai, the river of Madura).

O Lady ! What is more heroic, the A'tti or Ve garland? (the Veppa, worn by the Pandiya kings, vowing thereby to conquer or to die)

O Lady ! Was it at the feet of the Chola the sea submitted ? (No, it was at the feet of Ugra Pandiyan).

O Lady ! Is it then a light thing to declare the praise of PRAKRAMA PANDIYAN ?

(The Pandya rulers were reduced to the position of chieftains and they ruled in the fifteenth and sixteenth centuries over Tinnevelly from Tenkasi. One Parakra Kulasekhera Pandya ruled from 1543 to 1552, coming to few generations after the great Parakrama Pandiya who built the Tenkasi temple. Nelveli Maran, his brother ruled from 1552 to 1564. (The Tamil Plutarch, p. 19).

The above facts connote that the Pandiya kings belong to the Indu (Lunar) race, that the Chola kings belong to the Solar race, and that Siva wore the moon (the crest of the Pandia king) over his head.

SCHOOLS IN PARAVA VILLAGES.

List of Schools in Bharatha Towns and Villages in the Diocese of Tuticorin

1 St. Aloysius' Girls, High school at Tuticorin
2 St. Francis Xavier's High school at Tuticorin
3 St. Teresa's Boys High school at Vadakankulam
4 St. Joseph's Boys' High school at Manapad
5 Holy Cross Girls' European High school at Tuticorin.
6 St. Mary's Middle school for girls at Manapad
7 St. Thomas Middle school for boys at Virapandiapatnam.
8 Ornellas Middle school for boys at Tuticorin
9 Ornellas Higher Elementary school for girls at Tuticorin
10 Holy Cross Higher Elementary school for girls at Tuticorin
11 Vembar Higher Elementary school for boys
12 ,, ,, ,, ,, girls
13 Vaipar Higher Elementary school for boys & girls
14 Palayakayal Higher Elementary school for boys
15 Punnakayal Higher Elementary school for boys
16 ,, ,, ,, ,, for girls
17 Virapandiapatnam Higher Elementary school for girls
18 Adaikalapuram Higher Elementary school for boys
19 ,, ,, ,, ,, for girls
20 Alantalai Higher Elementary school for boys
21 ,, ,, ,, ,, for girls
22 Udangudi Higher Elementary school for girls & boys
23 Periathalai Higher Elementary school for boys
24 ,, ,, ,, ,, girls
25 Ovari Higher Elementary school for boys
26 ,, ,, ,, ,, girls
27 Idindakarai Higher Elementary school for boys
28 ,, ,, ,, ,, for girls
29 Koottapuli Higher Elementary school for boys & girls
30 Kurumboor Higher Elementary :school for boys & girls
31 Kaliavoor Higher Elementary school for boys & girls
32 Arumuganeri Higher Elementary school for girls & boys
33 Mookoor Elementary School for boys and girls
34 Narippor ,, ,, ,, boys & girls
35 Sippikulam ,, ,, ,, girls & boys
36 Tuticorin, Vadakkoor ,, ,, for girls
37 Tuticorin, Vadakkoor, Elementary school for boys
38 ,, Cathedral ,, ,, for boys
39 ,, ,, ,, for girls
40 ,, Cruzpuram ,, ,, for boys & girls
41 ,, Valakudi ,, ,, for boys & girls
42 Palayakayal Elementary school for girls
43 Serndamangalam ,, ,, for boys & girls
44 Korkai ,, ,, ,, ,,
45 Mukkani ,, ,, ,, ,,
46 Eral ,, ,, ,, ,,
47 Manapad, Holy Ghost ,, ,, ,, ,,
48 Kooduthalai ,, ,, ,, ,,
49 Koottapanai ,, ,, ,, ,,
50 Koothenkuli ,, ,, ,, ,,
51 Perumanal ,, ,, ,, ,,
52 Koottapuli ,, ,, ,, ,,
53 Yeruvadi ,, ,, boys & girls
54 Somanathaperi ,, ,, ,, ,,
55 Seidunganellur ,, ,, ,, ,,
56 Manakarai ,, ,, ,, ,,
57 Karunkulam. Elementary school for boys & girls
58 Srivaikuntam ,, ,, ,, ,,
59 Purayoor ,, ,, ,, ,,
60 Sethuvaithan ,, ,, for boys
61 ,, ,, ,, for boys
62 Panagudi ,, ,, for boys & girls

(1) There are 300 girls of the Bharatha community studyiny in St. Aloys. G. High School Tuticorin.

(2) From the biginning of the above High school, 56 Bharatha girls have appeared for the S. S. L. C. examination & over 90 per cent of them passed.


—:o:—

JATHITHALAVAMORES

FROM THE TIME OF CONVERSION TO CHRISTIANITY

(1935—1938)

1. Senhor - Senhor Don Joam de Cruz
his son
2. " " Don Michael Joam de Cruz
his daughter
3. Senhora - Senhora Dona Maria Margareta de Cruz
her husband
4. Senhor - Senhor Don Louis Estevan de Cruz Peris
his son
5. " " Don Eronimus Louis de Cruz Peris
his son
6. " " Don Michael Eronimus de Cruz Peris
his son
7. " " Don Xavier Michael de Cruz Peris
his son-in-law
8. " " Don Xavier Henry de Cruz Corera
his son
9. " " Don Jose de Cruz Corera
his son--in-law
10. " " Don Estevan de Cruz Poobalarayen
his son-in-law
11. " " Don Gabriel de Cruz Gomez
his son
12. " " Don Soosai Louis de Cruz Gomez
his son
13. " " Don Gabriel Arokiam de Cruz Gomez
his son
14. " " Don Michael Pedru de Cruz Gomez
his son-in-law
15. " " Don Gaspar Antony de Cruz Vaz, Victoria
his son
16. " " Don Gabriel de Cruz Vaz Gomez
his son
17. " " Don Gaspar Antony de Cruz Vaz Corera
his son
18. " " Don Soosai Antony de Cruz Vaz Paldano
his son
19. " " Don Gabriel de Cruz Vaz Paldano
his grandson
20. " " Don Gabriel de Cruz Lazarus Motha Vaz
his son
21. " Don Manuel de Cruz Anathasius Motha Corera



THE RURAL DEMONSTRATION CENTRE. MANGALAGIRI.

பரதர் வசிக்கும் ஊர்களும், உத்தேச ஜனத்தொகையும்

I

Madras :

சென்னை	350

II

Tinnevelly District :

திருநெல்வேலி ஜில்லா

1	Tuticorin	தூத்துக்குடி	11.100
2	Punnaikayal	புன்னைக்காயல்	4.200
3	Manapad	மணப்பாடு	3,600
4	Idinthakarai	இடிந்தகரை	3,000
5	Vembar	வேம்பாறு	2,400
6	Periathalai	பெரியதாழை	2,400
7	Koothanhuli	கூத்தன்குழி	2,400
8	Kuttapuli	கூட்டப்புளி	2,060
9	Ovari	உவரி	1,520
10	Koottapanai	கூட்டப்பனை	1,800
11	Pazhayakayal	பழையகாயல்	1,680
12	Alantalai	ஆலந்தலை	1,800
13	Vaipar	வைப்பாறு	1,800
14	Veerapandiyanpatnam	வீ.-பா. பட்டணம்	1,440
15	Pragasapuram	பிரகாசபுரம்	1.440
16	Eral	ஏரல்	960
17	Palamcottah	பாளையங்கோட்டை	900
18	Kuduthalai	கூடுதாழை	840
29	Veervanallur	வீரவநல்லூர்	780
20	Kavalkinaru	காவல்கிணறு	720
21	Sathankulam	சாத்தான்குளம்	600
22	Anaikarai	அணைக்கரை	480
23	Adaikalapuram	அடைக்கலாபுரம்	420
24	Kallikulam	கள்ளிகுளம்	360
25	Kuruvithurai	குருவித்துறை	360
26	Kulasekaranpatnam	குலசேகரன்பட்டணம்	240
27	Udankudi	உடன்குடி	240
28	Tharuvaikulam	தருவைக்குளம்	240
29	Tenkasi	தென்காசி	240
30	Kalakadu	களக்காடு	240
31	Panakudi	பணகுடி	180
32	Pannirkulam	பன்னீர்க்குளம்	180
33	Puraiyoor	புரையூர்	180
34	Sonavapuri	சோனவபுரி	180
35	Srivaiguntam	ஸ்ரீவைகுண்டம்	180
36	Kurumbur	குரும்பூர்	180
37	Senthamangalam	சேந்தமங்கலம்	150
38	Vadakangulam	வடக்கன்குளம்	144
39	Perumanal	பெருமணல்	480
40	Eruvadi	ஏறுவாடி	120
41	Mukkani, Kaliyavoor & other small villages	முக்காணி, கலியாவூர் மற்றும்சிறு கிராமங்கள்	300
			52,884

III

Madura, Ramnad & Trichinopoly Districts :

மதுரை, இராமனுதபுரம், திருச்சினுப்பள்ளி ஜில்லாக்கள்

1	Kilakarai & Ramnad	கீழக்கரை, ராமனுதபுரம்	690
2	Kamuthi	கமுதி	420
3	Madura	மதுரை	360
4	Pamban	பாம்பன்	330
5	Iruthayakovil	இருதயகோயில்	180
6	Smaller Villages	சிறு கிராமங்கள்	180
7	Trichnopoly Dt.	திருச்சினுப்பள்ளி ஜில்லா	90
			2,250

British India Total	தென்னிந்தியா மொத்த ஜனத்தொகை	55,134

VI

Travancore :

திருவிதாங்கூர்

1	Cabe Camorin	கன்னியாகுமரி	3,000
2	Kovalam	கோவளம்	1,998
3	Pozhikarai	பொழிக்கரை	1,194
4	Rajakkalmangalam	ராஜாக்கள்மங்கலம்	1,180
5	Puthenthurai	புத்தன்துறை	1,072
6	Pullathoppu & Muttam	பிள்ளைத்தோப்பு, முட்டம்	912
7	Kottar	கோட்டாறு	713
8	Nagercoil, Krishnancoil and Vadasery	நாகர்கோயில், கிருஷ்ணன்கோயில், வடசேரி	422
9	Mudhakarai & Sinnakadai	மூதாக்கரை, சின்னக்கடை	420
10	Chattampillayoor & Poonthurai	சட்டம்பிள்ளையூர், பூந்துறை	418
11	Aloor	ஆழூர்	360
12	Kannanore	கன்னனூர்	360
13	Periakadoo	பெரியகாடு	312
14	Trivandrum	திருவனந்தபுரம்	272
15	Nullivilai	நுள்ளிவிளை	240
16	Alleppey	ஆலப்புழை	240
17	Marungoor	மருங்கூர்	210
18	Kalakadoo	களக்காடு	161
19	Quilon	கொல்லம்	121
20	Elankadai	இளங்கடை	120
21	Yettamadei	எட்டாமடை	92
22	Myiladi	மைலாடி	9[illegible]
23	Thengampudur	தெங்கம்புதூர்	4[illegible]
24	Thittivilai	திட்டிவிளை	3[illegible]
25	Asaripallam	ஆசாரிபள்ளம்	2[illegible]
26	Thamaraikulam	தாமரைக்குளம்	1[illegible]

27	Changanachery	சங்கனச்சேரி	12
28	Anjengo	அஞ்சுதெங்கு	8
29	Kottayam	கோட்டயம்	7
	Travancore Total திருவாங்கூர் ஜனத்தொகை		12,874

V

CEYLON : இலங்கை

a.	**Colombo City :**	கொழும்பு பட்டணம்	4,200
b.	**Negombo District :**	நீர்கொழும்பு ஜில்லா	
	Negombo	நீர்கொழும்பு	3,000
	Perriyamulla	பெரியமுல்லை	
	Ettukal &	எட்டுக்கால்	
	Karavatotum	கரவைத்தோட்டம்	
	Pallansena &	பல்லன்சேனை	1,800
	Duwena	துவேனை	
	Karukkupanai	கருக்குப்பனை	1,800
	Kottapiti	கோட்டாப்பிட்டி	
	Poonapiti	பூனைப்பிட்டி	
	Dutch Bay	வெள்ளைக்காரன்குடா	960
	Bolawatte	பொலவத்தை	240
c.	**Mannar District :**	மன்னார் ஜில்லா	
	Mannar	மன்னார்	288
	Talaimannar	தலைமன்னார்	300
	Pesalai	பேசாலை	1,020
	Vankalai	வங்காலை	1,080
	Thalvupadu	தாழ்வுபாடு	660
	Aripu	அரிப்பு	336
	Parapangkandal	பரப்பாங்கண்டல்	60
	Kovankulam	கோவங்குளம்	36
	Mullikulam (Marichikadai)	முள்ளிகுளம் (மரிச்சிக்கடை)	60
	Other parts of Ceylon	சிலோன் மற்ற பாகங்களில்	600
	Ceylon Total	சிலோன் ஜனத்தொகை	16,440

SUMMARY மொத்தம்

South British India தென்னிந்தியா	55,134
Travancore State திருவிதாங்கூர் இராஜ்யம்	12,874
Ceylon இலங்கை	70,857
Total Population மொத்த ஜனத்தொகை	84,098

பரதர் மாதாவின் தேர்வடப் பாமாலை

தூத்துக்குடி, பண்டித நபீன் வர்மா

வெண்பா

வானகத்தார் வையகத்தார் வாழ்த்தும் பனிமயமே
கானகத்தார் செந்தேனே கண்மணியே—பானிலவைத்
தாட்கொண்ட தாயே தமியர் குறைநீக்கி
ஆட்கொண்டு செய்வாய் அருள்.

பல்லவி

1

மரியே மாதாவே மரியே மாதாவே
மரியே மாதாவே மரியே மாதாவே

அனுபல்லவி

2

தேவாதி தேவனைத் தந்த மாதாவே
தினகரன்றனைமடி யுடுத்த மாதாவே
பாவாணர் போற்றியே பணியும் மாதாவே
பனிமய மெனவானோர் வணங்கும் மாதாவே.

3

அரதன முடிபுனை அரசர் மூவாறு
அருங்குலத் தினிலவ தரித்த மாதாவே
விரதமார் முனிவர் கன்னியர் தவமே
விளங்கிட அன்னவர் இறைஞ்சும் மாதாவே.

4

வானிடை தவழும் பன்னிரு மீனை
வளர்சுடர் மகுடமாய் வேய்ந்த மாதாவே
கானிடை கடலிடை வருந்துவர் பாது
காவலா யவரிடர் தீர்க்கும் மாதாவே.

5

அழிந்திடா உடலமர் சவியேர் முனிவன்
அருளினாற் பரதர்க்குக் கிடைத்த மாதாவே
இழிந்தமா அலகையின் தலைபொடி படவே
எழில்திரு வடியால் தகர்த்த மாதாவே.

6

உரோமர் கொண்டாடிடும் ரோமர் மாதாவே
உலகிருள் நீக்கிய உலக மாதாவே
சரோருகத் தூய்கழல் சந்திரன் மிதித்த
சந்திர குலத்தவர் போற்றும் மாதாவே.

7

பாரினில் மாந்தர் மகிழ்ந்திடப் புதுமை
பற்பல ஆற்றிடும் புதுமை மாதாவே
சீர்வளர் புதுமையால் மகர்பல பெயரைச்
சிறப்புறச் சூட்டியே வணங்கும் மாதாவே.

8

அடல்வினை டச்சியர் கொடுமையால் கொற்கை
ஆண்டுழ ரேழ்வாழ் கோற்கை, மாதாவே
கடல்வளை எழுதுறை அடைக்கலத் தாயெனக
கலைவலோர் வாழ்த்தும் பரதர் மாதாவே

9

மாதாவே யுனைத்தென் பரதர்மா தாவென
மைந்தர்யா மழைக்க மறுப்பாயோ தாயே
நீதாயெம் முன்னவர் காத்தநீள் சரிதை
நிகழ்த்திட வல்லுனர் யாவர் மாதாவே.

10

அரசருங் குடிகளும் அனைவரு மொன்றாய்
ஆதரித் தாட்கொள்ளும் ஆண்டவள் நீயே
வரமருள், வாய்தமிழ், வளநாடு செழிக்க
வழுவிலாக் குமரியே வானோர் மாதாவே.

11

வடசிந்து நதிவெளி வாழ்ந்த பரவர்கோன்
வழிவரு பாண்டிய பதிவாழத் தயை செய்
இடமமர் செழுந்தமிழ் அரசியல் மொழியாய்
இகத்தினில் நிலைபெறத் தயைசெய் மாதாவே.

12

ஆசியர் மறையெம் மெய்ம்மறை யதனை
ஐரோப் பியர்மறை யென்றல்மா வழுவாம்
தேசிகர் சூழ்ந்த திருமறை நாவலந்
தீவினிற் பரவ அருள்செய் மாதாவே.

சிந்தனைச் சிதர்

தா. அ. ஜெயசீலன் கர்வாலோ, பி.ஏ.

இயற்கையும் செயற்கையும்

இயற்கையின் ஆணைக்குட்பட்டு உலகம் நடக்கின்றது. அவ்வியற்கையின் வழியே யாவும் செல்கின்றன. இயற்கையை ஆதாரமாகக் கொண்டே நம் தமிழ்ப் புலவர்கள் நிலப்பரப்பை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்து வகையாகப் பிரித்தனர். கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தல் ஆகும். அங்கு வாழும் மக்கள் பரதர், பரத்தியர், நுளையர், நுளைச்சியர் எனப்படுவர். இவ்வாறு இயற்கையிலேயே தோன்றியவர் இப்பரதர். இவர்களின் தொழில் கடல்படு திரவியம் தேடுதல்; இவர்களின் வாழ்க்கை இயற்கையோடியைந்த வாழ்க்கை; இவர்களின் அறிவும் திறனும் இயற்கைக்கு முரண்படாதவை. இவ்வாறு இயற்கை வழி நின்று இயற்கையின் இன்பம் நுகர்ந்த இப்பரத குல பெருமக்க ளெங்கே, இன்று இயற்கைப் பொலி விழந்து, செயற்கையில் மூழ்கி, இன்ப வாழ்க்கை யிழந்து, பலமிழந்து, வீரமிழந்து, ஒற்றுமை யிழந்து, உருக் குலைந்து, ஒடுங்கி நிற்கும் ஒதுக்கப்பட்ட இன்றைய பரத குல சமுதாயம் எங்கே? எத்துணைத் தாழ்வுற்றோம், எத்துணைவீழ்வுற்றோம்! ஏனென்று நீங்களேதீர்ப்புச் சொல்லுங்கள்

சரித்திர விசித்திரம்

என்று உலகம் படைக்கப்பட்டதோ அன்று மனிதனும் படைக்கப்பட்டான்; என்று மனிதன் தோன்றினனோ அன்றே பரதனும் தோன்றினன். வெறும் சமூக உணர்ச்சியால் உந்தப்பட்டு நான் இம்மொழி கூறவில்லை, உண்மை உரைக்கின்றேன். தொன்மை வாய்ந்த எகிப்து, பாபிலோன், கிரேக்க நாகரீகங்களோடு சிந்து நதி வெளி நாகரீகமும் ஒன்றாகும். இற்றைக்குச் சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, ஆரியப் படையெடுப்பிற்கு முன்னரே தோன்றியது இந்நாகரீகம். சமீப காலங்களில் கல்வெட்டு ஆராய்ச்சிகள் செய்ததின் பயனாக, மொஹெஞ்சதாரோ, ஹாரப்பா என்ற இடங்களில் திராவிட நாகரீகம் பரவியிருந்ததெனவும், இத்திராவிட நாகரீகத்தில் முதன்மை பெற்றவர் மீனவர் அல்லது பரவர் எனவும் சேசுசபை சங். ஹெராஸ் சுவாமிகள் முடிவு கட்டியிருக்கின்றனர். ஆடுமாடுகளை மேய்ப்பதற்குக் கோல்பிடித்த ஆரியர் கரம் அரசாளும் செங்கோலைப் பிடிக்கவும் திராவிடர் தென்னாட்டில் குடிபுகுந்து, தமிழகத்தில் சேர, சோழ, பாண்டியரென்ற தனி ராஜ்யங்களை நிறுவினர். மீனவர் அல்லது பரதர் எனப்பட்டவரே பாராளும் பாண்டியரெனத் தென்னாட்டில் அழைக்கப்பட்டனர். அன்னார் இருமீன் உருவங்களைத் தம் இலச்சினையாகக் கொண்டனர். இது சரித்திரம், இவ்வாறு தொன்மை வாய்ந்த அரச பரம்பரையைச் சேர்ந்த இம்மக்கள் இன்று தாழ்த்தப்பட்ட இனத்தவராய், ஒடுக்கப்பட்ட மக்களாய், சிறு பான்மைக் கூட்டத்தவராய், தம் பண்டைப் பெருமையை இழந்து, பாராளும் திறமையிழந்து, பஞ்சைகளிலும் பஞ்சைகளாய் உழல்வதைப் பார்க்குங்கால் இது சரித்திரவிசித்திரமென்றே தோன்றுகின்றது.

சத்திய மறைக்கு முன்னும் பின்னும்

நம்மில் ஒவ்வொருவரும் சரித்திரக் கண்கொண்டு பரந்த நோக்கமுடன், மனப்பேதமின்றி இன்று நாமிருக்கும் நிலையை உன்னிப் பார்க்கவேண்டும். ஒரு நாட்டினரின் நாகரீகத்தையோ, பாரம்பரையையோ சரித்திரச் சான்று இருந்தால்மட்டும் நாம் ஒப்புக்கொள்ளுகின்றோம். இன்று நம்மிடையே காணப்படும் சரித்திரச் சான்றுகள் நாம் சத்திய மறையைத் தழுவிய பின்னரே ஏற்பட்டனவாம். அதற்கு முன்னர் நாம் எப்படி யிருந்தோம், இப்பாரத சரித்திரத்தில் என்ன இடம் பெற்றோம் என்பதை சரித்திர சாட்சியாய் எடுத்துக் கூறும் எவ்வகை நூலும் நம்மிடையே கிடையாது. சிந்து நதி வெளி நாகரீகத்தைப் பற்றி அறிந்தபின்னரே, நம் குலத்தவர் இப்பாரத நாட்டின் பழங்குடிகளென்றும். அவர்கள் அரசாளும் இனத்தவரென்றும் சரித்திர பூர்வமாய் அறிகின்றோம். ஆரியரால் தெற்கே விரட்டப்பட்ட இப்பழங்குடி மக்கள் பண்டை நாகரீகமுடையவர்கள், சரித்திர, ஞானமுடையவர்கள், வாணிபம், கல்வி இவைகளில் மேம்பாடுடையவர்கள். இவர்களின் சந்ததிகளாகிய இன்றைய பரதகுல மக்கள் ஏன் தம் பழம் பெருமையையும், புராதன நாகரீகத்தையும் உணராத, உணர்ச்சி யற்றவர்மக்களாகிவிட்டனர்? நம் மூதாதைகள் ஏட்டிலோ அல்லது கல் வெட்டிலோ நம் சரித்திரத்தைப் பொறிக்காது விட்டாலும், வழிவழிச் சந்ததிகளுக்காவது தம் பரம்பரை மேம்பாட்டைக் கூறுதொழிந்து விட்டார்களா? அவ்வாறு கூறிவந்திருந்தால், இன்று அது நம்மிடை மறைந்த காரணமும் என்ன? நாம் இன்று நம்மைப் பற்றி அறிவது, மதம் மாற்றப்பட்டோம்; சத்திய வழி சேர்ந்தோம். அதன் பின்னரே நமக்கு உண்மை ஞானமும், அறிவும் ஏற்பட்டன. நாகரீகமும் மேம்பாடும் ஏற்பட்டன என்பதேயாகும். நம் பண்டைச் சரித்திரத்தை மறக்கும் வழி புகுத்தப்பட்டோம். நம் புராதன நாகரீகத்தையும், வாணிகத் திறமையையும் மறக்கும்படி செய்யப்பட்டோம். நம் கருத்துக்களையும், சிந்தனையையும் வேறு வழிகளில் செலுத்துமாறு உபதேசிக்கப்பட்டோம்.

அதன்பின்,

“ வலிமையற்ற தோளுடையராய் எளிமையுற்ற [மரபினராய்
பொதிவிலா முகத்தினராய், பொறியிழந்த [விழியினராய்
ஒலியிழந்த குரலினராய், ஒளியிழந்த மேனியராய்
கிலிபிடித்த நெஞ்சினராய்க் கீழ்மையை [வேண்டியவராய்

ஆனோம். இக்கேட்டிற்குக் காரணமென்ன? சந்திர குலச் சமுதாயமே நீயே இதற்குத் தீர்ப்புச் சொல்.

பரதகுலச் சமுதாயமும் பாரத தேசீயமும்

பரதன் ஆண்ட நாடு பாரத நாடு. இப்பரதனுக்கும், சந்திரகுலப் பரதருக்கும் என்ன தொடர்பு உண்டு என்

வேம்பார்

"ஜே. க."

இது திருநெல்வேலி ஜில்லா கோவில்பட்டித் தாலுகா ...த்திகுளம் சப்-டிவிஷனில் மேல்மந்தை ஜமீனைச்சார்ந்த ...டற்கரைப் பட்டினம். இதன் ஜனத்தொகை சுமார் ... இதில் பரதர் ஜனத்தொகை சுமார் 2000.

...யர்க் காரணம்:

வேம்பன் என்பது பாண்டிய ராஜனைக் குறிக்கும் பத...ம். வேம்பன் என்பதிலிருந்து வேம்பார் என்று மருவி ...தெனப் பெரியோர் கூறுவர். இவ்வூருக்கு நிம்ப நகர் ...ம் மற்றொரு பெயருமுள்ளது. பாண்டியனை நிம்பத்தா...ன் என அழைப்பதுண்டு. இதிலிருந்து நிம்ப நகர் ...ம் பெயர் தழுவி வந்திருக்கலாம். வேம்பார் எனும் ... கசந்த பூமி என்று பொருள் படுகிறது எனக் கருதி ... சிலர் அதை வேம்பாறு என மாற்றினர். அஃது சரி...று.

...ழமை:

15-ம் நூற்றாண்டில் ஜனநெருக்கடியான பெரிய ...ருக்களைக் கொண்டதாகவும் வடமேற்கில் அஞ்சாம் புளி...லிருந்து தெற்கில் யானை கட்டும் பப்பரப்புளிவரை மூன்று மைலும், முதலியார் மடத்தையொட்டிய சேதுபாதையிலிருக்கும் ஐயனார் கோவிலிலிருந்து சமுத்திரக்கரைவரை மூன்றரை மைல் கிழக்கேயும் பரந்திருந்த பட்டினம். இவ்வெல்லைக்குள் எதகுத்தோண்டினாலும் கிணறு, கிணற்றுறைகள், வாய்க்கால், வரப்பு, உடைந்ததாழி முதலிய பழைய சின்னங்கள் புலப்படும்.

ஆதிக் குடிகள் பரதரே என்றாலும் நெடுங்காலமாக இதர வகுப்பினர் இங்கு வாழ்ந்து வந்திருக்கின்றனர். "சப்பமடம்" எனும் சுந்தரத்தோழா பிள்ளைசத்திரத்திற்குத் தெற்கே மாலைக்கோவிலையடுத்து வாழ்ந்த பிராமணக் குடும்பங்களின் சந்ததியார் பின்மலையாளத்திலும் நாஞ்சி நாட்டிலும் குடிபுகுந்தகாலை இக்குவந்து தாம் வழிபட்ட சிலைகளை எடுத்துச் சென்றனர் என்பதும் அச்சிலைகளில் ஒன்று விளாத்திகுளம் மீனாக்ஷிஅம்மன் கோவிலில் இருக்கிறது என்பதும் பரம்பரைவழக்கு. தவிரவும் சாத்தூர், சிவகாசி, விருதுநகர் எழாயிரம் பண்ணை முதலிய ஊர்களிலிருந்து வருடந்தோறும் நூற்றுக்கணக்கான வண்டிகளில் இந்து நாடார் ஆயிரமாயிரமாய் வந்து தம்முன்னோர் வழிபட்ட கோவிலில் தெய்வ வழிபாடு செய்து திரும்பும் காட்சி அவர்கள் முன்னோர்கள் இங்கு வாழ்ந்தனர் என்பதை வலியுறுத்தும்.

பரவர் கிறிஸ்து மறையைத் தழுவியபின் அவர்கள் கிராமநிர்வாகம் கிராமத்தலைவர்களாகிய அடைப்பன்மார் வசமேயிருந்தது. கிராம முனிசீப், வசூல் அம்பலம் முதலியோரின் அதிகாரங்களை இவர்களே வகித்துவந்தார்கள். பலவித காரணங்களால் இவ்வதிகாரங்கள் காலவளவில் பாதிக்கப்பட்டுப் பிறர் கை சேர்ந்ததற்கு முக்கிய காரணம் குலத்தொழிலைக் கைவிட்டதும், உட்பகையும், ஒற்றுமைக் குறைவுமேயாகும். போர்த்துக்கீசியரும் உலாந்தக்காரரும் இந்நகரைத் தங்கள் ஏற்றுமதி இறக்குமதித் துறைமுகமாகக் கொண்டிருந்தனர் என்பதற்கு அவர்களால் கட்டப்பட்டு சமீபகாலத்தில் அழிந்துபோன வியாபாரக் கிடங்குகளும், கிட்டங்கிகளும் தக்க சான்றாகும்.

பெருமக்கள்:

கல்வி, கவிதை, சுகாதாரம் முதலிய துறைகளில் இந்நகரின் மேம்பாடு உலகறிந்தவிஷயம். மதுரைச் செந்தமிழ்ச் சித்திரக்கவியாக விளங்கி ராமனாதபுரம் சேதுபதியால் கௌரவிக்கப்பட்டவரும், மக்களின் மனதில் உயரிய இடம் வகித்தவருமான காலஞ்சென்ற ஸ்ரீ முத்தையா உருதூரீகு அவர்களின் கல்வி-கவிதைத்திறன் அன்னார் இயற்றிய பல்வகைச் செய்யுட்கள் நாடகங்கள் முதலியவற்றின்மூலம் நன்கு அறியக்கிடக்கின்றது. எழுத்தாணியும் ஓலைச்சுவடுங் கொண்டு நாட்டுக் கோட்டைச் செட்டியார் வீட்டில் கணக்கப்பிள்ளையாயிருந்து, பின் குஜராத்தி மொழி பயின்று கொழும்பில் மோனாசேட் கடையில் காரியஸ்தராகி, அப்பால் வியாபாரம் ஆரம்பித்துச் சொற்பகாலத்தில் ஷெல்ட்ரான்ஸ் போர்ட் கம்பெனியின் ஏஜன்டாகிப் பரதகுலத்தின் அணிகலமாக விளங்கித் தம் புகழுடம்பு அழியாவண்ணம் இலங்

...ப் புராண கர்த்தாக்கள் விரிவாகக் கூறுவார்கள். அவ்...ற சந்திரகுலப் பரதன் வழித் தோன்றல்களாகிய நாம் ...த்துணைச் சுதந்திர தாகம் கொண்டோம்? நெஞ்சில் ...வைத்துக் கூறுங்கள். நம் குலத் தேசியத் தலைவர்களாய் ...காங்கு இரண்டொருவர் தோன்றினர். அவர்கள் முற்...ம் சுதந்திர உணர்ச்சியுள்ளவர்களாய், தேசியப் பற்றுத...டைய தியாகிகளாய்த் திகழவிடாதபடி, குறுகிய மனப்...ன்மையுடைய குருட்டுப் புத்தியுடைய, ஆங்கிலப் பித்...றிய உலக ஞானம் தெரியாத ஓர் கூட்டம் தடுத்து ...த்தது. எப்படியோ சுதந்திரம் பெற்றுவிட்டோம். இனி...னும் விழிப்புடன் நம் காரியங்களில் நாமே சிரத்தை...டையோராய், பத்தாம் பசலிகளின் யோசனையைக் கேட்...தவராய், உண்மைத் தேச பக்தர்களாய் விளங்குவோமாக!

வெற்றி கொண்ட கையினராய்
விநய நின்ற நாவினராய்
முற்றி நின்ற வடிவினராய்
முழுமை சேர் முகத்தினராய்
கற்றலென்று பொய்க் இலராய்
கருதிய தியற்று வராய்
ஒற்றுமைக்குள் உய்யவே—நாடெல்லாம்
ஒருபெருஞ் செயல் செய்வோராய்
...ம் விளங்குவோமாக!

வாழ்க பரதகுலச் சமுதாயம்!

கும்படி இவ்வூர் இஸ்பிரீத்துசாந்து சருவேசுரன் தேவாலயம் கட்டுவதற்குப் பெருந்தொகை கொடுத்துதவிப் பொதுமக்களது உற்சாகத்தின் துணைகொண்டு எடுத்த கருமத்தைச் சாதித்த கர்ம வீரர் காலஞ்சென்ற ஸ்ரீ ச. அ. அய்யாத்தம்பித்தமேல் அவர்களை இவ்வூர் என்றும் மறத்தலரிது.

ஏககாலத்தில் கிராம முனிசீப்பாகவும், போஸ்ட் மாஸ்டராகவும், கோவில் பிள்ளையாகவும், செபஸ்தியார் ஆண் பாடசாலை மானேஜர் ஹெட்மாஸ்டராகவும் விளங்காநின்று சிலாகிக்கத்தக்க ரீதியில் சமூக சேவையாற்றிய ஸ்ரீ குருஸ் மிக்கேல் விக்டோரியா அவர்களின் உயர்ந்த சேவையை மறப்பின், அது நிம்பநகர் மக்களின் சாபக்கேடு என்றே கூறவேண்டும்.

எடின்பரோ சர்வ கலாசாலையில் படித்துப் பட்டம் பெற்றுக் சர்க்கார் 'வெற்றனரி' சர்ஜனைச் சென்னையில் பெரும் பதவி வகித்துக் காலஞ்சென்ற ஸ்ரீ ராஜரத்தினம் ரொதுரிகு அவர்களின் அகால மரணம் எமதூருக்கு ஏற்பட்ட நஷ்டம் என்பதில் தடையில்லை.

இன்றைய நிலை :

இலங்கை யாழ்பாணம் முதலிய பகுதிகளில் பெரும்பான்மையான மக்கள் தொழில் செய்கின்றனர் உள்ளூரில் தொழில் செய்வோர் மிக மிகக் குறைவு. குறிப்பிட்ட சில தனவந்தரைத் தவிர அவ்வூரில் பெரும்பான்மையோர் மத்தியதர வாழ்க்கையுடையவர்கள். மக்களின் ஆசாரம், பேச்சு நாகரீகம், சுத்தம் முதலியவையே அவர்களின் பணச் செல்வாக்கைவிடப பெருஞ்செல்வாக்காக அமைந்த அணிகலன்கள் என்னலாம் பெயருக்கேற்ப ஊரெங்கும் வீதிகளில் வேப்ப மரங்கள் செறிந்து நிற்கக்காணலாம் முற்பக்கத்தில் திண்ணை தாழ்வாரம் அமையபெற்றுச் சாணக் 'கோலந்தாங்கித் திருமகளுக்கும் கலைமகளுக்கும் உறைவிடமாக விளங்கும் வீடுகளைப் பார்த்தல் கண்கொளாக் காட்சியாக விருக்கும்.

ஆண்டவனைத் தொழுவதற்குப் பிரமாண்டமான ஒரு ஆலயமும் ஆண் பெண் மக்கள் கல்விபயில இரு உயர்தர எலமெண்டரி பாடசாலைகளும், கன்னியர் வாழ மனையொன்றும், பங்குக் குரு வாசகங்செய்ய அழகிய ஒரு பங்களாவும் அழகிய தோரணையில் இங்குக் காட்சியளிக்கக் காணலாம்.

எம்மவரில் 5 குருக்களும், ஒரு துறவியும், பன்னிரண்டு கன்னியரும் ஆண்டவரின் திராட்சைத் தோட்டத்தில் உழைக்கின்றனர். பலர் பட்டதாரிகளாகவும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாகவும் விளங்குகின்றனர்.

முடிவுரை :

இவ்வூருக்கு இக்கால் அவசியமானவை ஓர் உயர்தரப் பள்ளி, தந்தியாபீஸ், ஆஸ்பத்திரி, பிரயாணவசதிக்கான பஸ் மார்க்கம் ஆகியவையாம். சுமார் 25 வருடங்களுக்கு முன் இருந்ததைவிட மக்களின் பொருளாதார நிலை மிகவும் உயர்ந்திருக்கின்றது. அன்று எத்தனையோ பிரமாண்டமான, தம் சக்திக்கு மீறிய காரியங்களைச் சாதித்த மக்கள்—அறிவும் ஆற்றலும் ஒருங்கே அமைந்த மக்கள்—இன்று இக் குறைகளை நிவர்த்திக்க இயலாதிருப்பதன் காரணம் என்ன? ஒற்றுமைக்குறைவேயன்றோ? 'ஒற்றுமையேபலம்'—'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு' —என்பதை நிம்பநகர் மக்கள் உணர்ந்து ஒன்றுபடுவாராயின், அன்னார் சாதிக்க முடியாத காரியமும் உளதோ!



மணவை ஸ்ரீ ஏசா டயஸ் அவர்கள்

(வந். தூத்துக்குடி மேற்றிராணி ஆண்டவரவ[rgb]
களின் புகழுரை)

1941-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 2-ம் தே... தமது 63-ம் பிராயத்தில் பாக்கியமாய்ப் பரலோக பி... தியானார் ஏசா டயஸ்.

இவருடைய ஜீவியம் சாதாரணமான ஜீவி... ஆனால், இவருடைய ஜீவியத்தின் முக்கியமான இ... சணம் என்னவென்றால்—செல்வத்தில் அகந்தை கொ... வரல்ல, தரித்திரத்தில் மனமடிந்தவரல்ல, இ... திலும் துன்பத்திலும், சுகத்திலும் சுகவீனத்திலும், ... மையிலும் சிறுமையிலும் சதா தேவசித்தத்துக்கு அ... நடந்தவர்.

இவருடைய பெருந்தன்மையும் உதாரகுணமும் ... புந்தரமன்று.

இந்தியாவிலோ, இலங்கையிலோ ஐந்து மக்களை ... ஊழியத்துக்கென்று சந்தோஷத்துடன் அர்ப்பண... பெற்றோர்கள் வெகு சொற்பப் பேர். இதற்கு மாறா... கள் பிள்ளைகளைத் தேவ ஊழியத்துக்குப் போகாதப... கிற பெற்றோர்கள் அனந்தம் பேர்.

பெற்றோர்களுக்கு ஓர் மேல்வரிச்சட்டம் தி... டயஸ். அவருடைய குமாரன் ஒருவர் குருப்... பெற்று தூத்துக்குடி மேற்றிராசனத்தில் திருத்தொ... றிவருகிறார். இருவர் இயேசு சபையில் சேர்ந்த... மாணவர்களாய்த் திகழ்கிறார்கள். ஒரு பெண்மணி ... வியாகுலமாதா சபையிலும். மற்றொரு பெண்மணி ... களின் சிறிய சகோதரிகள் சபையிலும் சேர்ந்திரு... கள்.

ஆண்டவருடைய நாமத்தினால் ஒரு செம்பு ... தண்ணீர் கொடுக்கிறவர்களுக்கு நித்திய சம்பாவனை ... டென்றால், ஐந்து மக்களைப் பலியாகக் கொடுத்த ... னுக்கு மோக்ஷத்தில் எத்தகைய மகத்தான ச... யிருக்கவேண்டும்!

" ஆண்டவரிடம் மரிக்கிறவர்கள் பாக்கிய... இது முதல் அவர்கள் வேலைமுடிந்து இளைப்பா...

"அவர்களுடைய கிரியைகள் அவர்களோடு ... தொடர்ந்துபோகும்."




…ழக்கரை
ஸ்ரீ. ஜோசப்
…டையாஸ் குமாரர் -
…ஸ்டம்ஸ் இன்ஸ்
…பெக்டராயிருந்த -
ஸ்ரீ. விக்டர்
டையாஸ்.



சங்கீதக்கலையில் ஆர்வங்கொண்டு பரதகுலத்த வரைகொண்டு பலஊர்களில் நாடகங்கள் நடத்திய ஸ்ரீ. பிச்சை கோமஸ்.



ஸ்ரீ மிக்கேல் பர்னாந்து
பரி. பனிமய மாதா
கோவில் உபதேசியா
ராக 1918 முதல்
21 வருட காலமாக
இருந்திருக்கிறார்.
இவர் 5—1—39ல்
காலமானார்,




கொழும்பில் நிறுவப்பட்டிருக்கும் கன்னியாகுமரி பரத ஐக்கிய சங்கம்.

பரதகுல சபைகளும், சங்கங்களும்

1. கொழும்பு பரதகுல சங்கம் (ஸ்தாபகம்: 5-8-1908)
2. பரத மகாஜன சங்கம் (ஸ்தாபகம்: 1920)
3. உதயதாரகைச் சங்கம், வேம்பாறு (ஸ்தாபகம்: 17-5-1925)
4. கன்னியாகுமரி பரத ஐக்கிய சங்கம், கொழும்பு
5. உவரி பரதபரிபாலன சங்கம், கொழும்பு (ஸ்தாபகம்: 1938)
6. மரியாள் பக்தமண்டலம், கொழும்பு
7. அர்ச்: அந்தோனியார் பரதகுல சங்கம், கொழும்பு (ஸ்தாபகம்: 1635)
8. பரதா ஸ்போர்ட்ஸ் கிளப், கொழும்பு
9. புன்னைக்காயல் அபிவிருத்தி சங்கம், கொழும்பு (ஸ்தாபகம்: 1917)
10. புன்னைக்காயல் கத்தோலிக்க சுத்த வீரர் சங்கம், கொழும்பு (ஸ்தாபகம்: 1938)
11. வைப்பாறு பரத ஐக்கிய சங்கம், கொழும்பு (ஸ்தாபகம்: 1934)
12. இடிந்தகரை பரதகுல ஐக்ய சங்கம், கொழும்பு
13. பரதகுல சங்கம், நீர்கொழும்பு
14. பரதகுல சங்கம், தூவாணை
15. பரதகுல சங்கம், பேசாலை
16. பரத ஐக்கிய சங்கம், மாத்தாளை (ஸ்தாபகம்: 1928)
17. பரதகுல சங்கம், நூரெலியா (ஸ்தாபகம்: 1938)
18. பரதகுல ஐக்கிய சங்கம், கல்துறை
19. மணப்பாடு புஸ்தகசாலை, மணப்பாடு (ஸ்தாபகம்: 1897)
20. மணப்பாடு ஸ்போட்ஸ் கிளப், மணப்பாடு (ஸ்தாபகம்: 1897)
21. அர்ச். யாகப்பர் கோவில் மாணவர் சங்கம், மணப்பாடு (ஸ்தாபகம்: 1920)
22. இஸ்பிரீத்துசாந்து சர்வேஸ்பரன் கோவில் பழைய மாணவர் சங்கம், மணப்பாடு (ஸ்தாபகம்: 1929)
23. அர்ச். சவேரியபர் ஐக்கியசபா, பெரியதாழை (ஸ்தாபகம்: 1922)
24. சஞ் சூசையின் சமாதான சேனை, கூட்டப்புளி (ஸ்தாபகம்: 1936)
25. அர்ச். சவேரியார் வாசகசாலை, ஆலந்தலை
26. பழைய மாணவர் சங்கம், வீரபாண்டியன் பட்டணம் (ஸ்தாபகம்: 1930)
27. பரத யுனைற்றெற் கிளப், தூத்துக்குடி (ஸ்தாபகம்: 1918)
28. அர்ச். சவேரியார் ஜுபிலி ரீடிங்ரூம், பழையகாயல் (ஸ்தாபகம்: 3-12-1906)
29. பரத அபிவிருத்தி சங்கம், கோவளம் (ஸ்தாபகம்: 1937)
30. பரதா ஹோம், தூத்துக்குடி
31. பரதாஹோம், பாளையங்கோட்டை
32. பரத ஐக்கிய சங்கம், சென்னை

குறிப்பு:—இதர சங்கங்கள் பெயர் நமக்கு வந்து சேரவில்லை.

பரதர்மாதா வென்னும் பரிசுத்த பனிமய மாதா பேரி



இன்ப கவிராயர்
மகா-ள-ஸ்ரீ M. X. ஹென்றி லேயோன் அவர்கள்
4-8-1908-ல் பாடிய

பதினுன்று சீரிரட்டை ஆசிரிய விருத்தம்.

வானூடுலாவு மோரீராறுமீனைகின்
மகுடமெனவே வனைந்து
வையஞ்சிறக்கவொளிர் வெய்யோனைகினது திரு
வளராடையாயுடுத்து
மாசிததாரகாபதியெனுந்திங்களை
மலர்ப்பதத்திணைமிதித்து
வானவர் துதிக்குநலலங்காரநாயகீ
மாதேவதேவதாயே.

சோனைமழைபெய்துவளர்பயிர்செழித்தோங்கவுந்
தொடர்பஞ்சமேயகலவும்
துயர்தருங்கொள்ளைநோய்முற்றுமேயொழியவுந்
துன்பமென்பவையெ—வயெனுந்
தொல்லுலகிலுனதுமகரெம்மையணுகாமலே
சுகிர்ததயையொடுகாக்கவும்
தோன்றலர்கள்குலதிலகஆண்டவணீவெளிவரத்
துணிபோடெழுந்தருளும்

ஆனவோர்பைம்பொன்னிலைமைத்தழகுபெற
அரதனங்களையழுத்தி
அமரருங்கொண்டாடுமுனதுமாரதமதை
யலங்காரமாய்ப்புதுப்பித்
தன்னைநீ வரும்வழியையுஞ்செப்பனிட்டாங்கு
அடர்மரக்கிளைகள்கொய்து
ஆயத்தமாயினநின்வரவையெதிர்பார்த்தியா
மனைவருங்காப்பதுண்மை

தேனைநுகர்வண்டினஞ்செவ்வழிப்பாட்டினைத்
தீங்குரலினுலிசைப்பச்
செங்கமலவாவிதிகழ்திருமந்த்ரநகரின்மா
சீராலயத்தெழுந்த
செல்வமேபரதர்தஞ்செல்வதஸ்நேவிசாஞ்
செல்வமேமாற்றமில்லாச்
செல்வமேயெம்மைநீகைவிடாதருள்புரிவை
செல்வவாரிதியென்னனையே,

நங்கையின் நலிவு

"மனுவேலன்"

ஓர் இரவில்

காரிருள் செறிந்து கடுங்குளிர் வருத்தும்
ஓரிரவதனில் ஓலைக்குடிலில்
காரிகையொருத்தி கண்ணுறங்காதே
பேரிருள் மனத்தெழ பேதலித்திருந்தனள்
இருள்செறி திக்கினில் இரண்டு விழிகளும்
அருமைக்கணவனின் வரவினைநோக்கி
துருவித் துருவித் தூர்ந்துபோயின
அருமைக்கணவனே திரும்பினனில்லை.

நங்கை

மென்மைக் கிருப்பாய் மிளிரும் மலரவள்!
பன்னரும்பொறுமையின் பெருந்தனிக்கடலவள்!
அன்பின் பெருக்கவள்! அழகின் வடிவவள்!
துன்னிய துயர்களைத் துடைத்திடும் துணையவள்!
பெண்மையின் பிறப்பவள்! பெருங்குணக்
குன்றவள்!
எண்ணருங் கலையவள்! எழில்மிகு இல்லின்
கண்ணெனத் திகழும் கற்புடைப் பெண்ணவள்
மண்ணினில் அவள்போல் காண்டலு மரிதே!

நங்கையின் கணவன்

நங்கையின் கணவனோர் நம்பி யில்லை;
அங்ஙனம் அழைத்திட அருகதை யற்றவன்!
மங்கையின் மாண்பினை மதித்திடா மடையன்
இங்கிதவாழ்வினை மங்கிடச்செய்தனன்.
இழிதரு மதுவினுக் கவனோர் அடிமை!
பழிதனக் கஞ்சா பெருந்தனிக் குடியன்.
வழுவிய வாழ்வினில் வாழ்ந்திடும் தூர்த்தன்
அழிவுறு நிலையினை அடைந்தனன் மதுவால்.

அவன் தாபம்

இரவி னமைவிலே இதயங்கருகி
இரங்கினள் கணவனின் இழிநிலை நோக்கி!
கரமதைக் கூப்பி கணவனைக் காத்திட
பரமனை நோக்கி வரமதை வேண்டினுள்.
"என்பும் சதையென இணைந்து நாங்கள்
இன்புடன் நடத்திய அன்பின் வாழ்க்கை
இன்று குலைந்து இழிநிலை யடைந்தேன்
துன்பந்தந்திடும் தீய மதுவால்
புயமதில் அணைத்துப் புரிந்த காதலில்
வயமிழந்தன்று மயங்கி மகிழ்ந்தேன்
அயர்ந்த பொழுதவ ளருகினி லமர்ந்து
நயந்த உரையால் நளின மூட்டினேன்.
இன்றோ இலங்கிடும் மாறுதல் எத்துணை?
தேன் என இனித்தவள் வேம்பென ஆனேன்!
என்னைப்போல இதயம் வெதும்பி
சின்னமுற்றவர் எத்துணைப பேரோ?
என்னை மறந்தார்; இல்லையு மறந்தார்;
தன் நிலை மறந்தார்; தனதரும் மதலையின்
இன்மொழி மறந்தார்; அன்பினை மறந்தார்;
பொன்னை யொத்தப் புகழையு மறந்தார்!
கொடுமை! கொடுமை! மதுவின் கொடுமை!
அடுக்கின் பெருகும் அநந்த மாகவே!
மடுவினி லாழ்த்திடும் மதுவரக் கனையுடன்,
தடுத்தொழித் தருள்வாய் தயைமிகு தேவா"
என்றிவ் விதமாய் இதயங் கசிந்து
தன் துயர் கூறி சலித்தனள் நங்கை!
கன்னங்களிலே வழிந்த கண்ணீரை
மென்கரந் துடைப்ப மருண்டு நின்றுள்!
பெண்ணவள் இங்ஙனம் பேதலித் தவளாய்
எண்ணிய எண்ணமோ எட்டி லடங்கா!
அண்மையி லலறிய அருமைக் குழந்தையை
பெண்மயில் தூக்கி மார்பினில் சேர்க்கையில்,

வந்தான் குடியன்.

வந்தான் குடியன் வயமிழந் தோனுய்!
கந்தலைச் சரியாய்க் கட்டின னில்லை.
சந்தைச் சென்றவன் மொந்தைக் கள்ளுடன்
போந்தனன் திரும்பி போதை மேலிட.
சட்டியைப் பார்த்தான் சாப்பிட ஒன்றிலை
எட்டிப் பற்றினன் ஏழை மனைவியை!
ஒட்டிய தாடையில் ஓங்கி யறைந்து
எட்டி யுதைத்து ஏசினன் பலவாய்.
வட்டிலை வீசினன் வனிதையை நோக்கி!
ஒட்டிய இடுப்பினில் இடுக்கிய சிசுமேல்
வட்டிலோ வீழ்ந்தது; வகிர்ந்தது சிரசை!
பொட்டெனும் நேரத்துப் புரண்டதே இரத்தம்
"எத்தனை நாளாய் இவ்வித எண்ணம்?
செத்தால் பழியைச் சுமத்தவோ நினைத்தாய்?
இத்தனைத் துணிவுனக் கெங்ஙனம் வந்தது?
அத்தனைக் கொழுப்பையு மடக்குவேன் பார்" என
கத்தியைத் தூக்கினன், புத்தியை இழந்து
குத்திட நெருங்கினன் குணசீ லியினை!
சத்தம் கேட்டு சனங்கள் கூடி
பித்தனைத் தடுத்துப் புண்ணியங் கொண்டனர்.

ஃ ஃ ஃ

இதுதான் வாழ்வோ? இதுதான் சுகமோ?
இதுதான் அன்போ? இதுதான் அறமோ?
இதுவோ இன்பம்? இதுவோ இலட்சியம்?
இதுவோ இயற்கை? எண்ணுக இதனை.

●

St. FRANCIS XAVIER'S HIGH SCHOOL TUTICORIN.

BY


V. ANTONYSAMY, M.A., L.T., TUTICORIN·)

On the 11th, 12th and 13th October 1934, St. Xavier's High School celebrated its Golden Jubilee under the presidency of Rao Bahadur A. T. Pannirselvam, then Home Member to the Government of Madras. It is therefore to-day 63 years old, though correctly speaking, its origin is much more ancient. As far back as the year 1600 there was a Jesuit College in Tuticorin—College corresponding to our Upper Primary School and it existed up to 1695. Then there was a permanent Parish Tamil Elementary School in the Church compound and it became a Middle School in 1872. In 1884 His Lordship Mgr. A. Canoz, S. J. Vicar. Apostalic of Trichinopoly in response to the fervent request of the Catholics during his pastoral visit, permitted the school to be enlarged into a high school with Rev. Fr. A. Lavesture, S. J. and its first Manager. In 1888 there were 65 pupils out of which 53 were Catholics.

The growth of this institution both in number and efficiency has been rather slow, compared to the other Jesuit institutions in the South. Among the galaxy of brilliant Jesuits who shaped the destinies of the school, which was chiefly meant for the educational uplift of the Bharatha community, we can single out the names of a few outstanding priests, who have left their impress on the school: Rev. Fr. Martin, S. J., Rev. Fr. Arpudem, S. J,. Rev. Fr. Amalorpavam, S. J,, Rev. Fr. J. L. Miranda, S. J. and Rev. Fr. R. Gnanapragasam, S. J. In the 'Martin Era' of the school, namely 1898—1920, the school had a steady increase in strength, swelling up to 444 pupils in 1920 of whom 154 were Barathas. 'Amalorpavam's era' which began in 1920 was one of expansion. He built up the beautiful St. Xavier's Hall and formed the first Scout Troop in the town. In 1923 the first Indian diocese was created in Tuticorin, but the school has remained in charge of the Jesuits Rev. Fr. J. L. Miranda, S. J, who succeeded Fr. Amalorpavam in 1924, was perhaps the first to realise the truth that the Baratha boy, though intelligent and talented by nature with a special bent for things artistic and atheletic, was lacking in application and deligence and hence started study classes before each school session. Fr. Miranda by encouraging heartily many extra—curricular activities found many an outlet for the Baratha boy's exhulerant energy.

The Headmastership of Rev. Fr. R. Gnanapragasam, S. J,, from 1931 to 1946 may be classified as the modern history of the school and the school has been changed beyond recognition not externally but internally. Perhaps the only external change is, it is now manned by 3 Jesuit fathers who live in 'Xavariana', the former Bombay Company. Internally Fr. R. Gnanapragasam brought many changes. By his prodigious industry in supervising and guiding the work of both the pupils and staff and by conducting a regular night study hall in Xavariana under his own personal supervision, not to speak of his enforcing right padagogie methods, strict promotions and selections, he raised the tone and efficiency of the school to a pitch never before attained. For years his school was proverbial for its low percentage of success in the S. S. L. C. and thanks to him the school for the past one decade and more never gets below 70 per-cent of eligibles (this year 47 passing out of 55 sent up), beating hollow all the local high schools. No wonder its fame has shot up and non-Catholics flock to its portals in large numbers. To-day the strength is 1078 and the Baratha boys number 354.

The present manager is Rev. Fr. J. G. Gomez, S. J. and the Headmaster is Rev. Fr. D. Thomas, S. J. They say that Tuticorin has everything except a college and let us hope that St. Xavier's will grow naturally into a college what with the moral and intellectual resources of the Society of Jesus and the material resources of the Baratha community.



மதுரை தமிழ்ச்சங்கவித்வான்
கிழக்கரை ஸ்ரீ ஜோசப் டையாஸ்.



சென்னை பரத ஐக்கிய சங்கத்தில்
ஆதிமுதல் காரியதரிசியாயிருந்து
தொண்டாற்றிவந்த
ஸ்ரீT. G. எட்வாட்ஸ்.

16. The more we help others to bear their burdens, the lighter our own will be.

17. Stones and idle words are things not to be thrown at random.

18. Censure is the tax, a man payeth to public, for being eminent.

19. Though a man may become learned by author's learning, he never can be wise but by his own wisdom.

20. Money like manure does no good till it is spread' There is no real use of riches, except in the distribution.

21. Blessed are the peacemakers; For, they shall be called the children of God.

22. A Flower is loved and enjoyed more for its fragrance, than for its bright colour and well arranged petals.

23. Deadly poison is contained by the most beautifu flowers on earth!

24. Sweet words and a poisionus heart often go together. Do we not find the sweetest honey is stored up side by side with the poisionous gland in the abdomen of a bee ?

25. Humility is a virtue which does not consist in lies



தனுஷ்கோடிக்கும் தலைமன்னருக்கும் ஓடிக்கொண்டிருந்த ".கோஷன்" புகைக் கப்பலில் கேப்டனாயிருந்த ராவ் சாகிப் சவியர் கோமஸ்.

'ஓபீர்' துறைமுகமே நமது உபரி நகர்

ஸ்ரீ எஸ். வி. முறல்

பாலஸ்தீனத்தில் ஏறக்குறைய 3000 வருடங்களுக்
முன் அரசு நடத்திவந்த சாலமென் அரசனின் கப்பல்க
தமிழ்நாட்டில்'ஓபீர்' என்ற துறைமுகத்துக்குவந்
அங்கிருந்து தங்கம், சந்தனக்கட்டை, மயில் முதலியசாமா
களை ஏற்றிச் சென்றதாக வேதநூலிலும் மற்றும் அ
சரித்திர நூல்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அ
காலத்தில் மயிலுக்குத் தோகை என்ற பெயர்வழக்க
திலிருந்தது. இந்த ஓபீர் துறைமுகம் எங்கு இருந்தது எ
பதைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சியாளர்பலகாலமாக முயன்
வந்ததுண்டு. இப்போது திருநெல்வேலி ஜில்லாவில் தி
செந்தூருக்கு அருகிலுள்ள 'உவரி' என்ற சிற்றூரே மு
காலத்தில் 'ஓபீர்'என்ற பெயர் பெற்ற துறைமுகமா
இருந்திருக்கிறது என்று அனேக ஆராய்ச்சி நிபுணர்க
கூறுகிறார்கள். பாண்டிய மன்னர்கள் கிறிஸ்துவுக்குமு
அதாவது ஏறக்குறைய மூவாயிரம் வருடங்களுக்கு மு
தாம்பிரவர்ணி நதி தீரத்திலிருந்த கொற்கை நகரில் அ
செலுத்திவந்தார்கள். அக்காலத்தில் கொற்கை நகருக்
பக்கத்தில் 'ஓபீர்' என்ற பெரிய துறைமுகமிருந்தத
அவ்வூர் மக்களிடையே பரம்பரையாகச் சொல்லப்ப
வருகிறது. தற்போது உவரிக் கிராமத்துக்கு அரு
பெரிய மணமேடு காணப்படுகிறது அது முற்காலத்
தங்கசசுரங்கமாக இருந்ததாக அவ்வூரார் சொல்லுவதுண்
இதையெல்லாம் கவனித்தால் நமது உவரி நகர் சாலமே
அரசன் காலத்தில் பெயர் பெற்ற 'ஓபீர்' நாமத்துட
நாகரீகத்தில் சிறந்து விளங்கியதென்பது வெளிப்ப
பரதகுல மக்கள் பண்டைக் காலமுதல் கப்பலோட்
தொழிலில் சிறந்து விளங்கினர் என்பதற்கும் இஃது
சிறந்த எடுத்துக் காட்டாகும்.



சென்னை பரத ஐக்கிய சங்கத்து பொக்கிஷதா
ஸ்ரீ. எஸ். வி. முரூல்

பரதரின் தற்கால, முற்கால நிலையும், நிர்வாக முறையும், நம் தேவையும்.

எ. எஸ். வில்லவராயன்

திருவிதாங்கூரை பரத குலத்தவரின் சமுக நிர்வாக அமைப்பு மேனாட்டாரின் அரசியல் நிர்வாக முறைக் கொப்பா யிருக்கிறதெனச் சொல்லலாம். இங்குப் பலவிடங் களில் பரதர் வசித்துவருகின்றார்கள். ஜனத் தொகை ஏறக்குறைய 9,000 முதல் 10,00 0வரையிருக்கும். இதில் உத்தேசம் 90 சதமானத்துக்குமேல் நாஞ்சி நாட்டிலேயே வசிக்கிறார்கள்.

பல காரணங்களையொட்டிப் பரதர் வசிக்கும் கிராமங் களை இரு பிரிவுகளாக (Divisions) பிரித்து அவைகளுக்குத் தனி நிர்வாக ஏற்பாடும், பொது நிர்வாக ஏற்பாடும், திறம் படவும் விவேகமாகவும் செய்திருக்கின்றார்கள். இவ்விரு பகுதிகட்கும் தென்பகுதி, வடபகுதியெனப் பெயர். வட பகுதிக்குப் பல சிற்றூர்களுமுண்டு. இவைகளுக்கு முறையே கன்னியாகுமரியும் வடசேரியும் பேரூர்களாகும். இதுமட்டுமின்றி, கன்னியாகுமரியை இவ்விரண்டு பகுதி கட்கும் பொதுவான பேரூராகவும் அமைத்திருக்கின்றார் கள். (President of the two Divisions) பொதுக்கூட்டத்தின் மன்றமாக (House of parliament like) ராஜாக்கள் மங்கலத் தையும், General secretary என்ற முறையில் பிள்ளைத் தோப்பையும் நியமித்திருக்கின்றார்கள். இம்மூன்று ஸ்தாப னங்களும் அவ்வவ்வூரின் பேரால் கொடுக்கப்பட்டிருப்பதே யன்றி ஒருவரின் தனிப்பேரிலல்ல.

அந்தந்த ஊர் நிர்வாகம் முரணில்லாது நடைபெறும் பொருட்டுத் தலைவர்களென்றும் சீதாதிகளென்றும் இரு குழாங்களை அமைத்திருக்கின்றார்கள். நடைமுறையில் இவ்விரு குழாமும் அவ்வவரின் நிர்வாக கமிற்றியாகிறது. இவைகளுக்கெல்லாம் பொதுவான மேலதிகாரி பரத ஜாதித் தலைவமோரே யாவர்.

புறநானூறு, பட்டினப்பாலை, ஐங்குறுநூறு, மதுரைக் காஞ்சி முதலிய சங்க நூல்களும், மஹா பாரதம், திருவிளை யாடல் புராணம், ரிக்வேதம் முதலியவைகளும் நம் பரம் பரைத்திறமை முதலியவைகளைப்பற்றிச் சிறப்பாகச்சான்று பகர்கின்றன; சில கல்வெட்டுகள் (Inscription) அர்ச். சவேரி யார் இங்கிருந்து எழுதின கடிதங்கள் முதலியன நம்மைப் பற்றி மறுக்கமுடியாத அத்தாட்சிகள் தருகின்றன.

அர்ச். சவேரியார் கன்னியாகுமரியைப்பற்றி ரோமா புரிக்கெழுதின தம்முடைய 13-வது கடிதத்திலும், ஸர். ஸைமன் காசிச் செட்டி முதலியவர்கள் எழுதின பிரபந் தங்களிலும் நமக்குத் தலைவர்களும் (Head men) பட்டம் கட் டிகளும் உண்டென்றும் நம் குல அரசனால் ஆளப்பட்டு வந்துள்ளோமென்றுங் கூறியுள்ளார்கள்.

தவிரவும், அர்ச். சவேரியார் கன்னியாகுமரியைப்பற்றி எழுதுமிடத்து, கன்னியாகுமரியில் "பரதர் மத்தியில் மிக வும் புத்திக்கூர்மையுள்ள பிள்ளைகளைக் காண்கிறே'னென் றும் கூறியுள்ளார். அந்தோ இப்போது நம் நிலையென்ன? மிகவும் பரிதாபமே!

சில வருடங்களுக்குமுன் பரோடா மகாராஜா கன் னியாகுமரிக்கு விஜயஞ் செய்தபொழுது, நம் நிலைமையைக் கண்ணுற்று மனந்தாளாது அடியில் வருமாறு கூறினதாக நம் வித்வான்களிலொருவர் பாடியிருப்பதாவது:—

பார்த்திபன் பரோடா தேசத்தை யாளுவோன்
பரதரைக் கன்னியா குமரி
பார்த்துப் பகர்ந்த மெய் மொழியை நீயும்
பாரிலின்னும் கேட்டிலையோ!

அந்த நாளுங்களைக் காத்த முனிவராம்
அன்பு வளரும் பிதா சவியர்
இந்த நாளுங்களைக் கண்டா லவருமே
ஏங்கி யழுவா ரென்று ரைத்தான்.

ஒற்றுமை கெட்டதும் கல்வி குறைந்ததும்
உட்பகை விரோதமு மானதினால்
கொற்றவன் பரோடா வள்ள லிவ்வாறு
கூறினா னுண்மை கும்மியடி.

பார்த்தீர்களா சகோதரர்களே! சற்றே நிதானித்துப் பாருங்கள்!

புகழ்பெற்ற இன்பக் கவியைப்போன்ற அஷ்டாவ தானிகளும், அந்தோனிக் குட்டி அண்ணாவியைப்போன்ற வரகவிகளும், சங்கப் புலவர்களும், சங்கீத வித்வான்களும் பிறந்த இச்சமுகம்—ஐக்கியத்தில் அரணென விளங்கிய நம் குலம், கல்வி குன்றி, ஒற்றுமை கெட்டு, சதா சச்சர விட்டு இன்னும் கெட்டுப் போகிறேன், எத்தனை பணம் பந்தயம் என்றாற்போன்று பிற்போக்கிலேயே யிருந்து கொண்டிருக்கின்றதே! இதன் மூலகாரணம் என்னமாயி ருக்கவேண்டுமென ஆராய்ந்து செம்மைப்படுத்த வேண்டி யது ஜன சமூகத்தின் கடமையல்லவா? ஐயோ! எல் லாம் குன்றி, இருக்கவும் இடமின்றி, இன்னல் படுகின் றோமே. இதரர் எள்ளி நகையாடுகின்றார்களே. ஆ! இதென்ன தீமை! எவரின் சாபம்! அன்றேல் வேறென்ன மாயம்!

சுகாதாரக் குறைவாகவும், வாசிப்பதற்குச் சௌகரிய மில்லாமலும் ; இருக்கும் நம் கிராமங்களைச் சீர்திருத்தி யமைக்கவும், மக்கள் முன்னேற்ற வழிவகைகள் செய்ய வும் வேண்டி, அடியில் தரும் விஷயங்கள் 1919-ல் கன் னியாகுமரியில் ஆலோசனை செய்யப்பட்டன. (இது ஆகாயக் கோட்டையல்ல. பணமும் ஒற்றுமையுமிருந் தால் அங்கு இது சாத்தியமே.)

(1) காலனி (Colony) முறைப்பிரகாரம் பத்திபத்தியாய் வீடுகள் அமைப்பது.

(2) அவசியமான தெருக்களை அதற்கேற்றவாறு மாற்றி யமைப்பது. மெயின் ரோட்டுப்பக்கம் குடியேறுவது.

(3) புதுக்கிணறுகள் வெட்டுவது.

(4) பெண்கள் ஸ்நானத்துக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்வது.

(5) மக்கள் விவசாயத்திலும் கைத் தொழிலிலும் பிரவேசிக்கும் பொருட்டுக் காணி பூமிகள் வாங்குவது.

(6) எல்லாத் தெருக்களிலும் விளக்கு ஏற்றுவது.

(7) நெசவுத் தொழில் கற்பிப்பது.

(8) சமுதாயக் கட்டுப்பாட்டின் மேலாவது, சிறுவர்களுக்கு 14 வயதுவரை கட்டாயக் கல்வி கற்பிப்பது.

(9) தொழிலில் பிரவேசித்துள்ள வாலிபர்களுக்காக இராப்பள்ளிக்கூடம் ஏற்படுத்துவது.

(10) சாஸ்திர முறையில் சங்கீதம் கற்பிப்பது.

(11) எல்லோரும் சௌகரியமாய் உட்கார்ந்து சந்தடியில்லாமல் பூஜை காணும் பொருட்டுக் கோவிலில் பெஞ்சு முதலியவை அமைப்பது.

(12) கன்னியாக்குமரியில் ஓர் உயர்தரப் பாடசாலை (High School) ஏற்படுத்திநாளடைவில் அதைக் கலாசாலையாக்குவது (College).

(13) இதற்கு உபபாடசாலையாக (Feeding School) ராஜாக்கள்மங்கலம் அல்லது பெரிய காடு என்னுமிடத்தில் ஓர் நடுத்தரப் பள்ளிக்கூடம் (Middle School) அமைப்பது.

(14) இதற்கு வேண்டிய நிதி, பொதுவாக திருவிதாங்கூரிலுள்ள நம் எல்லா ஊர்களிலுமிருந்து அந்தந்த ஊர் வருவாய்க்குத் தகுந்தபடி சேகரித்துச் சமுதாயத்தின்பேரில் நிலம் (வயல்) வாங்குவது.

(15) நம் மக்களுக்கு எல்லா வகுப்புகளிலும் இலவசமாகக் கல்வி யூட்டுவது.

(16) இந்த வரவிலிருந்து பிள்ளைகளுக்கு இலவசமாக ஆகாரமளிப்பது.

(17) பிள்ளைகள் தங்குவதற்கு வேண்டிய கட்டடங்கள் அமைப்பது, பூமிகள் வாங்குவது.

(18) இவைகளின் நிர்வாகம் செவ்வனே நடைபெற, ஒரு கல்விக் கழகம் (Board) அமைப்பது.

(19) பல ஊர் மெம்பர்களும் இதில் அங்கம் வகிப்பது.

(20) கமிட்டிக்குப் பிரசிடெண்டு, செக்ரட்டரி, பொக்கிஷதார் முதலியவர் நியமிப்பது.

N.B.—புத்தன்துறை முதல் பிள்ளைத்தோப்புவரையுமுள்ள ஊர்களுக்கு, பெரிய காடு அல்லது ராஜாக்கள்மங்கலம் ஏறக்குறைய மத்தியான ஊரானதினால் இந்த இடம் குறிப்பிடப்பட்டது. இப்படிச் செய்வதால் பிள்ளைகள் காலையில் பள்ளிக்குப்போய்ச் சாயங்காலம் அவரவர் இடந் திரும்ப சௌகரியமா யிருக்குமென்பதாலேயே.

என்னசெய்வது, வெண்ணை திரளும்போது தாளி உடைந்தாற்போன்று, கக்ஷிகளினிமித்தம் அங்கு இது நடைபெறாமல் போய்விட்டது. உணர்ச்சியும், ஆவலுமுடைய நம் வாலிபச் சகோதரர்கள் இவைகளையோ இவைக்கு மேலான சீர்திருத்தங்களையோ செய்து வைத்துச் சமுதாயத்தைப் புனருத்தாரணம் செய்வார்களென நம்புவோமாக.

இதில் ஓர் சிறிய சந்தோஷமென்னவென்றால், கட்டாயக் கல்வியும் இராப்பள்ளிக்கூடமும், விளக்கிடுதலும் சில மாதங்கள் நடந்தன.

நானூறு வருட வயதுடைய நரைத்த தாடியும் மீசையுமிருந்தும் தொட்டிலை விட்டெழுந்திருக்கத் திராணி வரவில்லையே. கார் மணற்றுறையைக் கண்ணெடுத்துப் பார்த்தால் கலங்குமே உள்ளம்.

"காணக்கண் கூசுதே" யென நம் ஔவைப் பிராட்டியார் சொன்னாற்போன்றல்லவோ இருக்கின்றது நம் நிலைமை. இதற்கு ஓர் விமோசனமில்லையா அல்லது பணமில்லையா, சொல்லுங்கள்.

"உங்கள் நிலைமையை உயர்த்துகிறேன். கல்வியைத் தருகிறேன்" என்று சொன்ன பெரியாரான பிஷப் கால்டுவெல் அவர்களுக்கு நம்மவர் என்ன பதிலிறுத்தனரென்பதாக நம் வித்வான்களிலொருவர் பாடியிருப்பதைக்கேளுங்கள்.

கால்ட்வல் எனும் பெரியோன்—மந்த்ர ஞூர்
கட்டினன் பர்டசாலை பரதருக்காய்ப்
பால்மணம் மாறாத பாலகர்க்குப்
பந்நூலு மாடையூண் தருவே னென்றான்

சொன்ன பதிலென்ன?

நால்வகைச் சேனை தந்து—எமை
நரபதியாக்கினும் நஞ்சுடனே
பால்துளி கலக்க வொண்ணா தெனப்
பகர்ந்தார் கால்ட்வல் மனஞ்சோர்ந்தான்.
இத்துணை வைராக்யம் தம் மதத்தில்
இசைந்த பரதருக்கு உயர்கல்வியைச்
சித்தம் மகிழ்ந்தூட்ட—எற்பாடு
செய்தவரிதுகாறு மொருவரில்லை.

சகோதரர்களே—பெரியோரே, யார் செய்ததாயினும் வீடு வெந்தாச்சுது. இனிமேலாவது சிமிந்தியிட்டுச் செப்பனிட முன்வாருங்கள். காலம் ஓடுகிறது. ஒருவரையொருவர் குறைகூறிக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை.

அரச மரத்தைப் பிடித்த பேய் பிள்ளையாரையும் பிடித்துக்கொண்டது என்றாற்போன்று, வெகு காலமாக நம்மவர் போற்றிவந்த பஞ்சாயத் முறையுங்கூட கெட்டுவிட்டதே! ஐயோ! பரிதாபம்!

இதைப் புனருத்தாரணம் செய்ய மார்க்கமில்லையா? நானூறு வருடக் கிறிஸ்துவர்களாச்சுதே. ஏனிந்த நிலை. நம் அயலார் 100 வருடக்கிறிஸ்தவர்களெங்ஙன மிருக்கின்றார்! அவர்களின் சீரும் சிறப்பும் உயர்வும் உத்தியோகமும் மற்றவர்களுக்குப்பொறாமையையே உண்டாக்குமெனச் சொல்லினும் மிகையாகாது. அவர்களின் தீவிர முன்னேற்றத்துக்குக் காரணமென்ன? அன்புடையீர், சற்றே கவனியுங்கள்.

அண்ணலே! குலசேகரா! நீ கையாண்ட தூண்டிலும் கழையும் கையாடுவது பெருமையெனச் சொல்கின்றார்களே? இதெங்ஙனமொவ்வும், நீ உன் தமையனின் சாபத்திலைல்லவோ செய்தாய். அது எங்களையும் பிடித்துக்கொண்டதா! எங்கள் வறுமையை நீக்கி எங்களுக்காசியளிக்கமாட்டாயா? உன் காது செவிடுபட்டுப் போய் விட்டதா, ஓலமிடுகின்றோமே! சகோதரரே, அவர் மௌனமாயிருக்கட்டும். நாம் நம் காரியத்தைக் கவனித்து எதை நீத்து எதைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்பது நம் கடமையேயாகும்.

இது நிற்க, புராண வழிபோயினும், சரித்திர வழி சொல்லினும் நம் குலம் வணங்காமுடி மன்னராலும், வலிமை மிகு வீரராலும் பெருமையுடையதாகவே காணக் கிடக்கின்றது.

தவிரவும், நம் பழக்க வழக்கங்கள், நம் விருதுகள், நம் பெண்மணிகளணி ஆபரணங்கள் நம் சடங்கு முறைகள், முதலியனவும், பல கல்வெட்டுகள், புராதன நூல்கள் ரிக் வேதம் முதலியனவும், நம் முந்திய நிலைமையை விளக்கிக் காட்டும் சாட்சியங்களாயிருக்கின்றன. இது மட்டுமா? வேறெவர்க்குமில்லையென்றாற்போன்று ஒரு விசேஷித்த ஆபரணத்தைப் பாருங்கள். இது நம் மகளிர் அணி தாலியேயாகும். ஏனெனில் விவாகமான நம் பெண்கள் இரண்டு தாலிகளை அணிந்து கொள்கிறார்கள். இவைகட்கு இரட்டைத்தாலி அல்லது இரட்டைத் தேவதத்தமெனும் சங்குத் தாலியெனப் பெயர். சிறியதொன்றை உட்கட்டுத்தாலி அல்லது பிள்ளைத்தாலி என்றும் சொல்வதுண்டு. உட்கட்டுத் தாலி என்பது, ஒரு பெண்ணுக்கு 7 வயதாகும்போது தன் தாயார் அணிவிப்பதாகும், (இவ்வழக்கம் தற்போது சில விடங்களில் நின்றுவருகிறது. இது சந்திரமதியின் காரணத்தாலெனக் காண்கின்றோம்.) பழக்கவழக்கங்களிலும் நடை முறையிலுமிருந்து வருவதெல்லாம் புராணக் கதைகளெனத் தள்ளுவதற்கில்லை. ஏனென்றால், காரணமில்லாமல் காரியம் உண்டாவதில்லையென்பதுறுதி. எல்லாம் கற்பிதமென்றால் உலகத்தில் சரித்திரமே யிருக்கமுடியாதன்றோ? தவிரவும் நம்பெண்கள் காதிலணி உருக்குமணி நம்மவரின் ஓர் பிரத்தியேக ஆபரணமாகும். காலப்போக்கையோ, சௌகரியத்தையோ உத்தேசித்து, நம் சோமன் உடை நிறுத்தப்பட்டதுபோல், சில இடங்களில் உருக்குமணியையும் விட்டொழித்து நூதன ஆபரணங்களை அணிந்து கொள்கின்றார்கள். எனினும் இதையே வைராக்கியமாக அணிந்து வருபவர்கள் நம் பெண்களுள் அனந்தம் பேருளர்.

அநுலோம பாண்டியர் எதுவால் மதுரை ராஜியம் இரண்டாகப்பிரிக்கப்பட்ட காலத்து, வடுகர், நாயக்கர், முகமதியர் முதலியோர் படையெடுப்பால் நாம் சிதறுண்டோம், பல்தொழில் கொண்டோம், சீரும்சிறப்புமிழந்தோ மெனப் பல ஆதாரங்கள் கூறுகின்றன. ஆனதுபற்றியே நம்வித்வ சிரோன்மணிகளிலொருவர்,

"அஸ்தின புரத்தரசை யிழந்தனர்
ஆதிமதுரை நகரிழந்தார்
சத்துரு சுல்தான் வடுகராலே முன்னோர்
சார்ந்து துயர்பெறக் காரணமென்.
ஓடியகப்பல்கள் கூட்டமெங்கே—நம் நம
தோங்கிய வர்த்தகம் போன தெங்கே
நாடியவள நகரம் விட்டேனைய
நாடுவந்துழைக்கக் காரணமென்"

என மிகுந்த கவலையுடன் பாடியிருக்கின்றார்.

அன்புடையீர், கடல்படு திரவியங்களாகிய முத்து பவளம் முதலியன பாண்டிய அரசர்களின் சுதந்திர பொருள்களா யிருந்திருக்கின்றன. ஆனதுபற்றியே மது ரையை ஆண்டிருந்த நம் அல்லியரசாணி யுத்தத்துக்கு புறப்படும்பொழுது,

"முத்துப்படுந்துறையும் முனைவீரர் பட்டுடையும்
"பவழம் படுந்துறையும் பட்டணமும் பத்திரங்கா

எனக் கூறியிருக்கின்றாள்.

இவைகளை அந்நியர் கவர்ந்துகொண்டு போகாதிருக்கும் பொருட்டும், தேச பாதுகாப்புக்காகவும் நம் குல... கள் சிறு சிறு தொகையினராய்க் கடற்கரைப் பிராந்தியத்தில் பலவிடங்களில் பாளைய மிடப்பட்டிருந்திருக்கிறார்கள். ஆனால் பலத்த சைனியத்தோடு படையெடுத்து வந்த... தானை எதிர்த்துப் போர் பொருத முடியாததால், எல்லா... வற்றையும் விட்டுத் தம் பெண்டு பிள்ளைகளோடு ஆங்காங்கு ஓடி ஒளிந்திருக்கின்றார்கள்.

குடும்பத்தையும் இட்டுக்கொண்டு எத்தனை தொலை... தூரம் செல்லமுடியும்? ஆனதுபற்றி கிட்டினவிடத்து மற்றவர் மத்தியில் ஒளித்திருக்கின்றார்கள். பசி வந்... பத்தும் பறந்துபோ மென்றபடி, நாளடைவில் ஒதுங்கி... விடத்து நடந்த தொழிலில் தாங்களும் சேர்ந்து கொண்டார்... கள், எனினும் பெண்டுபிள்ளைகளோடு சென்றிருந்த... யால் மற்றவர்களோடு கலந்து போகாதிருந்திருக்கிறார்கள். (நாயக்கர் முகம்மதியர் முதலியவர்க்கும் நம்மவர்க்கும் நேர்ந்த சம்பவங்களைப்பற்றி அர்ச். சவரியார், ... கால்ட்வெல் முதலியவர்கள் எழுதின சரித்திரங்களே ... குத் தகுந்த சாக்ஷியங்களாகும். பழமென்றால் வாய் ... காதென்பது உண்மையே, ஆயினும் நாம் குன்றிப்போ... மென அறியவேண்டின் முன்னிருந்த நிலை ஒருவாறு ... வேண்டியதவசியமாகிறது.)

பஞ்சாப் கணவாய்க்கருகில் (மஹாஞ்சதாரோ) ... மிடத்தில் கண்டெடுக்கப்பட்ட சில கல்வெட்டு... கன்னியாகுமரி பகவதியம்மன் (குமரி நாட்டை... கன்னிப்பிடாரியார் ஆலயம்) கோவிலுள்ளிருக்கு... வெட்டுப்போன்றவையும் நம் பூர்வீக நிலையைத்தெளி... காட்டுகின்றன. இரண்டாவது சொன்ன இந்த... வெட்டு இற்றைக்கு 800 வருடங்களுக்கு முன்ன... தப்பட்டதாகத் தெரிகிறது.) இதில் ஓர் பெரிய... தைப்பற்றிக் கூறுங்கால் வில்லவராயன் என்... பற்றிச் சொல்லியிருப்பதாவது (Extract of the ... translation.)

In accordance with the above order and ... immediate command of Villavarayan and in the ... of the chiefs of the lands reclaimed from the f... had assembled, this settlement was entered in the ... Registered" etc., etc.

...ரதர் சத்யமறை கைக்கொண்ட 1535-ம் வருட

முதலுள்ள ஜாதித் தலைவமோர்கள்

1. சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தொன் யுவாம் தெக்குரூஸ், அவர்கள் புத்ரன்
2. ,, ,, தொன்மிக்கேல் யுவாம் தெக்ரூகுஸ், அவர்கள் புத்திரி
3. .. ,, தோனுமரிய மார்கரீத் தெக்குரூஸ்
4. ,, ,, தொன்லூயிஸ் ஸ்றீவன் தெக்குரூஸ் பீரிஸ், அவர்கள் புத்ரன்.
5. ,, ,, தொன் எரோனிமுஸ் லூயிஸ் தெக்குரூஸ் பிரீஸ் அவர்கள் புத்ரன்
6. ,, ,, தொன் மிக்கேல் எரோனிமுஸ் தெக்குரூஸ் பீரிஸ் அவர்கள் புத்ரன்
7. ,, ,, தொன் சவியேர் மிக்கேல் தெக்ரூஸ் பீரிஸ், அவர்கள் மருமகன்
8. ,, ,, தொன் சவியேர் ஹென்ரி தெக்குரூஸ் கொரைரா அவர்கள் புத்ரன்
9. ,, ,, தொன் ஜோசப் தெக்குரூஸ் கொரைரா அவர்கள் மருமகன்
10. ,, ,, தொன் ஸ்றீவன் தெக்குரூஸ் பூபாலராயர் அவர்கள் மருமகன்
11. ,, ,, தொன் காபிரியேல் தெக்குரூஸ் கோமஸ், அவர்கள் புத்ரன்
12. ,, ,, தொன் சூசை லூயிஸ் தெக்குரூஸ் கோமஸ் அவர்கள் புத்ரன்
13. ,, ,, தொன் காபிரியேல் ஆரோக்கியம் தெக்ரூஸ் கோமஸ் அவர்கள் புத்ரன்
14. ,, ,, தொன் மிக்கேல் பேதுரு தெக்குரூஸ் கோமஸ் அவர் கள் மருமகன்
15. ,, ,, தொன் கஸ்பார் அந்தோனி தெக்குரூஸ் வாஸ் விக்டோரியா அவர்கள் புத்ரன்
16. ,, ,, தொன் காபிரியேல் தெக்குரூஸ் வாஸ் கோமஸ் அவர்கள் புத்ரன்
17. ,, ,, தொன் கஸ்பார் அந்தோனி தெக்குரூஸ் வாஸ் கொரைரா அவர்கள் புத்ரன்
18. ,, ,, தொன் சூசை அந்தோனி தெக்குரூஸ் வாஸ் பல்தானே அவர்கள் புத்ரன்
19. ,, ,, தொன் கபிரியேல் தெக்குரூஸ் வாஸ் பல்தானு அவர்கள் புத்ரன்
20. ,, ,, தொன் கபிரியேல் தெக்குரூஸ் லாசர் மோத்தா வாஸ்
21. ,, ,, தொன் மனுவேல் தெக்குரூஸ் அனத்தாஸி மோத்தா கொரைரா

●

...துமட்டுமல்ல. 1931-ம் வருடத்திய திருவிதாங்கூர் ...தொகைக் கணக்கில் நம்மைப்பற்றிச் சொல்லியிருப்ப... (Extract):—

"There is a tradition that the fore-fathers of the ...thars came from the Tamil Districts of South India, ...er they had gradually moved down from Ayodhya, ... was their original home. While living at Kumari ...m they were converted as Roman Catholics of the ... rite by Rev. Vaz and St. Francis Xavier. The ...rted Villavarayans at Cape Comorin trace their ...nt from ·Villavarayan a Bharatha King to whose ...on and power an inscription about 800 years old in ...emple at Cope Comorin bears testimony."

இவை யெல்லாம் நம் சமுதாயத்தின் பெருமைக்கும், ...புக்கும் தகுந்த சான்றுகளேயாகுமாதலின் அறிவுடையு எவரும் பழுது கூறமாட்டார் என்பது எம் துணிபு. தவிரவும், நான் கூறியிருப்பவைகளில் பெரும்பாகமும் பல மேற்கோள்களிலிருந்து எடுத்திருப்பவையாகையால் என்னை இகழவோ புகழவோ காரணங் காண்பதற்கில்லை யென எண்ணுகிறேன். எனினும் ஆக்ஷேபங்களுக்கிடமிருப்பதாகக் காண்கில், அது என் சொந்த அபிப்பிராயப் பிசகாகில்,

"குற்றங்களைந்து குணமளைந்து கொள்வது
கற்றறிந்த மாந்தர் கடன்"

என்றபடி அதை மன்னித்து வழிகாட்டவும், அது என் சொந்தப் பிசகாகாமல், நமக்கு முன்வழிகாட்டிகளாக் விருக்கும் அவர்களுடையனவாகில் என்னை அதற்கு உத்தரவாதியாக்காமல் விடுதலையாக்கி விடவும் வேணுமென்று வேண்டிக்கொண்டு இதை முடித்துக் கொள்கிறேன்.

ംംം



பரதா ஹோம்

நம் குலத்தவர்க்கு பொதுவான சொத்து ஒன்று இருக்கின்றதெனப் பெருமை கொள்வதற்குத் தூத்துக்குடியில் பரதா ஹோம் ஏற்பட்டிருக்கின்றது. நமது மக்களுக்கு மத்திய ஸ்தானமாக விளங்குவது தூத்துக்குடி. இது சென்னை மாகாணத்தின் இரண்டாவது துறைமுகமாய் திகழ்வதுடன் இலங்கைக்கு பிரயாணிக் கப்பலோடு மிடமாகவு மிருக்கின்றது. கடந்த சில ஆண்டுகள்வரை அயலூர்களிலிருந்து வியாபார விஷயமாயும் வழக்குகள் சம்பந்தமாயும் பிரயாணங்களை யொட்டியும் தூத்துக்குடிக்கு வரும் பொழுது தங்குவதற்கு இடமின்றி பரதகுல மக்கள் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இக்குறையை நிவர்த்திக்கும்பொருட்டு சமூக சேவையே தேவ சேவையாகக் கொண்டிருக்கும் திவான்பஹதூர் ஐ. எக்ஸ். பெரைரா அவர்களும் அவர்களுடைய ஒப்பற்ற நான்கு சகோதரர்களும் தங்கள் செலவில் நம் சமூகச் சொத்தாக "பரதா ஹோம்" என்கிற தங்குமிடத்தைக் கட்டித் தந்திருக்கின்றார்கள். இதனுடைய அழகையும் அமைப்பையும் அநேகமாய் நமது மக்கள் எல்லோரும் நன்கறிவார்களாதலின், இதைப் பற்றி விரிவாய் எழுதாது விடுத்தனம். இந்த ஹோமில் வருடம் சராசரி 2,000 பேருக்கதிகமாய்த் தங்கிப் போகிறார்கள். கட்டணம் செலுத்துவோர்க்கென தனி அறைகளிருக்கின்றன. பெரும்பாலும் நமது மக்கள் அறைகளை உபயோகிக்காமலே சௌக்கியமாய்த் தங்கிப் போகின்றார்கள். பெரைரா சகோதரர்கள் செய்திருக்கும் பேருபகாரத்திற்கு பரத சமுதாயம் என்றும் நன்றி செலுத்தக் கடமையுடையதாயிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

Thomas Rodrigo & Sons, (INDIA) Ltd

புதிய வெளியீடு !

ஓர் சிறந்த தமிழ் செப புத்தகம் 432 பக்கங்களடங்கிய நம் நாட்டிற்குரிய முக்கியமான அநேக பிரார்த்தனைகள், நவ நாள் செபங்கள், பூசை செபங்கள், சிலுவைப்பாதை, இன்னும் பல அரிய செபங்கள் கொண்ட கைக்கடங்கிய செப புத்தகம்.

சிறிய புஷ்பம்

விலை, ஒன்றுக்கு ரூ. 1-0-0. டசனுக்கு ஒரு புத்தகம் இனும்.

புது நன்மை அடையாளம்

மூன்றும் பதிப்பு. சிறுவர்களுக்கான நேர்த்தியாய் கட்டப்பட்ட புது நன்மை தின வெகுமதி புத்தகம்.

விலை, ஒன்றுக்கு ரூ. 1-0-0 டசனுக்கு ஒரு புத்தகம் இனும்.

மரியாயின் பொக்கிஷம்.

புத்தகம் ஒன்றுக்கு ரூ. 2-0-0 உயர்ந்த கட்டடம் ரூ. 2-8-0

ஆத்தும பொக்கிஷம் புத்தகம் ஒன்றுக்கு ரூ. 1-4-0

பாலர் பக்தி மாலை ,, ,, ,, 0-10-0

சத்திய வேத சங்கீத கீர்த்தனை

மணப்பாடு மகா. ள. ள. ஸ்ரீ மிக்கேல் பேதுரு கோஸ்த அண்ணாவியவர்களால் இயற்றப்பட்டது. விலை, ஒன்றுக்கு அணா 0-6-0. டசனுக்கு ஒன்று இனும்

புது நன்மைக்கான அழகிய பெட்டியிலடங்கிய செப புத்தகம், செப மாலை. உத்தரிய சுருபத்துடன் மாலை, பெட்டி ஒன்றுக்கு ரூ. 5-0-0

உத்தரவாதம் பெற்ற சுத்த வெள்ளி செப மாலைகள் அழகிய பெட்டிகளில் அமைக்கப்பெற்றது. கீழ்கண்ட பல விலைகளில் கிடைக்கும்.

ஒன்றுக்கு 3-12-0, 5-0-0, 6-0-0, 6-12-0, 8-0-0, 12-8-0, 15-0-0,

முதல் தரமான சிப்பிசெபமாலைகள், கீழ்கண்ட விலைகளில் கிடைக்கும்,

ஓவல் செபமாலை ஒன்றுக்கு 3-8-0, 7-8-0, 9-0-0


ரவுண்டு ,, ,, 4-0-0, 6-0-0, 7-8-0, 9-0-0

165, BROADWAY,


Post Box No. 1209 MADRAS. Telegrams : "RELIGART".



ராஜாக்கள் மங்கலத்தில் ஸ்ரீமதி. ரோச்விக்டோரியா அவர்கள் தலைமையில் நடைப்பெற்ற முதலாவது
பரதகுல மாதர் மகாநாடு



1940ல் தூத்துக்குடியில் நடை பெற்ற சுதேச பொருட்காட்சியில் ஸ்டால்
எடுத்தவர்களும் பொருட்காட்சி கமிட்டியாரும்



சேசுசபை சங். அகஸ்தின் பெரைரா சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்ட பரி. அமலோற்பவ மாதா கன்னியர் சபையின்கிளை மடம், சங். சுவாமி அவர்களின் ஞாபகார்த்தமாக தூத்துக்குடி மேற்றிராசனத்தைச் சேர்ந்த முடிமன் என்னும் இடத்தில் நிறுவப்பட்டிருக்கிறது இதன் ஆரம்ப விழா வந். தூத்துக்குடி மேற்றிராணியாண்டவர் தலைமையில் 19-5-47- ல், நடைபெற்றது.



மடம் ஆரம்ப விழாவின் போது எடுத்த படம்.



1907 ல் பரி டனிமயமாதா கோவில் ப[illegible] குருவாயிருந்த . சங். ஜே. பி. டி. சொயிசா சுவாமி.

பரத மகாஜன சங்கம்

ஜே. பி. ராட்ரிக்ஸ்

அன்றொருநாள் திவான் பகதூர் ஐ. எக்ஸ். பெரைரா அவர்கள் ஓர் பிரமாண்டமான பொதுக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசும் பொழுது, "தங்கம் செய்யாதது சங்கம் செய்யும்" என்று வலியுறுத்தினர்கள். தங்கம் எதையும் செய்யும் என்பார்கள். தங்கமென்ற வார்த்தையைப் பிணங் கேட்டாலுங்கூட வாயைத் திறக்குமென்பர். இத்தகைய வல்லமை படைத்ததொன்று செய்யாததைச் சங்கம் செய்வதாயிருந்தால் சங்கத்தின் மகத்துவத்தைத்தான் என்னென்று வரைவது!

எந்தச் சமூகமாயினும் தன் முன்னேற்றத்தைக் கோரி நிற்குமாயின், அது தன் இலட்சியத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதற்கு, அடிப்படையாகச் சங்கமொன்று நிறுவியேயாகவேண்டும்; ஏனெனில், தங்கத்தைவிட மகாவல்லமை படைத்தது சங்கமே! சங்கம் சாதித்துள்ளவற்றை விரிவாய் எடுத்துரைப்பதற்கு இம்மலர் இடந்தராதெனினும் சுருக்கமாக இரண்டொரு விஷயங்களைக் கீழே தருகின்றேன்.

இந்திய விடுதலை.

நாம் கடந்த 150 வருடங்களாக ஆங்கில அரசாங்கத்தின் ஆட்சிக்குள்ளிருந்து வந்து இப்பொழுதுதான் பூரண விடுதலை அடையப்போகின்றோம். ஆங்கில அரசாட்சியினுலேற்பட்ட சாதக பாதகங்களை நான் இப்பொழுது ஆராயப் புகவில்லை. அது பெரிய விஷயம். ஆனல் நாம் ஒன்றுபட்ட மனத்தினராய் விரும்பியது, ஆங்கில அரசாட்சியினின்று விடுதலை பெற்றுச் சுதந்திரமடைய வேண்டுமென்பதே. ஏனெனில், சர். காம்பல் பனர்மன் சொல்லியதுபோல், "Good Government is no substitute for Self-Government" "நல்ல சர்க்கார் சுதந்திரசர்க்காருக்கு மாற்றாகாது." ஆங்கில ஸர்க்கார் நல்ல ஸர்க்காரென ஒப்புக்கொண்டபோதிலும், அது சுதந்திர சர்க்காருக்கு இணையாகாதென்பதற்காகவே விடுதலையை விரும்பினேம். அந்த விடுதலையையும் இன்னும் சில தினங்களில் அடையப்போகின்றோம்.

வல்லமை படைத்த 'சர்க்கார்

ஆங்கில சர்க்கார் மகாவல்லமைபடைத்த சர்க்காரென்பது, உலகறிந்த உண்மை. பிரிட்டனின் பூமியளவும், ஜனத்தொகைக் கணக்கும் இலங்கைத் தீவிற்கு அதிகமாயிருந்தபோதிலும், உலகமுழுவதற்கும் அதுபூச்சாண்டியாக இருந்துகொண்டுவருகிறது. அதன் சாம்ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிக்கிறதில்லையென்றும், உலகத்திலுள்ள கடல்களெல்லாம் தனக்குள் அடக்கமென்றும், தான் எந்தத் தேச... கும் அடிமையாகப் போவதில்லையென்றும் ம... கிடமின்றிச் சொல்லுவதற்கு ஒரு தேசம்... மானல் அந்தத் தேசம் ஆங்கில தேசமேயாகும்.

வெற்றி யாருக்கு?

தோல்வி யின்னதென் றறியாத இவ்வளவு... பொருந்திய தேசத்தைத் தோற்கடித்த பெரு... பாரதநாட்டிற்கே யுரியதாகும். ஆங்கில அ... கம் உருசிகண்டபூனை. இந்திய நாட்டின் ... சிறப்புமே, அதை மகா வல்லரசாகும்படி செ... அதன் சிறப்புற்ற வாழ்விற்கு இந்தியாதான் ... மெனச் சொல்வதும், மிகைப்படக் கூறியதாக... டாது. தன்உயிர்வாழ்விற்கும் தன்வல்லமை... காரணமாயிருக்கும் இந்தியாவை இந்தியர் ... விடுவதென்ருல், அது, தான் சாக நஞ்சுண்... கொப்பாகும். இத்தியாதி காரணங்கொண்டே... தாதாபாய் நௌரோஜி முதன்முதல் சுய... கோஷம் கிளப்பிய காலமுதல் இன்றுவரை ... பாரத்தை இந்தியர் கைக்கு மாற்றுவதற்குத் ... முண்டு' பண்ணித் துன்பத்தை வி... கொண்டு வந்தது. ஆயுதபலம், தரைப்பல... பலம், ஆகாயபலம் பொருந்திய, இந்த ... நிராயுதபாணிகளாகிய நாம் எதிர்த்துப் ப... செய்தோம். வெற்றி கண்டோம்! நம் ... தென்பதை யறிந்து வெற்றி கொண்டே ச... கின்றோம்.

எப்படிப் பணிய வைத்தோம்!

இந்த அரசாங்கத்தைப் பணியவைத்தது... திற்கோர் புதுமை! இதற்குக்காரணம் ச... வேறொன்றுமில்லை. அந்த ஒப்பில்லாத ... காங்கிரஸ் என்ற மகோன்னத சபைதான்... கட்டுப்பாடும், அந்தக் கட்டுப்பாட்டிற்கு ... இணங்கி நடந்ததுந்தான் காரணம். ஆ... சாங்கம் எதற்கும் கலங்காது. ஆனல் 'கா... என்ருல் அதற்குக் கிலி (பயம்), சில... வெறி. சாதிக்க முடியாததைச் சாதி... கிரஸ். வல்லமை படைத்ததைப் பலஹீன... காங்கிரஸ். தன்னுடைய இலட்சியமா... சுதந்திரத்தை அடைந்தது காங்கிரஸ். இ... காங்கிரஸ் கடமை தீர்ந்தது. நாம் அதன் ... பினலும், தியாகத்தினலும் கண்டபலனை ... அதை ஆதரித்தவர்களும், ஆதரியாத... அதற்குத் தீங்கிழைத்தவர்களும் நன்மை... களும்—சரிசமமாய் நின்று அனுபவிக்கப்...

முஸ்லீம் லீக்.

நாட்டைத் துண்டாக்கக்கூடாதென முஸ்லீம் சகோதரர்களை நாம் மன்றாடிக்கேட்டோம். அவர்கள் பிரிந்துபோக வேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டு வந்தார்கள். இந்திய மக்களில் பெரும்பான்மையோரின் விருப்பத்திற்கு மாறாய் நமது நாடு துண்டாக்கப் பட்டிருக்கிறது. பாகிஸ்தான் இந்தியாவென்றும் இந்துஸ்தான் இந்தியாவென்றும், இந்தியப் படம் கோரக் காட்சி யளிக்கிறது. இதற்குக் காரணம் முஸ்லீம் லீக் என்னும் முஸல்மான்களின் சங்கமும் அதன் கட்டுப்பாடும், உழைப்புந்தான் என்பது உலகறிந்த உண்மை. ஆகவே அன்று திவான்பகதூர் ஐ. எக்ஸ். பெரைரா அவர்கள் கூறியது உண்மை என்பதற்கு இவ்விரண்டும் போதிய சான்றுகளாகும்.

நமது நிலைமை.

நாம் இன்று என்ன நிலைமையி லிருக்கின்றோம் என்பதைச் சிறிது கவனிக்கவேண்டும். அவ்வாறு கவனிக்கின்றபொழுது நம்மைச் சுற்றியிருக்கிற சமூகங்களும் எப்படி இருக்கின்றன என்பதையும் ஆராய வேண்டும். நம்முடைய குலப் பெருமையைப் பற்றிப் பேசுகின்றோம். ஜலப் பிரளயத்திற்கு முன்னுடியேயுள்ள சரித்திரங்களைப் புரட்டிப் பிரமாதப் படுத்துகின்றோம். இவைகள் அவசியந்தான். ஆனால், இவைகளினால் நம்மிடையே காணப்படும் பசி ஒழியுமா? பிணி தொலையுமா? நம்முடைய தரித்திரம் நம்மை விட்டகலுமா? நம்முடைய நிர்ப்பாக்கிய நிலைமை மற்றொருபக்கம் மூட்டை கட்டப்படவேண்டும். நாம் அஷ்டதரித்திரர்களா யிருந்துகொண்டு, நம்முடைய துன்பத்தை யொழிக்க வழிதேடாமல் நாளுக்கு நாள் க்ஷீணதசை யடைந்துகொண்டிருந்தால் நம்முடைய பழம் பெருமையைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பதில் யாருக்கு என்ன பயன்?

கண்கொண்டு பாருங்கள்.

பழம்பெருமை படைத்த தூத்துக்குடியில் இம் மலர் உங்கள்கரங்களில் இன்று குதித்து விளையாடிக் கொண்டிருக்கின்றது. நகரத்தைச் சுற்றிப்பாருங்கள். கண்களை உயர்த்திக் கட்டடங்களைப் பாருங்கள். நீங்களும் உங்கள் பெற்றோர்களும் சில ஆண்டுகளுக்கு முன் இது போன்ற இரதோற்சவத்திற்கு விஜயம் செய்திருப்பீர்கள். அல்லது மற்றவர்கள் வாயிலாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அன்றிருந்த தூத்துக்குடியா இன்றுள்ள தூத்துக்குடி? நம்முடைய தெருக்களெங்கே? நம்முடைய வீடு வாசல்கள் எங்கே? நம்முடைய மாட மாளிகைகள் எங்கே? நம்முடைய வர்த்தகமெங்கே? நம்முடைய செல்வாக்கெங்கே? சீரெங்கே? சிறப்பெங்கே? புகழ் எங்கே? இதுபோன்ற உற்சவங்களில் உங்களை வரவேற்று உபசரிப்பதற்குக் குடிசைகளா கட்டினோம்? கள்ளிக்காடும், காட்டுப்புறமுமா தங்குமிடங்களாயிருந்தன? நமது மக்கள் இருபத்தைந்து வருடங்களுக்குமுன் வாழ்ந்த இடங்கள் எங்கே? இப்பொழுது வாழ்ந்து வரும் இடங்கள் எங்கே? அன்று நாம் குடியிருந்த வீடுகள்தானே இன்று 'பிளேக்' கைக் கொண்டு வந்து நூற்றுக்கணக்கான நமது மக்களைக் கொள்ளை கொண்டுபோன, பெருச்சாளிகளின் வாசஸ்த[ல]... விளங்கும் கிட்டங்கிகளாக அமைந்துள்ளன.

என்ன இருக்கின்றது?

நமக்கு நமது தலைநகராகிய தூத்துக்[குடியில்] என்ன இருக்கின்றது? குடியிருக்கக் கு... நமக்குப் பெரும்பாலும் ஒதுக்கப்பட்ட இடம்... வாயும் ஓனாய்த்தெருவு மாகத்தானே இரு... நமக்கென ஒரு வியாபாரமுண்டா? வர்த்தகமு... தொழிலுண்டா? கடல்தொழிலிலும் கை... முனைந்து விட்டது ஒரு கூட்டம். படித்தவர்... கலாம். நம்முடைய ஜனத்தொகைக்கும், நம்... அந்தஸ்துக்கும், நம்முடைய புகழுக்கும் தகு... வில் படித்தவர்களிருக்கின்றார்களா? எத்... குப் போனாலும் மற்றவர்களில் நூறு பே... பார்த்தால் நம்மவரில் பத்துப் பேரைப் பார்க்... காரணமென்ன? முற் போக்கில் சிறிதும் சி... யில்லாத நமது மனப் பான்மைதான்.

பரத மகாஜன சங்கம்.

நமது சமூகம் முன்னேற்றமடைய வே[ண்டு]... யானால்—நமது பழம் பெருமை நிலைநாட்... வேண்டுமேயானால்—நம்முடைய நாடு நமக்... நமது நாட்டின் உரிமை நமக்கே என்ப... பொழுது உண்மையென நிரூபிக்கப்பட்... போல், நமது நகரம், அதன் உரிமை நமக்கே ... உண்மை அனுஷ்டானத்திற்கு வரவேண்டுமே... நாம் ஒரு விதி செய்வோம். அதை எந்நா... போம். அந்தவிதி மகாஜன சங்கத்தில் அங்... பதென்பது. அந்த விதியை எந்த நாளும் கா... என்று நாம் விரதங் கொள்ளவேண்டும்... னேற்றத்திற்கு இது தவிர வேறு வழியில்லை... னில், தங்கம் செய்யாததைச் சங்கமே செய்...

சாதித்ததென்ன?

பரத மகாஜன சங்கத்தை நிறுவுவத[ற்கு]... பெரும் பங்கு பெற்றுள்ளேன் என்பதைப் ... யுடன் சொல்லுகிறேன். ஏனெனில், இதை... பெருமைப்படுவதற்கு வேறொன்றுமில்லை. ... பொன் நாட்டிற்கும், உதித்த உயரிய குல... நான் தொண்டு செய்தேன் என்கிற பெரு... எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொ... பரத மகாஜன சங்கம் மகா சிக்கலான கா... ஆரம்பிக்கப்பட்டது. என் போன்ற சி... பர்கள் கூடிப் பரத பால்ய சமாஜத்தை ... தோம். அதன் மூலம் பரத மகாஜன ச[ங்கத்தை] நிறுவினோம். எதிர்ப்பு எம்மை எதிர் நோக்... றது—சாமான்யமான எதிர்ப்பல்ல—அ... ஞானம், அறிவு விசாலம், நெஞ்சுரம், ... எழுத்துப் பலம் முதலியன கொண்ட ... எதிர்க்க வேண்டியிருந்தது. சிறுவர்களா... எதிர்த்தோம், தியாகங்கள் புரிந்தோம்... பட்டோம், ஏச்சுப் பேச்சுக் கேட்டோம்... களுக்குள்ளானோம். ஆனால் முன்வைத்... பின்வாங்கவில்லை. வெற்றி கண்டோம். ... சங்கம் வேரூன்றினது. இவ்வாறு ...

கோட்டையாகிய பரத மகாஜன சங்
பொழுது சிலர் எள்ளி நகையாடுகின்
அது என்ன சாதித்துவிட்ட'' தென்கிற
கேள்வியைக் கேட்கின்றனர். அதற்கு
டை போடுகின்றனர்.

தோ!

ன சங்கம் என்ன சாதித்தது என்று கேட்
நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.
ருடம் நூற்றுக்கணக்கான பரதகுலச் சிறு
த்துப் 'பாஸ்' பண்ணி வருவதொன்றே
த்தனைக்குச் சிறந்த சான்று. இந்தமட்டுமா
கின்றதே. இதுபோதாதா? தூத்துக்குடியி
ரதா ஹோம' என்னும் நிலையத்தில் வருடா
000 பேருக்கதிகமானவர் தங்கிப் போகிறார்
இது எதனால் ஏற்பட்டது? பரத மகாஜன
லன்றோ ஏற்பட்டது? கொழும்பு அர்ச்.
நிதியிலிருந்து, பல்லாயிரக் கணக்கான
குறைந்த வட்டிக்குத் தேவையான பணம்
செய்தது எது? இந்தப் பரத மகாஜன
னே!

ல்வது எளிது......ஆனால்...?

சொல்வது இலகுவான காரியம். குறை
றவர்கள் உருப்படியான திட்டங்கள்
ந்து அவற்றை நிறைவேற்றப் பாடுபடுதல்
கட்டின கட்டடத்திற்கு வக்கணை கூறுவது
து. குறை சொல்லுகிறவர்கள், முதன்
ங்கள் இந்த மகாஜன சங்கத்திற்கு என்ன
ள், அதன் முன்னேற்றத்திற்காக என்ன
கூறினார்கள், என்ன உதவி செய்தார்
ன முயற்சி யெடுத்தார்கள் என்பதைத்
ஞ்சில் கரத்தைவைத்துச் சிந்தனை செய்தல்
மகாஜன சங்கம் நாம் எதிர்பார்த்தபடி
அதிகமாய் ஒன்றும் செய்யவில்லை யென்
ஒப்புக்கொள்ளுகிறேன். அப்படியாயின்.
குற்றம்? பொது ஜனங்கள் குற்றமென்ப
பாகாது. நாம் மகாஜன சங்கத்தைத் தட்டி
கொண்டிருந்தால், அது இன்னுமதிகமாய்ச்
செய்துகொண்டிருக்கும். வருடா வருடம்
வாரத்தில் உண்டியல் வசூல் செய்ய
மென்று தீர்மானித்திருக்கிறோம். இக் கட்
ன்று, எத்தனை ஊர்கள், சங்கங்கள் வசூல்
வென்று கேட்கிறேன், எத்தனை பேர் உதவி
என்று கேட்கிறேன், காங்கிரஸ் மகாசபை
பட்டு 60 வருடங்களுக் கதிகமாகின்றன.
ரிய சங்கமும் தனது இலட்சியத்தை நிறை
வருடங்கள் சென்றன.

சேல்க.

றது செல்லட்டும்! இப் பரதகுல மகா
மக்களின் நல்வாழ்வுக்கு ஐந்து வருடத் திட்
கப்போகின்றார்கள். இத் திட்டத்தில் நமது
த்தையுஞ் செலுத்துவோமாக. ஆங்காங்கு
ங்கங்கள் நிறுவி மகாஜன சங்கத்தைப் பலப்
வாமாக.



திவ்ய சந்த மரிய தஸ்நேவில் மாதா கோவில் பங்குக் குருவாயிருந்த சங் ஜே. ஜே. பின்டோ சுவாமியும் அவர் சகோதரர் சங். எம். ஜே. பின்டோ சுவாமியும்.



தர்மவாளன் என்றபேர் வாங்கிய தூத்துக்குடி முதல் பாதகுல முனிசிபல் சேர்மன் ஸ்ரீ. ஜே. எம். பி. ரோச் விக்டோரியா.

23-7-'47 புதன் முதல்

●

தினசரி இரவு 9-30 மணிக்கும்

ஞாயிறு மட்டும் மாலை 7 மணிக்கும்

●

நவாப் ராஜமாணிக்கம்
அவர்களின்

மதுரை
தேவி பால விநோத
சங்கீத சபையார்



தூத்துக்குடி மேற்றிராசன பாதுகாப்பாளரும், வைக்கர் ஜெனரலுமான

மிகவும் சங். எஸ் மரியதாஸ் சுவாமி அவர்கள் முன்னிலையிலும், தலைமையிலும்

நடைபெற்ற


இயேசுநாதர் சரித்திரம்

அதியற்புத சீன் ஜோடனைகளுடன்

தூத்துக்குடி பாலகிருஷ்ண தியேட்டரில்
நடந்து வருகிறது

சிந்து வெளித் தமிழ் மக்களின் சித்திர விளக்கம்.


பண்டித எம். எச்ஸ். நபின் வர்மா.



1. மஞ்சுதரு (Mohanjidaro) என்ற மண்மேடு.

கி. மு 5,000


சருவலோக கர்த்தாவாகிய கிறிஸ்துபெருமான்
ப்புக்கு 5,000 ஆண்டுகளுக்கு முன்னர், தமிழ்
ளாகிய மீனவரும், அம்மீனவரினின்று தோன்
பரவரும் செங்கோல் செலுத்திய நகரம் இருந்த
ம் மஞ்சுதரு என்ற இம் மண்மேடே. எழுபது
உயரமுடைய இம்மண்மேடு சிந்து ஆற்றின்
ங்கே ஒரு சதுர மைல் பரப்புடையதாய்க் கிடக்
றது. இதில் பத்தில் ஒருபாகமே இப்பொழுது
ண்டப்பட்டு ஆராய்ச்சி நடைபெற்றுள்ளது.
வாராய்ச்சியால் சரித்திர உலகம் வியப்புற்றுத்
க்கிடுகின்றது என்கிறார் அறிஞர்கள். மறைந்து
ந்த தமிழ் மக்களின் வரலாற்றை விளக்கும் கழ
இம் மண்மேடென்றால் வழுவன்று. இருக்கு
த்தில் கூறப்படும் தமிழ் மக்களின் எழுவகை
ண்மனைகளும், தொண்ணூறு கோட்டைகளும்
மணல் திடரில் புதைந்திருக்க வேண்டுமென
ய்ச்சியாளர் கருதுகின்றனர். மீனடு பரவர்
என்ற இரு தமிழ் நாடுகளும் இச்சிந்துக்கரை
தோன்றிய சரித்திரம் இங்குத்தோண்டியெடுக்
ட்ட சித்திர எழுத்துள்ள (Inscriptions) கல்
டுகளால் இனிது புலனாகின்றது. ஆரியர் சிந்து
ியில் குடிபுகுந்த காலத்தில் நாகரிகத்துடன்
மக்கள் வாழ்ந்த நகரம் இம்மஞ்சுதரு நகரம்
. இதற்கு "நீண்டூர்" என்பது பண்டைப்
ர்.



2. மஞ்சுதரு நகரின் ஓர் அழகிய தெரு.

கி. மு. 5,000

மஞ்சுதருவின் பூமியில் தோண்டியெடுக்கப்பட்ட இத்தெரு முக்கால் கல் (mile) நீள முடையது, 33 அடி அகலமுடையது. இதன் இருபுறத்தும் மக்கள் நடந்துசெல்லும் நடைப் பாதையும் (platform) அமைந்துள்ளது. இத்தெருவில் சிந்து மண்டில மாட்டுவண்டிகள் மூன்று ஒரே வரிசையிற் போக வசதி காணப்படுகின்றது. நல்ல காற்றோட்டத்தை எதிர்பார்த்துத் தெருக்கள் கிழக்கு மேற்காகவும், தெற்கு வடக்காகவும் அமைக்கப்பட்டுள்ளன காற்றோட்டங்கருதி, தெருக்களை அமைத்துள்ள முறை நாகரிக மக்களாய் வாழ்த்தப்படும் "பபிலோனியர்" பட்டினங்களிலும் காண்டல் அரிது என்கிறார் சரித்திர ஆசிரியர்கள். எனவே, பண்டைத் தமிழ் மக்களின் நாகரிகத்தை என்னென்று புகழ்வோம்!




3. மஞ்சுதரு நகரிலுள்ள ஓர் பெருங்குளம்.

கி. மு. 5,000

மஞ்சுதரு மண்மேட்டில் கண்டுபிடிக்கப்பட்ட செயகுளத்தின் அலங்காரத்தைச் செப்புக்கிறமை

எமக்கில்லை. இதனை ஸர். ஜான் மார்ஷல் என்பார் 1925-1926ல் கண்டறிந்தார். இதிற் தண்ணீர் நிற்கும் இடம் மட்டும் 40 அடி நீளமும், 23 அடி அகலமும், 8 அடி ஆழமும் உடையது. இத்தடாகத்திற்கு ஒழுங்கான படிக்கட்டுகளும், நாற்புறமும் நடைவழி யிருக்குமாறு நாலரை அடி அகலமுள்ள சுவரும் எழுப்பப்பட்டுள்ளன. அச்சுவருக்கு அப்பால் தடாகத்தைச்சுற்றி ஏழடி அகலமுள்ள பெருஞ் சுவரும் அமைந்துள்ளது. அதன்மீது நடைவழியும் உளது. இக்குளத்திற்கு வடபால் எட்டு அறைகள் கட்டப்பட்டுள்ளன. 5000 ஆண்டுகளுக்குமுன்னுள்ள இக்குளத்தைக்கொண்டே இக்குளத்தில் நீராடிய தமிழ் மக்களின் பண்டை நாட் பதவியை எவரும் உணர்ந்துகொள்வர்.



4. மஞ்சுதரு மீனவரின் புராதனக் கிணறு.

கி. மு. 5,000

மஞ்சுதரு நகரம் வீட்டிற்கோர் கிணறு கொண்டதெனச் சொல்வதற்கு அங்கு மலிந்து தென்படும் கிணறுகளே சான்றாகும். இங்கு நிலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மாளிகையின் அண்மையில் அமைந்த பெரிய கிணறு இதுவாகும். இக்கிணறு நன்னீர் சுரப்புடையது. இத்தண்ணீர் சிந்துவெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள ஆன்றோர்க்கும், அங்குள்ள தொழிலாளர்க்கும் குடிக்கவும், குளிக்கவும் உரியதாயிற்று. இக்கிணறு தென்படுமுன் இவர்கட்கு வேண்டிய நன்னீர் இரண்டுகல் தூரத்திலிருந்து வண்டிகளிற் கொண்டுவரப்பட்டது. அப்பால் இப்புராதனக் கிணற்று நன்னீரை உண்டு அதிற் குளித்து இன்புற்ற மக்கள் ஆங்கு முன்னாள் வாழ்ந்த மீனவர், பரவர் ஆதிய தமிழ் மக்களை நினைந்து களிப்புற்று மகிழ்ந்தனர்.



5. வணங்காமுடிப் பரவன்.

கி. மு. 320

மா வீரம் பொருந்திய வணங்காமுடிப் பரவன் என்ற இத்தமிழ் வேந்தன் கிறிஸ்து பிறப்பிற்கு 320 ஆண்டுகளுக்கு முன்னர் வேற்றரசர் நடுக்குறச் சிந்துக்கரையில் வாழ்ந்தவன். அன்னவன் முப்பதாயிரம் காலாட்படையும், நாலாயிரம் குதிரைப்படையும், ஐந்நூறு தேர்ப்படையும், மும்மதங்கொண்ட யானைப்படையுமாகிய இரத கஜ துரக பதாதி என்ற சதுரங்க சேனையையுடைய தமிழர் போரேறாய் விளங்கினான். இந்நாளில் மகா அலெக்ஸாண்டர் (Alexander the Great) என்னும் மஸிடோனியா (Macedonia) தேயத்துச் செங்கோல் கொண்ட கிரேக்க மன்னன் திக்குவிசயஞ் செய்யக் கீழ்த்திசை நோக்கிப் பதினேழாயிரம் சேனையோடு புறப்பட்டான். இன்னவன் கைபர் கணவாயின் வழியாய் நாவலந் தீவினுட் புகுந்து சிந்துக்கரை வந்தெய்தினான். அக்காலையில் காந்தார அரசனாகிய குறுநில மன்னன் "ஆம்பி" என்பவனுக்கும் "பரவன்" என்ற பெருநில மன்னனுக்கும் பகை விளைந்து கொண்டிருந்தது. ஆம்பி என்பான் மன்னன் பரவனைச் சீர்குலைக்க இதுவே தருணமென மனதிலுன்னிக் கிரேக்க மன்னனுக்குத் துணையாய் நின்று அங்குள்ள அரசியலின் மருமமெல்லாம் அலெக்ஸாண்டருக்குச் சாற்றினான். அப்பால், யவனர் இறைவனுக்கும் தமிழர் அரசனுக்கும் பெரும் போர் தொடங்கியது. தமிழர் படையானது யவனர் படை முன் வேங்கைக் கூட்டங்கள்போல் எழும்பிப் போர் பொருதியது. இரதப் படையின் அம்பு பட்டு அலெக்ஸாண்டரின் மா பெரும் போர்க் குதிரை மண்ணில் வீழ்ந்து மாண்டது. குதிரை மாண்ட துயரத்தால் மனமுடைந்த அலெக்ஸாண்டர் மன்னன் தனக்குத் தலைவணங்கினால் யுத்தத்தை நிறுத்திவிடுவதாக அரசன் பரவனுக்கு அறிவித்த

"எம்முடி எவரையும் வணங்காதமுடி, தலைவணங்குவேமாகில் யாம் பாலுண்டு வளர்தற்குக் காரணமாயிருந்த குருதி கொப்புளிக்கும் வாளையுடைய எம் வீரத் தாயின் இருமுலைகளுக்கும் பகைவன் ஆவேம்; வெற்றியின்றேல் போர்க் களத்தில் உயிர்விடலே மேன்மை" என அரிமாபோல் கர்ச்சித்துப் போர்ச் சங்கை முழக்கி, மாற்றலரின் செங்குருதி வழிந்தோடும் அமர்க்களத்தில் சேனைகள் நான்கும் புடைசூழநின்று பரவர்கோன் போர் செய்தான். ஈற்றில் ஆம்பியின் கொடிய சூழ்ச்சியால் வீரக்கழல் வேய்ந்த தமிழர் வேந்தனாகிய பரவன் பிடிபட்டான்[1]. அன்னவன் பிடிபட்டும் தன்னையோர் அரசனைப்போல் நடத்தவேண்டுமெனக் கிஞ்சித்தும் அஞ்சாமல் ஆர்ப்பரித்தான். இதைக்கேட்ட பெரு மாண்புடைய மகா அலெக்ஸாண்டர் பரவனின் ஆண்மையைப் புகழ்ந்து, முன்னிலும் விரிந்த பூமியை இவ்வணங்காமுடி வேந்தனுக்கு வழங்கிச் சென்றான். இந்நிலாப்பரவன் என்ற மன்னர் மன்னவனைப் புரூரவன் புரூரவஸ்[2] பரவாஸ், போரஸ், புருஷோத்தமன் எனப் பல்வேறு மொழிகளின் உச்சரிப்பு வேறுபாட்டால் திரிபுற்ற பெயர்கள்கொண்டு அழைப்பர் சரித்திராசிரியர்கள். நாமதேயங்கள் பாஷைகள் வேறுபாட்டால் திரிதல் இயற்கை. சுள்ளிஎன்ற கடலுடன் கலக்கும் இடத்து விளங்கிய பெருந் துறைமுகமாகிய வளங்கெழு "முசுறி" (அகம் 149) என்ற பட்டினத்தை "முரசி" பத்தனமென இராமாயணத்தில் வான்மீகரும், "மரிசி" பத்தனமென "பிரகத் சம்கிதை"யில் வராகமிகிரரும், அரசரை[3] அசுரர் என இருக்கு வேதத்திலும் திரித்து வழங்கல் இதனை வலியுறுத்தும் மேற்கோள்களென்க. ஆயினும், "புராதன இந்தியர்" என்ற கட்டுரையில் திரு. கிருஷ்ணசுவாமி ஐயங்கார், எம். ஏ. அவர்கள் இந்நிலாப் பரவன் என்ற சார்வ பூமனைப் புரூரவன் எனக் குலச் சார்புபற்றியே கூறியுள்ளார் எனப் புலனாகின்றது. பாரத இதிகாசத்தில் கூறப்படும் புதனின் மகன் புரூரவன் என்ற சக்கரவர்த்தியும் நிலாக் குலத்தவனாகையால் ஐயங்கார் திரிபுபடக் கூறியபெயரிற் பழுதில்லை யென்றே பகர்வாம்.



6. எகிப்து நாட்டை ஆண்ட மீனன் என்னும் அரசன்.
கி. மு. 4,500.

செழிப்புற்ற சிந்துக்கரையுள்ள "மீனா"ட்டை ஆண்ட தமிழ் மக்களாகிய மீனவர் ஆப்பிரிக்காவின் வடபகுதியில் நீல ஆறுபாயும் "வளமுடைய வெளி" என்னும் எகிப்து நாட்டையும் ஆண்டுவந்தனர். எகிப்திய குருவாகிய "மனேதா" என்பவன் எகிப்தை அரசுபுரிந்த மீனவன் முதலிய 330 அரசரின் புராதன வரலாற்றை எழுதிவைத்துப் போயினன். தமிழர் எகிப்து சாதியைச் சேர்ந்தவரெனச் சில ஐரோப்பியர் முடிவு கட்டுகின்றனரென்று "தமிழுணர்ச்சி" என்ற நூலில் சுவாமி சுத்தானந்த பாரதியார் சொல்லுகின்றனர். ஆசிரியர் "ஹீரன்" என்பவர் எகிப்தியர் மண்டையோடும் தமிழரின் மண்டையோடும் ஒன்றோடொன்று ஒத்திருத்தலை எடுத்துக் காட்டுகின்றார். டாக்டர் வில்பர்ட் விலேட்டர் தமிழர் எகிப்து தேசத்திலிருந்து இங்கே போந்தனர் எனக் கூறுகின்றார். எகிப்தின் ஆதித் தமிழரசனாகிய இம்மீனன் மீன் வணக்கமுடையவனாய் மீனக் கொடி பறக்க ஆண்டான். இவ்வரசன் மரபினராகிய மீனவர் 250 ஆண்டு எகிப்தை அரசுபுரிந்தனர். இம்மீனன் குலமன்னரில் ஒருவனாகிய "அகன்" என்பவனின் உடலும், கலன்களும், ஆயுதங்களும், புடைவைகளும், பொன்னாபரணங்களும் "நாகதம்" என்ற ஈமக்காட்டில் தோண்டி எடுக்கப்பட்டன.

"சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுப்போர்
தாழ்வையின் அடைப்போர் தாழியிற் கவிழ்ப்
போர்"
(மணிமேகலை)

---

1. இலங்கை "வீரகேசரி" யில் 24-11-40ல் வெளிவந்த "பாரதபூமியில் கிரேக்கர் படையெடுத்த விபரம்" என்ற கட்டுரை காண்க.

2. "புராதன இந்தியர்" by Mr. Krishnaswamy Iyengar, M. A. Bangalore. "செந்தமிழ்" ஆறாந் தொகுதி காண்க. Vide "Bharatha Nattu Charitram" by Mr. R. Tirunarayana Iyengar, B. A; L. T. (Approved by the Text book committee, Madras - 1945.)

3. சுவாமி வேதாசலம் எழுதிய "பண்டைக் காலத் தமிழரும் ஆரியரும்" என்ற நூல் காண்க.

என்ற மாந்தரின் இறுதிச் சடங்குகளில் ஒன்றாகிய "தாழ்வையின் அடைத்தல்" என்ற சமாதி கட்டி அடக்கஞ் செய்யும் தமிழர் முறையே இவ்வெகிப்திய மீனவரின் வழக்கமாயிருந்தது. மாண்டோர் மீண்டும் உயிர்பெற்று எழும்புவர் என்ற நம்பிக்கையை இம்மீனர் கொண்டதினால் இறந்தவர் உடல்களை நன்கு பாதுகாத்துவந்தனர். அவ்வுடம்புகள் "மம்மி" என்றழைக்கப்படும்.



7. எகிப்தில் செங்கோல் ஓச்சிய பரவன் என்ற தமிழ் வேந்தன்.

கி. மு. 4,000

சிந்து வெளியுள்ள பரவர் நாட்டை "நிலாப் பரவர்", "பகல் பரவர்" என்ற இரு இனத்தவர் ஆண்டனரெனச் சிந்துவெளிக் கல்வெட்டு செப்புகின்றது. வளமார்ந்த பரவர் நாட்டைப் புரந்த இப்பரவர் எகிப்து நாட்டை ஆண்டதுமன்றி, ஆப்கனிஸ்தானம், பலுஜிஸ்தானம், மெஸபோட்டோமியா முதலிய நாடுகளிலும் பண்டை நாள் பரவி வாழ்ந்தனர். ஆப்கனிஸ்தானம், பலுஜிஸ்தானம் என்ற நாடுகளில் தமிழ் மொழியுடன் சம்பந்தமுடையதாய் வழங்கும் "பிராகி" என்னும் பாஷையும் புராதன வட நாட்டின் தமிழரசுக்கோர் எடுத்துக்காட்டாகும். பிராகி, பாலி, திமில் என்ற பாஷைகள் தமிழ் மொழியின் சிதைவு என ஆசிரியர் ஹண்டர் (Hunter) கூறுகின்றனர். இப் பரவன் என்ற தமிழ் வேந்தன் கி. மு. 4,000 ஆண்டுகளுக்கு முன் செங்கோல் செலுத்தியவன். இவன் காலத்தில் யூதர், யவனர், உரோமர் என்பவர் இவன்பால் தமது நாகரிக வாழ்க்கைக்கு வேண்டிய பொருட்களையும் வித்தைகளையும் கற்றனரென மேனாட்டு ஆசிரியர் பலர் பகர்கின்றனர். இவ்வரசன் யானைக்கொம்புகளிலும், பப்பீரஸ் ஓலைகளிலும், கலன்களிலும், கற்பாறைகளிலும் வேட்டல், படை பயிற்றல், கப்பற் கட்டல், தெய்வந்தொழுதல் முதலிய காட்சிகளையும் வரலாறுகளையும் வரைந்துவரும் ஓவியர்களுக்குப் பரிசளித்து வந்தனன். இதனால் எகிப்தியர் இவனைக் "கொடை வள்ளல்" எனப் போற்றினர். இவன் மாந்தரிகத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவன். "மந்திர ஒலிகளாற் செய்யக்கூடிய மாற்றங்களையும் தமிழர் அறிந்திருந்தனர்" என அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல். அவர்கள் எழுதிய "தமிழர் சமயம்" என்ற நூலின் கூற்றும்,

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரமென்ப"

என்னும் தொல்காப்பியர் சூத்திரமும் சிந்திக்கற்பாலனவென்க. கெய்ரோவிலுள்ள இவ்வரசனின் கல்லறையைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் திறக்க முயன்றபொழுது திடீரெனச் சிலர் சடுதி மரணத்திற்குள்ளாயினர். ஆசாரத்துடன் அடக்கஞ் செய்யப்பட்ட அரசனின் கல்லறையைத்திறந்து சடலத்தைத் தீண்டியதால் இறந்த இறைவனின் ஆவி அன்னவரைக் கொலைசெய்தது என்று எகிப்து மக்கள் சொல்லி அச்சமுறுகின்றனர். இப்பரவன் என்ற தமிழ் வேந்தனைப் "பரவோன்" எனவும் "பார்வோன்" எனவும் எழுதுவர் நூலாசிரியர். "பெயர் வினையிடத்து னளரய ஈற்றயல் ஆ ஓ வாகலும் செய்யுளில் உரித்தே" என்ற நன்னூல் விதிக்கேற்பக் கிழவன் என்ற சொல் கிழவோன் என வருதல்போல் பரவன் என்னுஞ் சொல் பரவோன் எனவும், பொழுது எனுஞ்சொல் போழ்து என நீளல் போல் பரவன் எனும் பதம் பார்வோன் எனவும் நீண்டு வழங்கினவென்க. எகிப்தியர் இவ்வாதிமீனன் வழித்தோன்றலாகிய பார்வோனைப் "பாரோ" (Pharoh) என்பர். இப் பாரோ என்னுஞ் சொல் பரவன் என்ற தேம்படு தமிழ்ச் சொல்லின் திரிபாகும். எகிப்தியக் குடிகள் இப் பார்வோனை அரண்மனையுடையான் என்னும் பொருளுள்ள "பெரா" (Peraa) என அழைப்பர். Per = மனை, aa — பெரிய; ஃ Peraa — Great house — அரண்மனை. எனவே, பெரா என்பது பார்வோனுக்கு ஆகுபெயர் என்க. இற்றைக்கு 3,500 ஆண்டுகளுக்குமுன்னர் "மோசே" என்ற "கிறிஸ்துமறை மகாத்மா" வால் எழுதப்பட்ட விவிலிய நூலிற் கூறப்படும் பார்வோன் மன்னர் யாவரும் பரவர் என்ற தமிரசர் என்ப. "எகிப்து நாட்டைத் தம் கீழ்ப்படுத்தி அங்கு அரசாட்சியை நிலைநாட்டியவரும் பரதரே" எனப் பண்டிதர் டி. சவரிராய பிள்ளை, எம். ஆர். ஏ. எஸ். அவர்கள் எழுதிய "தமிழர் பழமை" என்ற நூற்கூற்றும் இதனை வலியுறுத்தாநிற்கும்.



8. நிலா அரசன்.

கி. மு. 3,000

சிந்து வெளியில் செங்கோல் ஓச்சி, எகிப்தி லும் தம் அரசை நிலைநாட்டிய மீனவர் என்ற பரவர் "டெல்கி" என வழங்கப்பெறும் அத்தினபுரத் திலும் தங்களின் தமிழரசை நிலைநாட்டினர். இவ் வத்தினபுரப் புராதன வரலாறு முதலிய தமிழரின் ர்ணபாரம்பரையாவும் ஒருங்கே தொகுத்துத் தமிழ் முனியாகிய வியாசர் ஆரியரின் வேண்டுகோட் ையைந்து மகாபாரதம் என வடமொழியில் இயற்றி வைத்தனர் என்பது பண்டைநூற் கூற்று. பரதர் ல்லது பாரதர் சரித்திரம் "பாரதம்" எனப்படும் ன்பர் சரித்திராசிரியர்கள். "பாரதா பஞ்சமோ வேதா" என்பது வடமொழிச் சுலோகம். பல்வள மலிந்த அத்தினபுரத்தின் முதலரசன் இரட்டைக் கயற்கொடி தாங்கிய மஞ்சுதரு மீனவரின் இனிய தமிழ்க் குடியினின்றெழுந்த நிலா அல்லது சந்திரன் எனப் பெயர்கொண்ட தமிழ் மன்னன் என்க. இந் நிலா அரசன் தந்தை அத்திரி[4] யென்ற தமிழ் முனியாகிய மஞ்சுதரு நிலாப் பரவன்[5], இவவத்திரி முனிவன் நிலாக் கடவுள் வணக்கஞ் செய்தபடியால் தன் புதல்வனுக்கு நிலா என்ற நாம கரணஞ் சூட்டினன். தாய் "அனசூயை," பகல் பரவன் என்ற தக்கன் பயந்த இருபத்துநான்கு கன் னியருள் ஒருத்தி. இவ்வத்திரியையும் தக்கனையும் நவப் பிரமாக்களைச் சார்ந்தவர் எனவும், இச்சந்தி ரன் என்ற தமிழ் அண்ணலைச் சகல ஓடதிகளுக்கும் பிராமணர்களுக்கும், நட்சத்திரங்களுக்கும் அதிபதி யாகப் பகவான் பட்டாபிஷேகஞ் செய்தார் என வும் விட்டுணு புராணம் கூறுகின்றது. இருக்கு வேதத்தின் ஐந்தாம் பாகத்தை ஆக்கிய இவ்வத்திரி முனிவன் கி. மு. 2,600ல் செழிப்புற்றிருந்த பௌர வர் குலத்தின் (பரவர் குடியின்) பதினோராவது வேந்தனாகிய "இரிச்சியு" என்ற மன்னனின் மருகன் என்றார் சரித்திராசிரியர் டக்டர் எ. எஸ். அல்ட கார். "Atri", the author of the fifth book of the Rigveda, was a son-in-law of the King "Richyu", who was the eleventh ruler in the "Paurava" dynasty and flourished in 2,600 B. C. [Vide Dr. A. S. Altakar's Presidential address at the Archaic section of the Indian History Congress at Calcutta-All India Vol VI, No. 1.] தனித்தமிழ்ப் பழஞ்சொல்லாகிய பரவர் என்ற பெயரை வடமொழியாளர் பௌரவர் எனத் தமது பாஷைக்கிசையத் திரித்துவழங்கினர் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

---

4. ஓர் இனத்தைச் சேர்ந்த அத்திரி, கண் ணுவர், விசுவாமித்திரர் என்னும் மூன்று மரபின ரும் தமிழர் அல்லது பரதர் ஆவர் என ஆரியர் தமி ழர் கலப்பு என்ற நூலில் ஆசிரியர் சி. கந்தையா பிள்ளை கூறுவர்.

5. நிலவைத் தொழுவோர் நிலாப் பரவர் என வும்; பகலைத் தொழுவோர் பகல் பரவர் எனவும் பெயர் பெற்றனர். நிலாப்பரவர், பகல் பரவர் என்ற இரு தமிழினங்களையே ஆரியர் சந்திரகுலம், சூரிய குலம் என புராணேதிகாசங்களில் எழுதிவைத் தனர். பகல் என்பதற்குச் சூரியன் என்பது பொருள். "தினகரன் பகலே சோதி" என்றார் சூடாமணி நிகண்டாசிரியர்.

6. சிந்துக் கரையிலிருந்து சென்ற தமிழ் மக் கள் என்ற "சமேரியர்" வாழ்ந்த நகரங்களில் ஒன் றாகிய "ஊர்" நகரில் நிலவுக்கடவுள் கோவிலும், பகற் கடவுள் கோவிலும் புதைபொருள் ஆராய்ச்சி யிற் கண்டெடுக்கப்பட்டன. (Vide Sir L. Wooley' 'Ur" of the Chaldees and Abraham H. R Hall's A Season Work at "Ur".)



9. பரத சக்கரவர்த்தி

கி. மு. 2,500.

அத்தினபுரத்தை ஆண்ட நிலா அரசனின் இருபத்திரண்டாவது தலைமுறைப் பேருகத் "துட்டியந்தன்" என்னும் தோன்றல் தோன்றினன். இத்துட்டியந்தன் பெண்டுகட்குரிய நான்கு நற்குணங்களும் மலிந்த, வெண்மதியையும் வெல்லும் முகம் வாய்ந்த சேயிழையாகிய "சகுந்தலை"யை வையகத்தையும் வானகத்தையும் படைத்தவனைச் சாட்சியாக வைத்துத் திருமணஞ் செய்தான். இச்சகுந்தலைவயிற்றில் இளஞ்சிங்க ஏறுபோல் "பரதன்" என்ற சக்கரவர்த்தி உதித்தான்.

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னனுயிர்த்தே மலர்தலை யுலகம்"—(புறம்)

என்றவாறு உலகிற்கு உயிர்போன்ற இத்தமிழ்ச் சக்கரவர்த்தி தன்னுயிர் அனைய ஏனைய உயிரையும் புரந்து மாற்றலர் அடிபணியப் பொன்னும், நன்மணியும், முத்தும் புனைந்த முக்குடை நிழலில் வீற்றிருந்து விரிந்த ஞாலத்தை ஆண்டுவந்தான். புள்ளினங்கள் விரும்புகின்ற வில் உமிழும் வேல் தாங்கிய இப்பரத சக்கரவர்த்தியால் இந்நாவலந் தீவென்ற நிலப் பரப்பிற்குப் "பரதகண்டம்" என்றும், இவன் இனத்தவராகிய மஞ்சுதரு நிலப்பரவர் என்ற தமிழ்மக்கட்குப் பரதர் என்றும் இவர் வரலாற்றிற்குப் பாரதம் என்றும் பெயர் விளங்கின. "இப்பரதன்முதல் சந்திர குலத்திற்குப் பரதகுலம் என்றும், அம்மரபின் அரசர் கதைக்குப் பாரதம் என்றும் பெயர்" என மகாபாரதம் ஆதிபருவம் துட்டியந்த மகாராசன் சருக்கத்திலும் கூறப்பட்டுள்ளது. "பழைய தமிழ்மக்களுள் போர் வலிமையில் மிகச் சிறந்து நின்ற பரதர் தங்குடியிற் றோன்றிய அரசர்களே இவ்விந்திய நாடு முழுமையும் ஆண்டுவந்தனர். அது பற்றியே அவர்களின் செங்கோல் நிழலில் வந்து வைகிய ஆரியமக்கள் இவ் விந்திய நாட்டைப் 'பாரத வருஷம்' என அழைப் பாராயினர்" என்று சரித்திர ஆராய்ச்சியில் வல்ல மறைமலை[7] அடிகளும் கூறுகிற்பர். மேனாட்டுப் பண்டிதராகிய டாக்டர் வின்சலோ என்பார் தம் அகராதியில் பரதன்—S. A Sovereign, the son of Dushyanta by Sagunthalai, after whom India is called பரத கண்டம்—பரதன் S. A. King of the Lunar race, சந்திர குலத்தோர் அரசன. His descendants are பரதர் எனவும், Rev. J. P. இராட்லர் தமது அகராதியில் பரவர்=பரதர் எனவும், பரதர்=பரவர் எனவும் பொறித்துள்ளார். சூடாமணி நிகண்டின் ஆசிரியராகிய மண்டலபுருடனும்,

"பரவு பாரதரே மற்றைப் பௌரவ ரென்னு நாமம்

குருகுல வேந்தர்க்காகும் கௌரவ ரென்றுங் கூறும்"

என இசைத்துள்ளார். இப்பரத சக்கரவர்த்தியைப் பெற்ற தமிழணங்கு சகுந்தலையின் அப்பன் விசுவாமித்திரனும் ஆத்தாள் மேனகை என்ற பெண் பாவையுமாவர். இம்மேனகையுடன் விசுவாமித்திரன் ஆண்டு பன்னிரண்டு[8] இல்லற வாழ்க்கையில் அமர்ந்து சகுந்தலையைப் பயந்தனன்; இவ்விசுவாமித்திரன் மஞ்சுதரு நிலாப் பரவன். நிலாக் குலவழியிற் றோன்றிய புரூரவனின் மூன்றும் புத்திரனாகிய "அம வசன்" வமிசத்திற் பிறந்த "காதி" என்பவரின் புதல்வன் எனப் புராணம் கூறும். இவனைச் சந்திர குலச் சத்திரியர் என வடநூல் வழங்கும். இவனே இருக்கு வேதத்தின்மூன்றும் மண்டிலத்தை ஆக்கிய வன். இவ்விசுவாமித்திரன் குடும்பத்தினர் பரதரின் புதல்வர் என்றும், பரதரில் விசேடமுள்ளவர்கள் என்றும் வேதங்கள் கூறுகின்றன. "ஆரியர்க்குக் குருவாயிருந்த வசிட்டர் இந்திய நாட்டுக்கு வருவதற்கு முன்னே தொட்டு இங்கிருந்த தமிழரிற் சிறந்த குடியினரான பரதர்கட்குக் குரு விசுவாமித்திரரேயாவர்" எனத் "தமிழர் மதம்" என்ற சுவாமி வேதாசலத்தின் நூல் கூறும். விசுவாமித்திர வமிசத்தவர்கள் பிறப்பில் தமிழர் அல்லது பரதர் என ஆராய்ச்சி வல்லுநர் டி. சவரிராய பிள்ளை அவர்கள் "சித்தாந்த தீபிகை" யிற் கூறுவர். விரமிஞ்சிய இத்தமிழ் முனிவன் வசிட்டரின் நூறு மக்களைக் கொலை புரிந்தனன் எனவும், இவன் பாடிய இருக்கு வேதப் பதிகங்களை ஓதுதல் ஆகாதென ஆர்ய மக்கள் புகல்வர். தங் குலக் குருவாய் வாய்...


---

7. "சாதி வேற்றுமையும் போலிச் சைவமு..." என்ற நூல் காண்க.

8. "பழந் தமிழ்க் கொள்கையே சைவ சமய..." என்ற மறைமலையடிகளின் நூல் காண்க.

[illegible]மித்திரனுக்கு இப்பரத சக்கரவர்த்தியால் [illegible] எனப் பரியாய நாமம்பெற்ற மஞ்சுதரு நிலாப் [illegible] கோவி லொன்றைக் கட்டி வழிபட்டு வந்த [illegible] அக்கோவில் இன்றளவும் தெற்கே கன்னியா [illegible] என்ற நகரை யடுத்த விடிந்த கரை என்னும் [illegible] பக்கத்தில் மேவிய விசயாபதியில் இருக் [illegible] இவ்விசுவாமித்திரனின் தேடற்கரியபௌத் [illegible] பரத சக்கரவர்த்தியைக்குறித்துப் பாக [illegible] புராணமும பின்வருஞ் செய்யுளைப் பாடுகின் [illegible]

நிரைத்த மா மணிக்கடனிலத்தை யன்பொடு
பரித்த தார்ப் புயத்தினன் பரதனுக்கிணை
தெரித்த நூல் வழிவினைத் திறத்தர் மூன்றென
உரைத்த காலத்தினு மொருவரில்லையால்



10. மீனவன்குலசேகர பாண்டியன்.

கி. மு. 500.

குலசேகர பாண்டியன் என்ற கோமானின் காலம் ஐந்தாம் நூற்றுண்டு என்பர் ஆராய்ச்சி வல்லார். இத்தமிழ் வேந்தன் சிந்து நதிக்கரையி லுள்ள மஞ்சுதரு நகரிலிருந்து இங்கு வந்தவன். இவ்வரசனைப் பிரம புராணம் வடதிசையிலுள்ள சக்கரபுரிப் பட்டினத்திலிருந்து வந்த பாண்டியன் எனக் கூறும். இவனது கொடி இரட்டை மீன் கொடியாம். மஞ்சுதரு மீனவர் மீனைத் தொழுத படியால் மீனக் கொடியும் மீனவர் என்ற நாமத்தை யுங் கொண்டனர். இம்மன்னனின் தலை நகரங்கள் முறையே கோற்கை, மணவூர், மதுரை என்க! இவன் கொற்கை நகரில் வாழுங்காலை, அக்கொற்கை அடுத்த கடற்கரையில் கடல்படு திரவியமாகிய வெண் சங்கும் முத்தும் கொள்வதற்காய் "சலாபத் துறை" ஒன்றை அமைத்தான். புன்னை மரங்களால் நிறைந்த அம்முத்துச் சலாபத் துறையானது "புன்னைக்காயல்" எனப் பெயர் பெற்றது. இவ்வரசன் முத்துச் சலாபத்தால் பெருஞ் செல்வம் ஈட்டினன்; மேனடுகளுடன் கப்பல் வர்த்தகஞ் செய்து பொருள் மிகத் தேடினன். இவனது திரண்ட செல்வத்திற்குக் காரணமாயிருந்த முத்தைக் கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் இராமாயணத்தில் "ஏழுலகம் புகழ் முத்து" என்றும், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் "எள்ளு கொள்ளு கள்ளும்மாற இடைக்கிடை அளக்கும் முத்து" எனவும் கூறியுள்ளார். "கொற்கையான் மாறன் குலசேகரப்பெருமான்" எனப் புலவர் கூட்டம் இவனை எஞ்ஞான்றும் வாழ்த்தும். பாண்டிய அரசர்க்குரிய சிறப்புப் பெயர்களுள் மாறன் என்ற பெயரும் ஒன்று.


செழியனே கூடற் கோமான் தென்னவன்
[வேம்பின்றுரான்

வழுதியே குமரிச் சேர்ப்பன் வையகந் துறைவன்
மாறன்

விழைவுறு பொதிய வெற்பன் மீனவன்
கைதவன் சொற்

பழைய பஞ்சவனே வெய்ய கவுரியன்
பாண்டியன் பேர்
(சூடாமணி நிகண்டு)

இக்குல சேகரமாறன் கடல் மார்க்கமாக வருஞ் சத்துருக்களினின்று தனது தமிழ் நாட்டைக் காப்ப தன்பொருட்டுப் புன்னைக்காயற் றுறையில் பல படைக் கப்பல்களை வைத்திருந்தனன். அக்கப்பற் படைகளுக்கு இக்குல சேர மாறன் தன் குலத்தில் தோன்றிய "மாறர்" என்ற மீனவன் மக்களைக் கடற் படை வீரராகக் கொண்டனன். அரசர்க்குரிய அறு தொழிலில். படை பயிற்றல், போர் செய்தீட்டல் என்ற இவ்விரு தொழில்களிலும் முதன்மை பெற்று விளங்கிய இம்மாறர் இவ்விறைவன் காலத்தில் 'கம் மாறர்' எனப் பெயர் பெற்றனர். கம்மாறர் என்பதற்குத் தலைசிறந்த மாறர், போரிற் பெருமை தங்கிய மாறர் என்பது பொருள். சலமும் வெளுப்பும் தலையின் பெயரும் ககனமும் விதியும் கம்மெனலாகும்" என்றுர் பிங்கல முனிவர். இக்குலசேகரன் தனது ஆளுகையில் குலசேகரன் என்ற நாமமும், இணைக்கயலும், நிலவும். முத்தும், தோட்டியும், கவரியும், விளக்கும், செங்கோலும் திகழ்கின்ற நாணயங்களை அடித்துத் தமிழகத்தில் பரப்பினன். இந்நாணயங்களைப் பண்டிதர் ஒப்பர்ட்டு எழுதிய "பரத கண்டம் அல்லது இந்தியாவின் சாட்சாத் குடிகள்" என்ற பிரபந்தத்தில் காணலாம். செழிப்பார்ந்த மணப்பாட்டிற்குப் பக்கத்திலுள்ள "குலசேகர பட்டினம்" இவனது அரசியலை நினைவூட்டும் குறியிடம் என்ப. இவன் கொற்கையிலும் மணவூரிலும் வாழ்ந்த பின்னர் மதுரை என்ற கூடன் மாநகரை வளம்பட அமைத்துத் தமிழ் மொழி செழிக்கத் தமிழ் நாடு களிக்க அரியாசனத்தில் அமர்ந்து ஆண்டனன். மஞ்சுதருப் பண்டையனுகிய இப்பாண்டியன் மணவூர்த் தென்னவன் மகள் "சுலோதையம்மாள்" என்ற செந்திரு கீர்த்த மாதை மணந்து மலையத் துவச பாண்டியன் என்ற மங்காத செழுந் தமிழ் மழலைவாய் மகவைப்பெற்று மகிழ்ந்து வாழ்ந்தான்.



11. விக்கிரம பாண்டியன் என்னும் சிஞ்ஞோர், சிஞ்ஞோர். தொன்ஜொவாம் தெக்குருஸ் பரதவர்ம பாண்டியன்.

கி.பி. 1543—1553.

மதுரை நகர்க்கோல் இழந்த மீனவராகிய பாண்டியர் அனுலோம பாண்டியரால் துரத்தப்பட்டு, வடுகராலும் மகமதியராலும் துன்புற்று, ஆசியரின் பண்டை மெய்ம் மறையாகிய கிறிஸ்து மதத்தைத் தழுவிய நாளில் அன்னவருள் திரு மந்திர நகரில் தோன்றிய முதலரசன் இம்மன்னனே. இவன் தந்தை அடப்ப வர்ம பாண்டியன் என்னும் நாமத்தைப் பெற்றவன். இன்னவன் மாறமங்கலத்தைப் பதியாகக் கொண்டவன். இவ்விக்கிரம பாண்டிய மன்னனின் பாட்டன் இராச குஞ்சர பாண்டியன். இவ்விராச குஞ்சரன் கங்கையும், கொன்றையும், சந்திரனுமுடைய சோமசுந்தர பாண்டியன் ஆண்ட மதுரை நகரில் பிறந்தவன். இவ்விக்கிரமன் மதகரியையுடைய மணிமாறன் அரசியற்றிய பழைய காயலில் உதித்தவன் இப்பூபதியை "மதுரை அரசாங்கத்தை இழந்து காயலைச் சேர்ந்து ஒதுங்கிக் கிடந்த பூர்வீக பாண்டிய வமிசத்தவன்" என ஆற்றார் வித்வான் சோ. சு இராமநாத பிள்ளை அவர்கள் "பரத வமிச விளக்கம்" என்னும் நூலில் எழுதியுள்ளார். பொன்னிற மேனியையும் சிங்கம் போன்ற கண்களையும், முழங்கால்வரை தோய்ந்த கரங்களையுமுடைய தென்னர்கோன் இவனாகும். தம் முன்னோராகிய பாண்டிய அரசர் புனைந்த சங்கென்னும் கொக்கரை வடிவையுடைய கிரீடத்தையும் மதி மரபின் மகிமையைக் காட்டும் இருபத்தொரு துவசங்களையும் தாங்கி நின்றான். பரத நாட்டில் வேதத்தைப் பரப்பிய போர்த்துக்கால் குரு சிரேஷ்டராகிய சங். மிக்கேல் வாஸ் சுவாமிகளும், மாதவ பிரான்சிஸ் சவியேர் முனிவரும் வாழ்த்தத்தக்க இறைவன் இவனெனில் மிகைபடக் கூறியதன்று. உலகம் புகழும் உத்தம குருவாகிய சங்கைமலிந்த அந்தோனிக் கிரிமினலி சுவாமிகள் பார்ப்பனரின் துர்ப்போதகத்திற்கு இணங்கிய வடுகர் மறவரால் குத்தப்பட்டுத் தலைவெட்டுண்டு வேத சாட்சியான வேதாளைப் போருக்குத் தென் பரதர் போர் ஏறுகிய இவ்விக்கிரம பாண்டியன் 5,000 பரத வீரரைப் போர்க்களத்திற்கு விடுத்தான் வடுகர் மகமதியரின் கொடுங்கோன்மைநீங்க மெய்ம்மறையைத் தழுவிப்போர்த்துக்கால் அரசனால் சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தொ[illegible] ஜொவாம் தெக்குருஸ் என்ற திருநாமத்தைப்பெற்று எழு கடற்றுறைக்கும் இறைவனை இவ்வாண்டகை நீதி நெறியுஞ் சாதி முறையும் வழுவாது ஐந்தாண்டு அரசியற்றி ஆதியெம் பெருமானின் திருவடி நிழலில் அமரச் சென்றான்.

இம்மீனவர் கோன் என்னும் விக்கிரம பாண் யனைச் சிலர் அறியாமையால் குதிரை வியாபா யாகிய ஜான் தெக்குருஸ் என்ற கள்ளிக்கோ டை வாசியென மயங்க வைத்து எழுதியிருத்தலைக் கண் ணுற்றேம். இது விந்தை, பெரு விந்தை! ராம நாயர் என்ற கள்ளிக்கோட்டையான் கி. பி 15 3-ம் ஆண்டில் கள்ளிக்கோட்டை ஜாமரின் தூ னாக லிஸ்பன் நகருக்குச் சென்றான். சென்றவன் அ த் கிறிஸ்து மறையில் உட்பட்டுத் தொன் மனு ல் என்ற போர்த்துக்கால் மன்னனால் "தொன் ஜ ன் தெக்குருஸ்" என்ற பெயரைப் பெற்றுக் கள் க் கோட்டைக்குத் திரும்பினான். இதைக் கேள்வியு ற ஜாமரின் இந்து மறையால் வாழ்நாள் நடத் ம் பார்ப்பனரால் தூண்டப்பட்டுக் கோப வெறிகொ டவனாய் ஜான் தெக்குருஸ் என்ற நாயரை அரசா வேலையிலிருந்து அகற்றினான். அப்பால் குதி வர்த்தகத்தில் ஈடுபட்ட இந்நாயர் பரத குலத்தவரி துன்பம் நீங்க அன்னவர்க்குப் போர்த்துக்கா அரசை அணுகவும் கிறிஸ்துவ மெய்ம் மறையை தழுவவும் ஆலோசனை புகட்டினான் என்பதை மறுக்கிலேம். கிறிஸ்து மறையிற் புகுவோர்க்கு, தத்தம் பதவிக்கேற்ப, பட்டங்களை அளித்து வந்தனர் போர்த்துக்கால் அரசர். இராமநாயர் கள்ளிக் கோட்டை ஜாமரின் சமஸ்தானத் தூதனானபடியால் அவருக்குத் தொன்ஜான் தெக்குருஸ் என்ற பெயரைக் கொடுத்தனர். ஆனால். விக்கிரம பாண்டியன் என்ற எழு கடற்றுறை மன்னனுக்கோ சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தொன்ஜொவாம் தெக்குருஸ் என்ற பேரரசன் பெயரைச் சூட்டினர்.

மன்னவர் புகழுஞ் சிஞ்ஞோர் சிஞ்ஞோர்
தொன்
ஜோவாம் தெக் குருசுமா மன்னன்
என்னுநன் நாமந் தனைத்தரப் பெற்றான்
இவ்வுலகி னிதுவாழ் கின்ற
தென்னவன் மகராம் பரதரார்ப் பரித்துச்
சிரமிசை தங்கரங் கூப்பிப்
பின்னமி லாதெம் மன்னனீ யென்றும்
பெருமையாய் வாழ்கென வொலித்தார்.

× கொக்கரை என்பது ஒரு இசைக்கருவி இது சங்கினால் [illegible] என்று [illegible] (பொருநர் [illegible]) [illegible]. ([illegible]) [illegible] 25/3/05 [illegible] 8.30 மணி.

என மணவை வித்துவான் மரியான் சவியேர் ஹென்றி லெயோன் பரத வமிச சத்திர சங்க்ஷேபம் என்ற நூலிற்கூறிய இச்செய்யுளும் இதற்கோர் சான்ருகும் என்க. சிஞ்ஞோர் சிஞ்ஞோர் என்னும் போர்த்துகீஸ் சொல்லிற்கு ஆண்டவர்க்கு ஆண்டவன் அல்லது அரசர்க்கு அரசன் என்பது பொருள். இரபர்ட் தெ நொபிலி என்ற தத்துவ போதக சுவாமிகள் சிஞ்ஞோர் சிஞ்ஞோர் என்பதற்கு இராசாதி ராசன் எனத் தமது "போர்த்துகீஸ்—தமிழ் அகராதி"யிற் கூறுவர். எனவே. அரசர் கோமானுகிய விக்கிரம பாண்டியன் என்னும் சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தொன் ஜொவாம் தெக்குரூஸ் பரத வர்ம பாண்டியனைக் கள்ளிக்கோட்டை வாசியாகிய ஜான் தெக்குரூஸ் என்றுல் ஆராய்ச்சிக்குப் பொருந்தாமை காண்க.



12. சி. சி. தோண் மிக்கேல் ஜொவாம் தெக்குரூஸ் பரதவர்ம பாண்டியன்

கி.பி. 1553—1562

இவ்வழுதி குலசேகரன் கி.பி. 1553-ம் ஆண்டில் எழு கடற்றுறைக்கும் அதிபதியாய் அரியாசனத்தில் அமர்ந்தான். இவன் தந்தையின் அரசியலிலுண்டான பகைவரின் கொடுஞ் செயல் யாவும் போர்த்துக்கால் அரசால் அடக்கப்பட்டமையால் இவனின் குடிகள் அனைவரும் அமரிக்கையுடன் இவன் நாளில் வாழ்ந்தனர். பரதர் நடுவில் வேதச் சுடரைப் பரப்பிய அருந்தவத் தோனுகிய சவியேர் முனிவன் மனிலா நகரத் துறவறக் கன்னியரிடம் பரதருக்காய்க் கேட்ட அதிசய பனிமய மாதா சுரூபம் கி. பி. 1555-ம் ஆண்டு ஜூன் மாதம் 9-ம் திகதி "சந்த லூ" என்னும் கப்பல் வழியாய்த் தூத்துக்குடி வந்தெய்தியது. இத்திருச் சுரூபம் இங்கு வந்த செய்தியை இவ்வரசனுல் அறிந்த எழு கடற்றுறை வாழும் அடப்பன்மாரும் பட்டங்கட்டிகளும் ஆதிய பரத மக்களும் ஏனைய தமிழ் மக்களும் இத்திருமந்திர நகரில் வந்து நிறைந்தனர். சங். பி. மிக்கேல் வாஸ் என்ற போர்த்துக்கால் குருசிரேட்டர் வானவரும் போற்றரிய இப்பனிமயத் தாயின் பொன்னடியைப் புகழ்ந்தேற்றி, அத்தாய்க்குப் "பாதர் மாதா" என்ற திருநாமத்தைச் சூட்டி, சந்திரனை மிதித்த இச்சுருவலோக ஆத்தாளைச் சம்பாவுல் ஆலயத்தில் எழுந்தேற்றஞ் செய்தனர்.

சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தொன் மிக்கேல் ஜொவாம் தெக்குரூஸ் பரதவர் பாண்டியன் ஆண்டு ஒன்பது அரசியற்றித் தனது ஏக குமாரத்தியாகிய தோனு மரிய மர்கரீத் தெக்குரூஸ் பரதவர்ம பாண்டிய தேவிக்குச் செங்கோலை அளித்து 1562-ம் வருடம் 'குடம்பை தனித்தொழியப் பறவை பறப்பது போல்' பரமனின் பாதஞ் சேர்ந்தான்.

மேலே யாம் சொன்ன அடப்பன்மார் என்பவர்களே பரத குலச் சிற்றரசர்கள். அடங்காத பகைவரை அடக்கும் அடல் செறிந்த தன்மையால் இவர்க்கு அடப்பன் எனப் பெயர் நிலவியது. "கடந்தடு தானைச் சேரலாதனை" என்ற புறநானூற்றின் செய்யுளும் இதற்கோர் மேற்கோளாகும். அடு+அப்பன் என்பது அடப்பன் என முற்று மற்றுரோ வழி' என்ற பவணந்தி முனிவரின் விதி கொண்டு புணர்ந்ததென்க. அரசனை அப்பன் என்றல் அன்பின் பெருக்கே. இவ்வடப்பன் என்ற பெயர்க்கு டாக்டர் உவின்சலோ நெய்தற்றலைவன் பட்டப் பெயர் என எழுதியுள்ளார். இதனை ஆங்காங்கு நூல்களில் எழுதிப் பரப்பினர் ஒரு சாரார். மஞ்சுதரு மீனவராகிய பரத குலப் பரவர் நெய்தனில மக்களா? திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி என்னும் ஆதி நூற்களில் பரதரை நெய்தனில மக்களாக எழுதினுர் எவருமில்லை.

"பரதவர் நுளையரோடு பஃறியர் திமிலர் சாலர்

கருதிய கடலர் கோலக் கழியரே நெய்தன் மக்கள்"

என்பர் சூடாமணி நிகண்டு நூலார். இங்கே பரதவரேயன்றிப் பரவர் பெயர் கண்டதில்லை. இன்னும், நெய்தனிலத் தலைவர் எவரெனச் சூடாமணி நிகண்டில் பார்ப்போம்.

"கொண்கனே துறைவனேடு குறித்த மெல்லன் புலம்பன்

தண்கடற் சேர்ப்ப னெய்தற் றலைவனைச் சாற்று நாமம்"

இங்கு அடப்பன் என்ற சொல்லின் அடிப்படையுங் காணேம், காணேம்! அங்ஙன மிருப்ப, அடப்பனை நெய்தனிலத் தலைவனுக்கி அவ்வடப்பன் குலப் பரவரை நெய்தனில மக்களாக்கல் பிழையன்றோ? மீனவரிலிருந்து தோன்றியவரே பரவர். மீனவரும் பரவரும் ஒரே இனத்தவர் என மஞ்சுதருவில் தோண்டியெடுத்த சித்திர லிபிக் கல்வெட்டுகள் செப்புகின்றன. இதை உருவெழுத்தாசிரியர் சங். ஹிராஸ் சுவாமிகள் எழுதிய "மஞ்சுதரு மீனவன்" (Meenavan Mohanjidaro) என்ற நூல் இனிது விளங்குகின்றது. அதுவுமன்றி, பண்டைச் சங்க நூற்களெல்லாம் பாண்டியனை மீனவன், மீனவர் கோன் என முழக்கஞ் செய்கின்றன. மீனவன்

பாண்டியனாகில் மீனவனின்று தோன்றிய பரவனும் பாண்டியனே என்பது தேற்றம். எனவே, பாண்டியராகிய மஞ்சுதரு பரவரை 'நெய்தனில மக்கள் என்றும், அன்னவர் குலச் சிற்றரசராகிய அடப்பன்மாரை நெய்தனிலத் தலைவர் என்றும் கூறல் பெரும் பிழை என்பாம்.



13. சி. சி. தோனா மரியமார்கரீத் தெக்நஸ் பரதவர்ம பாண்டியதேவி.

கி. பி. 1562—1565.

எழுகடற்றுறை வேந்தனாகிய சி. சி. தொன்மிக்கேல் ஜொவாம் தெக்குரூஸ் பரதவர்ம பாண்டியனுக்கு ஒரே மகளன்றி வேறே ஆண்மக்கள் இல்லாமையால் எழுகடற்றுறைப் பாண்டிய அரசியாய் இக்கோமகள் 1562-ம் ஆண்டில் அரியணை ஏறினாள். தன் மருகனாகிய அர்ச்சுனனுக்காய்ப் பாரதப் போர்க்களத்தில் நின்று போர் பொருதிய சித்திரவாகனனின் மகளாகிய "அல்லிராணி"யைப் போன்ற மாவீரம் பொருந்திய அணங்கு இவளாகும். விண்ணில் வாய்ந்த மின்னை மடந்தையராக்கி இம்மண்ணில் விட்டனரோ எனக் கண்டவர் வியப்புறும் வண்ணம் அழகெலாம் ஒருங்கே அமைந்த கூடற்குமரியாகிய குலமகள் இவளென்க.

> "உட்கட்டுத்தாலி உருக்குமணி ஆபரணம்
>
> கைக்கட்டுப் பவளம் கரண்டைக்காய் சீதனங்கள்"

எனப் புகழேந்திப் புலவர் புகன்றவாறு நல்லதங்காள் என்ற பாண்டியன் மகளின் காதணியும் இவ்வுருக்கு மணியே. மஞ்சுதருப் பரவர் மகளிர் மீன் வணக்க முடையவரானதுபற்றி மீன்வடிவமுள்ள ஆபரணங்களையும் அணிந்து வந்தனர். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இம்மஞ்சுதருப் பண்டைப்பரவர் மகளிர் அணிந்திருந்த உருக்குமணியின் ஓர் பாகமாகிய தங்கவளையங்கள் சிந்துவெளிப் புதைபொருளிற் கண்டுபிடிக்கப்பட்டன. இத்தங்க வளையங்களைத் தமிழ்நாட்டு மகளிர் வடிகாதுகளில் அணிந்துகொள்ளும் வளையங்கள்[9] என்கிறார் வித்வான் திரு. மா. இராசமாணிக்கம் பிள்ளை, பி. ஒ. எல்; எல். டி., எம். ஒ. எல். அவர்கள். ஆனால், அத்தங்க வளையங்கள் உருக்குமணியின் ஓர் பாகமென யாம் கூற இடந்தருகின்றன. உருக்குமணி என்பது ஓர் சுவர்ணக் காதணி, சுறாவின் வடிவமும் சந்திரனின் சொருபமும் அதிற்பொருந்தியிருக்கும் என்பர் பரதகுலபாண்டிய பழமைநூலாசிரியர். ஆசிரியர் ஜே. பி. இரட்லர் உருக்குமணியை மகரகுண்டலம் என்[று]. மகரகுண்டலம் Ear rings with the figure of a shark ஓர் சுறாவின் சொருபத்தைக்கொண்ட காதணி எனஅவரது அகராதியில் தீட்டி வைத்தார். இவ்வாறு எழில்வாய்ந்த பைம்பொன்னால் இழைத்த சுறவுமீன் வடிவங்கொண்ட உருக்குமணியை அணிந்த இப்பரதபாண்டியகுலசேகரியின் முகத்தோற்றம் கலைபதினாறுகொண்ட சந்திரனை மின்னுகின்ற இருமீன்கள் தொழுதுகொண்டிருந்த பான்மையை நிகர்க்குமெனப்புனைந்துரை கூறுதிருப்பரோ புலவர்!

இவள் ஆட்சிக்காலத்தில் மதுரையை ஆண்ட விசுவநாதநாயக்கன் இங்குப் படையெடுத்து வந்தான். மதுரையைத் தங்குல பாண்டிய அரசர்க்குப்பின் ஆண்ட அனுலோமபாண்டியரை அரசராக மதிக்காத பரதகுலபாண்டியராகிய மீனவர் என்னும் இப்பரவர் இவ்விசுவநாதநாய்க்கனையும் மதிக்காமல் தள்ளியதே இப்படையெடுப்புக்குக் காரணம் என்க. இப்போரில் எழுகடற்றுறைப் பரத காலாட்படையும், கப்பற்படையும், போர்த்துக்கால் சேனைப்படையும் முனைந்துநின்றன. செம்பொனாட்டுத்தேவர் எனும் ஆப்பனூர் மறவர்சேனையும் கதாயுதங்களைத்தாங்கித் துணையாய்வந்து ஆர்ப்பரித்தது. மீனவன் நெடுஞ்செழியனின் படைவீரராயிருந்த நெய்தனிலமக்களாகிய நாகை நகர்ப்பரதவர் படையும் துணைப்படையாய்க் கடற்படையோடு சேர்ந்து கர்ச்சித்து நின்றது. இப்பெருஞ் சேனைகளுக்குத்தலைவனாய் மாறகுலசேகரன் லூயீஸ் எஸ்தேவான்பீரிஸ் என்ற மாவீரன் போர்முனை நின்றான். பாண்டியபதி என்ற இராச அரண்மனை பாண்டியன்தீவுக்கு மாற்றப்பட்டது. யுத்தம் ஆரம்பித்தது, போர்க்களம் பிணக்களமாய் மாறியது. நாய்க்கர்படை முறியடிக்கப்பட்டது. அப்புறம், விசுவநாத நாய்க்கன் விசயநகர்ப்படை வீரரோடு புறப்பட்டு யுத்தம் புரிந்தும் கடற்படைவீரருடன் போர் பொருத வலியற்றவனாய் மிஞ்சியசேனையோடு மதுரைக்கோடி மறைந்தனன். இக்குமரியரசி 1565ம் ஆண்டு தன் தாயின் உடன்பிறந்தான் மகனாகிய மேலே யாம்கூறிய போர்த்தலைவன் எஸ்தேவான்பீரிஸ் என்ற மாபிரபுவை மணந்து அம்மகிபனுக்கேதன் மகுடத்தையுஞ் சூட்டிவாழ்ந்தாள்.


யுத்தத்தில் திறமையுள்ளார் வெற்றியும் திறமையில்லார் தோல்வியுமுறுதல் இயற்கையே.

> "ஒருவனையொருவன் அடுதலுந் தொலைதலும்
>
> புதுவதன்றிவ்வுலகத்தியற்கை"—(புறம்)

என்றார் இடைக்குன்றூர்கிழார் என்ற புலவரும். ஆனால், பெண் ஆளுகையின்போது மதுரைநாய்க்க மன்னன் விசுவநாதன் படையெடுப்பு அரசநீதிக்கு முறையன்று. தமிழ்மக்களோடு தமிழ்மக்கள் புரிந்தபோர்க் கொடுமையால் தமிழ்நாடும், தமிழரசும், தமிழ்மொழியும் நிலைகுலைந்தன. பரிதாபம்! இதை நினைத்தால் வருந்தத்தக்கதே.

---

9. Vide "சிந்துவெளி நாகரிகம்" by Pandit Raja Manickam Pillai, B, O. L; L. T., M. O. L. Madras.



14. சி. சி. தோன் லூயிஸ் எஸ்தேவான் தேக்குருஸ் பீரிஸ் பரதவர்ம ; பாண்டியன்.

கி. பி. 1565—1590.

இரட்சண்யாப்தம் 1565ம் ஆண்டில் மாற்றலர் நடுங்கச் சுடர்வீசும் வாள் தாங்கிச் சிம்மாசனத்தெழுந்த இக்கோமான் திறப்பும் பூட்டுமில்லாத தனது திரவியச் சாலையாகிய கடலிடத்தே பதின்மூன்று முத்துசசலாபங்களைக கட்டிப் பெரும்பொருள் பெற்றான், அநேக தேவாலயங்களைக் கட்டினான், தாய்மொழியாகிய இனிய தமிழ் மொழியை வளர்க்கப் பள்ளிக்கூடங்களையும் அமைத்தான், பரதகுல இளைஞர் படை பயிற்றலில் தேர்ச்சி பெறப் பல சிலம்பக் கூடங்களையும் உண்டாக்கினான். வில்வித்தையிற் பயிற்சியுடைய வீரச் சிறுவர்களுக்கு ஊக்கமுண்டாக வெண்முத்துப் பதக்கம் பரிசளித்தான். இவன் அரசாட்சி நாளில் பரதநாடு குபேரநாடாய்ப் பொலிவுபெற்றது. இம்மீனவர்கோன் ஆண்டு இருபத்தைந்து எதிரிகள் அச்சமுற அரசாண்டு 1590ம் ஆண்டு அமரர்பணியும் கடவுளின் அன்றலர்ந்த தாமரைத் திருக்கழல் சேர்ந்தான்.

———



15. சி. சி. தோன் ஜெரோணிமுஸ் தேக்குருஸ் பீரிஸ் பரதவர்ம பாண்டியன்.

கி. பி. 1590—1615.

இம் மதிக்குல இறைவன் தன் பிதா சி. சி. தொன் லூயீஸ் எஸ்தேவான் தெக்குரூஸ் பீரிஸ் பரதவர்ம பாண்டியனின் நிலவு பொழி முத்திழைத்த 'கொக்கரை' மகுடந் தாங்கி அரசகுலப் பெரியோர், பிரபுக்கள் வாழ்த்த, பாவலர்கள் பாமாலை சூட, குடிகளெல்லாம், எங்கள் அரசே! நீ பல்லாண்டு வாழ்க, எனக் கும்பிட்டுநிற்க, மூன்று குடை நிழல் செய்யும் மூதாசனத்தமர்ந்தான். "அப்பனிலும் வல்ல போரேறு இவன்" எனப் பாண்டியபதிச் சாஸனம் பகர்கின்றது. தருமனின் அசுவமேதத்தில் தன் தந்தையாகிய அருச்சுனனின் குதிரையைப் பிடித்துக் கட்டித் தன் தந்தையோடு போர் செய்து வென்ற பப்புருவாகன பாண்டியன் போன்றவன் இவன். இவ்வரசன் இக் கடற்றுறையில் பல முத்துச் சலாபங்களைக் கட்டினதுமன்றி, இலங்கை நாட்டில் மன்னார்ப் பகுதியிலுஞ் சென்று சலாபங்களைக் கட்டினான். 1540-ம் ஆண்டு பரதநாடு கடந்து மன்னார் சென்ற மஞ்சுதரு நிலாப் பரவரும் கவுரியருமாகிய 600 தமிழ் மக்கள் கொடுங் கோலனாகிய சண்டாளன் "சங்கிலி" என்பவனால் வேதசாட்சிகளாய் மரித்த தூய தலத்தையும் இம் மன்னன் கண்டு, "மீனவன் ஆண்ட பூமியில் மீனவர் இரத்தஞ் சிந்தினார்" எனச் சொல்லிக் கண்ணீர் சிந்தினார். இராவணன் செங்கோலும் நாகர் அரசும் நீங்கிய பின் கி.மு. 543-ம் வருடமிருந்து கி.பி. 1799-ம் வருடம் வரை இலங்கையை ஆண்ட 174 அரசரில் 90-வது அரசன் "**மீனவன்மன்**" எனவும், அம் மீனவன் செங்கோலோச்சிய காலம் கி. பி. 691 எனவும் இலங்கைச் சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். இதை யொட்டியே இலங்கையை மீனவன் ஆண்ட பூமி என்றான் இவ்வழுதிகுல மன்னவன். கொடும் புலியாகிய இச் சங்கிலி அரசனைச சண்டாளன் என்றோம்.

விரதமும் அறனுமில்லாச் சண்டாளனும் செய்யாத செய்கையைச் செய்தவன் இவன் என்க? ஆத்மார்த்தத்தை அரசியலோடு சேர்த்தல் அடாமாமல்லோ? இவனைப்பற்றிக் கூற்றோ என்ற சரித்திராசிரியர் மனம் பதைத்து, சங்கிலி மாளிகையின் தலைவாசலில் பெரிய ஓர் திரணை உளது. அத்திரணைமேல் தனது குடிகளின் தலைகளைவைத்து வெட்டும்படி கட்டளையிடுவான். இவ்வித சிரச் சேதத்திற்குப் பெருங் குற்றங்களும் தேவையில்லை. விசாரணைகளோ அத்தாட்சிகளோ வேண்டியதில்லை. ஓர் சிறு கட்டுக் கதையோ, சந்தேகமோ, கனவோ, அன்றேல் நினைவோ போதுமானது (Coute VII.IX-3) என்று எழுதுகின்றார்.


இஃது நிற்க, இத்தென்னவன் மன்னூரில் வேத சாட்சிகளான தங்குலத்தவரின் நினைவு எக்காலும் நிலைத்திருக்க வேத சாட்சியாய்த் தலை வெட்டுண்டு உயிர் நீத்த பரிசுத்த ஸ்நாபக அருளப்பர் கோவிலொன்றைத் திருமந்திர நகரையடுத்த சேர்ந்தான் தூரத்தில் கட்டிவைத்தான். இம் மதிகுலவேந்தன் 49 ஆண்டு இவ்வுலகிற் செல்வமாய் வாழ்ந்து 25 ஆண்டு தன்னுயிரனைய எனைய மன்னுயிர்புரந்து 1615ம் ஆனடில் அழிவற்ற தனது ஆன்மாவைப் படைத்தவன் திருக்கரம் ஒப்படைத்தான்.



16. சி. சி. தோன்மிக்கேல் ஜெரோணிமூஸ் தேக்குருஸ் பீரிஸ் பரதவர்ம பாண்டியன்.

கி. பி. 1615—1641.

குடிகள்மீது அளவுகடந்த அன்பு மேவிய இவ்வரசன் சி. சி. தொன் ஜெரோணிமுஸ் தெக்குரூஸ் பீரிஸ் பரதவர்ம பாண்டியனின் தவப் புதல்வன் என்ப. இவன் சிறந்த கொடையாளி, புலவர்களைப் பாதுகாத்தலையே விரதமாகக் கொண்டவன், பாடுதலிற் பேர் பெற்ற கவிராசன், பரத நாட்டுக் குடிகளுக்குக் குடிவெறியால் கொடுஞ் செயல் பல இழைத்து வந்த போர்த்துக்கால் சிப்பாய்களைத் தண்டிக்காமல் பராமுகமாயிருந்த அப்போர்த்துக்கால் சேனைத் தலைவனையும் கவர்னரையுங் கொன்று, போர்த்துக்கால் சிப்பாய்களை நடுங்கச் செய்து, தன் குடிகளைக் காத்தவன். முன்னாள் மஞ்சுதரு மீனவர் வழிபட்ட கடற்படு சுறவேறின் கொம்பே இப் பாண்டியனின் வாளாயுதம். வீர ஆண்சிம்மத்தை நிகர்த்த வேம்பின் தாரானாகிய இம்மன்னன் 1641ம் ஆண்டு தனது கிரீடத்தைத் தன் புத்திரனாகிய தொன் சவியேர் மிக்கேல் தெக்குரூஸ் பீரிஸ் பரதவர்ம பாண்டியனுக்கு நல்கிப் பரமனின் வான்வீடு சேர்ந்தான்.



17. சி. சி. தோன்சவியேர் மிக்கேல் தேக்குருஸ் பீரிஸ் பரதவர்மபாண்டியன்.

கி. பி. 1641—1646.

இப் பூபதி அரசர்க்குரிய அறு தொழிலில் ஒன்றாகிய உலகோம்பலின் பொருட்டாய் வனவேட்டையாடுதலில் பெருந்திறல் பெற்றவன். இவன் இலங்கை நாட்டிற்கு விசயஞ்செய்தகாலை அங்குள்ள காட்டில் கடும் புலியொன்றைக் கொன்றதனால் இவனைப் "புலி கொன்ற தலைவன்" என அழைப்பர் இலங்கை நாட்டார்.

"வீறு அம்புலியின் குல மேன்மையான்
வீறு மம்புலியின் குலம் வீட்டினா
னறிலொன்று கடமை கொண்டாள் பவ
னறிலொன்று கடமை கொன்றானரோ"

என அருணாசலப் புராணத்திற் கூறப்படும் வச்சிராங்கத பாண்டியனுக்கு ஒப்பானவன் இவனென எடுத்துக் காட்டலாம். இம்மன்னன் தனது ஏக மகளாகிய சகுந்தலை போன்ற தோகைமயில் தோனாமரிய கிறிஸ்தினம்மாள் தெக்குரூஸ்பீரிஸ் என்ற பட்டத்தரசியைத் தனது தங்கை மகன் சவியேர் ஹென்றி கொறேரா என்ற இளங்குமரனுக்குத் திருமணஞ் செய்து தன் அரதன முடியையுங்

கோலையும் அவனுக்களித்துத் தான் அரியாசனம் ஏறிய ஐந்தாம் ஆண்டாகிய 1646ல் மன்னரை ஆள்கின்ற சருவ வல்லமையுள்ள மன்னனை நினைந்து மரணமானன்.



13. சி. சி. தோன்சவியேர் ஹென்றி தெக்துருஸ் கொறேரா பரதவர்ம பாண்டியன்

கி. பி. 1646—1671.

தென்னவனுகிய மாமன் ஆசனத்தமர்ந்த இத்தென்னவர் கோன் நீதி நன்னெறியும் சாதித் தொன்முறையும் தவருது ஆண்டுவருங்கால், செல்வம்பொருந்திய போர்த்துக்கீஸரின் வியாபாரத் துறையின் பெருக்கத்தையும், பாண்டிய நாட்டிலும் இலங்கையிலும் கட்டப்படும் இம்மன்னனின் முத்துச்சலாபப் பெருஞ்செல்வத்தையும் கேள்வியுற்ற உலாந்தர் வில்லியம் ஜாக்கோப்ஸன் காஸ்டர் என்ற சேனைத்தலைவனைக் கொண்ட பல நாவாய்ப் படையுடன் தூத்துக்குடித் துறைமுகத்தில் 1646-ம் ஆண்டு வந்திறங்கினர். இதைக்கண்ட இவ்வரசன் டச்சு வெள்ளையரின் திடுகூறுன படையெடுப்பின் மேல் வெகுளிகொண்டு, தனது சேனைகளைத் திரட்டிப் பாண்டியன்தீவில் வைத்துப் போரைத் தொடங்கினுன். வில்லும்,வாளும், வெடியுந் தாங்கிப் பரதவீரர் சமர் தொடுத்தனர். பரத கடற்படைவீரர் கடலடியிற் குளியோடி நீந்திச்சென்று, உலாந்தரது படைக் கப்பல்களைத் தீக்கிரையாக்கினர். இருமருங்கும் மாண்டனர் பல்லாயிரம்பேர். இம்மன்னனைச் சார்ந்து நின்ற போர்த்துக்கால் படை சிறுதொகையாய்ப் போர்க்களத்தில் நின்றதாலும் உலாந்தர் சேனைகள் புற்றீசல்போல் மென் மேலும் வந்துகொண்டிருந்ததாலும் முன்னறிக்கையின்றிப் போர்பொருதப் புறப்பட்ட உலாந்தரின் நீதியற்ற செய்கையாலும் இவ்வரசன் மனமுடைந்து ஒரு திங்கள் தொடர்ந்து போர்முனை நின்று யுத்தஞ்செய்து பின்னடைந்தான். உலாந்தர் தூத்துக்குடியைக் கைப்பற்றினர், அங்கிருந்த போர்த்துக்கீஸரை அப்புறப்படுத்திப் பரதர் கோன் போர்த்துக்கீஸரோடு செய்த பழைய உடன்படிக்கையைத் தகர்த்துவிட்டுத் தங்களோடு ஓர்புதிய உறுதிப்பாட்டைச் செய்துகொள்ள வேண்டுமென வற்புறுத்தினர்; ஆனல், பரதர் கோன் அதற்குடன்படவில்லை. பரதர்க்கும் உலாந்தர்க்கும் மீண்டும் குழப்பம் எழும்பிற்று. உலாந்தர் பரதரையும், அன்னவர் தழுவிய மறையையும், அவர்களின் கோவில்களையும் அடிகெட அழிக்க வேண்டுமெனத் தீர்மானஞ்செய்தனர். இவ்வாறு மறைவில் நிறைவேற்றிய தீர்மானத்தை அறிந்த பரதர் கோமான் திருமந்திர நகரில் சம்பாவுல் ஆலயத்தில் எழுந்தருளிய எழுகடற்றுறைப் பரதரின் ஏக அடைக்கலத்தாயாகிய பரதர்மாதா என்னும் பனிமயத்தாயின் திருச்சுரூபத்தை எடுத்துச்சென்று, போர்த்துக்கீஸரின் ஆளுகைக்குட்பட்ட சேர்ந்தான் குளத்தின் பரிசுத்த ஸ்நாபக அருளப்பர் ஆலயத்தில் வைத்தனன். மூவாண்டு சென்றபின் உலாந்தர் சேர்ந்தான்குளத்தையும் தமது ஆளுகையின் மேற்கெல்லைக்கு உட்படுத்திக் கொண்டபடியால், பரதரும் பரதர் கோனும் ஒன்றுகூடிப் பரதர் மாதாவை எடுத்துப் பசுமை நிறப் பல்லக்கில் வைத்துச் சுமந்துசென்று பாண்டியரின் பூர்வீகத் தலைநகராகிய கோற்கையின் ஆலயத்தில் எழுந்தேற்றஞ் செய்தனர். லூத்தர் மதத்தவராகிய உலாந்தர் சம்பாவுல் கோவிலை நடுநிசியில் இடித்து மையவாடியாக்கினர். சேர்ந்தான் குளத்திலுள்ள ஸ்நாபக அருளப்பர் கோவிலையும் தகர்த்துத் தரைமட்டஞ் செய்தனர். அந்தோ! இவ்விழிஞர் கொடுங்கோலை என்னென்று சொல்வோம்! பரதர் மாதா கோவிலின் வடபால் மேவிய வீதியின் அலங்காரத்தை விழுங்கிய அவ்வுலாந்தர் மையவாடியை இந்த நாள் பார்ப்பவர் வருந்தாதிரார் என்பது திண்ணம். இங்ஙனம் உலாந்தர் பரதநாட்டில் பத்தாண்டு நடுநிலை பிறழ்ந்து அறசியற்றிய பின்னர் 1656ம் ஆண்டு போர்த்துக்கீஸருக்கே அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு அகன்று போயினர். பரதர்கோன் களிப்புற்று, கொற்கை ஆலயத்தில் எழுந்தருளிய பரதர் மாதாவின் சுருபத்தைக் கொணர்ந்து தனது அரண்மனையின் உப்பிரிகையில் இரண்டு வருடம் வைத்து வணங்கிவந்தனன். இவ்வன்னை கொற்கையம்பதியில் எழாண்டு அமர்ந்திருந்தாள். அந்நாளில் அங்குள்ள சைவத் தமிழ் மக்களும் இம் மாதாவின் கிருபையை ஏராளமாய்ப் பெற்றபடியால் இம்மாதாவைக் "கோற்கைமாதா" எனப் பெயர் சூட்டிக் கும்பிட்டனர்.

பரதர்கோன் தன் பொருள்கொண்டு ஒரு ஆலயத்தைக் கட்டி 1658-ம் ஆண்டு பரதர் மாதாவை ஆங்கு எழுந்தருளச் செய்தான்.


அதே வருடத்தில் போர்த்துக்கீஸர் தூத்துக்குடி, யாழ்ப்பாணம், மன்னார் முதலிய ஊர்களையெல்லாம் உலாந்தருக்கு மனப்பூர்வமாகக் கொடுத்துப்போயினர். இப் பரதகுலாதிபதிபரதநாட்டிலும் இலங்கையிலும் ஏற்படுத்தும் சலாபத்தின் வருமானத்தில் மூன்றில் ஒருபாகத்தை உலாந்தருக்குக்கொடுப்பதாக அவர்களோடு உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டான். மன்னரில் சிறந்த தமிழ் மன்னனுகிய இத்தென்னவன் பரதர் மாதாவென வானும் வணங்கும் திவ்விய பனி மயத்தாயின் ஆசீர்வாசத்தைப் பெற்று 25 வருடம் அரசுசெலுத்தி ஓய்ந்து தன் அரசைத் தன் தனயன் தொன்ஜோசப் ஹென்றி தெக்குரூஸ் கொறேரா பரதவர்ம பாண்டியனுக்குத் தந்து பரலோக வாழ்க்கை எய்தினுன்.



19. சி. சி. தோன் ஜோகப் ஹென்றி தெக்குருஸ் கொறேரா பரதவர்ம பாண்டியன்.

கி. பி. 1671—1680.

மஞ்சுதரு நிலாப் பாவர் கோனாகிய இவ்வாண்டகை ஆண்மையிற் சிறந்த போர் வீரன், நீதியின் வழி குன்றாத எழில் மாறன், புலவர்களை அரண்மனைக்கழைத்து அவர்களோடு அளவளாவி அன்னவரின் விழுமிய மொழிகேட்டு மகிழ்ந்து பரிசளிக்கும் வள்ளல், எண்ணிய கருமத்தை முடிப்பதில் ஆற்றல் வாய்ந்தவன். குதிரை மீதேறி வாயு வேகமாய்ப் பறந்து செல்லும் திடம் பொருந்தியவன். பொன்னிருந்தும், புகழிருந்தும், ஆள மண்ணிருந்தும் என்ன பயன்! தனது நெடு முடியைத்தாங்க மகவில்லையே என்ற மனக் கவலையுடையவனாய் மதலை வடிவாய்ப் பிறந்து மாந்தரை ஈடேற்றவந்த மஹாதேவனை மனதில் எண்ணி எண்ணி 1680ம் ஆண்டு மறுவுலகடைந்தான்.



20. சி. சி. தோன் எஸ்ம்தேவான் தெக்குருஸ் பூபாலராய பரதவர்ம பாண்டியன்.

கி. பி. 1680 – 1686.

இறைவன் சி. சி. தொன் ஜோசப் ஹென்றி தெக்குரூஸ் கொறேரா பரதவர்ம பாண்டியன் மக்கட் பேறின்றி மரித்ததினால் எழு கடற்றுறை அடப்பன்மாரும், பட்டங்கட்டிகளும், பிரபுக்களும், பெரியோரும் திருமந்திர நகரில் ஓர் மகாநாட்டைக் கூட்டி நாடு நீங்கிய மீனவர் கோனின் சகோதரி மைந்தன் எஸ்தேவான் பூபாலராயன் என்ற தோன்றலைச் சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தொன் எஸ்தேவான் தெக்குரூஸ் பூபாலராய பரத வர்ம பாண்டியன் என்ற திரு நாமத்துடன் அரியணையில் அமர்த்தினர். இவ்வரசன் குடிகளை அன்புடன் ஆறு வருடம் ஆண்டு, தனது ஒரே மகளான தோனாமரிய அம்புரோஸ் பூபாலராய பாண்டிய தேவியை உள்ளூர் அடப்பன் மகன் கபிரியேல் கோமஸ் என்ற வாட்போர் வீரனுக்கு மணமுடித்து மகுடத்தையும் அவனுக்கீந்து, 1686-ல் ஆண்டகைக் காணடகை திருவடி சேர்ந்து ஆறுதல் அடைந்தான்.




21. சி. சி. தோன்கபிரியேல் தெக்குருஸ் கோமஸ் பரத வர்ம பாண்டியன்

கி. பி. 1686—1700

இவ்வேந்தன் கண்டவர் அச்சமுறும்படியான சிம்ம நோக்குடையவன். இவ்வரசனைத் துருவாச முனியைப் போலும் முற்கோபி எனவும், கோபம் நீங்கியபின் பஞ்ச பாண்டவரில் முதல்வனாகிய தருமனைப் போலும் சாது எனவும் பாண்டியபதி சாசனம் பகர்கின்றது.

"நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்"

என்ற ஔவைக் கிழவி வாக்கு இதற்கோர் சான்றாகும். இவன் ஆண்டு பதினான்கு நாடு செழிப்புற அரசியற்றினான். இவ்வதிபதிக்குப்பின் இவன் தனயன் தொன் சூசை லூயிஸ் தெக்குரூஸ் கோமஸ் பரத வர்ம பாண்டியன் 1700-ம் ஆண்டு சிம்மாசனம் ஏறினான்.



22. சி. சி. தோன் சூசை லூயிஸ் தெக்துநஸ் கோமஸ் பரதவர்ம பாண்டியன்.


கி. பி. 1700 – 1716

இம்மன்னன் நுண்ணறிவுடையோர் இயற்றிய நூல் பல பயின்றவன்.

"இடுக்கட்படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சியவர்"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப, வேற்றரசர்பால் பிடிபடினும் யாண்டும் தலைவணங்காத நடுக்கற்ற பெருந் தலைவன். இவன் சுற்றத்தார், இதரர் என்ற பாகுபாடின்றி நீதிமுறை செலுத்தும் நிருபன். ஆரியர் சிந்துக்கரை வருமுன் ஆங்கு எழுவகை அரண்மனைகளோடும், தொண்ணூறு கோட்டைகளோடும் வாழ்ந்த மஞ்சுதருத் தமிழ் மக்களாகிய வீரப் பரவர் வழிபட்ட நிலவையும் பகலையும் அணிந்தருளிய பரதவர் மாதா என்னும் திவ்விய பனிமயத் தாயை நாடோறும் அந்தி சந்தி ஆலயஞ்சென்று பணிதலே கடமையாகக் கொண்டவன். மறைநீதி வழுவாத நல்ல அரசனாகிய இவன் ஆண்டு பதினாறு உலகம் புகழச் செங்கோலோச்சினான். இவனுக்குப்பின் முடிக்குரிய இவன் மகன் தொன் கபிரியேல் ஆரோக்கிய தெக்குரூஸ் கோமஸ் பரதவர்ம பாண்டியன் 1716-ம் ஆண்டில் அரசனாய்த் தோன்றினான்.

—:o:—



23. சி. சி. தோன்கபிரியேல் ஆரோக்கிய தெக்குருஸ் கோமஸ் பரதவர்ம பாண்டியன்.

கி. பி. 1716—1736.

முத்துப் படும் குளிர்ந்த சமுத்திரத்தையுடைய குமரிச் சேர்ப்பனுகிய இம்மன்னன் சலமோன் ஆதிய மெய்ம்மறை மன்னரைப்போல் ஆட்சி புரிந்தான். இவன் தனது கூரியவாள் தாங்கும் கரத்தில் 'விவிலிய' நூல் என்ற வேதாகமத்தையே எப்பொழுதும் தாங்கி நிற்பான். "உங்கள் பகைஞர்மேல் நட்பாயிருங்கள். உங்களைப் பகைக்கிறவர்க்கு நன்மை செய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவரை ஆசீர்வதியுங்கள். உங்கள்பேரில் அபாண்டஞ் சொல்லுகிறவர்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" (St. Luke VI 27-28) என்ற நூய வாக்கைப் பன்முறை தன் குடிகளுக்கு எடுத்துப் போதிப்பான். செபம் என்ற ஆயுதத்தின்முன் வாள் என்ற ஆயுதம் மழுங்கிவிடும் என்பதே இவ்வரசனின் வீரமொழி. "நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய்ச் செபத்தில் எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்" (St. Mathew XXI-22) என்ற வேத வாக்கை மேற்கோளாக எடுத்து விரிப்பான். இவ்வாறு தன்னுட்டில் வேதச் சுடர் பரவ ஆண்டுவந்தான். இவன் காலத்தில் பிராஞ்சு ஈஸ்ட் இந்தியக் கம்பெனியுடைய ஆளுகைக்குட்பட்ட சந்திர நாகூரில் வேதம் போதிக்கத் தூலுஸ் யேசு சபைக் குருக்கள் 1733-ம் ஆண்டு அக்கம்பெனிக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டனர். ஒரிஸா, வங்காளம், பெகு, கருமணற்கரை முதலிய தேசங்களெல்லாம் 1606-ம் ஆண்டு முதல் திருமயிலை மேற்றிராணியாரின் ஞான ஆளுகைக்குட்பட்டிருந்தபடியால் அக்கம்பெனியார் யேசு சபைக் குருக்களின் விண்ணப்பத்தைத் திரு மயிலை எட்டாவது மேற்றிராணியாராகிய சரி. வந். தொன் சூசை பிஞ்ஞேரா ஆண்டவற்கு அனுப்பினர். அஃதைப் பார்வையிட்ட அம்மயிலை மேற்றிராணியார் சில கண்டிப்பான நிபந்தனையின்பேரில் 1736-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் திகதி அங்கீகாரம் அருளினர். இக்கவுரியர் கோமானுக்குப் பின்னர் இவன் மைந்தன் தொன் மிக்கேல் பேதுரு தெக்குரூஸ் கோமஸ் பரதவர்ம பாண்டியன் பட்டத்திற்கு வந்தான்.



24. சி. சி. தோன்மிக்கேல் பேதுரு தெக்குருஸ் கோமஸ் பரதவர்ம பாண்டியன்.

கி. பி. 1736—1750

இம்மன்னன் மதிக்குலத் தமிழரசனுகிய ஆதி பரதன் ஒப்ப அரசியற்றிய இரத்தினுங்கத பாண்டியனைப்போல் குடிகளாகிய பயிர்களுக்குத் திருவேலியாய் நின்று காத்துவந்தான். கடல்படு திரவியங்களின்மேல் பேராவல் கொண்டு படையெடுத்து வந்த மகமது ஆலியை எதிர்த்துப் போர் புரிந்து புறங்காட்டியோடச் செய்தான். இப்போர் நிகழ்ந்தது 1747-ம் ஆண்டு என்க.

இவன் மாந்திரியத்தில் உழன்ற அரசன். இவனைத் தரிசிக்க மலையடிகளில் வாழ்கின்ற காவியுடை யணிந்த சடைமுடித் துறவிகளும் வந்து இவனிடத்துள்ள மாந்திரிய ஏடுகளைப் பார்வையிட்டு எழுதிப் போவர். ஆனல், இவ்வரசன் மாந்திரியத்தில் வல்லவனுயினும். எவருக்கேனும் மாரணம் முதலிய துட்டக் கருமத்தைச் செய்தவனல்லன், இவன் இலங்கையில் முத்துச் சலாபத்தை நடத்தும்பொழுது தினந்தோறும் தனது அருஞ்சுவை உணவைத் திருமந்திர நகர் அரண்மனையிலிருந்து சுடச்சுட வரச் செய்து உண்பது வழக்கம். வீரபாண்டியன் பட்டினத்தில் இவன் இளைப்பாறும் மாளிகை உளது. வீரபாண்டியன் பட்டினம் முன்னுள் மாந்திரிய மயமாயிருந்ததும், "பரதன் முற்றிஞல் பசாசும் நடுங்கும்" என்னும் பழமொழி இதுகாறும் வழங்குவதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கவை. இம்மாந்திரியம் நிலாப் பரவரின் ஆதிப்பதியாலய மஞ்சுதரு நகரிலிருந்து கொண்டுவரப்பட்டதென அறிய க்

...க்கின்றது. மாந்திரியத்தில் தலை மயக்குற்ற எகிப்தை ஆண்ட பார்வோன் மன்னர் வரலாறும் இதற்கோர் எடுத்துக்காட்டாகும். இவ்விறைவன் தனது அந்திய காலத்தில் மெய்ம் மறைக் குருக்களால் உள்ளந் திருத்தப்பட்டமையால் மாந்திரியத்தில் வெறுப்புற்றுத் தன்னிடத்துள்ள மாந்திரிய ஏடுகள் அனைத்தையும் நெருப்பிலிட்டுச் சாம்பலாக்கினன். இவன் பொற்சிறை அன்னம்போன்ற திருவடத்தை தோனுமரிய ஆனுள் ஐடா தெக்குரூஸ் கோமஸ் பூபாலராய பாண்டிய தேவி என்ற தனது குமாரத்தியைப் புன்னைக்காயல் ஜொவாம் பிலிப்புவாஸ் என்னும் பிரபுகுலப் பிரபு மகன் தொன் கஸ்பார் அந்தோனி தெக்குரூஸ் வாஸ் விக்டோரிய பரதவர்ம பாண்டியனுக்கு மணமுடித்து மணிமகுடத்தையும் அவனுக்கீந்து 1750-ம் ஆண்டு கிறிஸ்து மெய்ம் மறைக்குரிய கடைக் கருமம் யாவும் நிறைவுறப் பெற்றுங் கடவுளின் கமலக் கடல் சேர்ந்தான்.



25. சி. சி. தோன்கஸ்பார் அந்தோனி தேதுநஸ் வாஸ் விக்டோரியா பரதவர்ம பாண்டியன்.

கி. பி. 1750—I779.

இவ்வதிபதி இருபத்தொன்பது வருடம் பரதநாட்டை அன்பு மிளிர ஆண்டான். இவன் தன் குலத்தெழுந்த முந்திய அரசரால் எழுகடற் றுறையிலும் கட்டப்பட்ட தேவாலயங்களையும், பள்ளிக்கூடங்களையும், மையவாடிகளையும் சீர்படப் புதுப்பித்தான். இவன் பரியூர்தலில் ஐம்பெரும் பாண்டவரில் ஒருவனுகிய நகுலனை வெல்வான். இம்மன்னனின் போர்க்குதிரைக்குக் "காயல் குதிரை" எனப் பெயர். இவன் பழைய காயலில் வாழ்ந்த பஞ்ச திருவழுதியரைப்போல் மல்யுத்தத்தில் திறம்பெற்றவன், தனது அரண்மனைக்கு வரும் மல்லர்களை ஒருவரோடொருவர் மல்லாடச் செய்து வெற்றியடைந்தவர்க்குப் பட்டமும் பரிசும் அளிப்பான். இவனுக்குப்பின் இம்மன்னன் மகன் தொன் கபிரியேல் தெக்குரூஸ் வாஸ் கோமஸ் பரதவர்ம பாண்டியன் ஆசனவுரிமை அடைந்தான்.



26. சி. சி. தோன் கபிரியேல் தேக்குநஸ் பரதவர்ம பாண்டியன்.

கி. பி. 1779—1808.

இவ்வரசன் வீரம், கொடை, சீலம், கல்வி முதலியவைகளில் எவரும் போற்றத்தக்கவன். இவன் திருமந்திர நகருக்கு மேற்றிசையுள்ள பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரன் கட்ட பொம்மு என்ற நாய்க்கர் குலவீரனுக்கோர் தோழன். இவ்வேந்தனின் கப்பலிலேயே கட்டபொம்மு சென்னை நகர்க்குப் பிரயாணம் பன்முறை போயினன். இவன் பாஞ்சாலங்குறிச்சி யுத்தத்தின்போது அடைக்கலம் புகுந்த ஊமைத்துரையைப் பாண்டியன் தீவில்வைத்துச் சில திங்கள் பாதுகாத்தனுப்பினன். கட்டபொம்மு வழிபட்ட தங்கத்தினுல் செய்த சுப்பிரமணியன் விக்கிரகமும், பொன் நாணயங்களும், ஆபரணங்களும் பாண்டியபதி அரண்மனையின் அந்தப்புரத்தில் புதைபொருளாய்க் கிடக்கின்றனவென அஞ்சனர் அறைகின்றனர். ஆனல், அஞ்சனத்தை நம்புதற்கு ஆகமத்திற் சான்று கண்டிலேம். {)ம் மன்னன் பரதர்மாதா என்னும் திவ்விய பனிமயத்தாய்க்கு ஓர் சித்திரத்தேரைச் செய்வித்து, அத்தேரை 1806-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5-ம் திகதி தமிழகத்துள்ள மக்களெல்லாம் சூழ்ந்து, "மரியமாதாவே, மரியமாதாவே!" என அத்தாயை வணங்கிநிற்க, தேர்வடத்தை முதலில் தொட்டுக்கொடுத்து, அவ்வன்னையை நகர்வலஞ்செய்து அவ்வாத்தாளின் அருட்பிரசாதத்தை அகங்குளிர அடைந்தான். இந்நாவலந்தீவில் எங்கும் காண்டற்கரியதும், பொன்னுலகிலிருந்து இறங்கியதோவென இறும்பூது கொள்ளத்தக்கதுமான இச்சித்திரத்தேரை இம்மன்னன் செய்வித்ததால் இவனைத் "தேர்மாறன்" என அழைக்கும் உலகம்.

செந்தூர்க்கந்தனின் தேர்வடத்தைப் பரதகுல அரசனேனும், அடப்பனேனும் தொட்டுக்கொடுக்கும் வழக்கமும் இம்மன்னன் காலத்தும் முன்னுள்ள மன்னர் காலத்தும்

முறையே வமிசப் பரம்பரையாய் நடந்துவந்த தென்க. பிரபுப் பெரியார் ஹானரபில் ஐ. எக்ஸ். பெறேரா அவர்கள் இலங்கைச்சட்டசபை இந்தியப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டகாலை, அன்னவர்க்கு யாம் நல்கிய "மகா முத்துக்குடை" என்ற நூலிலும் பின்வருமாறு, இதனை வலியுறுத்தியுள்ளோம்.

எண்சீர் விருத்தம்

செந்தமிழு மாங்கிலமு மகிழ்ந்து தேர்ந்தோன்
சீர்தவழெங் குலப்பிரபு ஜே.எம்.பி. ரோச்ச
மந்த்ரநகர் முனிசிபல் சேர்ம னென்ன
மன்னனிவன் மற்றூர்க்கும் நலமே செய்வான்
அந்த நாளேம் பரதர்ரத வடமுன் தொட்டே
அளிக்காது செந்தூரா னேழும்பா னென்பர்
இந்த நாளெம் பிரபுசட்ட சபை தொடாது
எழுந்திராள்முன் னேற்றமெனு மெழிலார் நங்கை

பிற்காலம் மெய்ம்மறைக் குருக்கள் தடுக்க, மஞ்ஞை வாகனனின் தேர்வடந் தொட்டுக் கொடுத்தல் நிறுத்தப் பட்டது. இப்பழமையை 999.ம் ஆண்டு ஆவணி மூல உற்ச வத்துவசாரோகணம் 3-ம் திகதியன்று தேர்வடம் தொட் டுக் கொடுப்பதைப்பற்றி வீர பாண்டியன் பட்டினத்து அடப்பனுக்கு அக்கோவிற் பூசாரி திரு. கே. இராம சுப் பய்யர் எழுதிய நிருபமும், 375-ம் பசலி ஆண்டு 19-ம் திகதி பரத குலாதிபன் கட்டளையின்படி வீர பாண்டியன் பட்டினத்துக் குறுநில மன்னனாகிய அடப்பன் என்பான் செந்தூர்ச் சுப்பிரமணியனின் தேர் வடந்தொட்டுக் கொடுக்க மறுத்தெழுதிய 'இராஜீனும அறிக்கை' என்ற அரண்மனைச் சாசனமும் நன்கு விளக்குகின்றன. இதுவு மன்றி, உத்தரகோசமங்கையில் இவ்விறைவனின் முன் னோர் செய்து ஒட்டிய கல்தேரும் ஆங்கு இன்றும் பார்க்கக் கிடக்கின்றது. மீனவன் என்ற இப்பாண்டிய மன்னனின் குலத்தவராகிய பரவர் அந்நாள் உத்தரகோசமங்கையி லும் வாழ்ந்தனரென இலங்கைக் காசிச் செட்டித் துரை யின் பின்வரு வாக்கு வலியுறுத்துகின்றது.

"The Paravars had a succession of Kings among them, distinguished by the hill of Adiyarasen, some of whom seems to have resided at Uttarakoshamangay called at that time. "The City of Mangay," a place of Hindu pilgrimage in the neighbourhood of Ramnad" (Vide Royal Asiatic Society's Journal Vol. 18 Article 8 by Mr. Simons Casie Chetty of Ceylon).

இஃது இங்ஙனமிருப்ப, தூத்துக்குடியில் வந்திருந்த வெள்ளையராகிய உலாந்தர் பரத நாட்டுக் குடிகளுக்குக் கொடுமை செய்யப்புறப்பட்டதுமன்றி, அன்னவர் தழுவிய மெய்ம் ... க்கும் இடர் செய்ய எழும்பினர். இதனால் வெ... ன் கா... இவ்விறைவன் நகரைவிட்டு மணவை நகர் சென்று, அக்காலத்தில் சென்னையிலிருந்த ஈஸ்ட் இந்திய ஆங்கிலக் கம்பெனியுடன் உடன்படிக்கை செய்துகொண் டான். பரத படையும் ஆங்கிலச் சேனையும் ஒருங்கே திரண்டு உலாந்தரைத் திரு மந்திர நகரைவிட்டுத் துரத் தின. பரதர் கோன் ஆங்கிலக் கொடியை ஏற்றிக் கொடுத்தனன். இம்மன்னன் மணவை நகரிலிருக்கும் பொழுது (Captain Wheeler) காப்டன் வீலர் என்பான் அன்னவற்கு எழுதியநிருபத்தை இங்குத் தருகின்றோம்.

"1782-ம் வருடம் பிப்ரவரிமீ 22உ தூத்துக்குடி கப்பித்தான் மகா-ா-ா-ஸ்ரீ உயிலர்துரை அவர்கள் தூத்துக்குடி சாதித்தலைவர் தொன்கபிரியேல் கோமஸ்வாஸ் விக்டோரியா அடப்பனார் அவர்களுக்கு கவில்கனூர்நாமா எழுதிக்கொடுத்தபடி தமக்கு நடக்கவேண்டிய கவ்வையும், நமக்கு நடக்க வேண்டிய கவ்வையும்பற்றித் தம்மு டைய மனிதன் கந்தசுவாமி பிள்ளையிடம் பேசுவிச்சுக் கொண்டோம். தமக்கும் மண்ப்பாடு, புன்னைக்காயல், தூத்துக்குடி மற்றும் தம்முடைய இனக்குடியானவர்களுக் கும், முன் உலாந்தாக்காரர் என்ன மரியாதை நடத்தி வந்தார்களோ அந்தப்படி நாமும் நடப்பிச்சித்தருவோம். பாளையங்கோட்டை கர்னல் அவர்களுக்குள்ளே தம்மைத் தொட்டு யாதொரு கவ்வை வந்தால் நாம் ஏய்ப்பிச் சுக் கொள்வோம். தம்மைத் தொட்டு வேண்டிய கவ்வை இருக்கிறபடியால் தம்மைப் பிள்ளையாகப் பாவிச்சு நடப்பிவிச்சுக் கொள்வோம். அது நம்பிக்கையாக தாமும், தம்முடைய ஜனங்களையும் சேக்ரித்துக்கொண்டொன்றுக்கும் ஆலோசனை செய்யாமல் சீக்கிரம் புறப்பட்டு வரவும். தாம் வரும்போது இங்லீஷ் கொடியொன்று அனுப்பி விச்சோம். அது மாதிரி கொடியுடன் மாமூலான சுவடினைம் பல்லாக்குடனே சிறப்பாக வரவும். தம்முடைய நெல், தம்முடைய மனுசன் பாரிசம் விட்டுவிட்டோம். தட்டு முட்டு, வீடும் அவர் வசம் விட்டுவிடுகிறோம். ஊரிலே யாதொரு சல்லியமில்லாமல் தம்முடைய மனுசன் சுவான் வஸ் இயப் பர்ஞந்திடம் கட்டளை கொடுத்து யாதொரு சல்லியமில்லாமல் டாராச்சனமும் (சைன்யம்) வருத்திக் கொடுத்திருக்கிறோம். ஆனதால் தாம் சுகமே வரவும்."

(ஒப்பம்) **காப்டன் வீலர்.**

இத் "தேர் மாறன்" என்னும் ஆண்டகைக்குப் பின்னர் இவன் புத்திரன் தொன் கஸ்பார் அந்தோனி தெக்குரூஸ் வாஸ் கொறேரா பரத வர்ம பாண்டியன் அப் பனின் ஆசனத்தில் 1808-ம் ஆண்டு அமர்ந்தான்.



27. சி. சி. தோன் கஸ்பார் அந்தோனி தேக்நுஸ் வாஸ் கோறேரா பரதவர்ம பாண்டியன்.

கி. பி. 1808—1839

இப்பூவேந்தனே "மடங்கலும் அடங்கும் திடமுளான்" எனப் புகல்வர் பரவேந்தர். இப்பாண்டிய மன்னனின் அவைக்கள முதலமைச்சனும், கல்வியிலும், செல்வத்திலும் மிகுந்த வித்வ சிரோமணியுமான திருமந்திர நகர் முத்துக் கண்ணுச் செட்டியார் தமது சீட்டுக் கவியில்,

"சிங்க முகத் தண்டிகை மீதிலேவரு
சிங்காரப் பாண்டியனடி
வங்கத்தார் கண்டு தரிசிக்குஞ் சந்திர
வங்கிஷப் பாண்டியனடி"

என இந்நிருபனைப் பாடியுள்ளார். மணவை நகர் அட்டாவதானி சவியேர் ஹென்றி லெயோன் இன்ப கவிராயர் இப்பாண்டியபதியின் வாசல் வித்வானுயிருந்தனர். பாஞ்சாலங் குறிச்சி அரசிழந்தபின் அங்கிருந்த வீர பாண்டியப் புலவர் இவ்வரச சமஸ்தானத்தை அணுகி வாழ்ந்தனர். இவ்விறைவனுக்குத் தொன் சூசை, தொன் சவியேர், தொன் கபிரியேல் எனச் சேர சோழ பாண்டியர்போல மூன்று மக்கள் உளர். இன்னவன் அரியாசனமேறிய ஈரைந்து ஆண்டின்பின் உலாந்தர் திரும்பவும் சேனைத் திரளோடு வந்து தூத்துக்குடியைக் கைப்பற்றி ஒரு வருடம் தமது கொடுங் கோன்மைக்கு உட்படுத்தினர். அக்காலத்தில் உலாந்தர் தாம் தழுவிய லுத்தர் மதத்தைத் தழுவப் பரதரை வற்புறுத்தினர்.

இம்மதந் தழுவிய ஓர் அனுலோம பரதனைக் கோவிலண்டை வைத்துப் பரதர் கோன் துப்பாக்கி தாங்கிய வீரரைக்கொண்டு சுட்டுக்கொன்ருன். இதைக் கண்ட உலாந்தர் நடுங்கினர். இவ்வாறு தீர்மானித்து நடத்தின இத்தலைவன்மேல் உலாந்தர் ஓர் விரல் முதலாய் உயர்த்தத் திராணியற்றவராய் மௌனஞ் சாதித்துப் பிரமித்து நின்ருர்களெனக் கனம் குபே சுவாமிகள் தாம் எழுதிய "A visit to the Pearl Fishery Coast" என்ற நூலில் பொறித்துள்ளார். அப்பால் 1825-ம் ஆண்டு ஆங்கிலேயர் பெருஞ் சேனையுடன் தோன்றி உலாந்தரைத் துரத்திவிட்டு நகரைக் கைப்பற்றினர். இத்தென்னவர் கோன் 32 வருடம் நாடாண்டு தனது 62-வது வயதில் தன் ஆசனத்தை முதிய மகன் தொன் சூசை அந்தோனி தெக்குரூஸ் வாஸ் பல்தான் என்பவனுக்குக் கொடுத்துப் பொன்னுலகை நினைந்து பூவுலகை விட்டனன்.

இவ்விறைவனின் ஆளுகையின்போது வந்த இலங்கைப் பிரதம நீதிபதி நிருபத்தை இதன்கீழ் காண்க.

Colombo, 16-9-1815

To

The Prince of the Paravars,

At Tuticorin

I am directed by the Honourable the Chief Justice to request that you will have the goodness to forward for his Lordship's information with the least possible delay the Laws of Customs of the Paravars of Tuticorin upon which the civil cases and other disputes are decided, particularly. Such as concern inheritance doury adoption, possession of grounds, gardens, etc. gift for donations, mortgage, hire. purchase and sale of male and female slaves, loans of money upon interests, etc.

I am the honor to be,
Your obedient servant,
V. Wm. Vanderstranten,
Ag. Registrar.



28. சி. சி. தோன் சூசை அந்தோனி தெக்குருஸ் வாஸ் பல்தான் பரதவர்ம பாண்டியன்.

கி. பி. 1839—1856.

"தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
தொன் முதுகடவுட் பின்னர்மேய
வரைத்தாழருவிப் பொருப்பிற்பொருந !"


மதுரையில் வீற்றிருந்து அரசாண்ட சோமசுந்தரக் கடவுள் வழியில் தோன்றிய நெடுஞ் செழியன் என மதுரைக் காஞ்சியில் கூறப்படும் மீனவனைப்போல் பராக்கிரமம் வாய்ந்தவன் இம்மீனவர் கோன் தொன் சூசை என்க. இவ்வரசன் மன்னார்ப் பகுதியில் முத்துச் சலாபம் ஒன்றைக் கட்டித் தன் தம்பியான தொன் சவிசேரை அச்சலாபத்தை நடத்தும்படி விடுத்தான். அவ்வரச இளவல் அரிப்பில் உள்ள அல்லி யரசாணி மாளிகையில் தங்கிச் சலாபத்தைச சிறப்புற நடத்திப் புறப்பட்டுவரும் வழியில் நோய் வாய்ப்பட்டுத் திருமந்திர நகரை அடைந்து, சில தினங்கள் சென்றபின் மறுவுலகு எய்தினான். அட்டாவதானி இன்ப கவிராயர் மைந்தன் அன்னப் பூபதி லெயோன் இக்கோமானின் வாசல் வித்வான். இம்மகிபனின் காலத்திலேதான் தூலுஸ் யேசு சபைக் குருக்கள் இப்பரத நாட்டில் வந்து அடிகோலினர். அன்று முளைத்த வேத இரட்டை ஆட்சியால் பரதகுலம் பிரிவினைக்குட்பட்டுப் பலம் குன்றப் பெற்றது. பரத நாட்டில் வந்த யேசுசபையார் தூத்துக்குடியில் திரு இருதயக் கோவிலைக் கட்டினர். அக்கோவில் நிலமும் அதைச் சுற்றியுள்ள வளைவு நிலமும் உள்ளூர்ச் சாதித் தலைவன் வியாகுல மோத்த அவர்களால் நன்கொடையாக நல்கப் பெற்றது. இம்மாற குல ஆண்டவனுக்கு ஒரு ஆண் மகன் பிறந்தான். அன்னவன் சின்னாள் வாழ்ந்து அமரர் நாடு சென்றான். ஆனதுபற்றித் தனக்குப்பின் தன் கிரீடந்தாங்கத் தனயனில்லாக் குறையை நினைந்து மனஞ் சோர்ந்தவனாய்த் தன் அரசைத் தன் பின்னோன் தொன் கபிரியேலுக்குத் தந்து 1856-ம் ஆண்டு அரசன் நன் மரணமானான்.



29. சி. சி. தோன்கபிரியேல் தெக்குருஸ் வாஸ் பல்தான் பரதவர்ம பாண்டியன்.

கி. பி. 1856—1889

இச் சோமசேகரனைச் செவ்வேளை நிகர்த்த அழகுடைய பூமான் என்பர் இவனது சமஸ்தானவித்வான் மரியானுசவியேர் ஹென்றிலெபோன் இன்ப கவிராயர் அவர்கள். இவ்வரசன் கவனக் குறைவால் தனது சுயாதீனங்களிற் பெரும்பாகத்தை இழந்தான். பஞ்சு வர்த்தகத்திலும், பரதருட் குடிகொண்ட பாழான இரட்டையாட்சிச் சண்டையிலும் தனது பொருள் நிலயத்தை இவன் வெறுமை யாக்கினான். இவனது வாழ்நாளில் மூன்று முத்துச் சலாபங்களைக் கட்டிப் பெரும் பொருள் கையாடிய போதிலும் அவ்வரசனுக்குண்டான சேதத்திற்கு ஈடாகவில்லை. இவ்வாண்டகை மணவை நகர் மாளிகையில் 1821ம் ஆண்டு டிசம்பர்மாதம் 3ம் திகதி உதித்தான். மணவையென்ற மணப்பாட்டில் பிறந்தபடியால் இவ்விறைவனுக்கு "மணப்பாட்டையா" என்ற மறுநாமம் ஒன்றுளது. இப்பாண்டிய மன்னனின் அவைக்கண் தூத்துக்குடி முனிஸிபல் சேர்மன் ஜே. எம். பி. ரோச்சவிக்டோரியா அவர்களின் பொருளுதவிகொண்டு வெளியான "பரதகுல பாண்டியர் பழமை" என்ற நூல் பண்டித சிம்மராய லெயோனால் அரங்கேற்றப்பட்டது. இத்தென்னர்குல மன்னனுக்குத் தோனுமரியகஸ்பார் தெக்குரூஸ்வாஸ் பீரிஸ் பமண்டியதேவி என்ற ஓர் பெண்ணரசியேயன்றி வேறு மக்கள் இல்லாமையால் அக்கோமகளை மாபிரபு ரொசாரி மோத்த என்ற மகிபனுக்கு மணஞ்செய்து, தான் ஆசனம் ஏறிய 33-ம் ஆண்டு தனது மகுடத்தைத் தன் புதல்வியின் புதல்வனுக்கு ஈந்து, 68ம் வயதில் அமலனின் திவ்விய கமல அடிசேர்ந்தான்.



30. சி. சி. தோன்மிக்கேல் தேக்துநஸ் லாசநஸ் மோத்தாவஸ் பரத வர்ம பான்டியன்.

கி. பி. 1889—1914.

சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தொன்கபிரியேல் தெக்குரூஸ் வாஸ் பல்தான் என்ற அண்ணல் பயந்த பட்டத்தரசியின் குமாரனாகிய இக்கொற்றவன் பரதகுல வேந்தனாகப் பட்டாபிஷேகமானான். இவன் ஆயிரம் கதிரோனை ஆடையாகத்தரித்த ஆத்தாள் பனியத்தின் திருவடிகளைத் தனது அட்டாங்கமும் நிலத்தில் தோய வணங்கித் தன் வணங்கா முடிமீது அணிந்து கொண்டவன். பொறுமையில் இவன் போற் பூபதி தோன்றியதில்லை. ஆதியின் சித்தமின்றி அணுவும் அசையாது என்ற நம்பிக்கை வாய்ந்தவன். கனம் தூலுஸ் யேசுசபைக் குருக்கள் கொணர்ந்த புன்னையூர் மையவாடி வழக்கில் எழுகடற்றுறைப் பூர்வீக மையவாடிகளும் கோவில்களும் பண்டைப் பரதகுல வேந்தரின் பொருளுதவிகொண்டு கட்டப்பட்டன எனவும், அவைகள் அவ்வவ்வூரவர்க்கே சொந்தம் எனவும், அவைகளின் ஆதீனகர்த்தா பரதகுலாதிபதியே எனவும் நடுவு நிலை குன்றாது சாட்சி பகர்ந்தவன். இச்செழியன் தன்னாளில் முத்துச்சலாபங்கள் மூன்று கட்டிச் செழிப்புற்றான். இவன் இனிய தமிழ்மொழியின் தேன் அமிழ்தை நன்கு பருகியவன். இம்மீனவனின் சமுகத்தில் இவனது வாசல் வித்வான்மரியானுசவியேர் லெயோன் இன்ப கவிராயர் இயற்றிய “பரதவமிச சரித்திர சங்க்ஷேபம்” என்ற நூலும், சரித்திராசிரியா சுவர்னம் எட்வர்ட் எழுதிய “பாண்டிய வமிச பாரம்பரை” என்ற நூலும் அறங்கேற்றப்பட்டன. தூத்துக்குடி யாதவகுலக் கவிராயர் நல்ல பெருமாள் அவர்களால் “கேசஎதிபாதம்” என்ற ஓர் நூல் இவ்விறைவின் மீது பாடப்பெற்றது. அஃதை ஈண்டு யாம் தருகின்றோம்.

இப்பார்த்திபன் 1864ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் திகதி இவ்வுலகிற் பிறந்து வாழ்ந்து, ஆண்டு இருபத்தைந்து அரசுபுரிந்து, 1914ம் ஆண்டு சூலை மாதம் 5ம் திகதி அருணன் தன் கிரணங்களைச் சுருக்கிக் கொண்டு மறையும் வேளையில் தனது நீண்மணி முடியைத் தன் முதிய மகன் தொன் அனத்தாயூஸ் மோத்தா கொறேரா பரதவர்ம பாண்டியனுக்கீந்து, பரிசுத்த சூசைமா முனிவனின் வாடாத மலர்க்கொடி நிழலில் வீற்றிருக்கும் தேவ மதலையின் திருவடிநிழல் சேர்ந்தான்.



31. சி சி. தோன்மனுவேல் லூயிஸ் தேக்துநஸ் அனத்தாசியூஸ்மோத்தா கோறேரா பரதவர்ம பாண்டியன்.

இவ் வேந்தர் குல வேந்தன் 1894ம் ஆண்டு மே மாதம் 10ம் திகதி பிறந்தான், 1926ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ம் திகதி மகுடாபிஷேகம் பெற்றான். “பாண்டிய ராஜன் பட்டாபிஷேகம்” என்ற எமது நூல் இவ்விறைவனின் மகுடாபிஷேக வரலாற்றை என்றும் நினைப் பூட்டும் என்க.

பதினான்கு சீரிரட்டையாசிரிய விருத்தம்.

இந்துவின் குலப்பரத பாண்டியர்க் கிறைவனே
எழின்மாட்சி பெற்ற மகிபனே!
இரும்மகிமை பெறுமன்னர் மூவிரண் டாயிரத்
திருபதுமா பாண்ட்யர் சேர்ந்திங்
கியற்றிய தவமிதே செய்தநல் லறமிதே

எவரிதை மறுக்க வல்லார்
இளஞ்சிம்ம வள்ளலே யத்னபுர வதிபதி
எமையாள வந்த பூபதி.
செந்தமிழ் வளர்த்ததொல் காயனக ராள்பஞ்ச
சேர்ப்பர்வம் மிசவ ழுதியே
சீர்மதுரை யாண்டகுல சேகர மாறனே
திருமந்த்ர நகர்மு ருகனே
செந்தில்வாழ் கந்தனுஞ் சேவலங் கொடியினன்
தேர்வடம் நீதொ டாது
தெருவிசயம் வரானெனி ன்னதுமேன் மகத்துவம்
தீட்டிட வெவரா லாமோ.
நிந்தையறு புரூரவா எவரையும் வணங்காத
நெடுமகுட துரியோ தனு
நீணில மீதினிற் சுற்றத்தா ரன்யரென
நினைக்காத வுனது செங்கோல்
நிருமல னுலய மிழைத்திடச் செம்பொனும்
நேருயர் சந்தன் மரமும்
நிதிவள ருவரிநன் னகரிருந் தேற்றவன்
நீதியிற் செழித்த சலமோன்
முந்திய கோலென நீடூழி வாழ்கவே
முரண்பட்ட துட்ட ரஞ்சும்
முதியவுன் நாமவேல் பல்லாண்டு வாழ்கவுன்
மூவேழு துவஜம் வாழ்க
மூவுல கனைத்துமே காத்தளிப் பவனுன
முதல்வனை யெமக் களித்த
மோட்சநாய் ராக்கினி பனிமயத் தேவதாய்
முன்னின்று வர மருள்கவே'

இவ்வாறு இக்கவியால் அரசனை அரியாசனத்தில் வைத்து வாழ்த்திப் பாண்டியபதி சமஸ்தான வித்வான் என்ற எமது உரிமையாதீனத்தை நிலைநாட்டினோம். இக்கோமான் இதுவரையில் ஐந்து முத்துச்சலாபங்களைக் கட்டியுள்ளான். இவனோர் கொடையாளி, தனக்கில்லையாயினும் பிறருக்குத் தேடியளிப்பவன். பரதகுல மாணவர் கல்விநிதிக்கு ரூ 5000, ஆத்தாள் பனிமயத்தின் ஆலயத்திற்கு ரூ 640, திரு இருதயக்கோவிலுக்கு ரூ 250, கொல்லம் கோவிலுக்கு ரூ 110 ஆக ரூ 6.000 தனது சலாபப் பொருள் நிலயத்திருந்து, இவன் அள்ளிக்கொடுத்தான்.

"அடமிகுத்த வெள்ளையரா மூலாந்தர் கொண்ட
அறமில்கொடுங் கொடியிறக்கித் தொடுதோல் ரண்டும்
படமிதித்தே காருண்ய மலிந்த பிரிட்டீஷ்
படர்துவஜ மேற்றியெம் பரதநாட்டைத்
திடமுடனே யாங்கிலர்க்குத் தியாகஞ் செய்த
தென்னர்கோன் தொன்கஸ்பா ரந்தோனி வாஸைத்
தடம்பெருத்த கர்ணனிலுந் தியாகி யென்பார்
தரையிலிவ னவனிலுமா தியாகி மன்னே"

என யாம் முற்கூறிய பாண்டியராஜன் பட்டாபிஷேகம் என்ற நூலிலுள்ள சொல்வன்மை கொண்ட கவிச்சக்தி பாயும் எமதுவாக்கு நிறைவுற்றது. இவ்விறைவனின் பட்டாபிஷேக வைபவம் ஆடம்பரத்துடன் நடை பெறத் தன்னலமற்றுத் தீவிரமாயுழைத்த ஹானரபில் ஐ. எக்ஸ். பெறேரா அவர்களையும், வழுதிகுல முடிசூடா மன்னன் ஆர். ஜி. பெறேரா அவர்களையும் பரதவுலகம் எக்காலும் மறக்காது, உண்மை உண்மை.

அரசன் சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தொன் கஸ்பார் அந்தோனி தெக்குரூஸ் வாஸ் கொறேரா பரதவர்ம பாண்டியன் தனது எழுகடற்றுறையையும் பிரிட்டிஷாருக்குக் கொடுத்த பின்னர், அன்னவர் இவ்விறைவனுக்கு அளித்த கைம்மாறு என்னை? "As your assistance is highly required by us, we will adopt you as our child and treat: you accordingly"—"தங்களுடைய உதவி எங்களுக்கு அதிக அவசரமாக வேண்டிய திருப்பதனுல் தங்களை எங்கள் புத்திரனுக சுவிகாரப் படுத்தி அவ்வாறே நடத்தி வருவோம்" என எழுத்து மூலமாய் வாக்களித்த ஆங்கிலேய அரசு அச்சுவிகாரப் புத்திரனின் வாழக்கை நலத்திற்கு அளித்த கொடை யாது? எமது இறைவனின் புராதனக் கொத்தாகிய முத்துச் சலாபத்துப் பெரும்பாகத்தில் ஓர் சிறுபாகமன்றோ இந்நாள் வழங்கப்படுவது! இம்மானிபம் கடலிற் கரைத்த காயத்தை நிகர்க்கும் எனலாம். அதுவுமன்றி. சலாபத்தை எதிர்பார்த்தால் ஆகாயத்தில் மழைபொழிய மேகக் குழாங்களை எதிர்பார்த்தலை ஒக்கும். பிறர் பொருளைக் கவர்தல் குற்றமென அரசநீதி கூறுகின்றது. ஆனுல், எமதிறைவனின் அகன்ற ஞாலத்தையும் விரிந்தகடலையும் கவர்ந்துகொண்டு அன்னவனை வறுமைக்குள்ளாக்குதல் அரசநீதிக்கு அழகாமோ? வேலைகரையிழந்து வேத நெறி பிறழ்ந்து ஞால முழுவதும் நடுவிழந்து போனுலும் சிலமொழியாத செந்தமிழ்ப் பாண்டியபதி சமஸ்தானத்தின் உரிமைக்குச் சுயராச்சிய காலத்திலேனும் விமோசனம் உண்டாமோ? சுயரட்சிபெற்ற இந்தியாவில் எவருடைய உரிமைகளும் நன்கு பாதுகாக்கப்படும் என்று உறுதிகூறிய காங்கிரஸ் மகா சபைக்கும், நம்மை விட்டுத் தாய்நாடு செல்வதாய்க் கூறும் பிரிட்டிஷ் அதிபதிக்கும் நமது செந்தமிழ் சமஸ்தானத்தின் முந்திவரலாறுகளையும் தற்போதுள்ள நிலைமையையும் எடுத்துக்காட்டி நீதிவழங்குமாறு முயற்சி செய்தல் பரதமகா நாட்டின் பிரதமகடமை எஸ்க. ஆகவே, மஞ்சுதருச் செந்தமிழ் வேந்தன் என்னும் எமது மீனவர்கோன் சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தொன்மனுவேல் லூயீஸ் தெக்குரூஸ் அனத்தா சியூஸ் மோத்தா கொறேரா பரதவர்ம பாண்டியனைப் பரதர் மாதா என்னும் திவ்விய பனிமய ஆத்தாள் ஆசீர்வதித்து, அவ்வரசனின் செங்கோலைச் செழிப்புறக் செய்ய வேண்டுமென வழிபடுகின்றோம்.



Printed by J. P. Rodriguez at the Suthantharaveeran Press, 2.141, Broadway, Madras and Published by P. C. Devottah and T. I. Devottah, M.A., for the Bharatha United Sangam, "Bala Bharathan" Edited by J. L. Gomez Madras.

ERRATA.

Page 18	Para 1	Line 1,	*For* Aborigenes,	*Read* 'Aborigines.'	
,, 18	,, 8	,, 1,	,, 'Entrenches,	,, 'Encroaches.'	
,, 26	,, 2	,, 11,	,, 'Liberally'	,, 'Literally.'	
,, 53	,, 2	,, 24,	,, 'And as well'	,, 'As well as	
,, 53	., 3	,, 3,	,, 'Adullilerales	,, 'Adult'	
,, 53	,, 6	,, Last	,, 'To and fro'	,, 'To and from'	
., 55		,, 1,	,, 'Dioceses	,, 'Diocese'	
,, 62		,, 3,	,, 1935 to 1938	., '1535 to 1947'	
,, 67	Figure 12		,, 70857	,, 16440	
	Total		,, 84098	.. 84448	
,, 82	,, 4	,, 3,	,, 'Per Capiliteracy',.	'Per Capita literacy,	
,. 83	,, 1	,, 5,	,,	,,	
,, 86	,. 2	,,	last for Exulerant	,, 'Exuberant'	
,, 86	,, 3	,, 6,	,, 'Xavariene'	,, 'Xavarine'	
,, 87	,, 12	..	., 'Chair'	,, 'Chain'	
., 88	,, 23		,: 'Beautifu'	,. 'Beautiful'	